# விளையாடுவோம் கற்போம்

# Play and Learn

ஆரம்பப் பிள்ளைப்பருவ விருத்தி நிலையங்களுக்கான

ஆசிரியர் வள வழிகாட்டி



**ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு**

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வட மாகாணம்.
2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ananthy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாடுவோம் கற்போம்

## ஆரம்பப் பிள்ளைப்பருவ விருத்தி நிலையங்களுக்கான ஆசிரியர் வள வழிகாட்டி

ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும்

இளைஞர் விவகார அமைச்சு

வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப் பிள்ளைப்பருவ விருத்தி நிலையங்களுக்கான செயற்பாடுகள்

# ஆசிரியர் வள வழிகாட்டி


**நூலாக்கம்**

ஆறுதல், இலங்கை.

**அனுசரணை**

யுனிசெப் UNICEF

வெளியீடு

ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம். 2015




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாக்கக் குழு

➢ ஆலோசனை :

♦ இ.இரவீந்திரன், B.Sc. (Hons), P.G.D.M, M.B.A, S.L.A.S
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

➢ வழிகாட்டல் :

♦ சுந்தரம் டிவகலாலா, B.A (Hons), S.L.A.S
பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர், ஆறுதல், இலங்கை.
முன்னைநாள் செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.

➢ மேற்பார்வை :

♦ ஜெயா தம்பையா, B.A (Hons), Dip. in Ed, M.Ed பணிப்பாளர்,
ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு, கல்வி அமைச்சு,
வடமாகாணம்.

➢ நிபுணத்துவ ஆலோசனை :

♦ கலாநிதி. த.கலாமணி, சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் 2,
கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

♦ கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் , சிரேஷ்ட விரிவுரையாளர் -
தரம்1, கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

➢ எழுத்தாளர் குழு :

♦ சி.மாதவகுமாரன், Sp.Maths.Trd., B.A, B.Sc, Dip. in Ed, M.Ed,
உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு), நிபுணத்துவ ஆலோசகர், ஆறுதல்

♦ ச.நகுலேஸ்வரன் முன்னைநாள் D.D.M, Save the Children நிபுணத்துவ
ஆலோசகர், ஆறுதல்

♦ சு.மகேசு, Primary Trd., உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)
ஆலோசகர், ஆறுதல்

♦ திரு. நா.சுவாமிநாதன், Sp.Sc.Trd., உதவிக்கல்விப் பணிப்பாளர்,
(ஓய்வு), - வளவாளர் ஆறுதல்

♦ வ. குகவேள், Primary Trd, B.Ed, ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு),
வளவாளர் ஆறுதல்

♦ சண்.தயாளன், Sp.Phy.Ed.Trd., உதவிக்கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி,
யாழ்.வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கலாநிதி செ.சேதுராசா, அதிபர் (ஓய்வு), யா/நெல்லியடி மத்திய கல்லூரி
- மு. நடராசா, Sp.Phy.Ed.Trd., உதவிக்கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி (ஓய்வு), வளவாளர் ஆறுதல்
- கலாநிதி நிர்மலா நல்லையா விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி (ஓய்வு) - வளவாளர் ஆறுதல்
- சிவமலர் சுந்தரபாரதி, Sp.sc.Trd., B.A, Dip. in Ed, M.Ed, அதிபர், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், வளவாளர் ஆறுதல்
- ச.கிருபானந்தன், B.A (Hons), Dip. in Ed, தொழில் வழிகாட்டல் ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம், வளவாளர் ஆறுதல்
- கமலராணி கிருபானந்தன், B.B.A (Hons), Dip. in Ed. ஆசிரியர், யா/அருணோதய கல்லூரி, அளவெட்டி, வளவாளர் ஆறுதல்
- வைத்தியகலாநிதி வ. யோகேஸ்வரன் Primary Medical Care Unit. உடுவில்
- சு.பரமானந்தம், M.Sc. in Ed. உப பீடாதிபதி தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா
- கலாநிதி ப. தனபாலன், உப பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.
- இ.கமலநாதன் B.A, Dip. in Ed, M.A, M.Ed, விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.
- சி.தில்லைநாதன் Primary Trd., B.Ed, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி கல்வி வலயம்
- விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர், B.A, Dip. in Ed. M.A, M.Ed. முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர், வலிகாம் கல்விவலயம்
- கனகசபை மலர்விழி, Sp. Music Trd., உதவிக்கல்விப் பணிப்பாளர், தீவக கல்வி வலயம்
- மைதிலி மார்க்கண்டு, Primary Trd., B.Ed, ஆசிரியர், யா /இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
- து.ஜெயதீபன் B.F.A, Dip. in Ed,. ஆசிரியர், யா / ஹாட்லிக் கல்லூரி
- ச.தயானந்தன், Art Trd, ஆசிரியர், யா / தாவடி.இ.த.க.பா
- தர்சிகா இராசநந்தம் முன்பள்ளி ஆசிரியர், Dip. In Pre School Ed.
- அ. அஜந்தன், Senior Project officer, Save the Children.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஓவியம் :
    - து.ஜெயதீபன், ஆசிரியர், யா / ஹாட்லிக் கல்லூரி
- கணனிப்பதிவும் வடிவமைப்பும் :
    - ச. காண்டீபன் - Dip. in Computer Eng., M.C.T.S
      இணையதள முகாமையாளர், ஆறுதல்
    - அகல்யா கந்தையா - Dip. In Pre School Ed.
      செயற்றிட்ட அலுவலர், ஆறுதல்.
- அச்சுப்பதிப்பு :
    - அன்றா பிறின்டர்ஸ்
      356 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வட மாகாணக் கல்வி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



கல்வி கற்கும் பருவங்களில் முன்பள்ளிப் பருவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எதிர்காலச் சந்ததியினருக்கு சிறந்த அத்திபாரம் முன்பள்ளிகளினூடாகவே இடப்படுகின்றது. அந்த வகையில் யுனிசெவ் அனுசரணையுடன் வெளி வந்த 'விளையாட்டு அல்லாத விளையாட்டு' என்ற நூலை மீள்பார்வை செய்து தற்காலத்திற்கு ஏற்ற விடயங்களை உள்ளடக்கி வெளியிடப்படும் **'விளையாடுவோம் கற்போம்'** என்ற நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

**'விளையாடுவோம் கற்போம்'** நூல் ஆசிரியர்களின் கற்பித்தலுக்குச் சிறந்த வழி காட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை. முன்பிள்ளைப்பருவ நிலையங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள், இவ் வழிகாட்டல் நூலில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி எமது சிறார்களின் கல்விக்குச் சிறந்த அத்தி பாரத்தினை இட முன்வர வேண்டும் என்று இந் நூலின் ஊடாக கேட்டுக் கொள்கின்றேன்.

இந்நூல் வெளியீடு சிறந்த முறையில் நடைபெற வாழ்த்துவதோடு, நூலின் மீள்பதிப்பிற்கு முன்னின்றுழைத்த அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.



த.குருகுலராசா,

கௌரவ. கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை

மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,

வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரின் செய்தி



இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதற்கிணங்க, இன்று பிள்ளைகளாக இருப்பவர்களின் ஆரோக்கியத்திலும் கல்வியிலும் அக்கறை செலுத்த வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். அதாவது ஆரோக்கியமானதும் வருங்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியதுமான சமூதாய மொன்றை உருவாக்குவதற்கு நாம் முன் பிள்ளைப்பருவ கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும்.

இன்று எமது பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களில், ஆசிரியர்களின் வகுப்பறைச் செயற்பாடுகளுக்கு ஏற்ற வழிகாட்டி நூல்கள் இல்லாதிருப்பது ஒரு குறைபாடாகும். இந் நிலையில் வடமாகாண முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் அவர்கள் எடுத்த பெரும் முயற்சியின் பயனாக, வடமாகாணக் கல்வி அமைச்சு, முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களில் முன்னெடுக்கப்படும் கல்விச் செயற்பாடுகளுக்காக ஆசிரியர் வள வழிகாட்டியொன்றை வெளியிடுவதற்கு முன்வந்தது. அதற்காக ஏற்கனவே இருந்த 'விளையாட்டு அல்லாத விளையாட்டு' என்ற நூலினை மீளாய்வு செய்து, தற்காலத்திற்கு ஏற்றவாறு செயற்பாடுகளையும் கற்பித்தல் முறைகளையும் உள்ளடக்கியதாக மாற்றியமைத்து 'விளையாடுவோம் கற்போம்' என்ற பெயரில் இந்நூல் வெளியிடப்படுகின்றது.

இந் நூலினைத் தயாரிக்கும் பணி ஆறுதல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. ஆறுதல் நிறுவனம் பல்கலைக்கழக, கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள், கல்வியி யலாளர்கள், துறைசார் நிபுணர்கள், முன்பிள்ளைப்பருவ விருத்தி நிலையப் பொறுப்பாசிரியர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி சிறந்த முறையில் இதனை ஆக்கித் தந்துள்ளனர்.

இவ்வளப்பரிய சேவைக்காக உழைத்த ஆறுதல் நிறுவனத்தின் பணிப்பாளர், அலுவலர்கள், வளவாளர்கள் ஆகியோரை மனதாரப் பாராட்டுவதோடு, இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியுதவி அளித்த யுனிசெப் நிறுவனத்தினருக்கும் எனது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது மாகாணத்திலுள்ள அனைத்து முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களும் இவ் வளவழிகாட்டியைச் சிறந்த முறையில் பயன்படுத்தி எமது பிள்ளைகளை நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

இ.இரவீந்திரன்

செயலாளர்,

கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும்

இளைஞர் விவகார அமைச்சு,

வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளரின் செய்தி



ஆரம்பப் பிள்ளைப்பருவம் என்பது ஒரு மனிதனின் வாழ்க்கையில் மிக முக்கிய காலகட்டமாகும். இப் பருவத்தில்தான் கல்விக்கான அடித்தளம் இடப்படுகின்றது. இப் பருவத்தினரது விருத்திக்காக அரசும், தனியார் நிறுவனங்களும் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

முன்பள்ளிகளைப் பொறுத்தவரையில் அங்கு நடைபெறுகின்ற செயற்பாடுகளுக்குப் பொருத்தமான திட்டமிடலோ, வழிகாட்டல் நூல்களோ இல்லாதது பெரும் குறையாகக் காணப்பட்டது. இந்நிலையில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் 1998 இல் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் அனுசரணை மற்றும் பங்கேற்புடன் 'விளையாட்டு அல்லாத விளையாட்டு' என்ற நூல் தயாரிக்கப்பட்டு 2001 இல் வெளியிடப்பட்டது. இதில் முக்கிய பங்கேற்பாளராகச் சிறுவர் பாதுகாப்பு நிறுவன செயற்றிட்ட அலுவலர் திருமதி.டோனாகெஸ்லர் மற்றும் நோர்வே – சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட செயற்றிட்ட அலுவலர் திருமதி.அமரா அமரசிங்க ஆகியோர் செயற்பட்டனர். இந் நூலுக்கு யுனிசெப் நிறுவனம் நிதியுதவி வழங்கியிருந்தது.

2001 இல் தயாரிக்கப்பட்ட இந்நூலைத் தவிர ஆசிரியர்களுக்கான வேறு பொருத்தமான வழிகாட்டி நூல்கள் இப்பிரதேசங்களில் பயன்படுத்தப்படவில்லை. இந்நிலையில் 2006ல் வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் கோரிக்கைக்கமைய யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியில் இந்நூல் மீள்பதிப்புச் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

2009 இற்குப் பின் வடமாகாணத்தில் இந் நூலிற்கான தேவை அதிகரித்துள்ளது. சில காலங்கள் இங்கு நிலவிய அசாதாரண சூழ்நிலையால் வன்னிப் பெரு நிலப் பிரதேசத்தில் இந் நூல்கள் முற்றாக அழிந்துள்ளன. இதனால் குழந்தைகளின் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்கு ஒருவழிகாட்டி நூல் இல்லாதமை பெரும் குறையாக ஆசிரியர்களாலும் முன்பள்ளி நடத்துநர்களாலும் சுட்டிக் காட்டப்பட்டது. இதனைக் கருத்திற்கொண்டு 'விளையாட்டு அல்லாத விளையாட்டு' நூல் தயாரிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்த நிலையில், அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை செய்து ஒரு ஆசிரியர் வழிகாட்டி நூலைத் தயாரிக்க வேண்டும் என வடமாகாண ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு யுனிசெப் நிறுவனம் நிதியுதவியளிக்க முன்வந்தது.

'விளையாட்டு அல்லாத விளையாட்டு' நூல், வளவாளர் குழுவினரால் மீள்பார்வை செய்யப்பட்டதோடு, அதில் உள்ள விடயங்களை உள்வாங்கி அதனை அடிப்படையாகக் கொண்டும், இன்னும் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் ஏனைய நூல்கள், ஆசிரியர் பயிற்சிக் கைந்நூல்கள், சுகாதாரம் போஷாக்கு வழிகாட்டி நூல்கள் என்பவற்றையும் பயன்படுத்தி தற்காலத்துக்கு ஏற்றவகையில் பல மாற்றங்களையும் உள்வாங்கி, புதிய வடிவத்தில் இந் நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலிற்கு 'விளையாடுவோம் கற்போம்' எனப் பெயரிட்டு வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த நூலுக்கான நிதியுதவி கிடைத்ததும், இதன் அவசியத்தை கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அவர்களிடம் கூறியபோது அவர் உடனடியாக இந்நூல் தயாரிப்பதற்கான அனுமதியினை வழங்கி, சகல வழிகளிலும் எனக்கு ஊக்கமளித்தார். அவருக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

இந்த நூலைத் தயாரிக்கும் பெரும் பணி முன்பள்ளிச் செயற்பாடுகளில் அனுபவமுள்ள, ஆசிரியர் பயிற்சி வழங்கும் நிறுவனமான ஆறுதலுக்கு வழங்கப்பட்டது. ஆறுதல் நிறுவனம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஏனைய கல்வியியலாளர்கள், மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து பல பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி இந் நூலைத் தயாரித்து வழங்கியுள்ளது.

இந்நூலைத் தயாரிப்பதில் முக்கிய பங்காற்றிய ஆறுதல் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா அவர்களையும், ஆறுதல் அலுவலர்களையும், ஏனைய வளவாளர்களையும் பாராட்டுவதோடு கல்வி அமைச்சின் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இதற்கு நிதியுதவியளித்த யுனிசெப் நிறுவனத்துக்கும் எமது நன்றிகள். மேலும் எமக்கு வழிகாட்டி, ஊக்குவித்த யுனிசெப் நிறுவனத்தின் கல்வி அலுவலர் செல்வி கார்த்திகாயினி அவர்களுக்கும் எமது நன்றிகள். இந்நூலுக்கான படங்களை அழகாக வரைந்து தந்த து.ஜெயதீபன் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலை ஆசிரியர்கள் சிறந்த முறையில் பயன்படுத்தி, குழந்தைகளுக்கான செயற்பாடுகளை, நல்ல முறையில் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இதனை எல்லா முன்பள்ளிகளும் பின்பற்றி பயன்படுத்துவதும் அவசியமாகும். இந்த நூல் 2016 ஜனவரியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

ஜெயா தம்பையா,
பணிப்பாளர்,
ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு,
கல்வி அமைச்சு,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளரின் செய்தி



முன்பிள்ளைப் பருவம், பிள்ளை விருத்தியில் முக்கியமான பருவமாகும். இப்பருவத்தில் பிள்ளை பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் பிற்கால வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றன. ஒரு நாட்டின் முறைசார்ந்த பாடசாலைக் கல்விக்கு அத்திபாரம் இடுவது முன்பள்ளிக் கல்வியாகும். எனவே 3 – 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை முன்பள்ளிகளில் சேர்த்துக் கொள்வது மிக முக்கியமானதாகும். இங்கு வழங்கப்படும் கல்வி மூலம் பாடசாலைக்குப் பிரவேசிக்கும் பிள்ளைகள் யாவரும் அடிப்படையான புகுநிலைத் திறன்களைப் பெற்றுக் கொள்வர். இதன் மூலம் தரம் ஒன்றில் பிரவேசிக்கும் பிள்ளை பாடசாலைக்கு விருப்பத்தோடு செல்லுகின்ற நிலை ஏற்படும்.

முன்பள்ளிகள் யாவற்றிலும் ஒரு சீரான கல்வி இடம்பெற வேண்டும். இக்கல்வி தரமானதாக அமைய வேண்டுமாயின் பின்வருவனவற்றில் அக்கறை செலுத்துவது அவசியமானதாகும்.

- ஆசிரியரின் வாண்மை விருத்தி
- பாடசாலை வசதிகள்
- தரமான கலைத்திட்டம்

அந்த வகையில் வடமாகாணக்கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப்பிரிவு எடுத்துவரும் முயற்சி பாராட்டுக்குரியதாகும். ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவைத் திறம்படச் செயற்படுத்திவரும் அதன் பணிப்பாளர் எமது பாராட்டுதலுக்கு உரியவராவார். மேலும் குறிப்பிடப்பட்டுள்ள கலைத்திட்டத்தின் ஒரு கூறான வகுப்பறைச் செயற்பாடுகளுக்காக ஆசிரியர் வள வழிகாட்டி ஒன்றை வெளியீடு செய்ய வடமாகாண கல்வி அமைச்சு முன்வந்துள்ளது. இதனை ஏற்கனவே இருந்த 'விளையாட்டு அல்லாத விளையாட்டு' என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு, தற்காலத்துக்குப் பொருத்தமான விடயங்களையும் வழிகாட்டல்களையும் உள்ளடக்கியதாக திருத்தி அமைக்கும் பொறுப்பினை அமைச்சு 'ஆறுதல்' நிறுவனத்திற்கு வழங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிறுவனம் 'வடலிகள் வானுயரும்' என்ற உயர் நோக்கோடு முன்பள்ளிப் பிள்ளைகளின் பூரண வளர்ச்சியை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. மேலும் முன்பள்ளி ஆசிரியர்களின் வாண்மையை விருத்தி செய்ய 2010ம் ஆண்டு முதல் முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா பயிற்சியினையும் நடாத்தி வருகின்றது. இவற்றுடன் வடமாகாண ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தியின் முன்னேற்றம் பற்றி கல்வி அமைச்சின் வழிகாட்டலில் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆய்வு ஒன்றினை 2015 இல் எமது நிறுவனம் மேற்கொண்டது. இவ் ஆய்வுக் காலத்தில் முன்பள்ளிப் பிள்ளைகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களோடு நெருங்கி உறவாடுவதற்கான சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது. இவையாவும் இந்நூலினைச் சிறந்த முறையில் ஆக்குவதற்கு வழிகாட்டியாக அமைந்தன.

இந்நூலில் பிள்ளைகளின் உடல் விருத்தி, மொழிவிருத்தி, கணித எண்ணக்கரு விருத்திக்கான அனுபவம், ஆக்க விருத்தி, அழகியல் விருத்தி, சமூக மனவெழுச்சி விருத்தி, அறவொழுக்க விருத்தி, நற்பண்பு விருத்தி, சூழல் தொடர்பான அறிவு விருத்தி, சிந்தனை விருத்தி, கண்டறிதல்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றை முன்பள்ளி ஆசிரியர்கள் உரிய முறையில் உள்வாங்கி வெறும் போதனையாளர்களாக மட்டும் அல்லாது, விளையாட்டு மூலம் இளம்பிள்ளைகளின் பூரணவிருத்திக்கு வழிகாட்ட வேண்டும் என விரும்புகின்றோம்.

எமது துறை சார்ந்த நிபுணத்துவ நிலையினை இனங்கண்டு **'விளையாடுவோம் கற்போம்'** எனும் இந்நூலினைத் தயாரிக்கும் பணியினை எமக்கு வழங்கிய வட மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் மதிப்பிற்குரிய இ.இரவீந்திரன் அவர்ளுக்கும், அவ் அமைச்சின் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இந் நூலைத் தயாரிக்கும் போது வேண்டிய வழிகாட்டல்களை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியற்றுறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி த.கலாமணி, கலாநிதி திருமதி. ஜெயலட்சுமி இராசநாயகம் அவர்களுக்கும், பல்கலைக் கழகம் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்களுக்கும், வளவாளர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு மேலதிகமாக, திருத்தப்பட்ட இந்நூலினை மீள்பார்வை செய்த ஆறுதல் நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணத்துவ ஆலோசகர்களான சி.மாதவகுமாரன், நா.சுவாமிநாதன், வ.குகவேள் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

இந்நூலினைக் கணனிப் பதிவு செய்து வடிவமைப்பதில் உதவி செய்த எமது நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி க.அகல்யா, ச.காண்டீபன், ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

இந்நூலில் இடம்பெற்றிருக்கும் ஓவியங்களை வரைந்த து.ஜெயதீபன் அவர்களுக்கும் அட்டைப் படத்தினைத் தயாரித்துதவிய இ.ரமேஸ்வரன் அவர்களுக்கும் நன்றிகள்.

நிறைவாக இந் நூலினை உரிய முறையில் உள்வாங்கி, கருத்துநிலை நின்று முன்பள்ளிக் குழந்தைகளின் பூரண வளர்ச்சிக்கும் வழிகாட்டலுக்கும் வழியமைக்க இருக்கின்ற எம் அன்புக்குரிய முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் நிறுவனங்களுக்கும் எமது முற்கூட்டிய நன்றிகள் உரித்தாகட்டும்.

**'வடலிகள் வானுயரும்'**

சுந்தரம் டிவகலாலா,

பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்,

ஆறுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| வழிகாட்டியைப் பயன்படுத்தும் அறிவுறுத்தல் | 01 - 04 |
| முன்பிள்ளைப் பராயக் கல்வி | 05 - 08 |
| முன்பள்ளி ஆசிரியர் பங்கு | 09 - 17 |
| கற்பித்தலில் ஒன்றிணைந்த அணுகுமுறை | 18 - 26 |
| 1. உடல் விருத்தி | 27 - 94 |
| 2. அறிவாற்றல் விருத்தி – மொழி | 95 - 154 |
| 3. அறிவாற்றல் விருத்தி - கணிதம் | 155 - 240 |
| 4. சுற்றாடலைப் புரிந்துகொள்ளல் | 241 - 296 |
| 5. ஆக்க அழகியல் திறன் விருத்தி – சித்திரமும் கைவேலையும் | 297 - 350 |
| 6. ஆக்க அழகியல் திறன் விருத்தி - இசையும் அசைவும் நடித்தலும் | 351 - 382 |
| 7. சமூக மனவெழுச்சி விருத்தி | 383 - 446 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டியைப் பயன்படுத்தும் அறிவுறுத்தல்

- இவ் வழிகாட்டியில் ஒவ்வொரு பாடப்பரப்பின் கீழும் பல தேர்ச்சிகள் இனங்காணப்பட்டு அவற்றுக்கான செயற்பாடுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு செயற்பாடும் வளங்கள், அணுகுமுறைகள், செயலொழுங்கு, மதிப்பீடு, கற்றல் விரிவாக்கம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது
- ஒவ்வொரு செயற்பாட்டினூடாகவும் குறித்த ஒரு தேர்ச்சியை அடையப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டபோதும் குறித்த நேரத்தில் அத்தேர்ச்சியை முழுப்பிள்ளைகளும் எய்துவர் என்பது சாத்தியமற்றது. ஆயினும் அது தொடர்பான அனுபவத்தைப் பிள்ளை பெற வேண்டும் என்பதே எமது அவாவாகும்.
- இங்கு தரப்பட்ட செயற்பாடுகள் யாவும் நன்கு பரீட்சிக்கப்பட்டவை ஆகும். ஆசிரியரும் அவற்றை மேலும் பரீட்சித்துப் பார்க்கலாம். இவற்றின் மூலம் நல்ல பெறுபேறுகளைப் பெறுவதற்குப் பிள்ளைகளின் முதிர்ச்சி, ஆற்றலுக்கேற்ப அவற்றை ஒழுங்குபடுத்தப்பட வேண்டியது அவசியமாகும். பல்வேறுபட்ட செயற்பாடுகள் தொடர்பாகப் பிள்ளைகள் காட்டும் ஆர்வம் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
- ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் தேவையான வளங்கள் பிரதேசச் சூழலில் இருந்து பெறக்கூடியனவாக அல்லது ஆசிரியர்களால் தயாரித்துக் கொள்ளக்கூடியனவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும் பொருத்தமான வேறு பொருள்களைத் தாராளமாகப் பயன்படுத்த முடியும்.
- இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகள் அனைத்தும் குறித்த ஒரு வருடத்தினுள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனக் கருதப்படலாகாது. பிள்ளைகளினது அனுபவத்திற்கும் ஆற்றலுக்குமேற்ப இவை தெரிவு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படலாம். பொருத்தமான வேளைகளில் பிள்ளைகளுக்கேற்றவாறு திருத்தி அமைத்துக் கொள்வது ஆசிரியரின் பணியாகும்.
- முன்பள்ளிச் செயற்பாடுகளின்போது ஆசிரியர் போதனையாளராகவன்றி பிள்ளைகள் செய்து அனுபவம் பெற்றுக் கொள்ள உதவ வேண்டும். (Facilitator) இதற்கு விளையாட்டு முறையே சிறந்தது. எந்தவொரு விடயத்தையும் ஆசிரியர் பிள்ளைகளின் விருப்பமின்றித் திணிக்கக்கூடாது. பிள்ளைகள் தயார் நிலைக்கு வரும்வரை ஆசிரியர் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர்கள் வருடாந்த, மாதாந்த, நாளாந்த வேலைத்திட்டம் தயாரிக்கும் போது வெவ்வேறு பாடப்பரப்புக்களில் இருந்தும் செயற்பாடுகளைத் தெரிவு செய்ய வேண்டும்.
- நாளாந்த வேலைத்திட்டத்தில் தரப்பட்ட குறைந்தது மூன்று பாடப்பரப்புக்களிலிருந்து செயற்பாடுகளைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
- நாளாந்த வேலைத்திட்டத்தில் பின்வரும் மூன்று அம்சங்களினதும் சமநிலை பேணப்பட வேண்டும்.
    - மெதுவான / விரைவான செயற்பாடுகள்
    - நுண்ணியக்க / பேரியக்கத் தசைநார் விருத்திச் செயற்பாடுகள்
    - வகுப்பறைக்கு உள்ளான / வெளியான செயற்பாடுகள்
- தனியாகவோ குழுவாகவோ வழங்கப்படும் செயற்பாடுகள் யாவும் 15 நிமிட நேரத்திற்குட்பட்டதாக இருக்க வேண்டும்.
- முன்பள்ளிகள் ஆரம்பித்தவுடன் வகுப்பிலுள்ள முழுப் பிள்ளைகளையும் உள்ளடக்கியதாக 15 அல்லது 20 நிமிட நேரம் கொண்ட கற்றல் நிகழ்வொன்று ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இறைவணக்கம், நற்சிந்தனையுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வேளையில் பாடல், கதைகூறல், வீட்டில் விளையாடிய விளையாட்டு, உட்கொண்ட உணவு, சுத்தம் சுகாதாரம், வானிலை அவதானம், விடுமுறைக் காலத்தைக் கழித்த முறை என்பன தொடர்பாக உரையாடல்கள் இடம்பெறலாம்.
- காலைநேர முழு வகுப்புக் கற்றற் செயற்பாடுகள் முடிவுற்றதும் அன்றைய நாளிற்கான பல்வேறு கற்றல் வட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக முன்கூட்டியே கலந்துரையாடலாம். மேலதிகமான வளவாளர் வந்திருந்தால் அவர்களை அறிமுகம் செய்தலும் இடம்பெறலாம்.
- செயற்பாடுகளின் போது நிலத்தில் இருந்து வேலை செய்வதானால், அல்லது பிள்ளைகள் களைப்படைந்ததாகக் கருதினால் உடனடியாகச் சுறுசுறுப்பான விளையாட்டொன்றில் ஈடுபடுத்த வேண்டும்.
- நாளாந்தச் செயற்பாடொன்றின் நிறைவில் பிள்ளைகள் அனைவரையும் ஒன்றிணைத்து அன்றைய தினச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதுடன் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்கள் பற்றியும் உரையாடலாம். இதன்போது ஆசிரியர் பிள்ளைகளுக்குச் சில அறிவித்தல்களையும் வழங்கலாம், பாடலோடு நிறைவு செய்யலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடப்பரப்புகளும் அவை ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள செயற்பாடுகளின் எண்ணிக்கையும் வருமாறு

| எண் | விடயப் பரப்பு | செயற்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | உடல் விருத்தி | 61 |
| 02 | அறிவாற்றல் விருத்தி - மொழி | 44 |
| 03 | அறிவாற்றல் விருத்தி – கணிதம் | 73 |
| 04 | சுற்றாடலைப் புரிந்துகொள்ளல் | 49 |
| 05 | ஆக்க அழகியல் திறன் விருத்தி – சித்திரமும் கைவேலையும் | 43 |
| 06 | ஆக்க அழகியல் திறன் விருத்தி - இசையும் அசைவும் நடித்தலும் | 32 |
| 07 | சமூக மனவெழுச்சி விருத்தி | 60 |
| | | 362 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளிக்கான மாதிரி கால அட்டவணை

| நேரம் | விடயம் |
|---|---|
| மு.ப – 08.00 - 08.30 - | வாழ்த்தி வரவேற்றல், சுகாதாரப் பழக்கவழக்கங்கள் பார்வையிடல் |
| மு.ப – 08.30 - 8.45 - | காலைப் பிரார்த்தனை, நற்சிந்தனை |
| மு.ப – 08.45 - 09.45 - | உள்ளக விளையாட்டுக்கள் - கற்றல் வட்டச் செயற்பாடுகள்<br>• மொழி<br>• கணிதம்<br>• சுற்றாடல்<br>• ஆக்க அழகியல் திறன் விருத்தி<br>• சமூக மனவெழுச்சி விருத்தி<br>(இவற்றில் குறைந்தது இரண்டு செயற்பாடுகளை தெரிவு செய்து ஒன்றிணைத்துச் செயற்படுத்தல்) |
| மு.ப – 09.45 – 10.00 - | உணவு இடைவேளை |
| மு.ப – 10.00 – 10.30 - | வெளிக்கள விளையாட்டு – உடல் விருத்திச் செயற்பாடுகள் |
| மு.ப – 10.30 – 11.15 - | கதை கூறல், ஆக்க அழகியல் செயற்பாடுகள் |
| மு.ப – 11.15 – 11.30 - | மீளவலியுறுத்தல், வீடு செல்ல ஆயத்தமாதல் |
| மு.ப – 11.30 - | வீடு செல்லல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. முன் பிள்ளைப் பராயக் கல்வி

## சிறு பிள்ளைகள் எப்போது கற்க ஆரம்பிக்கிறார்கள்?

- பிறப்பிலிருந்தே குழந்தைகள் கற்க ஆரம்பித்து விடுகின்றனர் எனக் கூறப்படுகிறது. பிள்ளையின் மூளையானது கர்ப்பப்பையிலேயே விருத்தி அடையத் தொடங்குவதுடன் தாயின் ஆரோக்கிய நிலையும் வெளிச் சூழலில் காணப்படும் காரணிகளும் குழந்தையின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றன என அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- கர்ப்ப காலத்திலேயே பிள்ளைப் பராமரிப்பை ஆரம்பிக்க வேண்டிய தேவை எழுகின்றது.
- பிள்ளையானது கற்றலுக்குப் பூரணமாக விருத்தி அடைந்த பின்னரே முறையான பாடசாலைக் கல்வி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது கல்வியியலாளர்களின் கருத்தாகும். இலங்கையில் அதற்கான வயது 5 என நிர்ணயிக்கப்பட்டுள்ள வேளையில் வேறு பல நாடுகளில் அது 7 எனப் பரிந்துரைக்கப்படுகிறது.
- பிள்ளை ஒன்றின் எதிர்கால விருத்தியில் முதல் 5 வருடங்களும் தீர்க்கமானவையாகவும் முக்கியமானவையாகவும் அமைகின்றன என்ற வகையில் 6 வயதிற்கு முன் பிள்ளை பெற்றுக் கொள்ளும் கற்றல் அனுபவங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு பிள்ளைக்கு முன் பராயத்தில் கிடைக்கும் போதுமான அறிவானது முறையான பாடசாலைக் கல்வியில் அப் பிள்ளையின் வெற்றியை எதிர்வுகூற உதவும்.
- ஒரு பிள்ளை முன் பராயத்தில் கொண்டுள்ள குணநலங்கள் அதன் எதிர்கால ஆளுமை விருத்தியிலும் பண்புகளிலும் ஆதிக்கம் செலுத்தும் என்பது பெரும்பாலான பிள்ளைப் பராமரிப்பு அவதானிகளின் கருத்தாக அமைகின்றது.
- பிள்ளைகளின் கற்றல் தகைமை அளப்பரியது என்பதும் இக் கற்றல் விருத்திக்கான அடித்தளமானது முன்னதாக அமைக்கப்பட்டு விடுகிறது என்பதும் அண்மையில் கல்வியாளர்களால் ஏற்றுக் கொண்ட விடயங்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன் பிள்ளைப் பராயக் கல்வி குறித்து இலங்கையின் நிலைப்பாடு

- முழுமையாக அல்லது பகுதி நேரமாக நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முன் பிள்ளைப் பராய நிகழ்ச்சித் திட்டமானது, பிள்ளைகளின் உடல், சமூக, மனவெழுச்சி, அறிவாற்றல் மற்றும் ஆக்கத் திறன்களின் விருத்தியிலே பெரும் பங்காற்றுகின்றது.
- நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுக் குழுவிலும் பின்னர் வீட்டிலும் அல்லது பராமரிப்பாளர்கள் மத்தியிலும் இருக்கும்போது பிள்ளையின் விருத்தி இடம்பெறுகின்றது.
- இலங்கையிலே, வீட்டிற்கு வெளியே அமைந்த பிள்ளைகளுக்கான விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நகர்ப் புறத்திலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து படிப்படியாக அவை அபிவிருத்தி அடைந்த கிராமப் புறங்களையும் சென்றடைந்தன. பெற்றார் வேலைக்கு என வெளியே செல்வதும் முன் பிள்ளைப் பராயக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பெற்றார் உணர்ந்து கொண்டதும் இதற்கான காரணங்களாகக் கொள்ளப்படலாம்.
- ஏனைய நாடுகளைப் போல இலங்கையிலும் பிரதேசத்திற்குப் பிரதேசம் முன் பிள்ளைப் பராயக் கல்வி வழங்கல் வேறுபட்டுக் காணப்படுகிறது. இதற்கான காரணங்களாகக் கற்பிக்கும் முன் பள்ளி ஆசிரியர்கள், பெற்றுக் கொண்ட கல்வி மற்றும் கற்பித்தல் முறை, கிடைக்கும் வசதிகள் என்பன அமைகின்றன.
- இலங்கைக் குடியரசு யாப்பின் 13வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் முன் பிள்ளைப் பராயக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் சம்மந்தப்பட்ட மாகாண சபைக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றன.
- சன சமூகக் குழுக்கள், மத அமைப்புகள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் எனப் பல்வேறு அமைப்புகள் முன் பிள்ளைப் பராய விருத்தி நிகழ்ச்சித் திட்டச் செயற்பாடுளில் ஈடுப்படுகின்றன.
- சிறுவர்களுக்கான செயலகமானது பல்வேறு வெளிவாரி அமைப்புகளுடன் இணைந்து முன் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியின் தரத்தினை தேசிய மட்டத்தில் பேணுவதற்கும் ஈடுபட்டுள்ளது.
- இத் திட்டத்திற்கான கையேடுகள் சிலவற்றைத் தயாரிக்கும் பணியில் யுனிசெவ் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன் பிள்ளைப் பராயக் கல்வியில் உள்ள சில பிரதானமான கோட்பாடுகளும் கருத்துக்களும்

- முன் பிள்ளைப் பராயக் கல்வியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பும் செய்த கல்வியாளர்கள்

| | |
|---|---|
| கொமீனியஸ் | (1552 - 1616) |
| ரூசோ | (1712 - 1774) |
| பெஸ்டலொஸி | (1746 - 1827) |
| புரோபெல் | (1782 - 1852) |
| ஜோன் டூயி | (1859 -1952) |
| மொன்ரசூரி | (1870 - 1952) |
| ஜீன் பியாயே | (1896 - 1980) |

- மேலே குறிப்பிடப்பட்ட தத்துவவியலாளர்களும், கல்வியாளர்களும் பிள்ளைகளின் ஆர்வங்கள், விருப்பு, வெறுப்புகள், அவர்கள் கற்கும் முறை போன்ற அம்சங்கள் பற்றி அறிந்தவர்களாகக் காணப்பட்டார்கள். பிள்ளைகளின் விருத்தி பற்றிய ஒட்டு மொத்தமான கணிப்பிலே இரு பிரதான கருத்துக்கள் முன் எழுந்தன. பிள்ளையின் முன் பராயம் பற்றிய தெளிவான விழிப்புணர்வு இருக்க வேண்டும். அத்துடன் பிள்ளையின் எதிர்காலத்தில் அவனது முன்பள்ளிப் பராயம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

- பிள்ளையின் உள்ளார்ந்த கற்றல் விருத்திக்கான வழிமுறைகள் காணப்பட வேண்டும். விளையாட்டின் ஊடாகவும் நன்கு முறைமையாக்கப்பட்ட செயற்பாடுகள் மூலமாகவும் அனுபவம் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை பிள்ளைக்கு வழங்கி அதன் மூலம் விருத்திக்கு வழியமைக்கும் முறைகளை முன் பள்ளி ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

- அங்கு நிலவும் கல்விப் போக்கானது பிள்ளையை மையமாகக் கொண்டு, பிள்ளையின் ஆர்வங்கள் மற்றும் விருப்பங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும்.

- பிள்ளையின் உள்ளார்ந்த ஆற்றல்களைச் சிதைக்கும் அல்லது பிள்ளைகளுக்கு கசப்பையும் எதிர்க்கும் உணர்வையும் ஏற்படுத்தும் கற்றல் அனுபவத்தைத் திணிக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏனைய பிள்ளைகளுடன் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் போதியளவு வழங்கப்படும் போது அவை அப் பிள்ளையின் ஆளுமை விருத்திக்கும் சமூக திறன்களை மேம்படுத்துவதற்கும் உதவியாக அமைகின்றன.

- கேட்பதை மறந்து விடுகின்றோம். பார்ப்பதை நினைவு கொள்கின்றோம். செய்வதை விளங்கிக் கொள்கின்றோம்.

- வாழ்வின் எக் கட்டத்தில் ஆயினும் கற்றல் என வரும் போது செயன்முறை மூலம் கற்பது தான் சிறந்ததென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இம் முறையானது முன் பராயக் கற்றலுக்கும் மிகவும் பொருத்தமானது. செய்து பார்ப்பதும், பரிசோதித்துப் பார்ப்பதும் கற்றலுக்கான அடித்தளமாகக் கருதப்படுகின்றது.

- இளம் பிள்ளைகள் விளையாட்டின் ஊடாக கற்றுக் கொள்கிறார்கள். அது சுதந்திரமான விளையாட்டு அல்லது திட்டமிட்ட விளையாட்டுச் செயற்பாடுகள் மூலம் நிகழலாம். அங்கு பிள்ளைகள் தாமாகத் தனித்தோ சிறு குழுக்களாகவோ அன்றி பெரிய குழுவாகவோ விளையாட்டில் ஈடுபடலாம்.

- பிள்ளை எந்தச் செயற்பாட்டையும் சுயமாக முன்னெடுப்பதற்கு வளர்ந்தோரால் தூண்டப்பட்டதாக அல்லது வழிகாட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும். விளையாட்டின் இறுதி விளைவிலும் பார்க்க அதன் படிமுறைகளே பிள்ளையின் விருத்திக்கு அவசியமானது.

- கற்றல் சூழல் என்பது மகிழ்ச்சிகரமான சூழல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி ஆசிரியரின் பங்கு

- குடும்பம் என்ற அமைப்பிற்கு வெளியே பிள்ளை தொடர்புறும் முதலாவது நபராக ஆசிரியர் இருப்பதால் அவர் அப் பிள்ளையின் மிகு அன்பிற்கு உரித்தானவராகின்றார். அன்பு, ஆதரவு, ஏற்றுக் கொள்ளப்படும் தன்மை, ஒத்துழைப்பு மற்றும் போஷாக்கு குறித்த கவனம் போன்றவற்றை வழங்குவதால் கற்றல் வலுவாக விருத்தி அடையும். இந்த உறவு முறையானது பிள்ளை விருத்தி மையத்தின் பால் நேர் மனப்பாங்கு உருவாகிக் கொள்ள உதவியாக அமைகின்றன.

- ஆசிரியரின் மென்மையான போக்கு, பிரியமான பேச்சு, ஒவ்வொரு பிள்ளை கூறுவதையும் கேட்டு செயற்படும் தகைமை, பிள்ளைகளின் பெயர் சொல்லி அழைத்தல், மென் தொடுகை, பிள்ளை சற்று சிடுசிடுக்கையில் புதியதும் சுவாரஸ்யமானதுமான செயற்பாடுகளில் பிள்ளையை ஈடுபட வைத்து சாந்தப்படுத்தும் லாவகம், பெற்றாருடன் கிரமமாக சாதகமான கலந்துரையாடல்களில் ஈடுபடல் போன்ற விடயங்கள் பிள்ளையுடன் ஆசிரியருக்கான உறவினைப் பலப்படுத்துவதாக அமையும்

- கற்றலின் போதும் விளையாட்டின் போதும் அனுசரணையாளராக இருக்கும் ஆசிரியர், தருணத்திற்கு ஏற்றபடி செயற்பாடுகளை மாற்றியமைத்துப் பிள்ளையின் ஆர்வத்தை தூண்டி விடுகிறார்.

- சாதகமான இடைவினைகள் மற்றும் திறந்தமுனை வினாக்கள் என்பவற்றின் ஊடாக ஆக்க திறன், புதிய கண்டு பிடிப்புகளை நோக்கிப் பிள்ளையை வழிநடத்த வேண்டும்.

- பிள்ளையை அவதானிப்பதற்கும், அது பேசுவதைக் கிரகிப்பதற்குமான ஆற்றல் பிள்ளையின் தேவைக்கும் ஆற்றலுக்கும் பொருத்தமான செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு ஆசிரியருக்கு உதவியாக இருக்கும்.

- பிள்ளையை அவதானித்தல், பொருத்தமான வினாக்களை வினாவுதல், பொருத்தமான அறிவுறுத்தல்களை வழங்குதல் ஆகியவற்றில் நெகிழ்ச்சியானதும், ஆக்கபூர்வமானதுமான கற்றல் சூழலை உருவாக்கிக் கொள்ளலாம்.

- செயற்பாடுகள் வகுப்பறையின் உள்ளே அல்லது வெளியே பிள்ளையின் விருப்புக்கு அமைய தெரிவு செய்யப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரே நேரத்தில் வெவ்வேறு குழுக்களை வித்தியாசமான செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல் வேண்டும். ஆயினும் செயற்பாட்டில் ஈடுபடாமல் அமைதியாகப் பிள்ளைகள் இருப்பதை ஊக்கப்படுத்தக் கூடாது.

- பிள்ளைகள் பற்றி மட்டுமல்லாது அவர்தம் பெற்றோர், அவர்களது சமூகப் பின்னணி பற்றியும் . ஆசிரியர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

- பாரம்பரிய வழக்கங்களை அறிமுகஞ்செய்தல், கைப்பணி வேலைகளைச் செய்து காட்டல், சில இசைக் கருவிகளை இசைத்தல் அல்லது உணவு தயாரித்தல் போன்ற சந்தர்ப்பங்களின் போது பெற்றாரது உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

- கிராமச் சந்தை, கடைகள், வயல்வெளிகள், பாற் பண்ணைகள், கோவில் போன்ற வணக்க தலங்கள், சைக்கிள் திருத்தும் கடைகள் போன்ற இடங்களில் கற்றலுக்கு ஏதுவான சாத்தியங்களை கவனத்தில் கொள்ளல். இது அங்குள்ளவர்களை முன் பிள்ளைப் பராய விருத்தி நிலையத்திற்கான வளவாளராகப் பயன்படுத்துவதற்கும் அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கும் உதவும்.

- நிலையத்திற்கு அண்மையில் செல்வோர் இயலுமானவரை சிறிது நேரம் நின்று பிள்ளைகளுடன் உரையாட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளல். உதாரணமாக, மீன் வியாபாரி தனது கூடையில் உள்ள மீன்களையும் தன்னிடம் உள்ள தராசையும் காண்பிக்கலாம். லொறி சாரதி தனது வாகனத்தின் ரயர்கள் முச்சக்கர வண்டியின் ரயரை விடப் பெரியது என விளக்கிக் காட்டலாம்.

- மிகச் சிறந்த மு.பி.வி.நி ஒன்றின் பொறுப்பாசிரியர் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வார். அதே நேரம் அவர் தனது அறிவினையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

- மு.பி.வி.நிலையம் தொடர்பான நிபுணர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதன் மூலம் தனது அறிவினை அவர் விருத்தி செய்து கொள்ளலாம். அத்துடன் பிள்ளைகளைக் கூர்ந்து அவதானித்தல், ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஏனைய நிலையத்தினருடன் உரையாடுதல், மேலதிகமான வாசிப்பு மற்றும் பயிற்சிகளில் கலந்து கொள்வதன் மூலமும் வாண்மையை மேம்படுத்திக் கொள்ளலாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இப் பொறுப்பாசிரியர்கள் தரம் 1 கலைத்திட்டம் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். இதனால் பிள்ளை தன்னம்பிக்கையுடன் பொருத்தமான தகைமைகளுடன் முறையான பள்ளிக்குள் காலடி எடுத்து வைப்பதற்கு ஆசிரியர் உதவி புரியலாம்.

- தன்னிடம் உள்ள பிள்ளைகள் ஒவ்வொருவர் பற்றிய பதிவுகளும் ஆசிரியரிடத்தில் இருக்க வேண்டும். இவை தொடர்பாக இரகசியம் பேணப்படல் வேண்டும். படிப்படியாக மேற்கொள்ளப்பட வேண்டிய இத் தகவல், பதிவுகள் பின்னர் பிள்ளையின் விருத்தியை மதிப்பிட்டுக் கொள்ள உதவியாக அமையும். அத்துடன் தேவைப்படும் நேரத்தில் மேலதிக கவனம் செலுத்துவதிலும் அவை உபயோககரமானதாக அமையும்.

- 'தலையீடுகள் ஊடான கற்றல் அனுபவம்' வழங்கப்படுவது பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதில் இன்னுமொரு முறையாகும். இதன் போது நிலையப் பொறுப்பாளர் ஒரு நோக்கத்துடன் குறித்த ஒரு பிள்ளையுடன் தொடர்புறுவார். அது வீட்டிலோ அன்றி நிலையத்திலோ இடம்பெறலாம்.

- 'தலையீடு' எனும் பதத்தை வளர்ந்தவர்கள் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். இது வளர்ந்தோர் கல்வியுடன் தொடர்புபட்டது. அதாவது, இங்கு பயிற்சி, மேற்பார்வை மற்றும் மதிப்பீடு எனும் அம்சங்கள் அமையப்பெற வேண்டும். அத்துடன் இந்த நிகழ்ச்சித் திட்டமானது அவர்களது கலாசாரத்திற்கு அமைவானதாக அமைய வேண்டும்.

- இந்த 'தலையீடுகள் ஊடான கற்றல் அனுபவம்' என்ற கொள்கையை உருவாக்கியவர் பேராசிரியர் நினா க்ளெயின். அவரது கருத்தின் பிரகாரம் பிள்ளையின் அறிவு விருத்திச் செயற்பாட்டிலே செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஐந்தினை அவர் முன் வைக்கிறார்.

- இவரது கருத்துடன் இன்னுமொன்றாக தாயிற்கும் பிள்ளைக்கும் இடையிலான உறவுமுறையைப் பிரதிபலிப்பதான வேறு முறைகளை பேராசிரியர் கே. ஹண்டெயிட் முன் வைத்துள்ளார். இது 'ஆம்-வட்டம்' என அழைக்கப்படுகிறது.

'சமூகத்தில் உள்ள இன்னுமொரு நபரினால் கலாச்சாரம் பற்றிய அறிவு விளக்கமாகப் பிள்ளைக்கெனத் தயாரிக்கப்பட்டு, நெருக்கமான உரையாடல்கள் மூலம் அவர்கள் இருவருக்கும் இடையிலே நிகழ்த்தப்பட வேண்டும்' எனத் தனது கருத்தை விளங்கப்படுத்துகிறார் பேராசிரியர் கே. ஹண்டெயிட். இவ் வகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளே ஒரு திட்டமற்ற தொடர்பாடலை நடுநிலையானதும் விடயத்தை செயற்படுத்துவதுமாக அமைத்து விடுகின்றன.

பராமரிப்பாளர் ஒருவருக்கும் பிள்ளைக்கும் இடையே இவ் வகையான ஒரு தொடர்பாடல் காணப்படப் பின்வரும் விடயங்கள், அல்லது அவற்றிற்கு அண்மித்தான அம்சங்கள், தெளிவாகக் காணப்பட வேண்டும்:

**அ) பரஸ்பர நோக்கமும் எதிர்பார்ப்பும், அதாவது:**

1. பிள்ளையின் தகைமை மற்றும் மறுமொழி பகரும் ஆர்வம் ஆகியவற்றிற்கு ஈடுகொடுக்கத் தயாராகப் பராமரிப்பாளர் இருக்க வேண்டும்.
2. பிள்ளையின் கவனத்தை ஈர்க்கும் திறன் உடையவராக அவர் இருக்க வேண்டும்.
3. நோக்கம், விடயம், மதிப்பு அல்லது உணர்விலே அவர் முதலில் கவனம் செலுத்த வேண்டும்.
4. நினைத்த விடயத்தில் அல்லது பொருளில் இருவரது கவனமும் நிலைப்பட்ட பின்னரான தருணமே தலையீட்டிற்குப் பொருத்தமானது.

**ஆ) பிள்ளை கொண்டுள்ள கருத்துகளில் தலையிடல்**

பிள்ளை தனது சூழலில் உள்ள பொருட்களது பெயர்களைக் கூறும் போது அல்லது ஒரு கருத்தை வெளிப்படுத்தும் போது பராமரிப்பாளர் ஆச்சரியப்பட வேண்டும். அவரும் அப் பெயர்களை மீளச் சொல்ல வேண்டும். இதன் ஊடாக பிள்ளை தன்னைச் சூழ உள்ள கலாச்சார விடயங்களையும் முக்கியமான அம்சங்களையும் பற்றிய அறிவினை வளர்த்துக் கொள்ள உதவியாக அமைகிறது.

**இ) அக் கருத்தினை விரிவுபடுத்தல்**

அது தொடர்பான ஓர் இணைப்பினை வழங்கும் பராமரிப்பாளர், கருத்து முக்கியத்துவத்திற்கு அமைய அவற்றை ஒப்பிடுவார். அங்கு அவர் கருத்துக்களைத் தரப்படுத்தி, கேள்விகள் கேட்டு, உதாரணங்களும் கொடுப்பார். பொருத்தமான கதைகள் கூடக் கூறுவார். பிள்ளையின் கருத்துக் குறித்த முன்னைய அனுபவங்கள் பற்றியும் அல்லது எதிர்பார்க்கப்படும் அனுபவங்கள் பற்றியும் கவனம் செலுத்தலாம்.

**ஈ) தேர்ச்சியைப் பெற்றுக்கொண்டமைக்கான உணர்வு**

பிள்ளையின் வேலையைப் பாராட்டும் போது பிள்ளை தனது தேர்ச்சித் திறனில் நம்பிக்கை கொள்கிறது. அதிலும் ஏன் அந்த வேலை பாராட்டுக்குரியது என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கும் போது அது இன்னமும் அதிகரிக்கிறது. பிள்ளை தனது சுய-நிலையை மதிக்கவும் நல்ல செயற்பாடுகளை மேம்படுத்திக் கொள்ளவும் இது உதவியாக அமையும்.

### உ) திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும்

ஒரு விடயத்தைத் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து, தொடர் வரிசையில் செயற்பட்டு, ஓர் இலக்கு நோக்கிப் பணியாற்றி, அதில் வெற்றி ஈட்டிக் கொள்ளும் உபாயத்தைப் பிள்ளை விருத்தி செய்து கொள்கிறது. இங்கிருந்து அப் பிள்ளை தனது நாளாந்தப் பிரச்சினைகளை எதிர் கொள்ளவும் பிரத்தியேக விடயங்களைச் சமாளிக்கவும் தேவையான தேர்ச்சியை விருத்தி செய்து கொள்கிறது. மேலும் இரு நன்மைகள் காணப்படுகின்றன. அவையாவன, வேலை ஒன்றினை ஆரம்பிக்க முன்னர் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளல் மற்றும் தனது கலாச்சாரத்திற்கு அமைவாகத் தனது உணர்வினை வெளிப்படுத்தக் கூடிய தகைமையை விருத்தி செய்தல்.

## இணக்கச் செயற்பாடுகள் ஊடான கற்றல் அனுபவங்கள் மூலம் பிள்ளை வாண்மையை விருத்தி செய்தல்

- இக் கற்பித்தல் முறையானது பிள்ளையின் திறன் அளவுகளை விரிவாக்கி விடுகிறது.
- வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை வெற்றி கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
- பிள்ளையின் தன்னம்பிக்கைக்கான காத்திரமான அடித்தளம் அமைக்கப்படுகிறது.
- 'என்னால் முடியாது', 'எனக்குச் சரி வராது' போன்ற தடையேற்படுத்தும் மனப்பாங்கிலிருந்து விடுபட்டு 'என்னால் முடியும்' எனச் சாதகமான போக்கில் வளர்கிறார்கள்.
- மனிதர்களுக்குத் தேவையான இரு சிறந்த குணாம்சங்களான ஈடுகொடுத்தல் மற்றும் பன்முகத்தன்மை என்பவற்றிற்கான வழி சமைக்கப்படுகிறது.
- இணக்கச் செயற்பாடுகளின் மூலம் கிடைக்கப் பெறும் இணைவு மற்றும் ஒத்துழைப்பு போன்ற அனுபவங்கள் ஊடாக நிலையப் பொறுப்பாளருக்கும் பிள்ளைக்கும் இடையிலான உறவு வலுப்பட்டுக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறிவுசார் விரிவாக்கம் மற்றும் தர்க்க ரீதியான மதிப்பீட்டுத் திறன் ஆகியவற்றிற்குத் தேவையான அடித்தளமிடப்படும் போது பிள்ளைக்குத் தேவையான காத்திரமான அடித் தளங்களும் இடப்பட்டுக் கொள்கின்றன. அத்துடன் அங்கு வளர்ந்தோரின் பங்களிப்பிற்கான சந்தர்ப்பங்களுக்கு அடி கோலப்பட்டு, அவற்றை அதிகரித்துக் கொள்வதற்கான அடித் தளமும் இடப்பட்டு விடுகிறது.

### பிள்ளை தானாகவே அறிவினை வளர்த்துக் கொள்ளல்

- பிள்ளையும் நிலையப் பொறுப்பாளரும் வயது பிரச்சினையில்லாமல் அறிவினை வளர்த்துக் கொள்வது தான் இணக்க முறையான கற்றல் அனுபவங்களின் இலக்காக அமைகிறது.

- இச் செயன்முறையாக்கத்திலே பிள்ளையானது அறிவினைப் பெற்றுக் கொள்வதாக அல்லாது அறிவினைப் பின்பற்றிச் செல்வதாக அமையும்.

- இப் பிள்ளை வளர்ந்து உயர் கல்வியைப் பின்பற்றுகையிலும், சவாலான சந்தர்ப்பங்களை எதிர்கொள்வதிலும் அவர்களுக்கான சந்தர்ப்பங்கள் அதிகளவில் நிறைந்து காணப்படும். அத்துடன் அங்கு அவர்கள் வளைந்து கொடுப்பவர்களாக, ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுப்பவர்களாகக் காணப்படுவார்கள்.

- இங்கு பிள்ளைகள் பல்வேறு வளர்ச்சிப் படிகளைக் கடந்து செல்லும்போது பல வகையான கற்றல் அனுபவங்களைச் சந்திக்கின்றது. அந்த வகையில் அப் பிள்ளைகள் பிழைத்துக் கொள்வது மட்டுமல்லாமல் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

- சில சமூக அமைப்புகளில் சிறுவர் உரிமை தொடர்பாக அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. அங்குள்ள மக்கள் அவற்றைச் சரிவர அணுக முடியாதவர்களாக இருக்கையில் அங்கு உரிமைகள் பற்றிப் பேசுவது அர்த்தமற்ற விடயம். அதாவது அந்த அச்சுறுத்தல்களுக்கு எதிராகச் செயற்பட அவர்கள் பயந்தால், அல்லது அச்சம் ஊட்டப்படிருந்தால், அல்லது புத்திசாலித்தனமாகச் செயற்படாது விட்டால், அல்லது அவர்களது சமூகத்தின் கலாசார கட்டுப்பாட்டிற்குள் அப்படியான விடயங்கள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் பிள்ளைகளது உரிமைகள் குறித்துப் பேசுவது பயனற்ற ஒரு விடயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையும் அதனது கற்றல் சூழலும்

உங்களது முன் பள்ளிக்கு அமைவாகப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்

- இந்த வயதில் பிள்ளையின் தேவைகள் எவை? அப் பிள்ளைக்கு நாம் தெரிவிக்க வேண்டிய செய்திகள் என்ன?
- எவ்வகையான விளையாட்டினை அப் பிள்ளை அனுபவிக்கும்? இவ்வயதில் என்ன விளையாட்டுப் பொருட்கள் பிடிக்கும்?
- உலகம் பற்றிக் குறிப்பிடுவதற்கு எம் மாதிரியான வசனத்தை பிள்ளை உபயோகிக்கும்?
- எவ்வகையான பயத்தைக் கொண்டிருக்கும்?
- எப்படி சந்தோஷப்படுத்தலாம்?
- விருத்தி பற்றிய கோணத்தில் பார்த்தால், பிள்ளை பெற்றுக் கொண்ட பெறுபேறுகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன் பிள்ளைப் பராய விருத்தி நிலையங்களிற்கான தரக் குறிகாட்டிகள்

1. ஆசிரியை எப்போதும் புன்முறுவலுடன் காணப்பட்டு, தோழமையுடன் பேசல்.
2. பிள்ளைகள் கூறுவதை அவதானமாகச் செவிமடுத்தல்
3. பிள்ளையின் மட்டத்திற்குக் குனிந்து கண் பார்த்து, கை தொட்டுப் பேசல்.
4. பிள்ளையின் பெயர் சொல்லி அழைத்தல்.
5. பிள்ளை உணர்வு மேலிட்டுக் காணப்படும்போது அதிலிருந்து வெளிவர உதவுதல், பிரச்சினைகளை லாவகமாகத் தீர்த்தல்.
6. சகல பிள்ளைகளையும் ஒரே மாதிரிக் கவனித்து மரியாதையாக நடத்துதல்.
7. விளையாடும் போதும் ஏனைய நேரங்களிலும் பிள்ளைகள் மரியாதையுடன் நடாத்தப்படல், அத்துடன் அவர்களும் வளர்ந்தவர்களுக்கு மரியாதை தரல்.
8. பள்ளி நேர்த்தியாகப் பேணப்பட்டு, பிள்ளைகள் இலகுவாக விளையாட்டுப் பொருட்களைக் கையாளக் கூடியதாக இருத்தல்.
9. பிள்ளைகளது கைப்பணிகள் அவர்களது கண் மட்டத்தில் காட்சிப்படுத்தப்படல்.
10. முன் பள்ளிக் கட்டடமும் அதன் சுற்றுப்புறமும் முடிந்தளவு சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் பேணப்படல்.
11. நாளாந்த செயற்பாடுகள் எழுத்தில் இருத்தல், அதில் வகுப்பறை மற்றும் வெளியக செயற்பாடுகள் ஒழுங்காக காணப்படல், அத்துடன் அமைதியான மற்றும் சத்தம் போடக் கூடிய செயற்பாடுகளும் இணைக்கப்பட்டிருத்தல்.
12. பிள்ளைகள் அனைவரும் ஒன்றாக இணைந்து பங்கு கொள்ளும் செயற்பாடுகள் ஒரு மணித்தியாலத்திற்கு மேற்படாமல் இருத்தல். ஆகக் கூடிய செயற்பாட்டு நேரம் 30 நிமிடங்கள். பிள்ளைகள் அமைதியாக நிலத்திலோ அல்லது கதிரையிலோ அமர்ந்து செயற்படும் ஆகக் கூடிய மொத்த நேரம் 10 நிமிடங்கள்.
13. வேறொரு தினம் 2 மணித்தியாலங்களுக்கு செயற்பாடுகள் சில இணைக்கப்பட்டு பிள்ளைகள் அதில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அதன் போது வேறு நிலையத்திற்குப் பிள்ளைகள் இட்டுச் செல்லப்படுகிறார்கள் அல்லது கற்றல் குழு மாற்றிக் கொள்ளப்படுகிறது.
14. தனியாகவோ அன்றி சிறு குழுக்களாகவோ செயற்படும் பிள்ளைகளுக்கான 4 அல்லது 5 நிலையங்கள் அமைக்கப்பட்ட பின்னர் தான் செயற்பாடுகளின் தெரிவு ஆரம்பிக்கப்படல். குறிப்பிட்ட ஒரு கால அட்டவணையின் பிரகாரம் புதிய நிலையங்கள் அறிமுகப்படுத்தப்படல்.
15. செயற்பாடுகளில் பிள்ளைகள் ஈடுபடும்போது ஆசிரியர்கள் ஒவ்வொரு குழுவாக அல்லது பிள்ளையாகச் சென்று கவனித்து, அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியபடி செயற்பாட்டிலே நல்ல முறையில் ஈடுபடும் வண்ணம் பார்த்துக் கொள்ளல்.

16. ஒவ்வொரு பிள்ளையும் தனது பொருட்களை வைத்துக் கொள்வதற்குப் பிரத்தியேகமான இடம் இருத்தல்.
17. நிலத்தில் அமர்ந்து செயற்படும் போது உபயோகிப்பதற்குத் தேவையான பாய்கள் இருத்தல்.
18. பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும், இடையிலான விகிதமானது, 15:1 அல்லது அதற்குக் குறைவாக இருத்தல்.
19. பெற்றாரைப் பெயர் விளித்து ஆசிரியர்கள் அழைத்தல் இன்முகத்துடன் வரவேற்றல்.
20. நேர ஒழுங்கு அமைத்து அதன் படி பெற்றார் முன் பள்ளியிலே தமது பங்களிப்பை வழங்கல். வேறு வழிகளிலும் அவர்கள் முன் பள்ளிக்கு உதவி புரியலாம்.
21. இற்றைப்படுத்தப்பட்ட, அழகான பெற்றார் மூலை அல்லது அறிவித்தல் பலகை காணப்படல்.
22. இரு மாதங்களுக்கு ஒரு முறை பெற்றோர்களுக்கான கூட்டம் நடைபெறல்.
23. ஒவ்வொரு பிள்ளையினதும் விருத்தி பற்றிய குறிப்புகள் தனித் தனியாகப் பேணப்படல்.
24. பிள்ளைகளது ஆக்கங்கள் சிலவற்றை ஆசிரியர் வைத்திருத்தல்; சிலவற்றைக் காட்சிப்படுத்தல் ; எஞ்சியவற்றைப் பிள்ளை எடுத்துச் செல்ல அனுமதித்தல்.
25. உணவு பரிமாறப்பட்டால் எல்லாப் பிள்ளைகளுக்கும் கிடைக்கும் வகையில் நல்ல முறையில் இங்கிதத்துடன் பரிமாறப்படல். இதன் போது உணவின் சுகாதாரத் தன்மை மற்றும் போஷாக்குப் பற்றிக் கவனிக்கப்படல்.
26. வீட்டிலிருந்து குடிக்கும் நீர் கொண்டு வராத பிள்ளைகளுக்குக் குடிநீர் வழங்கல்.
27. பாடசாலை நேரம் முடிந்ததும் ஆசிரியரும் பிள்ளைகளுமாகச் சேர்ந்து பொருட்களை மீள எடுத்து வைத்தல்.
28. பிள்ளைகள் வீடு செல்லும் போது "போய் வாருங்கள்" என ஆசிரியர் கூறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பித்தலில் ஒன்றிணைந்த அணுகுமுறை

- மு.பி.வி.நிலையங்களில் தனித்தனியாகப் பாடங்களைக் கற்பிப்பது சிரமமான காரியம் என்பதுடன் பொருத்தமற்றதும் கூட. அதற்குப் பதிலாக, தெரிவு செய்யப்பட்ட தலைப்புகளில் அல்லது சுருக்கமான ஆய்வுப் பொருள்களில் விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் செயற்பாட்டை அமைத்துக் கொள்வது அர்த்தமுள்ளதும் பயன் மிக்கதுமான முறை ஆகும்.

- இத்தகைய கற்றல் செயற்பாட்டினை ஒழுங்கமைக்கும் திறனை முன் பள்ளி ஆசிரியர் ஒருவர் கொண்டிருக்க வேண்டியது அவசியம்.

- தெரிவு செய்யப்பட்ட தலைப்பு அல்லது ஆய்வுப் பொருள் பிள்ளைக்குப் பொருத்தமானதாகவும் பிள்ளையின் ஆர்வத்தைத் தூண்டுவதாயும் அமையப் பெறுவது முக்கியம். பெறப்பட்ட அவதானங்கள் சரியான முறையில் கையாளப்பட வேண்டும். அதற்கு ஒரு சில நாட்கள் தேவைப்படலாம்.


- கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொள்ளும்போது ஆசிரியர் சில காரணிகளைக் கவனிக்க வேண்டும். அவையாவன: வகுப்பில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, உதவிக்கு யாரையும் வைத்துக் கொள்ளல், பெற்றுக் கொள்ளக் கூடிய பொருள் வளங்கள், இடவசதி, வெளியே செயற்படுத்தப்படும் பட்சத்தில் நிலவும் காலநிலை.

- ஆசிரியருடைய நிகழ்ச்சித் திட்டத்திலே பெற்றோர்களுக்கு விளக்கம் அளிப்பதும் இடம்பெற வேண்டும். அவர்களுக்குத் தமது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்பது புரிந்தால் ஆசிரியருடைய பணி இலகுவாகி விடும்.

- பழங்கள், குடும்ப அங்கத்தவர்கள், விலங்குகள், பறவைகள், நண்பர்கள், தம்மைப் பற்றிய விவரங்கள் போன்றவை பிள்ளைகளுக்குப் பிடித்த தலைப்புகளில் சிலவாகும்.

- ஒரு ஆய்வுப் பொருளின் கீழ் செயற்பாடுகளைத் திட்டமிட்ட பின்னர், வெவ்வேறு விருத்திகள் குறித்த செயற்பாடுகளும் இணைத்துக் கொள்ளப்படலாம். அதற்கான பின்வரும் வழிகாட்டலைக் கவனிக்கவும்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு கருப் பொருளின் கீழும் அனைத்துப் பாடப் பரப்புகளுக்குமான செயற்பாடுகளை உள்ளடக்குவது சிரமமான காரியமாக இருக்கலாம். எனினும் கூட கருப் பொருளினை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் முடிந்தளவு செயற்பாடுகளை ஆசிரியர் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**ஒன்றிணைந்த அணுகுமுறையில் உள்ள முக்கிய சில அம்சங்கள்**

- செயற்பாடுகளில் ஈடுபட பிள்ளைகள் ஆர்வம் காட்டல்.

- தேவையான பொருட்களை சூழலில் இருந்து பெற்றுக் கொள்ளும் திறன். அதற்குப் பிள்ளைகளது உதவியையும் பெற்றுக் கொள்ளல்.

- தமது வேலை குறித்துப் பிள்ளைகள் தம்மைத் தாமே தட்டிக் கொடுத்தல்.

- ஆசிரியர் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் பிள்ளைகளது ஆக்கங்களை ஊக்குவித்துப் பாராட்டல்.

- பிள்ளைகளது தனிப்பட்ட அல்லது குழுச் செயற்பாட்டுப் பெறுபேறுகளைப் பாராட்ட ஆசிரியர் தவறக் கூடாது. அத்துடன் அதனை மற்றைய குழுக்களுக்கும் பெற்றோர் மற்றும் நிலையப் பொறுப்பாளர்களுக்கும் காண்பிக்க வேண்டும்.

- தனது செயற்பாட்டிற்கென நிலையத்தில் கிடைக்கக் கூடிய பொருட்கள் பற்றி ஆசிரியர் தெரிந்திருக்க வேண்டும். அவற்றில் சில: கட்டுமாணக் கட்டைகள், நீர், மண், பாவைப் பிள்ளைகள், பொம்மைகள், வெற்று பிளாத்திக்குப் பாத்திரங்கள், பொலித்தீன் பைகள், கத்திரிகோல்.

- பிள்ளைகளின் ஆர்வம் குறையக் கண்டால் அவர்கள் அச் செயற்பாட்டிலே களைத்து விட்டார்கள் அல்லது அதனை ஏற்கனவே செய்துள்ளார்கள் என்பது அர்த்தம் ஆகும். வேறு தலைப்பிற்கு/கருப் பொருளுக்கு மாறுவது உசிதம்.

- ஏலவே செய்தவற்றில் புதிய செயற்பாடுகளை இணைத்து மீண்டும் செயற்படுத்தலாம். அப்போது பிள்ளைகளின் ஆர்வம் குறையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றலில் ஒன்றிணைந்த அணுகுமுறை - சுருக்கம்

1. பிள்ளைகளின் விருப்புகளைத் தெரிந்து கொண்ட பின்னரே தலைப்புக்களோ அல்லது ஆய்வுப் பொருட்களோ தீர்மானிக்கப்பட வேண்டும்.

2. இளம் பிள்ளைகளுக்கான செயற்பாடுகளைத் தெரிவு செய்கையில் ஒன்றிணைந்த கற்றல் அணுகுமுறைகளில் உடல், அறிவு, ஆக்க, சமூக-உணர்வு விருத்திப் பகுதிகளுடன் கூடிய செயற்பாடுகளை இணைத்துக் கொண்டால் வினைத்திறன் அதிகமாகும்.

3. இந்த ஒன்றிணைந்த கற்றல் அணுகுமுறைகள் வேடிக்கை மிகுந்தவை. பிள்ளைகளைக் களிப்படையச் செய்யும். அவர்கள் ஆராய்ந்து, பரிசோதித்து, கதைத்து, புதிய சிந்தனைகளை முன் வைத்து, குழுவாகச் செயற்பட்டு, சமூகத் தேர்ச்சிகளை விருத்தி செய்து, தம்மைச் சுற்றியுள்ள உலகைப் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பங்களை அவர்களுக்கு வழங்கும்.

4. வெவ்வேறு வயதில் உள்ள பிள்ளைகள், வெவ்வேறு தகைமை உள்ள பிள்ளைகள் உள்ள கலப்புக் குழுக்களில் இந்த அணுகுமுறைகளை அர்த்தபூர்வமாக செயற்படுத்தலாம்.

5. பிள்ளைகளை அவர்களுடைய குடும்பத்தவர், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தில் தொடர்புறுத்திச் சற்று விரிவான செயற்பாடுகளில் ஈடுபடச் செய்ய இவை உதவியாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு பிள்ளைகளின் அபிவிருத்தியை அவதானித்தல்

## பிள்ளையின் திறன் அறியும் செவ்வை பார்ப்புப் படிவம்

பெயர் : .............................. அவதானிப்பவர் : ........................

திகதி : ..........................................

வழிகாட்டல் : பிள்ளையின் நடத்தை வெளிப்பாட்டை அவதானித்து, உரிய வெளிப்பாட்டைக் காட்டியிருப்பின் சரி (✓) என அடையாளமிடுக. வெளிக்காட்டாத போது புள்ளி (●) என அடையாளமிடுக.

| செயல்கள் | (✓)அல்லது(●) | திகதி |
|---|---|---|
| **1. தன்னை அடையாளம் காணல்.** | | |
| - வகுப்பில் மகிழ்ச்சியாக இருப்பார் | | |
| - கூச்சமின்றி உரையாடுவார் | | |
| - ஆசிரியர் துணையின்றி செயற்பாடுகளைத் தெரிவார் | | |
| - மற்றப் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாட விரும்புவார் | | |
| - நடித்தல் விளையாட்டில் பங்கு கொள்வார் | | |
| - தானாகவே செயல்களைச் செய்ய ஆர்வம் காட்டுவார் | | |
| **2. மனவெழுச்சி வளர்ச்சி** | | |
| - பதட்டமான வேளைகளில் ஆசிரியர் அணுகுவதை ஏற்றுக் கொள்வார் | | |
| - வீட்டுக்கு வெளியே வெட்கப்படாது உண்ணுவார், உறங்குவார்<br>- மலசலகூடம் முதலியவற்றைப் பயன்படுத்துவார் | | |
| - மன எழுச்சி மாற்றங்களுக்குத் தன்னை இசைவாக்கிக் கொள்வார் | | |
| - கோபத்தைச் செயலில் காட்டாது சொற்களால் வெளிக்காட்டுவார் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| - | ஏனையோருடன் நட்புடன் பழகுவார் | | |
| - | வகுப்பறைச் செயற்பாடுகளில் விருப்பமும், ஆர்வமும் காட்டுவார் | | |
| - | அதிக நேரம் மகிழ்ச்சியாகவும் புன்சிரிப்புடனும் இருப்பார் | | |
| **3.** | **சமூகத்தில் பங்கு.** | | |
| - | சுயாதீனமாக விளையாட்டில் ஈடுபடுவார். | | |
| - | தனக்குரிய விளையாட்டுப் பொருட்களோடு தனிமையில் விளையாடுவார். | | |
| - | மற்றவர்களைப் போன்று தாமும் விளையாடுவார். | | |
| - | மற்றவர்களுடன் விளையாடுவார். | | |
| - | விளையாட்டில் தனது பங்கினைச் செலுத்துவார். | | |
| - | விளையாட்டில் எழும் பிரச்சினைகளை நட்புறவுடன் தீர்வு காண்பார். | | |
| **4.** | **சமூகஞ் சார்பான நடத்தை** | | |
| - | ஏனையோரின் துயர்களிற் கரிசனை காட்டுவார். | | |
| - | ஏனையோரின் மகிழ்ச்சியிற் பங்கு பெறுவார். | | |
| - | மற்றவர்களோடு தனது பொருளைப் பகிர்ந்துகொள்வார். | | |
| - | வேண்டுகோளுக்குச் செவி சாய்ப்பார். | | |
| - | ஏனையோருக்கு உதவுவார். | | |
| **5.** | **உடலியக்க செயற்பாடுகள்** | | |
| - | இயல்பாக ஏறி இறங்குவார். | | |
| - | வேகத்தையும் திசையையும் கட்டுப்படுத்தி ஓடுவார். | | |
| - | தடைகளை தாண்டிப் பாய்வார். | | |
| - | ஒரு காலால் கெந்துவார். | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| - கம்பத்தில் இலகுவாக ஏறி இறங்குவார். | | |
| - தாளத்திற்கேற்ப கால்களை அல்லது பாதங்களை உயர்த்தி நடப்பார். | | |
| - தாளத்திற்கேற்ப கைகளைத்தட்டி தாளம் போடுவார். | | |
| - தாளத்திற்கேற்ப இரு கைகளாலும் மாறி மாறி அடிப்பார். | | |
| **6. நுண்ணியக்க விருத்தி** | | |
| - ஆசிரியரைப் பின்பற்றி கையை உயர்த்திக் காட்டுவார். | | |
| - கைகளால் இலகுவாகத் திருகுவார். (குமிழ், மூடிகள், கரண்டி) | | |
| - தண்ணீரைச் சிந்தாமல் போத்தலில் ஊற்றுவார். | | |
| - பொத்தான் சிப் போன்றவற்றை பூட்டுவார் திறப்பார். | | |
| - பேனா, பென்சில் போன்றவற்றை எல்லைக்குள் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துவார். | | |
| - கட்டுப்பாட்டோடு கத்திரிக்கோலைப் பயன்படுத்தி வெட்டுவார். | | |
| **7. – A) அறிவாற்றல் - சிந்தனை விருத்தி** | | |
| - பொருட்களை வகைப்படுத்துவார். பொருட்களை பண்புக்கேற்ப வரிசைப்படுத்துவார். | | |
| - கேத்திர கணித வடிவங்களை இனங்காண்பார். | | |
| - நிறங்களை இனங்கண்டு கூறுவார். | | |
| - நீளம் கூட நீளம் குறைய என்பதை இனங்காண்பார். | | |
| - பருமனில் பெரிது, சிறிது என்பதை இனங்கண்டு கூறுவார். | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| - ஒலி முதல்களை இனங்கண்டு கூறுவார். | | |
| - கேட்ட ஒலிகளை இசைத்துக் காட்டுவார். | | |
| - நிகழ்வொன்றை ஒழுங்குபடுத்திக் கூறுவார். | | |
| **B) அறிவாற்றல் - சிந்தனை விருத்தி** | | |
| - 10 வரை எண்களை தொடரொழுங்கில் கூறுவார். | | |
| - பொருட்களுடன் (1 – 5) வரை எண்ணுவார். | | |
| - நாளின் நிகழ்வுகளை வரிசையிற் கூறுவார். | | |
| - முதல் நாள் நிகழ்வுகளைக் கூறுவார். | | |
| - விலங்கு / வாகன வரிசையில் முன், பின் உள்ளதைக் கூறுவார். | | |
| - செய்யுள்களை / பாடல்களை ஞாபகப்படுத்திப் பாடுவார். | | |
| **8. பேச்சு** | | |
| - வகுப்பறையில் தன்னம்பிக்கையோடு பேசுவார். | | |
| - தெளிவான உச்சரிப்புடன் பேசுவார். | | |
| - பூரண வாக்கியங்களில் கூறுவார். | | |
| - நட்புடன் உரையாடுவார். | | |
| - திருத்தமான முறையில் வினாவுவார். | | |
| - பொருத்தமாக உரிய காலத்திற்கேற்ப வினைச் சொற்களைப் பயன்படுத்துவார். | | |
| **9. எழுத்து, வாசிப்பு முன் ஆயத்தத் திறன்கள்** | | |
| - இடமிருந்து வலமாக வலமிருந்து இடமாக கோடுகள் வரைவார். | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| - எழுத்து முன் பயிற்சியில் ஈடுபடுவார். | | |
| - வாசித்துக் கூறும் கதைகளைச் செவிமடுப்பார். | | |
| - படங்களின் துணையுடன் கதை கூறுவார். | | |
| - படம் பார்த்து வாக்கியம் கூறுவார். | | |
| **10. வரைதல் திறன்** | | |
| - புள்ளிகளை இணைத்து உருவங்களாக்குவார். | | |
| - சுயமாக உருவங்கள் வரைவார். | | |
| - கையை வைத்து புறவுரு வரைவார். | | |
| - பிராணிகள், பூக்களின் படங்கள் வரைவார். | | |
| **11. கற்பனா சக்தி** | | |
| - நாளாந்தப் பணிகளை போலச் செய்வார். | | |
| - பிராணிகளைப் போல் நடித்துக் காட்டுவார். | | |
| - தான் செய்யும் செயற்பாடுகளைக் கூறுவார். | | |
| - கதையொன்றினைக் குழுவாக நடித்துக் காட்டுவார். | | |
| **12. அழகியல் விருத்தி** | | |
| - ஆசிரியர் பாடும் பாடலை இரசனையுடன் செவிமடுப்பார். | | |
| - செவிமடுத்த பாடலை அபிநயம், தாளத்துடன் பாடுவார். | | |
| - சூழலிலுள்ளவற்றை இரசிப்பார். | | |
| - காட்சிகளை இரசித்துக் கூறுவார். | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# உடல் விருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.1. உடல் விருத்தி

- பிள்ளை ஒன்றின் வளர்ச்சி ஒரு கோலத்தின் அடிப்படையில் நிகழும் ஒரு தொடர் நிகழ்ச்சியாகும். ஒரு பிள்ளை நிற்பதற்கு முன் இருக்கின்றது; நடப்பதற்கு முன் நிற்கின்றது. அதே போன்று ஓடுவதற்கு முன் நடக்கின்றது. எவ்வாறாயினும் பிள்ளையின் வளர்ச்சி பிள்ளைக்குப் பிள்ளை வேறுபடுகின்றது.
- ஒரு பிள்ளையின் உடல் வளர்ச்சிக்கும் தசைநார் முதிர்ச்சிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு.
- பிள்ளைகள் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் முன்னதாகத் தயார் நிலையை வெளிக்காட்டும். ஆயினும் ஒவ்வொரு பிள்ளையும் தங்களுடைய செயற்பாடுகளுக்கான தயார்ப்படுத்தல் மனவெழுச்சியினை ஒரு சீரான காலச் சுழற்சியில் வெளிக்காட்டாமலிருக்கும் என்று கூற முடியாது.
- ஓர் ஆசிரியர் இது தொடர்பான பொருத்தமான சூழலையும் அனுபவங்களையும் உருவாக்கிக் கொள்வதில் விழிப்புடன் இருக்க வேண்டும்.
- பிள்ளைகளிடம் ஏதாவது எதிர்பாராத தாமதங்கள் இருப்பின் பொருத்தமானதும், அவசியமானதுமான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ஒரு பிள்ளையின் உடல் வளர்ச்சி பற்றி முன்பள்ளி ஆசிரியர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். முன்பள்ளியில் ஒரு பிள்ளை இருக்கின்ற காலத்தில் நுண்தசைநார் வளர்ச்சிக்கும் பேரியக்கத் தசைநார் வளர்ச்சிக்கும் தேவையான சந்தர்ப்பங்களை ஆசிரியர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது வகுப்பறைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ, சிறு குழுக்களாகவோ, முழு வகுப்பாகவோ அல்லது தனியாகவோ செய்யப்படலாம்.
- முன்பள்ளிப் பொறுப்பாசிரியர்கள் மேற்கூறிய அனைத்தையும் உள்ளீர்ப்புச் செய்து சமநிலை வளர்ச்சிக்கேற்றவாறு திட்டமிடுவதற்கும் அமுலாக்கம் செய்வதற்கும் முகங் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2. பேரியக்க தசைநார் விருத்தி

- ஒரு பிள்ளையின் உடல் தசைநார்களாலானது. இவை பல்வேறு வகையானவை. இவற்றுள் சில பெரியன; சில நுண்ணியன. சில வேளைகளில் குறித்த ஒரு செயற்பாட்டிற்கு ஒன்றிற்கு மேற்பட்ட தசை நார்கள் ஒன்றிணைந்து இயங்கவேண்டியது அவசியமாகின்றது. இவ்வாறான தசைநார்களின் கூட்டு 'பேரியக்கத் தசைநார்' எனப்படும்.
- பிள்ளை ஒன்று முன்பள்ளியில் கழிக்கும் காலத்திலேயே பிள்ளையின் கால் தசை, தலையிலுள்ள தசை நார்கள் அதிக அளவில் வளர்ச்சியடைவதால் இக்காலம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இக்காலத்தில் பிள்ளைகளின் வழமையான செயற்பாடுகளான ஓடுதல், பாய்தல், வளைதல், சுழலுதல் என்பன இடம்பெறுகின்றன. இச் செயற்பாடுகள் மூலம் பேரியக்கத் தசைநார்களைப் பயன்படுத்தி இயைபாக்கம் செய்யும் திறன் விருத்தியடைகின்றது. ஆகவே மேற்கூறப்பட்டது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குப் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்.
- அபிவிருத்தி தொடர்பான இக்கருத்தினடிப்படையிலேயே முன்பள்ளிப் பிள்ளைகளை அதிக நேரத்திற்கு ஒரே இடத்திலும் ஒரே நிலையிலும் அமர்த்தி வைத்திருக்கக்கூடாது.
- பிள்ளைகளைப் 10 நிமிடத்திற்கு மேல் இருக்கையில் அமர வைத்திருந்தால் அவர்கள் களைப்படைவார்கள் என்பதை அனுபவமுள்ள ஆசிரியர் அறிந்து செயற்பாடுகளை மாற்றியமைத்து சலிப்பைப் போக்குவார். அசையாமல் ஓரிடத்தில் இருந்து செயற்பாடுகளில் ஈடுபட்டால், அதனைத் தொடர்ந்து உடலசையும் விளையாட்டுக்களான ஓடுதல், பாய்தல் அல்லது பாடி ஆடுதல் போன்றவற்றில் ஈடுபடுத்த வேண்டும்.
- இவ்வாறான அசைவு விளையாட்டுக்களில் ஈடுபட்ட பிள்ளைகள் மீண்டும் ஓரிடத்தில் இருந்தவாறு செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடத் தயாராக இருப்பர்.
- முன்பள்ளிகளில் களிக்கும் நேரத்தில் மூன்றில் இரண்டு பங்கினை விளையாட்டுச் செயற்பாடுகளுக்கென ஒதுக்கப்பட வேண்டும். இந் நேரத்தில் பிள்ளைகளுக்கு மண்டபத்தினுள்ளும் வெளியும் விரும்பியவற்றைச் செய்யச் சுதந்திரமளிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரியக்க தசைநார் விருத்தியின் மூலம் எதிர்பார்க்கப்படும் திறன்

3 – 4 வயதினர்.

- படிக்கட்டுக்களில் மாற்றி மாற்றிக் கால்களை அசைத்து மேலும் கீழும் ஏறி இறங்குதல்
- ஓடும்போதும் நடக்கும்போதும் கை, கால்களின் அசைவுகளை இணைப்பாக்குதல்.
- பெரிய பந்தை உதைத்தல்.
- சாய்வில் மேலும் கீழும் ஏறி இறங்குதல்.
- பந்தை அல்லது விதைப் பையை இரு கைகளாலும் பிடித்தல்
- கால் நுனி விரலால் நடத்தல்.

4 – 5 வயதினர்

- முன் கற்ற திறன்களை மீளச் செய்து முன்னேறுதல்
- 4 தொடக்கம் 8 செக்கன்கள் வரை ஒற்றைக் காலில் நிற்றல்
- சமநிலை பேணியவாறு ஒரு கோட்டில் நடத்தல்
- பாய்ச்சலில் ஈடுபடுதல்
- இரு கால்களாலும் முன்னும் பின்னும் பாய்தல்
- திசைகளை மாற்றியவாறு ஓடுதல்
- 2 – 4 அங்குல உயரத்திற்கு மேலால் பாய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3. நுண்ணியக்கத் தசைநார் விருத்தி

- இது ஒரு வரையறுக்கப்பட்ட வழியில் நுண்தசைநார்களின் விருத்தி அல்லது கையாளும் திறனைப்பற்றிக் குறிப்பிடுகின்றது.
- உடலில் புலனுறுப்புகளைக் கட்டுப்படுத்தும் போதும், விரல் அசைவின்போதும் நுண் தசைநார்கள் பயன்படுத்தப்படுவதால் நுண்ணியக்கத் தசை நார்கள் விருத்தியடையும்.
- முறைசார் கற்றற் செயற்பாடுகள் தொடங்குமுன் கண், காது, கை, கால், விரல், மூக்கு, நாக்கு போன்ற உடல் உறுப்புகளின் தசைநார்கள் விருத்தியுற வேண்டும். அப்பொழுதுதான் பேச்சு, வாசிப்பு, எழுத்து போன்ற முறையான கற்றற் திறன்கள் விருத்தியடையும்.
- கையாளும் திறன் விருத்தி 1.) குறுங்காலப் பயன் தருவது 2.) நீண்டகாலப் பயன் தருவது என இரு வகைப்படும்.
- ஒரு பென்சிலைப் பிடித்தல், கத்தரிக்கோலைப் பயன்படுத்தல், மரத்துண்டங்களைப் பொருத்தி உருவங்கள் செய்தல், புதிர்களை ஆக்குதல் போன்றவை குறுங்காலப் பயனுள் அடங்கும்.
- தன்னம்பிக்கை, நுண்மதி, சுயாதீனச் சிந்தனை, தன்னடக்கம், சூழலை ஆராய்தல், சகபாடிகளோடு வேலை செய்தல் போன்றவை நெடுங்காலப் பயனுள் அடங்கும்.
- பிள்ளைகளில் ஏற்படும் கையாளும் திறன் விருத்திதான் வாழ்க்கைத்திறன் விருத்திக்கு அடித்தளமாக அமைகின்றது.
- ஆகவே முன்பள்ளி ஆசிரியர்கள் பல்வேறு விளையாட்டுக்கள் மூலமும் மகிழ்வூட்டும் செயற்பாடுகளின் மூலமும் பிள்ளைகளின் நுண்ணியக்கத் திறன் விருத்திக்கும் உடல் அபிவிருத்திக்கும் உதவ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுண்ணியக்கத் தசைநார் விருத்தியின் மூலம் எதிர்பார்க்கப்படும் திறன்கள்

### 3 – 4 வயதினர்

- பெரிய கிறயோன் சோக்கை ஒரு கையினால் பிடித்தல்.
- நிறந் தீட்டும் தூரிகையைப் பிடித்தல்
- கடதாசியைக் கிழித்தல்
- கத்தரிக் கோலைப் பயன்படுத்துதல்.
- ஒரு வடிவத்தைச் சுற்றி கோடு வரைதல்
- எளிய வடிவங்களுடனான புதிரை முழுமையாக்கல்
- பற்களைத் துலக்குதல்
- சட்டைப் பொத்தான்களை பூட்டுதல், கழற்றுதல்.
- ஒரு கோப்பையைத் தூக்கிச் செல்லல்.

### 4 – 5 வயதினர்

- களியினால் உருவம் செய்தல்
- ஒரு நீளமான வளைகோட்டினூடாக வெட்டுதல்
- அடையாளங் காணக்கூடியவாறு இலகுவான சித்திரங்களை வரைதல் (வீடு, மனிதன், மரம், பூ)
- எளிய வடிவங்களை வெட்டி எடுத்து ஒட்டுதல்.
- தாமாகவே தமது உடைகளை உடுத்துதல், களைதல்.
- களிப்பறை செல்லுதல், கழுவுதல்
- சப்பாத்தை அணிதல், கட்டுதல்
- வீட்டில் சிறு சிறு உதவிகளைச் செய்தல்.
- ஒரே கையிலுள்ள விரல்களை எண்ணுதல்.

### நுண்ணியக்க, பேரியக்க திறன் விருத்திக்கு உதவுவன

- விதைகள், போத்தல் மூடிகள், சிப்பி சோகி, வெற்றுப் பெட்டிகள், பெரிய கிறயோன் சோக், நிறச் சாயங்கள், பென்சில்கள், கடதாசி அட்டைகள், துணித்துண்டுகள்
- நிறச் சாயங்களுடனான விளையாட்டுக்கள்
- வடிவங்கள், புதிர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோர்ப்பதற்குரிய மணிகள்
- நூலிழை
- களிமண்
- வெளி விளையாட்டு உபகரணங்கள் (ஊஞ்சல், சீசோ, சமநிலைப் பலகை, சறுக்கல் உபகரணம்)
- சங்கீத விளையாட்டுக்கள், செயற்பாடுகள்
- ஓடவும், நிற்கவும், துரத்தவும் சந்தர்ப்பங்கள் வழங்குதல்.
- ஆடைகளை அணியவும், உணவு உண்ணவும், கழுவவும், குடிக்கவும் சந்தர்ப்பம் வழங்குதல்.
- எறிதல், பிடித்தல் (சிறிய பந்து, விதைப்பை, மென்மையான பொருட்கள்)
- மணல் மண், நீர் விளையாட்டுக்கள்.
- கட்டுமானக் கட்டைகள் (Buiding blocks)
- வெளிக்களச் செயற்பாடுகள்
- நிலத்தில் இருந்து விளையாடுவதற்கு விரிப்புகள்
- பாதுகாப்பான விளையாட்டிடம். (முள், கல் இல்லாத ஆபத்து விளைவிக்காத சமதரை)
- ஆராய்ந்து அறியவும் சிந்தனைத் திறனுக்குமான சந்தர்ப்பங்கள்
- ஆக்கத்திறன் விருத்திக்கான பொருட்கள்
- நடித்தல் உபகரணங்கள் செயற்பாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் விருத்தி - சுருக்கம்

- பிள்ளைகளின் உடல் வளர்ச்சி படி முறையாக ஒரே கோலத்தில் நிகழ்வது. இதற்கு எடுக்கும் காலம் பிள்ளைக்குப் பிள்ளை வேறுபடும்.

- முன்பள்ளிக் காலத்தில் பேரியக்கத்திறன் விருத்தி, அவசியமான ஒரு கூறாக இருப்பதால் அதற்கான சந்தர்ப்பங்களை பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

- மற்றுமொரு அவசியமான கூறாக நுண்ணியக்கத்திறன் விருத்தி இருப்பதால் அதனை வாழ்க்கை அனுபவப் பயிற்சியினூடாக விருத்தி செய்வதற்கு ஏற்றவாறு முன்பள்ளிகளில் ஆடைகளை அணிதல். விரும்பிய விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல், பொருட்களை கையாளும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் போன்ற செயற்பாடுகளை வழங்க வேண்டும்.

- நுண்ணியக்க, பேரியக்க திறன் விருத்திக்கான செயற்பாடுகளை வழங்குவதற்கேற்ற வகையிலும் குறுகிய கால இடைவெளியில் செயற்பாடுகளை மாற்றுவதற்கான சுதந்திரத்தைப் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கேற்றவாறு முன்பள்ளிக் கால அட்டவணை திட்டமிடப்படல். வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி. – தசைநார்ப் பயிற்சி

தேர்ச்சி :- விரல், கைத் தசை நார்களைப் பயன்படுத்தி விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 1.1 கயிறு முறுக்குதல்

கற்பித்தல் முறை :- விளையாட்டு

வளம் :-

செயலொழுங்கு :-

1. கற்றல் நேரத்தில் கயிறை முறுக்குதல் போல ஆசிரியர் கைகளால் செய்து காட்டிப் பிள்ளைகளைச் செய்வித்தல்
2. 'கயிறு முறுகி அறுந்து' விட்டது என்று ஆசிரியர் திடீரெனக் கூறிக் கைகளை அகல விரிக்க வேண்டும். பிள்ளைகள் தொடர்ந்து செய்ய வேண்டும்.
3. தொடர்ந்து பலமுறை இச்செயற்பாட்டைச் செய்தல் வேண்டும்



மதிப்பீடு :- முறுக்குதல், கையை உயர்த்துதலை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- பல்வேறு செயற்பாடுகளை ஆசிரியர் பிள்ளைகளைக் கொண்டு செய்வித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அசைதல்

தேர்ச்சி :- கை, கால் தசை நார்களைப் பயன்படுத்தி நிலம் கழுவுவது போன்று பாவனை செய்வார்.

செயற்பாடு :- 1.2. நிலம் கழுவுதல்.

வளம் :-

செயலொழுங்கு :-

1. கற்றல் நேரத்தில் பிள்ளைகள் கைகளில் கந்தைத் துணிகள் உண்டு எனவும் பாடசாலையின் நிலத்தைக் கழுவுவதாகவும் பாவனை செய்யும்படி ஆசிரியர் கூறுதல்
2. பிள்ளைகள் முன்னால் வளைந்து நிலத்தில் கைகளை வைத்தல்
3. கழுவுவது போல் இடம் வலம் அசைந்து நடத்தல்
4. பின் எழுந்து நிற்றல்

மதிப்பீடு :- தசைநார்களைப் பயன்படுத்தி அசைவில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- முற்றம் கூட்டுவது போலப் பாவனை செய்ய விடல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – தசைநார்ப் பயிற்சி

தேர்ச்சி :- தசை நார்களைப் பயன்படுத்திப் பாய்தல், அமர்தல் விளையாட்டில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 1.3. எழும்புதல், பாய்தல், அமர்தல்.

வளம் :-

செயலொழுங்கு :-



1. கற்றல் நேரத்தில் ஆசிரியர் ஒரு பிள்ளையின் பெயரைக் கூறுதல்.
2. பெயர் சொன்னதும் பிள்ளை விரைவாகப் பாய்ந்து எழுந்து மீண்டும் அமர்தல்.
3. அமர்ந்தவர் மீண்டும் பிறிதொரு பிள்ளையின் பெயரைக் கூறுதல்.
4. பெயர் கூறியவர் தொடர்ந்து பெயர் கூறி விளையாட்டினைத் தொடருதல்.

மதிப்பீடு :- உரிய முறையில் எழும்புதல், பாய்தல், அமர்தலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஒரு பிள்ளை பக்கத்தில் இருப்பவரின் பெயரைச் சொல்ல அப்பிள்ளை துள்ளிப் பாய்ந்து எழுந்து பின் இருத்தல், பின் பக்கத்தில் இருப்பவரது பெயரைச் சொல்ல அவர் துள்ளிப் பாய்ந்து எழுந்து இருந்து பக்கத்தில் இருப்பவரின் பெயரைச் சொல்லுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – தசைநார்ப் பயிற்சி

தேர்ச்சி :- தமது உடற் பருமனைத் தேவைக்கேற்ப மாற்றுவார்.

செயற்பாடு :- 1.4. சிறியதும் பெரியதுமான உடல்கள்

வளம் :- பாய், நூல்

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைப் பாயில் படுக்குமாறு பணித்தல்.
2. மூச்சை உள்ளெடுத்து இளக்கி உடலை விரித்துப் பெரிதாக்கல்.
3. தங்கள் மூச்சை வெளிவிட்டு உடலை கூனிக்குறுகிச் சிறிதாக்கல்.
4. பிள்ளைகள் உடலின் பருமனைக் கயிற்றினால் அளத்தல்
5. சுவாசத்தினை மாற்றும் பொழுது அவர்களது உடலின் தோற்றத்தினை நூலினால் அளந்து பார்த்தல்
6. இப்படியே தொடரல்

மதிப்பீடு :- உடல் பருமனை குறுக்குதல், பெருக்குதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- குளிர் அதிகமாக உள்ள வேளையில் உடற் பருமனை மாற்றும் விளையாட்டில் ஈடுபடுதல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - அசைதல்


தேர்ச்சி :- ஓடுதல், பாய்தல், துள்ளுதல், நடத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 1.5. நண்பர்கள் சேருதல்

வளம் :-

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. தங்களுக்கு விரும்பிய நண்பர்களில் ஒருவரை சோடியாகத் தேர்ந்தெடுக்கப் பணித்தல்.
2. கைகளைச் சேர்த்துக்கொண்டு விரும்பியவாறு ஓடுதல், பாய்தல், துள்ளுதல், நடத்தல் செயற்பாடுகளைச் செய்வித்தல்.

மதிப்பீடு :- நட்புறவுடன் ஓடுதல், பாய்தல், துள்ளுதல், நடத்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- ஒருவரோடு ஒருவரின் தோள்கள் முட்டும்படி இருக்கச் செய்தல் பின்னாலும், முன்னாலும் சாய்ந்து சாய்ந்து பாட்டுப்பாடி ஆடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – தசைநார்ப் பயிற்சி

தேர்ச்சி :- கற்பனை அசைவுகளின் மூலம் மகிழ்ச்சி பெறுவார்.

செயற்பாடு :- 1.6. பாவனை செய்தல்.

வளம் :- படுக்கை விரிப்பு.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. கற்றல் நேரத்தில் நித்திரை போல் நிலத்தில் படுத்தல்.
2. நுளம்பு கடித்ததாகக் கருதிச் சொறிதல்.
3. மிகவும் குளிர்வதாகப் பாவனை செய்தல்.
4. எழுந்திருங்கள் என ஆசிரியர் கூறுதல்.
5. கண்களைக் கசக்கி கைகால்களைத் தேய்த்தல்.
6. தொடர்ந்தும் இடைவிட்டு, இடைவிட்டு செய்வித்தல்.

மதிப்பீடு :- அறிவுறுத்தலுக்கமைவான அசைவை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஆக்கச் செயலாக நடிப்புகளில் ஈடுபடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – தொங்குதல்

தேர்ச்சி :- தசை நார்களைப் பயன்படுத்தி தொங்குதல், நிலம்படுதலில் ஈடுபட்டு மகிழ்வார்.

செயற்பாடு :- 1.7. வண்ணத்துப்பூச்சி

வளம் :- பந்து, கடதாசி, றிப்பன்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்
2. ஒரு குழுவினை வண்ணத்துப் பூச்சிகளாகவும், மற்றைய குழுவினை வண்ணத்துப் பூச்சிகளைப் பிடிப்பவர்களாகவும் செயற்படுதல்.
3. வண்ணத்துப் பூச்சிகளாகச் செயற்படுபவர்கள் வெவ்வேறு நிறமுடைய றிபன்களை உயர்த்திப் பறக்க விட்டவாறு ஓடுதல்
4. மற்றைய குழுவினர் வண்ணத்துப் பூச்சியாகப் பறக்க விட்டிருக்கும் பொருட்களைத் தொங்கிப் பிடித்தல்.
5. வண்ணத்துப் பூச்சிகள் யாவும் பிடிபட்டதன் பின்னர் குழுவை மாற்றி விளையாட்டைத் தொடருதல்

மதிப்பீடு :- தொங்குதல், பிடித்தல் என்பவற்றில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பாயவும் கெந்தவும் கைகளை நீட்டி வளைத்து ஆடவும் ஏற்றவாறான விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அசைதல்


தேர்ச்சி :- புகைவண்டி போல அசைவில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 1.8. புகைவண்டிப் பிரயாணம்

வளம் :-

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை வீட்டிற்கு கூட்டிச் செல்வதற்காக புகைவண்டி காத்திருக்கின்றது என ஆசிரியர் கதைகூறி விளையாட்டை ஆரம்பித்தல்
2. ஆரம்பிக்கும் போது முன்னும் பின்னும் தொடக்கத்தில் அசைந்து பின் முன்நோக்கி செல்லுதல்
3. புகைவண்டிபோல் சத்தமிட்டு கைகளை முன்னும் பின்னும் அசைத்து ஆசிரியர் செல்ல, பிள்ளைகள் தொடர்ந்து செல்லுதல்.
4. மெதுவாகத் தொடங்கி பின் விரைவாகச் செல்லுதல்
5. பிள்ளைகள் சத்தமிட்டு வளைந்து நிலையத்தில் ஆட்களை ஏற்றிச்செல்ல ஆசிரியர் வழிகாட்டல்

மதிப்பீடு :- ஆசிரியரின் வழிகாட்டல், அறிவுறுத்தல் என்பவற்றுக்கு அமைவாக செயற்படுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- புகையிரத நிலையத்தில் ரிக்கற் விற்று, ரிக்கற் பரிசோதித்து, பச்சை, சிவப்பு நிறம் காட்டி புகைவண்டி போவது போல விளையாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – இழுத்தல்

தேர்ச்சி :- தசைநார் சமநிலையை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்வார்.

செயற்பாடு :- 1.9. கடலில் சுறாப்பிடிப்போம்

வளம் :- கயிறு, மரத்துண்டு அல்லது சிறிய பெட்டி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பெரிய சுறாவைப் பிடித்து, கடலிலிருந்து வெளியே எடுக்கும் ஒரு மீனவனுக்கு உதவுதல் என ஆசிரியர் விளக்குதல்.
2. மரத்துண்டில் கட்டிய கயிற்றைப் பிடித்துப் பிள்ளைகள் வரிசையில் ஒருவர் பின் ஒருவராக இடம் விட்டு நிற்றல்.
3. "பிள்ளைகளே இழுங்கள் இழுங்கள்" என ஆசிரியர் உற்சாகப்படுத்தல்.
4. கடலிலிருந்து சுறா கரைக்கு இழுத்து வருதல்.
5. குறிப்பிட்ட இடம் வரை பிள்ளைகள் இழுத்து முடித்ததும் மற்றக் குழுவினர் செய்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் எல்லோரும் ஒத்திசைவான செயற்பாட்டில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து கயிறு இழுத்தலில் ஈடுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அசைதல்

தேர்ச்சி :- உடற் தசைநார்களை வலுவூட்டக் கூடிய புத்தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்

செயற்பாடு :- 1.10. மீன்

வளம் :- மீன்களின் படம், பொம்மைகள், கடலின் படம்


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் மீன்கள் கடலில் எவ்வாறு நீந்துகின்றன, விளையாடுகின்றன எனக் கதை கூறுதல்
2. பிள்ளைகளை நிலத்தில் படுக்கச் செய்தல்
3. வயிறு நிலத்தில் படும்படி புரளுமாறு கூறுதல்
4. பின்பு கைகளை காதோரம் படும்படி நீட்டிச் சுழற்றி உடலோடு சேர்த்து மீன் நீந்துவது போல அசைக்கச் செய்தல்.
5. பலமுறை தொடர்ந்து செய்தல்.

மதிப்பீடு :- ஒவ்வொரு பிள்ளையினதும் உடல் அங்கங்களின் பூரணமான அசைவை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பாம்பு போல் நெளிந்து நெளிந்து விளையாட விடல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - பாய்தல்

தேர்ச்சி :- உடல் அவயவங்களை அசைத்துத் தவளை போலப் பாய்வார்.

செயற்பாடு :- 1.11. பாயும் தவளை

வளம் :- தவளையின் படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. உணவு தேடுவதற்காகத் தவளை எவ்வாறு பாய்கின்றது என் விளக்கி ஆசிரியர் செய்து காட்டுதல்.
2. ஆசிரியருடன் சேர்ந்து பிள்ளைகளும் பாய்ந்து பார்த்தல்.
3. பிள்ளைகள் தனித்துப் பாய்தல்.

மதிப்பீடு தவளைகள் போல் உதைத்துப் பாய்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- குறிப்பிட்ட தூரத்திற்குத் தவளைப் பாய்ச்சலில் ஈடுபடுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - அசைதல்

தேர்ச்சி :- முதுகுப்புறத் தசைநார்களை அசைத்து புழு போல நெளிவார்.

செயற்பாடு :- 1.12. நெளிந்து அசைதல்

வளம் :- புழுக்களின் படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு


செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளிடம் புழுக்கள் நெளிவதையும் அவற்றின் நடத்தைகளையும் பற்றிக் கலந்துரையாடல்.
2. புழுக்கள் எவ்வாறு ஊர்ந்து, நெளிந்து செல்கின்றன என்று பாவனை செய்யுமாறு தூண்டுதல்.
3. புழுக்கள் போல நெளிந்து கைகளை மடித்து தலையின் கீழ் வைத்துப் படுத்தவாறு அசைய விடுதல்.
4. அதேபோல் குப்புறப்படுத்தும் அசையவிடல்
5. எல்லா பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் அளித்தல்

மதிப்பீடு :- புழுபோல் நெளிவதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகளைச் சோடிகளாக்கி விளையாட்டில் ஈடுபடுத்தல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அசைதல்

தேர்ச்சி :- முதுகுப்புறத் தசை நார்களை வலுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 1.13. பூனை அசைவு

வளம் :- பூனையின் படங்கள் (நித்திரை கொள்ளல்,நித்திரை விட்டெழுந்த பின் உடலை வளைத்து நிமிர்த்துதல், பதுங்கிப் பாய்தல்.)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பூனை பற்றிய பாடலோடு, அல்லது கதையோடு ஆரம்பித்தல்.
2. பூனை பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை பிள்ளைகளிடத்தில் நடத்துதல்.
3. பூனையின் அசைவுகளை செய்து காட்டும்படி பணித்தல்.
4. பூனை உடலை அசைக்கும் செய்கைகளை பலமுறை செய்வதற்கு எல்லாப் பிள்ளைகளையும் ஈடுபடுத்தலாம்.

மதிப்பீடு :- குனிந்து முதுகை வளைத்து நிமிர்த்துவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- நாய் போல உடலை நிமிர்த்தும் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – தசைநார் விருத்தி

தேர்ச்சி :- உடலின் மேற்பகுதிகளான தலை, கழுத்து, கைத் தசைநார்களை வலுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுவார்.


செயற்பாடு :- 1.14. தலையில் சுமத்தல்.

வளம் :- பந்து, பெட்டி, (பாரமில்லாதவை)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பந்தைத் தலையில் வைத்து இரு கைகளாலும் பிடித்த படி நடந்து சென்று வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடுதல்
2. பாரமில்லாத வேறு பொருட்களையும் பயன்படுத்தல்



3. ஒரு பிள்ளை பந்தை தலையில் வைத்து நடந்து சென்று பெட்டியில் போட்டதும் மற்றப்பிள்ளை தொடர்ந்து செய்தல்.

மதிப்பீடு :- தலையில் வைத்து இரு கைகளாலும் பிடித்து நடந்து செல்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- குழுவாக விளையாட்டில் ஈடுபடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி — தசைநார்ப் பயிற்சி

தேர்ச்சி :- தசை நார்களைப் பயன்படுத்தி உருட்டி மகிழ்வார்.

செயற்பாடு :- 1.15. உருட்டுதலும் உருளுதலும்

வளம் :- மரக்குற்றிகள், மரக்குற்றிகளின் படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் சில பிள்ளைகளை மரக்குற்றிகளாகப் பாவனை செய்து குப்புறப் படுக்கும்படி செய்தல்.
2. மற்றைய பிள்ளைகள் மரக்குற்றிகளை மிகக் கவனமாக உருட்டிவிடல்.
3. ஒவ்வொரு பிள்ளையும் குற்றியாகவும், உருட்டுபவராகவும் செயற்பட வழிப்படுத்தல்.



மதிப்பீடு :- பொருத்தமாக உடலை அசைத்து உருட்டுவதையும் உருளுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- உருளையான மரக்குற்றிகளை உருட்டி விளையாடும் விளையாட்டில் ஈடுபடுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - வளைதல்


தேர்ச்சி :- கட்டுப்படுத்தப்பட்ட வெளியின் ஊடாக அசைந்து செல்வார்.

செயற்பாடு :- 1.16. சுரங்கத்தின் ஊடாகச் செல்லுதல்.

வளம் :- வளையக் கூடிய வளையங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை இரு குழுக்களாக்குதல்.
2. ஒவ்வொரு குழுவையும் இரண்டு வரிசைகளில் நிற்க விடல்
3. குழுவிற்கு ஒருவரை அழைத்து 3m தூரத்தில் வளையத்தை நிலைக்குத்தாகவும், படத்தில் உள்ளது போன்று மேல் நோக்கி இழுத்து ஒடுக்கிப் பிடிக்கச் செய்தல்
4. ஆசிரியர் சைகையைக் கொடுத்தல்.
5. பிள்ளைகள் ஓடி வந்து வளையத்தின் ஊடாகப் புகுந்து செல்லல்
6. வளையத்தில் தொடாதவாறு புகுந்து செல்ல வழிப்படுத்தல்
7. வளையத்தை பிடிப்பதற்கும், புகுந்து செல்வதற்கும் எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்

மதிப்பீடு :- வளையத்தில் தொடாதவாறு வளைந்து செல்வதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- இரு குழுக்களாக்கி இரண்டு வளையங்களைப் பயன்படுத்தி விளையாட்டில் ஈடுபடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அசைதல்

தேர்ச்சி :- தசை நார்களைப் பயன்படுத்தி புத்தாக்க அசைவில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 1.17. ஆடும் கப்பல்

வளம் :- கடலில் கப்பல்களின் படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளைச் சோடிகளாக்கி முகத்திற்கு முகம் பார்க்குமாறு அமரச் செய்தல்.
2. படத்தில் காட்டியவாறு நிலத்தில் கால்களையும், கைகளையும் முன் நீட்டியவாறு இருத்துதல்.
3. கடலில் காற்று வீசும்போது கப்பல் அசைவது போல பக்கவாட்டில் சரிந்து சரிந்து நிமிருதல்
4. ஆசிரியர் "இப்போது புயற் காற்று பலமாக வீசுகின்றது" எனக் கூறுதல்.
5. ஆசிரியரும் பிள்ளைகளும் புயற் காற்று வீசுவது போல ஒலி எழுப்பி பாவனை செய்தல்.
6. கப்பலாக பாவனை செய்பவர்கள் அசைதல்.

மதிப்பீடு :- அறிவுறுத்தலுக்கு ஏற்ப அசைவில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பல விதமான அசைவுகளை பிள்ளைகள் செய்வதற்கான செயற்பாடுகளை ஆசிரியர் உருவாக்கி ஈடுபடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – நடத்தல்

தேர்ச்சி :- தசை நார்களைப் பயன்படுத்தி சிக்கலான அசைவில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 1.18. தண்ணீர் நடை

வளம் :- பிளாஸ்டிக் தட்டுகள், கோப்பைகள், தண்ணீர்


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. நிலத்தில் எல்லைப்படுத்தி தடித்த கோடு வரைதல்.
2. பிள்ளைகள் தட்டில் வைக்கப்பட்ட தண்ணீர்க் கோப்பையை இரு கைகளாலும் பிடித்தபடி கோட்டில் நடத்தல்.
3. குறித்த எல்லையைக் கடந்தவுடன் தண்ணீர் சிந்தப்பட்டுள்ளதா என ஆசிரியர் அவதானித்தல்.
4. கோட்டின் முடிவிடம் வரை தண்ணீர் சிந்தாது நடப்பதற்கு வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- தண்ணீர் சிந்தாதவாறு கவனமாக கொண்டு செல்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஒரு கையை மட்டும் பயன்படுத்தி தட்டில் வைக்கப்பட்ட தண்ணீர்க் கோப்பையைக் கொண்டு செல்லும் விளையாட்டில் ஈடுபட விடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - தவளுதல்

தேர்ச்சி :- முழுத் தசைநார்களையும் பயன்படுத்தி தவளுவார்.

செயற்பாடு :- 1.19. தவழுதல்

வளம் :- துணி. மேளம்

அணுகுமுறை :- விளையாட்டு


செயலொழுங்கு :-



1. ஆசிரியர் பிள்ளைகளை வட்டமாக இருக்கச் செய்தல்
2. ஒரு பிள்ளையை அழைத்து நடுவில் இருத்தல்
3. துணியால் பிள்ளையை மூடி மேளம் இருக்கும் இடத்திற்குத் தவழ்ந்து வரும்படி கூறுதல்
4. ஒரு பிள்ளையிடம் மேளத்தைக் கொடுத்து அடிக்கச் செய்தல்
5. மேளச்சத்தம் கேட்டதும் துணியால் மூடப்பட்டிருக்கும் பிள்ளை சத்தம் வந்த திசையை நோக்கித் தவழுதல்
6. மேளத்தைப் பலமாக அடித்தல்.
7. மேளம் அடிப்பவரையும், துணியின் கீழ் இருப்பவரையும் மாற்றி மாற்றி ஏல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்

மதிப்பீடு :- சத்தம் வரும் திசைக்கு ஏற்ப தவளுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகளது விருப்பு நேரத்தில் தாங்களாகவே இவ்வகைச் செயற்பாடுகளைச் செய்ய விடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி — அசைதல்

தேர்ச்சி :- படகு வலிப்பது போல் பாவனை செய்து அசைவர்

செயற்பாடு :- 1.20. படகு ஓட்டுதல்

வளம் :- படகு வலித்தலின் மூலம் முன், பின் நோக்கிச் செல்லும் படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

ஏ..லே..லோ ஏலேலோ ஏ..லே…லோ
ஏ..லே..லோ ஏலேலோ ஏ..லே…லோ
மீன்பிடிப்போம் நாங்கள் மீன்பிடிப்போமே
வலை வீசி நாங்கள் மீன்பிடிப்போமே
ஏ..லே..லோ ஏலேலோ ஏ..லே…லோ
ஏ..லே..லோ ஏலேலோ ஏ..லே…லோ
சந்திரனும் இந்திரனும் சவ்ள்வலித்தே
சங்கரனும் ஐங்கரனும் வலைவீசி
ஏ..லே..லோ ஏலேலோ ஏ..லே…லோ

1. பிள்ளைகளை ஒருவர்பின் ஒருவராக அல்லது விரும்பியவாறு நிலத்தில் கால்களை முன்னால் நீட்டி இருக்குமாறு கூறுதல்.
2. "நாங்கள் கடலில் படகில் இருக்கின்றோம்; இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போவோம்; துடுப்பை எடுத்து வலியுங்கள்" என்று ஆசிரியர் கூறிப் பாவனை செய்தல்.



3. பாடலுடனும் இசையுடனும் பிள்ளைகள் முன்னும் பின்னும் கைகளை மடித்து படகு ஓட்டுவது போல அசைவர்.
4. ஆசிரியர் ஒரு துடுப்பினாலும், பின் இரு துடுப்பினாலும் இரு கைகளையும் பயன்படுத்தி வலிக்குமாறு ஊக்குவிக்கலாம்.

மதிப்பீடு :- படகு வலிப்பது போல ஒத்திசைவுடன் கைகளைச் அசைப்பதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் : முழங்காலில் நின்று கொண்டும் இச் செயற்பாடுகளைச் செய்ய விடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அசைதல்

தேர்ச்சி :- தசை நார்களைப் பயன்படுத்தி மீன்போல் பாவனை செய்து அசைவார்.

செயற்பாடு :- 1.21. மீன் அசைவு

வளம் :- நீந்தும் படங்கள், நில விரிப்பு,

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. சிறிய மீன்கள் நீரில் பலவிதமாக அசைந்து நீந்தி அசைவதைப் பற்றி ஆசிரியர் கூறுதல்.
2. மீன்களைப் போல் பாவனை செய்யுமாறு கூறிப் பிள்ளைகளை நிலத்தில் குப்புறப் படுக்கச் செய்தல் .
3. கைகளை நிலத்தில் ஊன்றி தலையை மேலுயர்த்தச் செய்தல் .
4. அதேவேளை கால்களை மடித்து மேல் உயர்த்தல்.
5. மீண்டும் மீண்டும் இச் செயற்பாட்டில் ஈடுபடல்.

மதிப்பீடு :- மீன் போல் அசைதலை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- மீன்கள் நீந்தி விளையாடுவதைப் பார்வையிட ஒழுங்கு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – துள்ளுதல்

தேர்ச்சி :- பந்துபோல் துள்ளித் துள்ளிப் பாய்வதன் ஊடாக தசைநார்களை வலுப்படுத்துவார்.

செயற்பாடு :- 1.22. துள்ளிப் போடுதல்

வளம் :- கயிறு, மேசை, கதிரை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-


கூடைப் பந்து என்றொரு விளையாட்டு உண்டு இதில் குழுவில் உள்ள ஒருவர் பந்தைப் பெற்று நிலத்தில் துள்ளி அடித்துப் பின்பு அதனைக் கம்பத்தில் உள்ள வளையத்தினூடாகப் போடுவார்.

இன்று நாங்கள் இவ் விளையாட்டைப் பாவனை செய்வோம்.

கயிற்று வளையம் தான் கூடை

நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைப் பந்துகளாகப் பாவனை செய்ய வேண்டும்.

1. ஆசிரியர் வட்ட வடிவில் கயிற்றினைச் சுற்றிக் கட்டிவிடல்.
2. விளையாட்டினை அறிமுகம் செய்தல்
3. ஆசிரியர் ஒரு பிள்ளையின் முதுகில் தட்டல்.
4. பிள்ளை பந்து போல் துள்ளித் துள்ளி வந்து கூடையினுள் துள்ளிப் பாய்ந்து குந்தியிருத்தல்.



5. இவ்வாறு எல்லாப் பிள்ளைகளும் ஈடுபடல்
6. மீண்டும் மீண்டும் விளையாட்டில் ஈடுபடல்

மதிப்பீடு :- பந்து போல துள்ளித் துள்ளிப் பாயும் திறனை (Bumping) அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகளை முயல் பாய்ச்சல் விளையாட்டை விளையாட விடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - ஓடுதல்

செயற்பாடு :- 1.23. கொடி ஓட்டம்.

தேர்ச்சி :- குழுவாகச் சேர்ந்து ஓடுவார்

வளம் :- தடிகளில் ஒட்டிய பலவர்ணக் கொடிகள்

அணுகுமுறை :- விளையாட்டு


செயலொழுங்கு :-

1. பிள்ளைகளுக்கு தடிகளில் ஒட்டிய பல வர்ணக் கொடிகளைக் கொடுத்தல்.
2. பிள்ளைகளின் கைகளில் கொடிகளை உயர்த்தி நீட்டிப் பிடித்தவாறு மைதானத்தில் ஓடவும் நடக்கவும் விடல்.
3. இவ்விளையாட்டு முடிந்ததும் கொடிகளைக் காட்சிப்படுத்தல்.

மதிப்பீடு :- அசைவுகளில் எல்லா மாணவர்களும் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. துணிகளால் செய்யப்பட்ட கொடிகளைப் பயன்படுத்தி ஓட விடல்
2. தோன்றும் வேறுபாட்டை அவதானிக்கவிடல்.
3. கொடிகளுடன் எதிரெதிர்த் திசைகளில் ஓட விடல்
4. கொடிகளில் தோன்றும் வேறுபாட்டை அவதானிக்க விடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – உருளுதல்

தேர்ச்சி :- இரு சமாந்தர எல்லைக்கோட்டினுள் உடலை அசைப்பார்.

செயற்பாடு :- 1.24 உருளுதல்

வளம் :- பாய், நிலவிரிப்பு

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் இருகயிறுகளை எடுத்து சமாந்தர வடிவில் நிலத்தில் அகலமாக வைத்தல். (பிள்ளைகளின் உயரத்திற்கேற்ப)
2. இரண்டு பக்கங்களிலிருந்தும் இரு பிள்ளைகள் எதிரெதிர்த் திசையை நோக்கி கயிற்றில் படாமல் உருண்டு வரல்.
3. பிள்ளைகள் இருவரும் உருண்டு வந்து ஒருவரையொருவர் தொட்டதும் எழுந்து நின்று கை குலுக்கல்.
4. இவ்வாறு இவ் விளையாட்டைத் தொடரல்.

மதிப்பீடு :- கயிற்றில் படாமல் உருளுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- கயிற்றை வளைவாக நிலத்தில் போட்டு விளையாட்டை விளையாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – தசைநார்ப் பயிற்சி

தேர்ச்சி :- காலால் சிறு பொருட்களை எடுப்பார்.

செயற்பாடு :- 1.25 காலால் எடுத்தல்.

வளம் :- உருட்டிய சிறு துண்டுப் பேப்பர்கள்,

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. மாணவர்களை வட்டமாக விடுதல்
2. வட்டத்தின் நடுவில் வெற்றுத் தட்டுக்களை வைத்தல்
3. உருட்டிய சிறு துண்டுப் பேப்பர்களைச் சிதறி வீசுதல்
4. கைகளைப் பயன்படுத்தாது வெற்றுத் தட்டினுள் வீசப்பட்டுள்ள துண்டுப் பேப்பர்களை பொறுக்கிப் போடச் செய்தல்
5. எடுத்த பொருட்களை ஒவ்வொரு பிள்ளையும் தனித்தனியான பெட்டிக்குள் அல்லது ஓரிடத்தில் ஒன்று சேர்க்க வேண்டும்.

மதிப்பீடு :- செயலில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- கால்களைப் பயன்படுத்தி நிலத்தில் கோடுகளை வரைய விடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அசைதல்

தேர்ச்சி :- அசைவில் ஈடுபடுவார்

செயற்பாடு :- 1.26 அசைதல்

வளம் :- பலூன்களும் படங்களும்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளை அழைத்து காற்றூதப்பட்ட பலூன்களாகப் பாவனை செய்யுமாறும் காற்று வீசாத போது கீழே கிடப்பது போலத் தரையில் இருக்குமாறும் கூறல்
2. காற்று வீசுகின்றது எனக் கூறி வீசும் திசையைக் காட்ட அதற்கேற்றவாறு பலூன் அசைவது போல அசைய விடல்
3. காற்று நின்று விட்டது எனக்கூறி அப்படியே அசையாது இருக்க விடல்
4. காற்று வீசுகின்றது என்று மறு திசையைக் காட்ட அதற்கேற்றவாறு அசைய விடல்
5. மீண்டும் மீண்டும் இவ் விளையாட்டை விளையாட விடல்

மதிப்பீடு :- அறிவுறுத்தலுக்கு அமைய அசைவில் ஈடுபடுவதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- விரைவான அறிவுறுத்தலுக்கு அமைய விளையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்க விருத்தி – நுழைதல்

தேர்ச்சி :- வளையத்தினூடாக நுழைந்து செல்வார்

செயற்பாடு :- 1.27 நுழைதல்

வளம் :- வளையம்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வகுப்பறைக்கு வெளியே வட்டமாக நிற்கச் செய்தல்
2. ஒரு பிள்ளை வளையத்தை வட்டத்தின் நடுவே வைத்துப் பிடித்தல்.
3. மற்றவர்கள் ஒவ்வொருவராக வந்து வளையத்தில் படாமல் அதனூடாகச் செல்லுதல்
4. வளையத்துடன் நிற்கவும், பாயவும் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் கொடுத்தல்.

மதிப்பீடு :- வளையத்தில் தொடாது நுழைந்து செல்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இரண்டு வளையங்களை வைத்து ஒன்றில் புகுந்து பின் மற்றதற்குள்ளாலும் புகுந்து எல்லோரும் செல்ல அனுமதிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அரைதல்

தேர்ச்சி :- சுரங்கத்தினூடாக அரைந்து செல்வார்.

செயற்பாடு :- 1.28 அரைந்து செல்லல்.

வளம் :-

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வரிசையில் குனிந்த நிலையில் கைகளால் தரையைத் தொட்டவாறு நெருக்கமாக சுரங்க வழி போன்று விடல்.
2. ஒரு பிள்ளையை சுரங்க வழியினூடாகப் புகுந்து வயிற்றுப் பகுதி நிலத்தில் தொட அரைந்து செல்ல விடல்.
3. அப்பிள்ளை புகுந்து முடிந்ததும் முன்னால் வந்து குனிந்து நிற்றல்.
4. இவ்வாறு எல்லாப்பிள்ளைகளுக்கும் புகுந்து செல்ல வாய்ப்பளிக்க வேண்டும்.

மதிப்பீடு :- குனிந்த நிலையையும் அரைந்து செல்வதையும் அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகளின் விருப்பத்திற்கேற்ப பிள்ளைகளைக் கொண்டே பல்வேறு வகையான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – நடத்தல்

தேர்ச்சி :- சூடான பாதையில் நடப்பது போல நடந்து காட்டுவார்.

செயற்பாடு :- 1.29 வெய்யிலில் நடத்தல்.

வளம் :- நீளக் கயிறு.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. கயிற்றின் உதவியினால் பாதை ஒன்றினை அமைத்தல்.
2. கயிற்றின் ஒரு பக்கத்தில் பிள்ளைகளை நிற்க விடல்
3. நாங்கள் இன்று ஒரு பிரயாணம் போவோம் எனக் கூறி பாதையின் ஒரு பக்கத்தில் நிற்றல்.
4. இன்று சூரிய வெப்பம் அதிகமாக இருக்கின்றது; நாங்கள் சூடாகவுள்ள வீதியில் நடக்கின்றோம் எனக் கூறி ஆசிரியர் நடந்து காட்டுதல் ; பிள்ளைகள் நடத்தல்.
5. நாங்கள் செருப்பும் அணியவில்லை; வெப்பத்தால் வீதியின் சூடும் அதிகரிக்கின்றது என்று கூறியவாறு வெவ்வேறு விதமாக நடத்தல்.
6. பிள்ளைகளும் சூடான வீதியில் நடப்பது போல் நடத்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் உரிய உடலசைவைக் காட்டி நடப்பதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- மழை நேரத்தில் காடுகளுக்கூடாக நடப்பது போன்ற பல்வேறு செயற்பாடுகளை அறிமுகம் செய்து வழிநடத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – பரிமாறல்

தேர்ச்சி :- பந்தை விழவிடாது பரிமாறுவார்

செயற்பாடு :- 1.30 பந்து பரிமாற்றம்.

வளம் :- பெரிய பந்து (இறப்பர் அல்லது பிளாஸ்ரிக்)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளை வட்டமாக நிற்கவிட்டு ஒருவரிடம் பந்தைக் கொடுத்தல்.
2. பந்தைப் பெற்றவர் பந்தினை விழவிடாது மற்றையவரிடம் கொடுத்தல்.
3. பந்தை விழ விடாது ஒருவர் மாறி ஒருவராக விளையாட்டினைத் தொடர்தல்.
4. பந்தினைத் தவற விட்டால் எதிர்த்திசையில் பந்தைப் பரிமாற்றல்.
5. ஆசிரியர் எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- பந்தைக் கொடுப்பதையும், விழவிடாது பிடிப்பதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பந்தை விரைவாகக் கொடுத்து விறுவிறுப்பாக விளையாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - புகுதல்

தேர்ச்சி :- சோடியாகப் பாலத்தினூடாகப் புகுந்து செல்வார்

செயற்பாடு :- 1.31. பாலத்தின் ஊடாகச் செல்லல்.

வளம் :- பாலத்தின் படம்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை இரு வரிசையில் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் நிற்க வைத்தல்.
2. எதிரெதிரே நிற்பவர்கள் இரு கைகளையும் நீட்டிக் கோர்த்துப் பிடித்து பாலம் போல் நிற்றல்.
3. பின்னால் நிற்கும் சோடி பாலத்தின் கீழாக வந்து முன்னால் பாலம் போல் நிற்றல்.
4. மீண்டும் மீண்டும் எல்லாச் சோடிகளும் பாலத்தின் கீழாக நடத்தல்

மதிப்பீடு :- சோடியாகக் குனிந்தபடி புகுந்து செல்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பாலத்தின் கீழ் செல்லும் விளையாட்டின் போது பாடலைப்பாடிச் செல்ல பிள்ளைகளை உற்சாகப்படுத்தலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அசைதல்


தேர்ச்சி :- புத்தாக்க அசைவில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 1.32 ஆடும் பொம்மை

வளம் :- பெரிய சதுரக் கடதாசிப் பெட்டிகள்(1/2m x ¼ m ), பிறிஸ்ரல் போட், பழைய மேற்சட்டையின் நீளக் கைகள், பழைய நீளக் காற்சட்டையின் கால்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-




1. படத்தில் காட்டியவாறு பெட்டிகளில் A,B, D,E எனத் துவாரமிடல்.
2. A யில் தலை புகக் கூடியவாறும், D,E யில் கைகள் புகக் கூடியவாறும் துவாரங்களை அமைத்தல்.
3. பழைய மேற்சட்டையின் இரு கைகளையும் D,E துவாரங்களில் ஒட்டுதல்.
4. துளையிட்ட பெட்டியை பிள்ளையின் தலையின் ஊடாகத் தோளில் நிற்குமாறு அணிதல்
5. பிள்ளையின் கைகளை ஒட்டப்பட்ட மேற் சட்டையின் கைகளின் ஊடாகச் செலுத்தல்
6. எஞ்சிய கைப் பகுதியினைப் பழைய கடதாசியினால் நிரப்புதல்
7. முகமூடிகளை முகத்தில் அணிதல்
8. பாடல்களுக்கு ஏற்றவாறு பிள்ளைகள் அசைதலைக் காட்டுதல்

மதிப்பீடு :- ஆக்க அசைவுகளில் தசை நார்களின் பயன்பாடு முழுமை அடைந்துள்ளதா என அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- விரும்பிய நேரத்தில் சுயமாக பொம்மையோடு விளையாட அனுமதித்தல், பாடலையும் சேர்த்துக் கொள்ளல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அசைதல்

தேர்ச்சி :- கைத் தசை நார்களைப் பயன்படுத்தி குழுவாக விளையாடுவார்.

செயற்பாடு :- 1.33 இறப்பர் வளையம்

வளம் :-

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக நிற்க வைத்து கைகளை கோர்த்துப் பிடிக்கச் செய்தல்.
2. இந்த வட்டம் இறப்பரால் செய்யப்பட்டதென பிள்ளைகளை பாவனை செய்யுமாறு ஆசிரியர் விளக்கி இது விரிந்து சுருங்குமென்று கூறி முன்னும் பின்னும் நடந்து அசைய விடல்.
3. பின்னால் அசையும் போது வட்டம் அகலமாகும். அப்போது கைகள் பிரிந்தால் மீண்டும் கோர்த்துக்கொள்ளல்.
4. ஆசிரியர் அல்லது குழுத்தலைவர் வட்டத்தின் நடுவிலிருந்து ஓசை எழுப்பும் போது இறப்பர் வளையம் நடுவில் குவியும். மறு ஓசைக்கு விரிந்து செல்லும், இந்த நேரத்தில் பொருத்தமான இசையோடு பாடல்களையும் சேர்த்துக் கொள்ளல்.

மதிப்பீடு :- குழு ஒத்திசைவுடன் விளையாட்டில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- அசைவிற்கேற்றவாறு பாடலைப் பாடி ஈடுபடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – ஓடுதல்

தேர்ச்சி :- பொழுது போக்கு விளையாட்டிற்காக ஓடுவார்

செயற்பாடு :- 1..34 துரத்துதலும் ஓடுதலும்

வளம் :- இரு நிறங்கள் கொண்ட பட்டி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. இச்செயற்பாட்டைத் தொடங்கு முன் தேனீயும், குளவியும் கதையை ஆசிரியர் பிள்ளைகளுக்கு கூறல்.

ஒரு பூங்காவில் பல தேனீக்கள் வாழ்ந்தன. பலவகை பூக்களிலிருந்தும் தேனைச் சேகரித்து தேன்கூட்டில் வைக்கும். தேனீக்கள் தேன்சேகரிக்க வெளியில் போனதும், அங்கு வசிக்கும் குளவிகள் மெதுவாக வந்து தேனைக்குடிக்கும். தேனீக்கள் குளவிகளைத் துரத்திப்பிடிக்கும்.

2. பிள்ளைகளை இரு பிரிவுகளாக்கி தேனீக்களாகவும், குளவிகளாகவும் இரு நிறங்களைக் கட்டி விடல்.
3. தேனீக்கள் குளவிகளைத் துரத்துதல்.
4. குளவிகள் ஓடி ஒளிதல்.
5. தேனீ குளவியைத் தொட்டு ஆசிரியரிடம் ஒப்படைத்தல்.
6. குளவிகள் பிடிபடும் மட்டும் விளையாட்டுத் தொடரல்.
7. இவ்வாறே மாற்றி, மாற்றி விளையாட்டைத் தொடரல்.

மதிப்பீடு :- சுறுசுறுப்பாக ஓடியாடி விளையாடுவதை அவதானித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - எறிதல்

தேர்ச்சி :- இலக்கை நோக்கி எறிவார்.

செயற்பாடு :- 1.35 இலக்கிற்கு எறிதல்

வளம் :- பந்து

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பெரிய வட்டம் ஒன்றை வரைந்து, பிள்ளைகளை மூன்று குழுக்களாகப்பிரித்து, இரண்டு குழுக்களை வட்டத்தினுள் விடல்.
2. வட்டம் தான் குளம், வட்டத்தினுள் நிற்பவர்கள் தான் மீன்கள். மற்றவர்கள் வட்டத்தைச்சுற்றி நிற்கும் மீனவர்கள் என்பதை பிள்ளைகளுக்கு தெரியப்படுத்தல்.
3. ஆசிரியர் மென்மையான பிளாஸ்ரிக் பந்தை வெளியில் நிற்கும் மீன்பிடிகாரரிடம் கொடுத்து மீனுக்கு எறிய விடுதல்.
4. மீன்கள் பந்து படாதவாறு விலகிக் கொள்ளல்..
5. மீனவர்கள் மாறிமாறி பந்தை வீசுதல்.
6. பந்துபட்டவர் மீன்பிடிகாரராக மாறி பந்தை எறிதல்.
7. இவ்வாறு விளையாட்டைத் தொடரல்.

மதிப்பீடு :- துல்லியமாக எறிதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இவ்விளையாட்டைச் சுறுசுறுப்பாக்க பந்தின் எண்ணிக்கையை 2, 3 ஆக அதிகரித்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – அசைதல்

தேர்ச்சி :- நீந்துவது போல் உடலை அசைப்பார்.

செயற்பாடு :- 1.36 நீந்துதல்

வளம் :- முதலையின் படம், கயிறு. விரிப்பு

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. வகுப்பறையின் மத்தியில் கயிற்றினால் வட்டமிட்டுக் கொள்ளல். (இதன் உட்பகுதி குளம்)
2. ஒரு பிள்ளையை முதலையாகக் குறிப்பிடுதல்.
3. குளத்தினுள் பிள்ளைகளை நீந்தி விளையாடுவது போல பாவனை செய்ய விடல்.
4. பிள்ளைகள் நீந்தி விளையாடும் போது முதலை திடீரென பிடிக்க முயற்சித்தல்.
5. முதலையிடம் அகப்பட்டவர் முதலையாக விளையாடத் தொடங்க விடல்.
6. இவ்வாறு விளையாட்டைத் தொடரல்.
7. யாவருக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- மீனைப் போல் அசைவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- முதலை துரத்தும் போது பிள்ளைகள் ஓடலாம், கெந்திப்பாயலாம். தவழ்ந்து உருண்டு விளையாட அனுமதிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – தொங்குதல்

தேர்ச்சி :- கை, கால்களை அசைத்து தொங்குவார், பாய்வார்.

செயற்பாடு :- 1.37 தொங்குதலும் பாய்தலும்


வளம் :- பலநிறங்களில் வண்ணத்துப் பூச்சிகள், தடி. நூல்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக நிற்க விட்டு, வட்டத்தின் நடுவில் ஆசிரியர் வண்ணத்துப் பூச்சிகள் கட்டப்பட்ட தடியை வைத்திருத்தல்.
2. ஆசிரியர் பிள்ளைகளின் தலைக்கு மேலே தடியை பிடித்து வண்ணத்துப் பூச்சிகளைப் பிடிக்குமாறு கூறல்.
3. துள்ளிப் பாய்ந்து பிடித்தவர் வெளியே சென்று அமரல்.
4. எல்லாப் பிள்ளைகளும் வண்ணத்துப் பூச்சியைத் தொடும் வரை விளையாட்டைத் தொடரல்.

மதிப்பீடு :- தொங்குதலிலும் பாய்தலிலும் ஈடுபடுவதை அவதானித்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - நடத்தல்

தேர்ச்சி :- காலை மாற்றியவாறு ஒரு காலை நிலத்தில் ஊன்றிச் சுழன்றவாறு நேர் கோட்டில் நடப்பார்.

செயற்பாடு :- 1.38 ஒற்றைக் காலில் சுழன்று நடத்தல்.

வளம் :- வெண்கட்டி, நாடா

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் வெண்கட்டியால் தரையில், தடித்த கோடொன்றை வரைந்து, கோட்டின் ஒருபக்கத்தில் பிள்ளைகளை நிற்க விடல்.
2. ஒரு பிள்ளையை அழைத்து கோட்டில் ஒரு காலை வைத்தவாறு மற்றைய காலைத் தூக்கிச் சுழன்று நடக்குமாறு கூறுதல்.
3. இரண்டு கால்களையும் மாற்றி மாற்றி நடத்தல்.
4. இவ்வாறு ஒரு முனையில் இருந்து மறுமுனைக்கு சுழன்றவாறு செல்லல்.
5. ஒரு பிள்ளை சிறிது தூரம் சென்றதும் இரணடாவது பிள்ளையை ஆரம்ப இடத்தில் இருந்து நடக்க அனுமதித்தல்.
6. எல்லா பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- உரிய முறையில் சுழல்வதையும், நடப்பதையும் அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- இச்செயற்பாட்டை வலுவுள்ளதாக மாற்றுவதற்கு பிள்ளைகளைக் கால், விரல் நுனியை ஊன்றியும் குதிக்காலால் நடந்தும் செய்விக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – நடத்தல்

தேர்ச்சி :- பார்வையற்ற நிலையில், சூழலில் உள்ள ஒலிகளைக் கிரகித்து இலக்கை நோக்கி நடப்பார்.


செயற்பாடு :- 1.39 கண்கட்டி நடத்தல்.

வளம் :- கண்களை மறைப்பதற்கு கைக்குட்டைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் ஒருவரையொருவர் நோக்கியவாறு இரு வரிசையில் நிற்றல்.
2. இவர்களுக்கிடையில் இருப்பதுதான் வீதி.
3. வரிசையில் உள்ள முதல் பிள்ளையின் கண்களைக் கட்டி வீதியால் இருபக்கத்திலுமுள்ள பிள்ளைகளைத் தொடாமல் நடக்கும்படி கூறல்.



4. ஏனைய பிள்ளைகள் வாகனங்கள் போல் ஒலி எழுப்பி தம்மீது முட்டாதவாறு நடக்க உதவுதல்.
5. நடப்பவர் யார் மீதும் முட்டினால் பிரயாணத்தை ஆரம்ப இடத்தில் இருந்து மீண்டும் தொடங்குதல்.
6. கண்கட்டி நடக்கும் பிள்ளை பூர்த்தி செய்த பின் அடுத்த ஆள் கண்கட்டப்பட்டு நடத்தல்.
7. இவ்வாறு விளையாட்டுத் தொடரல்.

மதிப்பீடு :- சரியான முறையில் சூழலின் ஒலிகளைக் கிரகித்து இலக்கை நோக்கி நடப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தம்மைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளும் வழிவகைகளைக் கலந்துரையாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - அசைதல்

தேர்ச்சி :- ரயரை விழாது உருட்டிச் செல்வார்.

செயற்பாடு :- 1.40 ரயரை உருட்டுதல்.

வளம் :- ரயர்கள், பிளாஸ்ரிக் வளையங்கள், பழைய சைக்கிள் வளையம் (வெவ்வேறு விட்டமுள்ள வளையங்கள்)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் சம நிலத்தினைத் தேர்ந்தெடுத்தல்.
2. பிள்ளைகளால் உருட்டக்கூடிய பாரமற்ற ரயர் வளையங்களை தேர்ந்தெடுத்தல்.
3. தொடக்கம், முடிவு என எல்லைகளைக் குறித்துக் காட்டுதல்.
4. பிள்ளைகளை ரயர்களை முடிந்தவரை தொடக்கம் முதல் முடிவு வரை விழவிடாது உருட்டுவதற்கு உற்சாகப்படுத்தல்.

மதிப்பீடு :- சரியான முறையில் உருட்டிச்செல்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தடியைப் பயன்படுத்தி சைக்கிள் வளையத்தை உருட்ட விடல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - அசைதல்

தேர்ச்சி :- தசை நார்களைப் பயன்படுத்திக் கட்டுப்பாடான அசைவுடன் நடப்பார்.

செயற்பாடு :- 1.41 தேய்த்து நடத்தல்

வளம் :- செய்தித்தாள்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் சமநிலத்தினைத் தேர்ந்தெடுத்தல்.
2. ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் இரண்டு செய்தித்தாள் துண்டுகளை கொடுத்து இரு பாதங்களின் கீழ் வைத்து அதன் மேல் நிற்க விடல்.
3. செய்தித்தாள் துண்டுகளைக் கிழியாது அதன்மேல் நின்று கொண்டு பனிச்சறுக்கல்போல் கால்களை மேல் தூக்காது அசைத்து நகருதல்.

மதிப்பீடு :- தேய்த்து நடப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இடையிடையே சில தடைகளை வைத்து வளைந்து சென்று அசைய விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – எறிதல்

தேர்ச்சி :- பந்தைத் துள்ளிப்பாய எறிவார்.

செயற்பாடு :- 1.42 பந்தை எறிதல்.

வளம் :- பந்து, கயிறு


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. இரண்டு பிள்ளைகள் கயிற்றின் இரு நுனிகளையும் பிடித்தபடி நிற்றல்.
2. ஏனைய இருவர் கயிற்றின் இரு பக்கமும் நிற்றல்.
3. கயிற்றின் ஒரு பக்கம் நிற்பவர் கயிற்றின் மேலால் செல்லக் கூடியவாறு பந்தை நிலத்தில் துள்ள அடித்து மறுபக்கத்திற்கு அனுப்புதல்.
4. மறு பக்கம் இருப்பவர் பந்தைப் பிடித்து முன்னையவர் போல் அடித்து அனுப்புதல்.
5. மற்றைய பிள்ளைகளும் அதேபோல் செயற்படல்.
6. பந்தைக் கயிற்றில் படாது மேலால் அடித்த பின் கயிற்றின் உயரத்தைக் கூட்டி விளையாட்டைத் தொடருதல்.

மதிப்பீடு :- பந்து நிலத்தில் அடிப்பதையும் கயிற்றில் படாது செல்வதையும் பந்தைப் பிடிப்பதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சிறு பந்துகளைக் கொடுத்து விளையாட விடல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - சமநிலை

தேர்ச்சி :- கையால் பாரமொன்றைத் தூக்கிப் பிடிப்பார்.

செயற்பாடு :- 1.43 பாரம் தூக்குதல்.

வளம் :- மணல் அல்லது மண் நிறைந்த பைகள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் கடினமின்றி தூக்குமளவிற்கு மணல் அல்லது மண் நிரப்பப்பட்ட பைகளைக் கொடுத்தல்.
2. ஆசிரியர் அறிவிக்கும் போது பிள்ளைகள் பைகளைத் தூக்கி கைகளை முன்னே நீட்டியவாறு பிடித்தல்.
3. 1,2,3.... என்று எண்ணியவாறு பிள்ளைகள் எவ்வளவு நேரம் பிடிக்க முடியுமோ அவ்வளவு நேரம் பிடிக்க விடல்.
4. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படல்.

மதிப்பீடு : கையால் நீட்டியபடி தூக்கிப் பிடிப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சிறு வாளியில் தண்ணீரைத் தூக்கிப் பிடிக்க விடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - சமநிலை

தேர்ச்சி :- தலையில் சுமையுடன் சமநிலை பேணி நடப்பார்.

செயற்பாடு :- 1.44 சுமையுடன் நடத்தல்

வளம் :- விதைகள் கொண்ட சிறு பை, அல்லது பொதி

அணுகுமுறை : விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் தொடக்க எல்லையையும், முடிவு எல்லையையும் குறிப்பிட்டு கோடு வரைந்து விடுதல்.
2. பாரமில்லாத விதைகள் கொண்ட பொதியைப் பிள்ளைகள் தலையில் வைத்து அது விழாதபடி சமநிலை பேணி நடக்க விடல்.
3. முடிவு எல்லைவரை நடக்க விடல்.
4. மாறிமாறிப் பிள்ளைகளை செய்ய விட்டு இவ்விளையாட்டைத் தொடரல்.

மதிப்பீடு :- சுமையை விழவிடாது நடப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- புத்தகம் பயன்படுத்தி சமநிலை பேணி நடக்க விடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – எறிதல்

தேர்ச்சி :- இலக்குப் பார்த்து பேணிகளை அடிப்பார்

செயற்பாடு :- 1.45 இலக்கை அடித்தல்

வளம் :- பந்து, கதிரைகள், போத்தல்கள்


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. படத்தில் காட்டியவாறு மூன்று கதிரைகளை ஒன்றன் பின் ஒன்றாக வைத்து, அதன் முன்னே போத்தல்களை அடுக்கி விடல்.
2. பிள்ளை பந்தினை கதிரைக்குக் கீழால் உருட்டிப் போத்தல்களை அடிக்க விடல்.
3. அடித்த பின்னர் மீண்டும் போத்தல்களை அடுக்கி அடுத்த பிள்ளைக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- இலக்கிற்குப் பந்து உருட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இப்படிப்பட்ட பல செயற்பாடுகளை பிள்ளைகள் செய்ய ஊக்குவிக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி - எறிதல்

தேர்ச்சி :- கண், கை ஒத்திசைவு வெளிசார்பான அனுபவம் கொண்டு விளையாட்டில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 1.46 பந்தை ஏந்துதல்.

வளம் :- பெரிய பிளாஸ்ரிக் போத்தலில் வெட்டிய புனல், சணல், கடதாசியால் செய்த சிறிய பந்து,

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை 6 பேர் கொண்ட குழுக்களாக்குதல்.
2. 4m விட்டமுள்ள வட்டம் வரைந்து, வட்டத்தின் நடுவில் ஒருவரும் வட்டத்தில் ஐவருமாக பிள்ளைகளை நிற்க விடல்.
3. நடுவில் நிற்பவரிடம் பந்தைப் பிடிப்பதற்குரிய புனலையும் ஏனையவர்களிடம் கடதாசிப் பந்தினையும் கொடுத்தல்.
4. வட்டத்தில் நிற்பவர்கள் ஒருவர் மாறி ஒருவர் பந்தை எறிய நடுவில் நிற்பவர் புனலால் பந்தை ஏந்துதல்.
5. நடுவில் நிற்கவும் பந்தை எறியவும் எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் அளித்தல்.

மதிப்பீடு :- இலக்கு நோக்கி பந்து எறிவதையும், பிடிப்பதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பந்தை மேலே எறிந்து பிடித்தலில் ஈடுபடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – எறிதல்

தேர்ச்சி :- இசைவாக்க விருத்தியினை மேம்படுத்தும் விளையாட்டில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 1.47 பந்து எறிதல்

வளம் :- பந்து

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டத்தில் நிற்க விடல்.
2. வட்டத்தின் நடுவில் ஒரு பிள்ளையை நிற்க விடுதல்.
3. நடுவில் நிற்கும் பிள்ளைக்கு மேலால் அவருக்குப் படாதவாறு வட்டமாக நிற்கும் பிள்ளைகள் தமக்குள் பந்தினை மாற்றி மாற்றி எறிதல்
4. நடுவில் நிற்பவர் பந்தினை தொட்டாலோ அல்லது பிடித்தாலோ எறிந்தவரின் இடத்திற்குச் செல்ல, எறிந்தவர் வட்டத்தின் நடுவில் வந்து விளையாட்டைத் தொடரல்.

மதிப்பீடு :- பந்தினைத் தொடுதல், தந்திரமாக எறிதல் என்பனவற்றை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வட்டத்தினூடாக பந்தினை எறிதல் மூலம் நடுவில் உள்ளவர் தொட முடியாதபடி எறிந்தும் தெறிக்க வைத்தும் விளையாட்டைத் தொடரல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்கவிருத்தி – எறிதல்

தேர்ச்சி :- உரிய இலக்கு நோக்கி பந்தை எறிவார்.

செயற்பாடு :- 1.48 கூடைப் பந்து.

வளம் :- கூடை, பந்து

அணுகுமுறை : விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத உயரத்தில் கூடையைச் சுவரிலோ, வேலியிலோ, மரத்திலோ தொங்க விடல்.
2. கூடையிலிருந்து வெவ்வேறு தூரத்தில் வெவ்வேறு கோணத்தில் 5 அடையாளம் இடுதல்.
3. ஒருவர் ஒவ்வொரு அடையாளத்திலிருந்தும் பந்தை ஒருமுறை கூடைக்குள் எறிதல்.
4. ஐந்து எறிதல் முயற்சிகளும் முடிந்தபின் மற்றவர் ஆட்டத்தை தொடங்குதல்.

மதிப்பீடு :- வெவ்வேறு தூரங்களில் இருந்து இலக்கு நோக்கிப் பந்தை எறிவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- கூட்டு முயற்சியை , குழு வேலையை, தனியார் முன்னேற்றத்தை ஊக்கப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப் பொருள் :- இயக்க விருத்தி – ஓடுதல்

தேர்ச்சி :- பொழுது போக்கு விளையாட்டில் ஈடுபடுவார்

செயற்பாடு :- 1.49 ஓடிப் பிடித்தல்

வளம் :- வெண்கட்டி


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைப் பெரிய வட்டத்தில் இருக்க விடுதல்.
2. அவர்களை உள்ளடக்கிய பகுதியில் சிலந்தி வலையாகக் கோடு கீறுதல்.
3. ஒருவரை சிலந்தி எனவும் ஏனையோரை இலையான்கள் எனவும் கூறல்.
4. சிலந்தி வலையில் ஓரிடத்தில் சிலந்தி நித்திரை போல இருத்தல்.
5. இலையான்கள் சத்தமிட்டவாறு ஓடித் திரிதல்.
6. சத்தம் கேட்டு விழித்த சிலந்தி பாய்ந்து இலையான்களைப் பிடித்தல்.
7. பிடிக்கப்பட்டவரும் சிலந்தியாக மாறி விளையாடல்.
8. சிலந்தியாக விளையாட ஏனையோருக்கும் சந்தர்ப்பம் வழங்கல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் பங்களிப்பையும் துலங்கலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தேனீயும் குளவியும் விளையாட்டில் ஈடுபடுதல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இயக்க விருத்தி - பாய்தல்

தேர்ச்சி :- இரு கால்களையும் நிலத்தில் ஊன்றிப் பாய்வார்

செயற்பாடு :- 1.50 குழாய் பாய்தல்

வளம் :- சிறு குழாய்த் துண்டுகள் (பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை 3 வரிசையாக நிற்க விடுதல்.
2. வரிசைக்கு முன்னால் ஒவ்வொரு குழாய்த் துண்டை வைத்தல்.
3. பிள்ளைகளை இரு கால்களையும் பயன்படுத்தி குழாய்களுக்கு மேலாக பாய விடல்.
4. இவ்வாறு எல்லாப் பிள்ளைகளையும் பாய விடுதல்.

மதிப்பீடு :- இரு கால்களையும் நிலத்தில் ஊன்றிக் குழாயில் படாதவாறு பாய்தலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- குற்றிகளின் உயரத்தைக் கூட்டிப் பாய்வதற்கு வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சுகாதாரம் - சுத்தம் பேணல்

தேர்ச்சி :- வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருப்பதில் பங்களிப்பார்

செயற்பாடு :- 1.51 வகுப்பறையைச் சுத்தமாக்கல்

வளம் :- தும்புத்தடி, குப்பை அள்ளும் உபகரணம், துடைப்பத்திற்குரிய துணி, துணித்துண்டுகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை 4 குழுக்களாகப் பிரித்து வேலையைப் பகிர்தல்
   - குழு 1 – தூசு தட்டல்
   - குழு 2 - கூட்டுதல்
   - குழு 3 – குப்பை அகற்றுதல்
   - குழு 4 – அடுக்கி அழகுபடுத்தல்
2. குழுக்களுக்கு வளங்களைப் பகிர்ந்தளித்தல்.
3. வேலையில் ஈடுபடுத்தல்.
4. பாடலை இசைத்தல்.

மதிப்பீடு :- குழுச் செயற்பாட்டில் பங்குபற்றுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுதல்.

1. தூசி துடைப்போம் தூசி துடைப்போம்
   துடைப்பத்தினால் துடைப்பத்தினால்
   சுத்தம் பேணி சுகமாய் வாழ்ந்திடுவோம்

2. நிலத்தைக் கூட்டுவோம் நிலத்தைக் கூட்டுவோம்
   நீங்களும் நாங்களும் நீங்களும் நாங்களும்
   சுத்தம் பேணி சுகமாய் வாழ்ந்திடுவோம்

3. கூட்டிய குப்பையை கூட்டிய குப்பையை
   கூடையில் இட்டே கூடையில் இட்டே
   கொண்டுபோய்க் கொட்டியே நோயற்று வாழ்ந்திடுவோம்

4. அடுக்குவோம் மேசையை அடுக்குவோம் மேசையை
   அனைவரும் ஒன்றாய் அனைவரும் ஒன்றாய்
   அழகாய் அடுக்கி அழகாய் வாழ்ந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சுகாதாரம் - சுத்தம் பேணல்

தேர்ச்சி :- சுற்றுச் சூழல் கழிவுகளை உரிய பாத்திரங்களில் சேகரிப்பார்

செயற்பாடு :- 1.52 கழிவுகளை உரிய இடங்களில் சேகரித்தல்.

வளம் :- சுத்திகரிப்பு உபகரணங்கள், ஈர்க்கு கட்டு, குப்பைவாரி, மண்வெட்டி, வெவ்வேறு நிறங்களிலான கழிவுகளை வகைப்பிரித்து சேகரிப்பதற்குரிய பெரிய அளவிலான பிளாஸ்ரிக் கொள்கலன்கள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை நான்கு குழுக்களாக்குதல்.
2. முன்பள்ளிச் சுற்றுச் சூழலை அவதானித்தலும் கலந்துரையாடலும்.
3. சுத்தமாக்கும் முறை, கழிவுகளைச் சேகரிக்கும் முறை பற்றிக் கலந்துரையாடல்.
4. கழிவு வகைகளைப் பற்றியும், கழிவு போடும் நிறப்பாத்திரங்கள் பற்றியும் கலந்துரையாடல்.
5. குழுக்களுக்குப் பாத்திரங்களை வழங்கி உரிய பாத்திரங்களில் கழிவுகளை இடல்.

| | |
|---|---|
| உக்கும் பொருட்கள் | - பச்சை |
| பொலித்தீன் பொருட்கள் | - செம்மஞ்சள் |
| கடதாசிப் பொருட்கள் | - நீலம் |
| உலோகப் பொருட்கள் | - கறுப்பு |

மதிப்பீடு :- கழிவுகளை உரிய பாத்திரங்களில் இடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- உரியவாறு கழிவுகளை அகற்றும் மனப்பாங்கை விருத்தி செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- போஷாக்கு - உணவு

தேர்ச்சி :- உடல் வளர்ச்சிக்கு, நோயின்றி வாழத் தேவையான உணவுப் பொருட்களை இனங் கண்டு கூறுவார்.

செயற்பாடு :- 1.53 போஷாக்கு உணவை இனங்காணல்.

வளம் :- உணவுகளின் படங்கள் (பழங்கள், மீன், இறைச்சி, பருப்புவகை, இலைவகை, மரக்கறி)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. உணவுப் பொருட்கள் பற்றிக் கலந்துரையாடல்.
2. உணவுப் பொருட்களின் படங்களைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தல்.
3. தயாரிக்கப்பட்ட அட்டவணையை வகுப்பறையின் முன்னர் தொங்கவிடுதல்.

| வளர்ச்சிக்கு உதவும் உணவுகள் | நோயின்றி வாழ உதவும் உணவுகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

4. பிள்ளைகளை ஒவ்வொருவராக அழைத்து ஆசிரியர் வழிகாட்டலுடன் உரிய இடங்களில் ஒட்ட விடுதல்.
5. கலந்துரையாடல்.

மதிப்பீடு :- வளர்ச்சிக்கும், நோயின்றி வாழ்வதற்கும் தேவையான உணவுகளை இனங்கண்டு கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சக்தி, வளர்ச்சி, நோய் எதிர்ப்பு ஆகியவற்றிற்கான உணவின் வேறுபாட்டை அறியச் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- போஷாக்கு – உணவுகளின் வகைகள்.

தேர்ச்சி :- நாளாந்த உணவில் அடங்கியிருக்க வேண்டிய உணவுக் கூறுகளின் வகைகளைக் கூறுவார்.

செயற்பாடு :- 1.54. கூட்டாஞ் சோறு தயாரித்தல்

வளம் :- சிவப்பு பச்சை அரிசி, பருப்பு, உருளைக்கிழங்கு, இலைவகை, மரக்கறி (கரட், சீனி, போஞ்சி, உப்பு, மிளகாய்த் தூள்)

அணுகுமுறை :- விளையாட்டு

செயல்முறை :-



1. பெற்றோருக்கு அறிவித்துத் தேவையான பொருட்களைக் கொண்டுவரச் செய்தல்.
2. பிள்ளைகளுக்குக் காட்டிக் கலந்துரையாடல்.

| | | |
|---|---|---|
| அரிசி | - | வேலை செய்ய, விளையாட |
| பருப்பு, போஞ்சி | - | உடல் வளர்ச்சிக்கு |
| இலைவகை | - | நோயின்றி வாழ |

3. பெற்றோர் ஒத்துழைப்புடன் சமையல் செய்தல்.
4. பகிர்ந்துண்ணல்.

மதிப்பீடு :- உணவுப் பொருட்களின் வகைகளைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- கூழ் காய்ச்சுவதில் ஈடுபடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- போஷாக்கு - உணவு

தேர்ச்சி :- போஷாக்கான இலைக் கஞ்சி சமைப்பதற்குத் தேவையான உணவுப் பொருட்களைக் கூறுவார்.

செயற்பாடு :- 1.55 இலைக் கஞ்சி தயாரித்தல்

வளம் :-

- அரிசி, பயறு,
- இலைவகை (முருங்கை, அகத்தி, பொன்னாங்கண்ணி, வல்லாரை,)
- சர்க்கரை, உப்பு, தேங்காய்

அணுகுமுறை : செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை ஓரிடத்தில் ஒன்று சேர்த்தல்.
2. பிள்ளைகள் கொண்டு வந்த பொருட்களை மேசையில் ஒதுக்கப்பட்ட பாத்திரங்களில் வைக்கவிடல்.
3. பொருட்களின் பெயர்களைக் கலந்துரையாடல்.
4. இலைகளை வெட்டி எடுத்தல்.
5. பானையில் அரிசியை வேகவைத்தல்.
6. அவ்வப்போது சேர்க்கும் பொருட்களைக் காண்பித்துக் கலந்துரையாடல்.
7. பால், உப்பு, சர்க்கரை சேர்த்தல்.
8. இறக்கி ஆற விடுதல்.
9. பகிர்ந்து உண்ணல்.

மதிப்பீடு :- இலைக் கஞ்சி தயாரிப்பதில் பங்களிப்புச் செய்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பழக்கலவை ஒன்றினைத் தயாரித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- போஷாக்கு – உணவு

தேர்ச்சி :- சந்தையில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களை இனங்கண்டு கூறுவார்.

செயற்பாடு :- 1.56. சந்தைக்குச் செல்லுதல்

வளம் :- -

அணுகுமுறை :- களப்பயணம்

செயலொழுங்கு :-

1. பெற்றோர் கலந்துரையாடல் - களப்பயணத்தை திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும்.
2. சந்தைக்குச் செல்லல்.
3. அவதானிக்க வழிகாட்டல்.
4. வகுப்பறைக்குத் திரும்பிக் கலந்துரையாடல்.

- பார்த்த உணவுப் பொருட்கள்
- வைக்கப்பட்டுள்ள முறை

மதிப்பீடு :- பார்த்த உணவுப் பொருட்களின் பெயர்களையும், காட்சிப்படுத்தப்பட்டுள்ள முறையையும் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மாதிரிச் சந்தை நடாத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சுகாதாரம் - நோய்கள்

தேர்ச்சி :- தொற்றும், தொற்றா நோய்களை அறிந்து கூறுவார்.


செயற்பாடு :- 1.57 தொற்றும், தொற்றா நோய்களை இனங்காணல்.

வளம் :-

- ஒட்டாத பேப்பரில் தொற்றாத நோய்களை எழுதுதல் வேண்டும். (தலையிடி, நீரிழிவு, கால்நோ,கை கால் முறிவு,வெட்டுக்காயம் )
- ஒட்டக் கூடிய ஸ்ரிக்கர் - இதில் தொற்றும் நோய்களின் பெயர்களை எழுதுதல். (தடிமன், டெங்கு, மலேரியா வயிற்றுப்போக்கு, சிரங்கு)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-




1. மாணவர்களை வட்டத்தில் சுயமாக நடக்கவிடல்.
2. நோய்கள் எழுதிய (மாணவர் தொகைக்கேற்ப) ஸ்ரிக்கர், பேப்பர் ஆகியவற்றை மேலே எறிதல்.
3. மாணவர்கள் ஓடிச்சென்று ஒரு துண்டை மட்டும் எடுத்தல்
4. குறிப்பிட்ட இடத்தில் ஒட்ட விடல் .
5. ஒட்டாதவற்றை ஓரிடத்தில் அடுக்குதல்.
6. ஆசிரியர் அவற்றை வாசித்து பெயரைக் கூறித் தொற்றும் தொற்றா நோய்கள் பற்றிக் கலந்துரையாடல்.

> ஒட்டப்படும் துண்டில் உள்ள நோய்கள் தொற்றும். ஒட்டப்படாத துண்டில் உள்ள நோய்கள் தொற்றாது என்பதை விளக்குதல்.

மதிப்பீடு :- தொற்றும் நோய்களின் பெயர்களையும், தொற்றாத நோய்களின் பெயர்களையும் கூறுவதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- தொற்றும், தொற்றாத நோய்கள் பற்றித் தேடி அறிதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சுகாதாரம் - நோய்

தேர்ச்சி :- நோய் பரவும் முறையினை விளங்கிக் கூறுவார்.

செயற்பாடு :- 1.58. கைகுலுக்குதலும் கைகழுவுதலும்

வளம் :- பாத்திரம், சிவப்பு நிறக் கலவை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை இரண்டு குழுக்களாக்குதல்.
2. முதலாம் குழுவில் ஒருவர் இரண்டாம் குழுவில் ஒருவருடன் சோடி சேர்தல்.
3. ஒரு குழுவை சிவப்பு நிறக் கலவைப் பாத்திரத்தில் வலக்கையைத் தோய்க்கச் செய்தல்.
4. நிறக்கலவையில் கையைத் தோய்த்தவர் மற்றவருக்கு கைகுலுக்குதல்
5. எல்லோரினது கைகளிலும் நிறச்சாயம் ஒட்டியிருப்பதை அவதானிக்க விடுதல்.
6. இவ்வாறே நோய்க் கிருமிகள் எமது உடலிலும் தொடுகை மூலம் ஒட்டிக்கொள்கின்றன என்பதை விளங்கிக் கொள்ளுதல்.
7. சவர்க்காரமிட்டு எல்லாப் பிள்ளைகளையும் சுத்தமாகுமாறு கழுவச் செய்தல்.

மதிப்பீடு :- நோய்க் கிருமிகள் பரவும் முறையை விளங்கியிருப்பதையும் கைகளைச் சுத்தமாக்குவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- நோய் பரவும் வேறு முறைகளையும் சந்தர்ப்பங்களையும் பற்றி கற்றுக்கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சுகாதாரம் - பற் சுகாதாரம்

தேர்ச்சி :- சாப்பிட்ட பின் பல் துலக்க வேண்டிய அவசியத்தைக கூறுவார்.

செயற்பாடு :- 1.59. வாய் கொப்பளித்தல்

வளம் :- குடி நீர் அடைத்து வரும் பிளாத்திக் போத்தலில் வெட்டி எடுக்கப்பட்ட குவளைகள் - 2

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. இடைவேளையில் உணவு உண்ட பின் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.
2. பிள்ளைகளைக் குழுக்களாக்கி, குழுக்களுக்கு 2 குவளை வீதம் கொடுத்தல்.
3. இரு குவளைகளிலும் நீரை எடுத்தல்.
4. ஒரு குவளையில் உள்ள நீரை ஒரு பிள்ளையின் வாயில் இட்டுக் கொப்பளித்த பின்னர் அதனுள் துப்புதல்.
5. இரு குவளை நீர் மாதிரிகளையும் ஒப்பிட்டுப் பார்க்க விடல்.

- நீரின் நிறம்
- துணிக்கைகள்

6. பல் துலக்க வேண்டியதன் அவசியத்தைக் கலந்துரையாடல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் பல் துலக்க வேண்டியது அவசியமானது எனக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பற் சுத்தத்தைத் தொடர்ந்து அவதானித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சுகாதாரம் - பற்சுகாதாரம்

தேர்ச்சி :- பற்கள் அழுக்காகும் முறையினையும் அதனைச் சுத்திகரிக்கும் முறையினையும் செய்து பார்ப்பார்.

செயற்பாடு :- 1.60. சோகிகளுடன் விளையாடல்

வளம் :- பற்றூரிகை, கொக்கோகோலா சோடா, சோகிகள், பற்பசை


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. குழுக்களுக்கு வளங்களைப் பகிர்ந்தளித்தல்.
3. கொக்கோகோலாவினுள் சோகிகளை 15 நிமிடங்களுக்கு ஊறவிடல்
4. எடுத்து நிறமாற்றத்தை அவதானித்தல்.
   (இவ்வாறே பற்கள் அழுக்காகின்றன என்பதை விளக்குதல்)
5. பற்றூரிகையில் சிறிதளவு பற்பசையை எடுத்து சோகியைத் துலக்கவிடல், அவதானித்தல்.
   (பல்லைச் சுத்தமாக்கும் முறை பற்றிக் கலந்துரையாடல்)

மதிப்பீடு :- பல் அசுத்தமடையும் முறையினையும் அதனைச் சுத்தம் செய்யும் முறையினையும் தெரிந்திருப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பற்சுத்தம் செய்யும் முறையில் ஈடுபடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சுகாதாரம் - உடற் பாதுகாப்பு

தேர்ச்சி :- விபத்துக்களில் இருந்து தன்னைப் பாதுகாப்பார்.

செயற்பாடு :- 1.61. போலச் செய்தல்

வளம் :-

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை 3 குழுக்களாக்குதல்
2. ஒவ்வொரு குழுவினரையும் முறையே
   - ஆணி குத்தப்பட்டவர்
   - ஓடி விழுந்தவர்
   - முறிவு ஏற்பட்டவர்

   ஆகியோராகப் போலச் செய்வதற்கு வழிப்படுத்தல்.
3. பிள்ளைகள் போலச் செய்தல்.
4. இவற்றிலிருந்து விடுபடும் முறைபற்றிக் கலந்துரையாடல்.

உடற் பாதுகாப்பிற்கு

- ➢ பாதணிகளை அணிதல்
- ➢ விளையாடுமிடம் கல், முள் அற்ற பாதுகாப்பான இடமாக இருத்தல்
- ➢ ஏறுதல், இறங்குதலில் அவதானமாக ஈடுபடுதல்

மதிப்பீடு :- போலச் செய்வதையும் உடலைப் பாதுகாக்கும் முறையைத் தெரிந்திருப்பதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வேறு விபத்துக்களிலிருந்தும் பாதுகாக்கும் முறைகள் பற்றிக் கலந்துரையாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# அறிவாற்றல் விருத்தி - மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாற்றல் விருத்தி - மொழி

பிள்ளையொன்றின் விருத்திப் பரப்புக்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. குறித்த ஒரு பரப்பில் ஏற்படும் விருத்தியானது இன்னொரு பரப்பிலும் தாக்கத்தைச் செலுத்துகின்றது. எடுத்துக்காட்டாக பிள்ளை ஒன்றின் ஆரோக்கிய நிலை மிகவும் சிறந்ததாக இருப்பின் அவனின் அறிவாற்றல் விருத்தியொன்றில் ஈடுபடக்கூடிய ஆற்றல் உயர் நிலையில் இருக்கும். பிள்ளையின் விருத்தியை மதிப்பிடும் போது குறித்தவொரு நேரத்தில் குறித்தவொரு பரப்பின் விருத்தியை மட்டும் கருதுதல் நன்று. மனவெழுச்சி ஆரோக்கியமானதும் நல்ல சுய மதிப்பீட்டையும் கொண்ட பிள்ளையானது சைக்கிள் ஓடுவது போன்ற பரீச்சயமில்லாத செயற்பாடுகளிலும் துணிந்து ஈடுபட முயற்சிக்கும்.

பிறப்பிலிருந்தே ஒரு பிள்ளையானது சூழலில் உள்ள பொருட்களுடனும் நிகழ்வுகளுடனும் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட முயலும். அப்பிள்ளையானது மெதுவாகவும் உறுதியாகவும் மனப்பதிவுகளை உருவாக்கிக் கொள்ளும். கால ஓட்டத்தோடு இப்பதிவுகள் பிள்ளைகளின் மனத்தில் எண்ணக்கருக்களையும் அடையாளங்களையும் உருவாக்கும். அறிவாற்றல் விருத்தியின் ஆரம்ப நிலையான எண்ணக்கரு உருவாக்கத்தின் முதற்படி இதுவாகும். பிள்ளையானது தனது ஆரம்பப்பருவம் முதல் தன்னைச் சுற்றியுள்ள சூழல் தொடர்பான தகவல்களைத் தேடியறியும்.

உளவியல் ரீதியில் பார்க்கும் பொழுது எண்ணக்கரு விருத்திக்கு இரண்டு முக்கிய காரணிகள் உள்ளன. முதலாவது பிள்ளையினுடைய உள்ளார்ந்த ஊக்கிகளும் மற்றையது இணக்கமான வெளிச்சூழல் நிலைமைகளுமாகும். பிள்ளை ஒன்றின் எண்ணக்கரு விருத்தியானது அவரது முதிர்ச்சியிலும் அறிவாற்றல் மட்டத்திலும் தங்கியுள்ளது. தொடர்பாடல் செய்வதற்கு தேவையான மொழியும் எண்ணக்கருக்களும் அவனுடைய செயற்பாடுகள் மூலம் தன்மயமாக்கிக் கொள்ளப்படுகின்றது. பொருத்தமான பயிற்சிகளும் அனுபவங்களும் பிள்ளையின் எண்ணக்கரு விருத்தியைத் துரிதப்படுத்தும். எண்ணக்கரு விருத்தியானது பொதுவாக மூன்று பருவங்களாக இடம் பெறுகின்றது. அவையாவன.

1. உளவியக்கப் பருவம் - 0 – 2 வயது
2. முன் எண்ணக்கருப் பருவம் - 2 – 4.5 வயது
3. உள்ளுணர்வுப் பருவம் - 4.5 – 7 வயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உள இயக்க ஆற்றல் பருவத்தின் போது பிள்ளை தனது அயற்சூழலை ஓரளவு பிரித்தறியக்கூடியதாக இருக்கும்.
- முன் எண்ணக்கருப் பருவத்தின் போது சூழலில் காணப்படும் பொருட்களில் அதிகமானவற்றை அவற்றின் நிறம், குறி போன்ற அடிப்படையான அம்சங்களால் இனங்காணும். இதே போன்று பிள்ளையினுடைய மொழியும் இப்பருவத்தில் விருத்தியடையும். முறையான எண்ணக்கரு விருத்தி நிகழும் ஆரம்பநிலையே முன் எண்ணக்கருப் பருவமாகும்.
- இவற்றுக்கு மேலதிகமாக எண்ணக்கரு விருத்தி தொடர்பாக மேலும் இரண்டு பருவங்கள் உள்ளன. அவையாவன.
    1. தூலசிந்தனைப்பருவம் - 7 – 11 வயது
    2. நியம சிந்தனைப் பருவம் - 11 - 15 வயது

மொழிவிருத்தி, கணிதவிருத்தி, சுற்றாடல் தொடர்பான விளக்கம் போன்றன அறிவாற்றல் விருத்தியினுள் உள்ளடக்கப்படும்.

## அறிவாற்றல் விருத்தியின் சிறப்பம்சங்கள்

### 3-4 வயதுடைய சிறுவர்கள்

- 600 – 900 சொற்கள் வரையான சொற்களஞ்சியத்தைக் கொண்டதுடன் அச்சொற்கள் தொடர்பான விளக்கத்தையும் கொண்டிருப்பர்
- விளையாடும்போது தனக்குள் உரையாடுவர்.
- மற்றவர்களுடன் தன்னம்பிக்கையுடன் உரையாடுவர்.
- பெருமளவில் பயன்படுத்தும் சொற்களாவன:- யார், என்ன, ஏன், எங்கே அவரின் எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வத்தை இச்சொற்கள் காட்டும்.
- சூழலை நன்கு அவதானிப்பர், என்ன நடக்கின்றது என்பது தொடர்பாக விழிப்புடன் இருப்பர்.
- மற்றவர்களை விளங்கிக்கொள்வதற்காகவும் அவர்களைப்போலச் செய்வதற்காகவும் ஏனைய சிறுவர்களை நன்கு அவதானிப்பர்.
- மற்றவர்களுடன் விளையாட்டிலும் செயற்பாட்டிலும் இணைந்து கொண்டாலும் தனியாக விளையாடுவதையே பெரிதும் விரும்புவர்.
- சூழலில் உள்ள குற்றிகள், மணிகள், கிலுக்கிகள் என்பவற்றைப் பயன்படுத்தி இசையை உருவாக்கி மகிழ்வார்கள். தாளலயம் தொடர்பாக தனது உணர்வை வெளிக்காட்டுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- படப்புத்தகங்கள், கதைகள், பொம்மலாட்டப் பொம்மைகள், பாடல்களை விரும்புவர்
- மணல், நீர் மற்றும் வீட்டுப்பொருட்கள் தொடர்பாக எண்ணக்கருக்களை உருவாக்க ஆரம்பிப்பர்.
- காலம் தொடர்பான எண்ணக்கருவை (கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்) மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கொண்டிருப்பர்.
- குறித்த நிகழ்வு ஒன்று தொடர்பாக உடன் விளங்கிக் கொள்ள முடியாவிடின் அதை பின்னர் விளங்கிக் கொள்ளலாம் என விட்டுவிடுவர்.
- 4 வயதளவில் தன்னால் அமைக்கப்பட்ட வாக்கியங்களைப் பேசுவர்.
- தனது உடல் அசைவிற்கு தேவையான வெளி தொடர்பாகவும் தனக்கும் மற்றவர்களுக்குமிடையில் அல்லது ஏனைய பொருட்களுக்கிடையில் உள்ள வெளி தொடர்பான எண்ணக்கருவையும் விருத்தி செய்திருப்பர்.
- செங்கட்டிகளைக் கொண்டு கிடையான வரிசையை அமைப்பதிலும் பார்க்க, நிலைக்குத்தான கோபுரம் ஒன்றை இலகுவாகக் கட்டுவர்.
- சில நிகழ்வுகள் நிகழ்வதற்கான காரணிகள் தொடர்பாக கற்பதற்கு ஆரம்பிப்பர்.
- மனதை ஒரு நிலைப்படுத்தும் ஆற்றல் அதிகரிக்கும். குறிப்பாக 10 - 15 நிமிடங்களுக்கு மனதை ஒருநிலைப்படுத்தி வைத்திருக்க முடியும்.
- ஞாபகசக்தி அதிகரிக்கும்.
- தனது தேவைகளையும் விருப்புக்களையும் எடுத்துக் கூறுவதற்காக சொற்களை அறிந்திருப்பர்.

## 4 – 5 வயதுடைய சிறுவர்கள்

- 15 -20 வரை எண்ணக்கூடியதாக இருந்தபோதிலும் 5 வரையான எண்கள் தொடர்பான விளக்கத்தையே கொண்டிருப்பர்.
- 3 என்பது 1 இலும் பார்க்க பெரிது என்பதை அறிந்திருப்பர்.
- வரைதல், வர்ணம் அடித்தல், விரல்களைப் பயன்படுத்தும் விளையாட்டுக்கள் போன்ற எழுதுவதற்கான முன்னாயத்தச் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவர்.
- புதிர்கள், தொடர்புபடுத்தும் விளையாட்டுக்கள், வாசிப்பதைக் கேட்டல், கதைகளை ஆக்குதல், நிகழ்வொன்றை தொடரொழுங்கில் கூறுதல், எழுத்துக்கள் தொடர்பாக வினாவுதல் போன்ற வாசிப்பதற்கு முன்பதான செயற்பாடுகளில் விருப்பம் காட்டுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அடிப்படை நிறங்களை அறிந்திருப்பர்.
- கருத்துடன் கூடிய பரிசோதனைகளில் ஈடுபடுவர்.
- செயற்பாடு ஒன்றை கவனமாகவும் விரிவாகவும் செய்ய முயற்சிப்பர்.
- குழந்தைப் பாடல்களை நினைவில் வைத்திருப்பர்.
- சிறிய கதைகளை ஓரளவு விளங்கிக் கொள்வர்
- தனது பெயர், தனது கிராமத்தின் பெயர், பாடசாலையின் பெயர், ஆகியவற்றை அறிந்திருப்பர்.
- நீண்ட நேரம் கருமம் ஒன்றில் மனதை ஒருநிலைப்படுத்துவர், முயற்சியொன்றை பூரணப்படுத்துவர்.
- புதிய சொற்களை உரையாடுவதிலும் பயன்படுத்துவதிலும் மகிழ்ச்சியடைவர்.
- தனது சூழல் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விளங்கிக் கொள்வர்.
- குழுவொன்றில் இணைந்து வேலை செய்வர்.

### அறிவாற்றல் விருத்திக்கு தேவையானவை

- குற்றிகள்
- புதிர்கள்
- அட்டை விளையாட்டுக்கள்
- எண் தொடர்பான செயற்பாடுகள்- வடிவம், அளத்தல், பருமன், நிறை, மணல், நீர்
- கேட்டல், உரையாடல் வினாக்களுக்கு விடையளிக்க சந்தர்ப்பங்கள் கிடைத்தல்.
- பிள்ளையை ஆர்வமூட்டக்கூடிய பொருட்கள்
- நிறுத்தல், அளத்தல், எண்ணுதல், இனம்காணுதல், ஒப்பிடுதல் போன்ற செயற்பாடுகளுக்கான பொருட்கள்
- புதிய சொற்கள்
- விளக்கங்கள்
- சங்கீத கருவிகள்
- ஆக்க வேலையில் ஈடுபடுவதற்கான பொருட்கள்
- படங்கள், கதைகள், பாடல்கள்
- எழுத்து முன்திறன்களுக்கான சந்தர்ப்பங்கள்
- வாசிப்பு முன்திறன்களுக்கான சந்தர்ப்பங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீட்டில் விளையாடப்படும் விளையாட்டுக்கள்
- போலச் செய்யும் நடித்தல்கள் தேங்காய் விற்பார், மீன்பிடிப்பார்
- சுற்றாடல் பொருட்கள் பல்வேறு வகையான இலைகள், பூக்கள், கற்கள், ஓடுகள், பலகைகள்

## மொழி விருத்தி என்றால் என்ன?

தனது உணர்வுகளை வெளியிடவும் ஏனையோரின் கருத்துக்களை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படும் ஊடகம் மொழியாகும். வளர்ந்தோரின் வழிகாட்டலும் உதவியும் இருக்குமிடத்து பிள்ளையின் மொழியானது விரைவாக விருத்தியடைவதுடன் பொருத்தமான வடிவத்தையும் பெறும். குழந்தை உளவியல் தொடர்பான அறிவு இருக்குமாயின் ஆசிரியர் பிள்ளையின் மொழிவிருத்திக்கு நன்கு உதவமுடியும். ஆகவே முன்பள்ளி ஆசிரியர் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான அறிவைப் போதியளவில் கொண்டிருக்க வேண்டும்.

அறிவு விருத்தியும், மொழிவிருத்தியும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டன. சிந்தனையானது மொழியிலும், மொழி சிந்தனையிலும் தங்கியுள்ளது. ஒருவரது எண்ணங்களை மற்றையவருக்குப் பகிர்ந்து கொள்ளவும், பரிமாற்றம் செய்வதற்கும் உதவும் மொழியானது சமூகமயமாக்கப்படும் ஒரு சிந்தனை முறையாகும். இதன்மூலம் ஒருவரது தேவைகளும் அபிலாசைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றது.

மொழித்திறன்கள் நான்கு வகைப்படும் அவையாவன.

- செவிமடுத்தல்
- பேசுதல்
- வாசித்தல்
- எழுதுதல்

இவை யாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. பிள்ளைகளின் மனவெழுச்சிச் சமநிலை இன்மை, மொழித்திறன்களில் விருத்திக்குத் தடையாக அமையும்.

ஆசிரியரும், பெற்றோரும், நலன் பேணுவோரும் பிள்ளையின் மனவெழுச்சிச் சமநிலையைப் பேணுவதற்கும் அவர்களின் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும் தேவையான வாய்ப்புக்களை வழங்க வேண்டும். ஆகவே ஆசிரியர்கள் பிள்ளைகளை நேசிப்பதுடன் பொறுமையாகவும் இருத்தல் வேண்டும். எவ்வளவிற்கு எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுகிறார்களோ அவ்வளவுக்கவளவு பிள்ளைகளுக்குச் செவிமடுக்கவும் பேசவும் உதவ முடியும்.

பிள்ளைகளுக்கு மொழியைக் கற்பிப்பது போன்றே கற்றலுக்குப் பொருத்தமான கவிநிலையை உருவாக்குவதற்கும் அதிக முயற்சி எடுக்கவேண்டும். வளர்ந்தோருடைய உதவியினால் செவிமடுத்தல், பேசுதல் ஆகிய திறன்களை விருத்திசெய்து கொண்ட பிள்ளை ஏனைய திறன்களான வாசித்தல், எழுதுதல், என்பவற்றையும் விருத்தி செய்து கொள்ளும்.

மொழிவிருத்தியில் செவிமடுத்தற் திறன் விருத்தியானது மிகவும் அத்தியாவசியமானதாகையால் ஆசிரியரும் பெற்றோரும் பிள்ளைகளுக்கு செவிமடுத்தற் திறன் விருத்திக்கான சந்தர்ப்பங்களை போதியளவு வழங்கவேண்டும். ஒலியானது சிக்கலானதும் பல்லினமானதுமாகும். உன்னிப்பான செவிமடுத்தல் மிகவும் அவசியமானது. பிள்ளைகளால் செவிமடுக்கப்படும் விடயங்களும் செயற்பாடுகளும் பிள்ளைக்கு மகிழ்ச்சியையும், விருப்பத்தையும் ஏற்படுத்துவதாகவும் இருப்பின் அவற்றை நயப்புடனும் கவனத்துடனும் செவிமடுக்க முடியும்.

மொழித்திறன் விருத்தியில் பேசுதல் மிகவும் முக்கியமான ஒரு திறனாகும். பேச்சு விருத்தியில் சூழல் பெரும் பங்காற்றுகிறது. பிள்ளையின் பேச்சு விருத்தியானது முதலில் ஒலிகளை எழுப்புதல், சொற்பகுதிகளைக் கூறுதல், சொற்களைக்கூறுதல், குறுகிய வாக்கியங்களைப் பேசுதல் என்றவாறு படிப்படியாக நடைபெறுகின்றது. நன்றாகப் பேசுவது என்பது சிக்கலானது. பேச்சுத் தொடர்பான பாண்டித்திய நிலை படிப்படியாக எய்தப்படும். பேச்சு விருத்தியானது கவனமான வழிகாட்டலுடனும் ஊக்கப்படுத்தலுடனும் நிகழ வேண்டும். பேச்சு, மொழிவிருத்திக்கு அடிப்படையானது. ஆரம்பத்தில் ஆரோக்கியமான ஊக்கப்படுத்தல் மூலம் சரியான உச்சரிப்புக்கு நெறிப்படுத்தப்படவேண்டும். மற்றையவர்கள் தனது பேச்சை ஆர்வத்துடன் செவிமடுக்கிறார்கள் என்ற எண்ணம் பிள்ளையின் மனதில் உருவாகினால் மட்டுமே, பிள்ளையில் பேச்சு விருத்தி ஊக்கிவிக்கப்படும்.

வாசித்தல் மொழி விருத்தியின் மற்றுமொரு முக்கிய திறனாகும். முன்பள்ளிகளில் வாசித்தலானது கவனத்துடனும் ஒரு முறைமையுடனும் முன்னெடுக்கப்படவேண்டும். இவ்விருத்தி தொடர்பாக முன்பள்ளியில் பிரபல்யமான சில முறைகள் கையாளப்படுகின்றன.

எழுத்து, ஒலி, சொல்லின் பகுதி, சொல், வசனம், சொற்றொடர் போன்றன அவற்றுள் சிலவாகும். முன்பள்ளிப் பருவத்தில் மொழி முன்திறன் விருத்திக்கு அவசியமானதாகும். பிற்காலத்தில் கிடைக்கும் அறிவுறுத்தல்களுக்கு முகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதற்கு இது உதவியளிக்கும். சிந்தனைத்திறன், சொற்களின் கருத்துக்களை அறியும் திறன், பார்வை பிரித்தறியும் திறன், காலத்திற்கேற்ப வரிசைப்படுத்தும் திறன், ஒலிப்பிரித்தறிகை ஆகியவை முன்மொழித் திறன்களாகும். ஆகவே இத்திறன் விருத்திக்காக பொருத்தமான சூழலையும் செயற்பாடுகளையும் திட்டமிடுவது அவசியமாகும். பொதுவாக முன்பள்ளிப் பிள்ளைகள் தங்களது பெயரையும், எழுதப்பட்ட சொற்களையும் இனங்காண்பார்கள். அவர்கள் படங்களை வாசிக்கவும் தமது சுற்றாடலில் உள்ள சிறு குறியீடுகளையும் அடையாளங்களையும் இனங்காணவும் கற்றுக்கொள்வார்கள். சிறிய புத்தகங்களை ஆக்குவதில் மகிழ்ச்சியடைவர். இப்புத்தகங்களில் பெற்றோரால் கூறப்பட்ட படங்களும் கதைகளும் காணப்படும். பிள்ளைகள் தமக்கேற்ற வேகத்தில் இத்திறன்களில் விருத்தியடைய கவனமாகத் திட்டமிடப்பட்ட மகிழ்ச்சிகரமான செயற்பாடுகள் உதவும். பிள்ளைகளுக்காக நிகழ்த்தப்படும் வாசிப்புக்கள் பிள்ளையின் வாழ்க்கைக் காலத்தில் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த உதவும்.

மொழி ஆற்றலின் நான்காவது திறனே எழுதுதலாகும். பிள்ளைகள் எழுதுவதற்கு ஆரம்பிப்பதற்கு எழுத்து முன்திறன் அவசியமானது. கண் - கை இயைபாக்கமானது எழுத்து விருத்திக்கு அவசியமானது. காட்சி, ஞாபகம், கண், கை இயைபாக்கம், வெளிதொடர்பான அனுபவம் போன்றவற்றில் கிடைக்கும் படிப்படியான பயிற்சிகள் முன்பிள்ளைப்பருவ கல்விக்கு அவசியமானதாகும். நூலில் மணி கோர்த்தல், கடதாசிகளை வெட்டி ஒட்டுதல், கிறுக்குதல் ஆகியவற்றில் கோலங்களை அமைக்கவிடல் போன்ற சில பயனுள்ள செயற்பாடுகளாகும். பிள்ளை எழுதுவதற்கு ஆர்வம் காட்டுமாயின் அவர்களுக்குப் பரிச்சயமான சொற்களை எழுதவிடலாம்.

பிள்ளைகளின் மொழித்திறன் விருத்திக்குச் செய்ய வேண்டியவை.

- முதலில் பிள்ளைகள் 'மொழி நிறைந்த' சூழலில் வாழவிடல். அச் சூழலில் வளர்ந்தோரும் பிள்ளைகளும் மொழியைப் பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவார்.
- பிள்ளைகள் மொழியின் பல்வேறு வடிவங்களையும் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும். இந்நிலையில் பிள்ளைகள் சொற்களைப் பல்வேறு வடிவங்களில் பிரயோகித்துப் பார்க்க விடவேண்டும்.
- இது போன்று வளர்ந்தோர் பேசுவதைக் கிரகித்துக் கொள்வதற்காகப் புதிய சொற்களைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். அவர்கள் தான் பேசுவதையும் ஏனையோர் பேசுவதையும் மதிப்பிட வேண்டும்.
- பிள்ளைகள் கற்றலில் வேடிக்கையாக ஈடுபடும்போது சிரிப்பை உண்டாக்கவும், புதிய சொற்களைப் பயன்படுத்தவும் விட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிள்ளைகள் தம்மைப்பற்றியும் தமது அனுபவங்களைப் பற்றியும் கூறவேண்டும்.
- தாங்கள் செய்தவற்றையும், செய்யப்போவதைப் பற்றியும் கூற விட வேண்டும்.
- அவர்களின் உரையாடல்களைப் பொறுமையுடன் செவிமடுப்பதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் பெரியவர்கள் உதவவேண்டும்.
- அவர்கள் தாங்கள் கூறுவதற்குத் துலங்குவதையும், செயற்படுவதற்கு ஊக்கப்படுத்துவதையும் எதிர்பார்ப்பார்கள்.

மொழி விருத்தி – சுருக்கம்

1. பிள்ளைகளுக்கு மொழிவிருத்தி மிகவும் அவசியமானதாகும். செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கு அடிப்படைத்திறன்களும் கவனமாகத் திட்டமிடப்பட்டு விருத்தி செய்யப்பட வேண்டும்.
2. அனைத்துப்பிள்ளையினதும் மொழிவிருத்தியானது ஒரே வேகத்தில் நடைபெறாது விட்டாலும் அவர்களில் மொழிவிருத்தி ஒழுங்கு முறையானது ஏறக்குறைய ஒரே மாதிரியானதாக இருக்கும்.
3. அவர்களின் உடல் விருத்தி, சமூக மனவெழுச்சி விருத்தி போன்றன மொழிவிருத்தியைப் பாதிக்கும்.
4. பிள்ளைகளின் தேவை, ஆர்வம், முதிர்ச்சிநிலை, விருத்திநிலை என்பன திட்டமிடப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | மொழி விருத்தி - ஒலி வேறுபாடுகள் |
| தேர்ச்சி | :- | செவிமடுத்து அசைவார் |
| செயற்பாடு | :- | 2.1 பறவைகளின் ஒலிகளை ஒலித்தல். |
| வளம் | :- | பறவைகளின் பட அட்டைகள் (காகம், கிளி, குயில், கோழி) ஒலிப்பதிவு நாடா, வானொலி |
| அணுகுமுறை | :- | விளையாட்டு |
| செயலொழுங்கு | :- | |

1. ஆசிரியர் பிள்ளைகளை முற்றத்திற்கு அழைத்துவரல்.
2. முற்றத்தில் ஆங்காங்கு பட அட்டைகளைக் காட்சிப்படுத்தப்படல்.
3. ஒவ்வொரு படங்களிலும் உள்ள பறவைகளின் பெயர், நிறம், இருப்பிடம், உணவு பற்றிக் கலந்துரையாடுதல்.
4. பறவைகள் ஒலி எழுப்புதல் போலச் செய்தல்.
5. பிள்ளைகள் சுதந்திரமாக ஒலியெழுப்பியவாறு பறந்து வருதல்.

காக்கா அந்தப் பக்கம் கா…கா…கா…
கிளி இந்தப்பக்கம் கீ…கீ…கீ…
குயில் மரத்தில் கூ...கூ....கூ....
கோழி கூரையில் கொக் கொக் கொக்

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | பிள்ளைகள் பறவைகள் போல குரல் எழுப்பியபடி செயற்படுவதை அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கம் | :- | வேறு பிராணிகளின் ஒலிகளை ஒலிக்க விடல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - ஒலி வேறுபாடுகள்

தேர்ச்சி :- செயற்கை ஒலி வேறுபாடுகளைக் கிரகித்து துலங்குவார்.

செயற்பாடு :- 2.2. செயற்கை ஒலிகளை இனங்காணல்.

வளம் :- புத்தளிப்பு கருவிகள் (சிரட்டை, சல்லாரி, மேளம், தாளம் (மணி)

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

டும் டும் டும் டும் மேளச்சத்தம்
பீப்பீ பீப்பீ பீப்பீ நாதசுரம்

சல் சல் சல் சல் சல்லாரி
ஊம் ஊம் ஊம் ஊம் ஒத்தூது

கிறீங் கிறீங் கிறீங் கிறீங் சயிக்கிள் வண்டி
பீம் பீம் பீம் பீம் கார் வண்டி

சுக்கு புக்கு சுக்கு புக்கு ரயில் வண்டி
கட கட கட கட மாட்டு வண்டி

1. பிள்ளைகளை வட்டமாக அமரச் செய்தல்
2. புத்தளிப்புக் கருவிகளை பிள்ளைகளுக்கு வழங்குதல்.
3. ஒவ்வொருவரும் தம் விருப்பப்படி அந்த ஒலிகளை எழுப்பச் செய்தல்
4. தனித்தனியாக ஒலிகளை எழுப்பச் செய்தல்.
5. ஒலிக்கும் கருவிகளின் பெயரைக் கூறச்செய்தல்.
6. ஒரு பிள்ளையின் கண்களைப் பொத்தி, ஒலி ஒன்றை எழுப்பி, அவ்வொலி என்னவெனக் கேட்டல்.
7. அவ்வாறு ஒவ்வொரு பிள்ளையின் செவிமடுத்தல் திறனையும் அவதானித்தல்.
8. 3 குவளைகளில் வெவ்வேறு அளவு நீரை ஊற்றுதல்
9. அதனை தடியால் தட்டும்போது ஏற்படும் ஒலியை அவதானிக்கச் செய்தல்.
10. சரியாக அவதானித்த பின்னர் ஒரு குவளையில் தட்டப்படும் ஒலி எந்த குவளையில் இருந்து எழுப்பப்பட்டது என கண்டறியச் செய்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் ஒலியின் வேறுபாட்டை இனங்காணுதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சூழலில் கேட்கும் ஒலிகளை இனங்கண்டு கூறுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – செவிமடுத்தல்

தேர்ச்சி :- செவிமடுத்துத் துலங்குவார்.

செயற்பாடு :- 2.3 ஓடுதல்

வளம் :- முயல், மான், ஆமை, நத்தை பட அட்டைகள்




அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர், மான், முயல், நத்தை பட அட்டைகளை காட்டி அவை பற்றி கலந்துரையாடுதல்.
2. வேகமாக ஓடக் கூடியது எது? மெதுவாக ஓடக் கூடியது எது? என்று வினவி, விடை கூறச் செய்தல்.
3. மாணவரை நேர் கோட்டில் நிற்கவிடல் ஆசிரியர் முயல் என்று கூற பிள்ளைகள் வேகமாக ஓடுதல். நத்தை என்றுகூற மெதுவாக ஓடுதல்.
4. விளையாட்டைத் தொடருதல்.

மதிப்பீடு :- செவிமடுத்துத் துலங்குதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பாய்தல், துள்ளுதல், நடத்தல் போன்ற செயற்பாடுகளுக்கான விளையாட்டுகளை விளையாடல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - செவிமடுத்து துலங்கல்

தேர்ச்சி :- கவனமாகச் செவிமடுத்துத் துலங்குவார்

செயற்பாடு :- 2.4. கட்டளைக்குத் துலங்குவோம்.

வளம் :- ஆசிரியர், பிள்ளைகள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை நேர்கோட்டு வரிசையில் ஆசிரியரைப் பார்த்தவாறு நிற்க விடல். (பிள்ளைகள் ஒருவரை ஒருவர் பார்க்காதவாறு)
2. அவர்களுக்கு முன்னால் ஆசிரியர் நின்று சில கட்டளைகளைக் கூறியபடி செய்து காட்டுவார்.
3. உதாரணமாக ஆசிரியர் கைகளை மேலே உயர்த்துங்கள் என்று கூறியபடி கைகளை உயர்த்திக் காட்டுவார்.
4. பிள்ளைகள் ஆசிரியர் சொல்வதைச் செவிமடுத்தும் அவர் செய்வதைப் பார்த்தும் செய்வர்.
5. இவ்வாறு ஆசிரியர் 5 கட்டளைகளை கூறி மாணவர்களைச் செயற்பட வைத்தல்.
6. அதன் பின் ஆசிரியர் செய்து காட்டாது கட்டளைகளைக் கூறுதல்.
7. பிள்ளைகள் ஆசிரியர் கூறுபவற்றைக் கேட்டு செயற்படல்.

மதிப்பீடு :- சொல்பவற்றை கவனமாகக் கேட்டு உடலசைவுகளை மேற்கொள்வதை மதிப்பிடல்.

கற்றல் விரிவாக்கம் :-

- மேசையில் வாழைப்பழம் உள்ளது என ஆசிரியர் கூற பிள்ளைகள் அதனை எடுத்து உரித்து சாப்பிடுவது போல பாவனை செய்தல்.

- பழக்கமில்லாத ஒருவர் வீட்டுக்கு வருகிறார், நாய் அவரைப் பார்க்கின்றது எனக் கூற பிள்ளைகள் நாய் போல குரைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - ஒலி வேறுபாடுகள்

தேர்ச்சி :- குரல் ஒலிகளை வேறுபடுத்தி இனங்காண்பார்.


செயற்பாடு :- 2.5 வீட்டுக்காரரும் விருந்தினரும்

வளம் :- கதிரைகள் இரண்டு

அணுகுமுறை :- உரையாடல்

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை நட்புக் குழுக்களாக்கல்.
2. இரண்டு கதிரைகளை ஒன்றன் பின் ஒன்றாக வைத்தல்.
3. முன் கதிரையில் வீட்டுக்காரர் இருப்பார் கதிரையின் பின் சட்டம் வீட்டுக்கதவு.
4. வீட்டுக்கு வருபவர் பின்னால் உள்ள கதிரையில் அமர்ந்து வீட்டுக் கதவைத் தட்டுதல்.
5. வீட்டுக் கதிரையில் இருக்கும் வீட்டுக்காரர் யாரது? எனக் கேட்டல்.
6. வருகை தருபவர் பெயரைச் சொல்லாது, 'நான்தான் வந்திருக்கின்றேன், என்னைத் தெரியவில்லையா? நான் யார் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்' எனக் கூறுதல்



7. வீட்டுக்காரர், வந்த பிள்ளையின் குரல் ஒலியை இனங்கண்டு யார் எனக் கூறுதல்.

மதிப்பீடு :-

1. குரல் ஒலி வேறுபாட்டை இனங்காணுதல்.
2. பெயரை ஞாபகத்திற்குக் கொண்டு வந்து சொல்லுதல்.

கற்றல் விரிவாக்கம் :- இவ்வாறு பிள்ளைகள் அவதானமாகச் செவிமடுத்து குரல் ஒலிகளை வேறுபடுத்தி இனங்காண்பதற்கான வேறு செயற்பாடுகளை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - செவிமடுத்தல்

தேர்ச்சி :- அறிவுறுத்தலுக்கமைய துலங்குவார்.

செயற்பாடு :- 2.6 அறிவுறுத்தலுக்குத் துலங்குதல்.

வளம் :- சூழலில் உள்ளவை (பூ, கல், புல்)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. வகுப்பறைக்கு வெளியே பிள்ளைகளை அழைத்துச் செல்லல்.
2. பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
3. வட்டத்தின் மத்தியில் சுழலியை வைத்தல்.
4. சுழலியைச் சுழற்றி ஓய்வுக்கு வரும் போது சுழலி சுட்டும் பிள்ளை ஆசிரியர் கூறும் அறிவுறுத்தலுக்குச் செயற்படல்.

பூவைப் பிடுங்குங்கள்

கல் ஒன்றை எடுங்கள்

புல் ஒன்றை பிடுங்குங்கள்

மதிப்பீடு :- செவிமடுத்துத் துலங்குவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதுபோல சிறிய வசனங்களைப் பிள்ளைகள் கூற வழிப்படுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - கேட்டற் பிரித்தறிகை

தேர்ச்சி :- ஒத்த ஓசைச் சொற்களைச் சரியாக உச்சரிப்பார்.
(அலை, வலை, கரை, தரை, செயல், கயல்)

செயற்பாடு :- 2.7 பாடல் பாடுதல்

வளம் :- கடற்கரைக் காட்சிப் படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் ஒத்த ஓசைச் சொற்களை ஒவ்வொன்றாக அறிமுகம் செய்தல்.
2. பிள்ளைகளை உச்சரிக்கச் செய்தல்.
3. பாடலை ஆசிரியர் பாடிக் காட்டுதல்.
4. பிள்ளைகளுடன் சேர்ந்து பாடுதல்.
5. குழுக்களாகப் பாட விடுதல்.
6. தனித்தனியே பாட விடல்.
7. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உச்சரிப்பை அவதானித்தல்.

அலைகள் மோதும் கரையைப் பார்
அழகாய்த் தோன்றும் தரையைப் பார்
வலைகள் வீசும் செயலைப் பார்
வளைந்தே கூடும் கயலைப் பார்

மதிப்பீடு :- சரியான உச்சரிப்பை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மேலும் ஒத்த ஓசைச் சொற்களை உச்சரித்துச் சொல்லுவதற்கு வழிப்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல்

தேர்ச்சி :- பாடி ஆடுவார்

செயற்பாடு :- 2.8 ஆடிப் பாடுதல்

வளம் :- -

அணுகுமுறை :- விளையாட்டு


செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளை முற்றத்திற்கு அழைத்து வந்து வட்டமாக நிற்கவிடுதல்.
2. ஆசிரியர் சிறிய பாடல் ஒன்றைப் பாடி ஆடிக் காட்டுதல்.
3. பிள்ளைகள் ஆசிரியர் பாடுவதைக் கேட்டுப் பாடி ஆடுவார்.

பெரிய மரத்தின் கீழே
பெரிய வட்டம் கீறி
சிறியவர்கள் நாங்கள்
சிரித்து ஆடிப் பாடுவோம்
சிரித்து ஆடிப் பாடுவோம்

மதிப்பீடு :- பிள்ளைகள் ஆடிப் பாடுதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இவ்வாறு வேறு பாடல்களை ஆக்கிப் பிள்ளைகளை ஆடிப் பாட விடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல் -

தேர்ச்சி :- ஒலிகளைச் சரியாக உச்சரிப்பார்

செயற்பாடு :- 2.9 இணைந்து பாடுவோம்

வளம் :- -

அணுகுமுறை :- பாடுதல்

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை இரண்டு வரிசையாக ஒருவரை ஒருவர் பார்த்தவாறு நிற்க விடல்.
2. பாடலை ஆசிரியர் முழுமையாக முதலில் முன்வைத்தல்.
3. முதல் இரு வரிகளையும் மீண்டும் ஆசிரியர் பாடுதல்.
4. முதல் இரு வரிகளையும் ஆசிரியருடன் இணைந்து பிள்ளைகள் பாடுதல்.
5. பிள்ளைகள் குழுவாகப் பாடுதல்.
6. ஏனைய வரிகளை மேற்சொன்னவாறு பாடுதல்.
7. ஒரு வரிசையில் நிற்பவர்கள் பாடலின் முதலாவது அடியைப் பாட, அடுத்த வரிசையில் நிற்பவர்கள் அடுத்த அடியைப் பாடுதல்.
8. பாடலை விடுத்து ஒலிக் குறிப்பினை மட்டும் குழுவாக ஆசிரியருடன் இணைந்து பாடுதல்.

(கா கா கா…, கீ கீ கீ…., கூ கூ கூ… )

கா கா கா கா கா கா கா
காலையில் கரையுது காகம் பார்

கீ கீ கீ கீ கீ கீ கீ
கிளியக்கா கீச்சிடும் அழகை பார்

கூ கூ கூ கூ கூ கூ கூ
கூவுறார் குயிலக்கா மரத்தில் பாா

கட கட கட கட கட கட கட
கட்டை மாட்டு வண்டில் பார்

சட சட சட சட சட சட சட
பெரு மழை பெய்கிற அழகைப் பார்

மதிப்பீடு :- ஒலிக் குறிப்பினைப் பாடுவதை அவதானித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல்.

தேர்ச்சி :- வினா மாலை பாடுவார்.

செயற்பாடு :- 2.10 வினா மாலை

வளம் :- பட அட்டைகள் (வெள்ளை முகில், கறுப்பு முகில், புற்கள், மாடு, கன்று)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பட அட்டையை ஒவ்வொன்றாய் காட்சிப்படுத்தி அதனை அவதானிக்கச் செய்தல்.
2. படத்தில் காணப்படுகின்ற விடயம் பற்றி கலந்துரையாடுதல்.
3. ஆசிரியர் பாடிக் காட்டுதல்.
4. பிள்ளைகளுடன் சேர்ந்து பாடுதல்.
5. பிள்ளைகளை இரு வரிசையில் எதிரெதிரே நிற்க விடுதல்.
6. ஒரு வரிசையில் நிற்பவர்கள் வினாப் பாடலையும் எதிர் வரிசையில் நிற்பவர்கள் விடைப் பாடலையும் பாட விடல்.
7. இவ்வாறே மாறி மாறிப் பாடவிடல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் அனைவரதும் துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளையின் கற்றல் தயார் நிலை அறிந்து பாடலை விரிவாக்கம் செய்து கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா மாலை

வெள்ளை முகிலே வெள்ளை முகிலே
எங்கே போகின்றாய்?
கறுப்பு முகிலைக் கூட்டிவர
நானும் போகின்றேன்

கறுப்பு முகிலே கறுப்பு முகிலே
எங்கே போகின்றாய்?
கனத்த மழையைக் கொண்டுவர
அங்கே போகின்றேன்

கனத்த மழையே கனத்த மழையே
எங்கே போகின்றாய்?
புல்லு வளரச் செய்வதற்கு
பெய்யப் போகின்றேன்

பச்சைப் புல்லே பச்சைப் புல்லே
எதற்கு வளர்கிறாய்?
பசுமாடு தின்னவென்று
நானும் வளர்கிறேன்

பசுமாடே பசுமாடே
எங்கே போகின்றாய்?
பால் கொடுக்கக் கன்றிற்கு
அங்கே போகின்றேன்

கன்று குடித்த மீதப் பாலை
என்ன செய்திடுவீர்?
சின்னப் பிள்ளை குடித்திடவே
கொடுத்து மகிழ்ந்திடுவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல்

தேர்ச்சி :- தொகுதிக்குரிய பொருள் ஒன்றின் பெயர் கூறுவார்.

செயற்பாடு :- 2.11 பந்து விளையாட்டு

வளம் :- பந்து, தொகுதிக்குரிய படங்கள் வரையப்பட்ட அட்டைகள். (பழங்கள், காய்கறிகள், கடல்வாழ் உயிரினம், விலங்குகள், பறவைகள்)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் பிள்ளைகளை 5 குழுக்களாக்குதல்
2. நிலத்தில் பிள்ளைகளின் தொகைக்கேற்ப 5 இதழ் கொண்ட பெரிய பூ ஒன்றை வரைதல். இதழின் ஓரங்களை நிறக் கடதாசிகளால் / நூல்களால் பிரித்தல்.
3. ஒவ்வொரு இதழின் முன்னும் ஒவ்வொரு குழுவை நிற்கச் செய்தல்
4. ஒவ்வொரு இதழினுள்ளும் பட அட்டைகளை வைத்தல்
5. ஆசிரியர் நடுவில் நின்றவாறு பந்தை எறிதல்.
6. பிள்ளைகள் அப்பந்தைப் பிடித்து தமக்குரிய வகையின் பெயர் ஒன்றைக் கூறுதல். உ+ம் காய்கறி - வெண்டிக்காய்
7. இவ்வாறே ஒவ்வொரு பிள்ளையும் செயற்படுதல்

மதிப்பீடு :- படம் குறிக்கும் பொருளின் பெயரைச் சரியாகச் சொல்வதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- 1. இவ்வாறே வீட்டில் உள்ளோர்

2. பூங்காவில் உள்ளவை

3. வாகனங்கள் என்ற வகையில் விரிவுபடுத்தலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல்

தேர்ச்சி :- அவதானமாக செவிமடுத்துக் கூறுவார்

செயற்பாடு :- 2.12 செவிமடுத்துப் பேசுதல்.

வளம் :- -

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு

1. பிள்ளைகளை குறிப்பிட்ட இடைவெளியில் அரைவட்டமாக நிற்கவிடல்
2. அரைவட்டத்தில் முதலாவதாக நிற்கும் பிள்ளை நீலவானம் என மெதுவாகச் சொல்லுதல்.
3. அவருக்குப் பின்னே நிற்கும் பிள்ளை அதனைக்கேட்டு அவ்வாறே திருப்பிச் சொல்லுதல்.
4. அவ்வாறே ஒவ்வொரு பிள்ளையும் சொல்லுதல்.
5. இதே போன்று வேறு சொற்களையும் செவிமடுத்துக் கூற வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- செவிமடுத்த சொற்களைச் சரியாகக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளை நிற்கும் நிலைகளை மாற்றி பரிச்சயமற்ற சொற்களை அறிமுகஞ் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல்

தேர்ச்சி :- ஆசிரியருடன் இணைந்து கதை கூறுவார்.

செயற்பாடு :- 2.13 மரவள்ளிக்கிழங்கு – கதை கூறல்

வளம் :- கதை அட்டைகள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளை வட்டமாக அமரச் செய்தல்.
2. ஆசிரியர் கதை கூறுதல்.
3. கதை அட்டையை காட்சிப்படுத்தல்.
4. தன்னுடன் தொடர்ந்து வாக்கியத்தின் இறுதியைக் கூற பிள்ளைகளை ஊக்கப்படுத்துதல்

மதிப்பீடு :- கதைப் பாத்திரங்களை தொடரொழுங்கிற் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- கதையினை நாடகமாக நடித்துக் காட்டுவதற்கு ஊக்கப்படுத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரவள்ளிக் கிழங்கு இழுப்போம்

ஆசிரியர் :- மரவள்ளிக் கிழங்கு

பிள்ளைகள் :- மரவள்ளிக் கிழங்கு

ஆசிரியர் :- தாத்தா மரவள்ளிக் கிழங்கு தடி ஒன்றை நட்டார். தண்ணீர்ஊற்றி வளர்த்தார்.மரவள்ளிக்கிழங்கும் பெரிதாக வளர்ந்து வந்தது. ஒருநாள் தாத்தா மரவள்ளிக் கிழங்கைப் பிடுங்க நினைத்தார். அதனை இழுத்துப் பார்த்தார்.

பிள்ளைகள் :- அதனை இழுத்துப் பார்த்தார்.

ஆசிரியர் :- முடியவில்லையே பாட்டியைக் கூப்பிடுவோம்.

பிள்ளைகள் :- "பாட்டி......... பாட்டி.........."

ஆசிரியர் :- பாட்டி வந்தார். "என்ன நடந்தது"? என்று கேட்டார். மரவள்ளிக் கிழங்கை இழுக்க உதவி செய்யும்படி, தாத்தா கூறினார். பாட்டி தாத்தாவை இழுக்க தாத்தா மரவள்ளிக்கிழங்கை இழுத்தார்.

"ம்......ஹீம் முடியவில்லை".

பிள்ளைகள் :- 'ம்.......ஹீம் முடியவில்லை'

ஆசிரியர் :- என்ன செய்வது? பேரனைக் கூப்பிடுவோம். "பேரா.....பேரா....." பேரன் வந்தான். என்ன நடந்தது? என்று கேட்டான் கிழங்கை இழுக்க உதவி செய்யும்படி தாத்தா கூறினார்.

பிள்ளைகள் :- பேரன் பாட்டியை இழுக்க பாட்டி தாத்தாவை இழுக்க, தாத்தா மரவள்ளிக்கிழங்கை இழுத்தார். "ம்......ஹீம் முடியவில்லை". கிழங்கு வரவே இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | :- | என்ன செய்வோம்? பேர்த்தியைக் கூப்பிடுவோம் பேர்த்தி.......பேர்த்தி.......... பேர்த்தி வந்தாள். என்ன நடந்தது என்று கேட்டாள். கிழங்கை இழுக்க உதவி செய்யும்படி தாத்தா கூறினார். பேர்த்தி பேரனை இழுக்க, பேரன் பாட்டியை இழுக்க, பாட்டி தாத்தாவை இழுக்க, தாத்தா மரவள்ளிக்கிழங்கை இழுத்தார்.<br>"ம்......ஹீம் முடியவில்லை".<br>கிழங்கு வரவே இல்லை |
| பிள்ளைகள் | :- | "ம்......ஹீம் முடியவில்லை".<br>கிழங்கு வரவே இல்லை. |
| ஆசிரியர் | :- | என்ன செய்யலாம்? பிள்ளைகளே நீங்களும் உதவி செய்ய வருவீர்களா? |
| பிள்ளைகள் | :- | ஓமோம் வருகிறோம். |
| ஆசிரியர் | :- | இழுங்கள்...பிள்ளைகள் பேர்த்தியை இழுக்க, பேர்த்தி பேரனை இழுக்க, பேரன் பாட்டியை இழுக்க, பாட்டி தாத்தாவை இழுக்க, தாத்தா மரவள்ளிக்கிழங்கை இழுத்தார். |
| பிள்ளைகள் | :- | இழுத்தோம்.... இழுத்தோம் கிழங்கை இழுத்தோம் |
| ஆசிரியர் | :- | ஆ......கிழங்கு வந்துவிட்டது தாத்தாவுக்கு சந்தோசம். அவர் அதில் உணவு செய்து சாப்பிட்டார். எங்களுக்கும் தந்தார். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல்

தேர்ச்சி :- கூச்சமின்றி உரையாடுவார்.

செயற்பாடு :- 2.14 சந்தைக்குப் போவோம், பொருட்கள் வாங்குவோம்.

வளம் :- சந்தைக்கு எடுத்துச் செல்லும் கூடை, காய்கறிகள், சந்தைக் காட்சி

அணுகுமுறை :- போலச் செய்தல்

செயலொழுங்கு :-



1. முன்பள்ளியின் சிறிது தூரத்தில் உள்ள பெரிய மரத்தின் கீழ் பெற்றோர் உதவியுடன் சந்தை ஒன்றை ஒழுங்கு செய்து மாணவரை அவ்விடத்திற்கு அழைத்துச் செல்லல்.
2. செல்லும்போது ஆசிரியருடன் சேர்ந்து கீழுள்ள பாடலைப் பாடியவாறு செல்லல்.
3. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.

சந்தைக்குப் போவோம் வாருங்கள்
மரக்கறி விற்போம் வாருங்கள்
கத்தரி, வெண்டி, தக்காளி
காய்கறி வகைகள் விற்போமே..

*முதலில் ஆசிரியர் விற்பவராகவும் ஆசிரிய உதவியாளர் அல்லது பெற்றோர் வாங்குபவராகவும் செயற்படுவர். பிள்ளைகள் அவர்களது செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானித்தல்.

*பின்னர் குழுவில் உள்ள ஏனைய மாணவரும் வாங்குபவராகவும் விற்பவராகவும் செயற்படுதல்.

4. விற்கும் பிள்ளை வாங்குபவருக்கு மரக்கறிகளை எடுத்துக் காட்டி அவற்றைப் பற்றிச் சொல்லுதல்.
5. வாங்குபவர் அவற்றைப் பற்றி மேலும் வினாவுதல்.

மதிப்பீடு :- இயல்பாக கூச்சமின்றி உரையாடுதலை மதிப்பிடல்.

கற்றல் விரிவாக்கம் :- வேறும் பல மரக்கறிகள், பழங்கள், மீன்கள் பயன்படுத்திச் செயற்படுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல்

தேர்ச்சி :- ஒத்த ஓசைச் சொற்களைச் சரியாக உச்சரிப்பார்.

செயற்பாடு :- 2.15 நினைவில் வைத்து சொல்லுவோம்.

வளம் :- பட அட்டைகள் மலை, தலை, வலை,

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளை 5 பேருக்கு மேற்படாமல் குழுவாக்குதல்.
2. பிள்ளைகளுக்குத் தெரிந்த ஒத்த ஓசையுள்ள பெயர்களைக் கொண்ட பொருட்கள் சிலவற்றின் படங்களைக் காட்சிப்படுத்துதல்.
3. பிள்ளைகளிடம் அப்படங்களை நன்கு அவதானிக்கும்படி கூறுதல்.
4. பின்னர் பார்க்காமலே சொல்ல வேண்டும் என்பதையும் சொல்லுதல்.
5. பிள்ளைகளை படத்திற்கு முதுகு காட்டி நிற்கவிடுதல்.

ஆசிரியர் :- குழு 1 இடம் கேட்டல்

பார்த்த தென்ன சொல் சொல்

மலை, மலை, மலை, மலை

ஆசிரியர் :- குழு 2 இடம் கேட்டல்

பார்த்த தென்ன சொல் சொல்

தலை, தலை, தலை, தலை

இவ்வாறே ஏனைய குழுக்களிடமும் கேட்டல்

பார்த்ததென்ன சொல் சொல்

மலை மலை மலை

தலை தலை தலை

வலை வலை வலை

மதிப்பீடு :- ஒத்த ஓசைச் சொற்களை உச்சரிப்பதனை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- இவ்வாறே ஒத்த ஓசையுள்ள வேறு சில படங்களையும் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல் (படம் பார்த்து விபரித்தல்)

தேர்ச்சி :- வினாக்களுக்கு விடை கூறுவார், செய்து காட்டுவார்.

செயற்பாடு :- 2.16 வினா வினவுதல்.

வளம் :- பறவைகளின் பட அட்டைகள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை அரை வட்டமாக நிற்க விடுதல். ஆசிரியர் மாணவர் செய்ய வேண்டிய செயற்பாட்டை முதலில் செய்து காட்டல்.
2. பிள்ளைகளில் ஒருவர் மேசையின் பின்னால் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் உள்ள பறவையின் படம் ஒன்றை எடுத்து அப்பறவை போல் ஒலி எழுப்புவார். பின்னர் நான் யார்? எனக் கேட்டல்.
3. ஏனைய பிள்ளைகள் அது 'என்ன பறவை' எனக் கூறுதல்.
4. மேசையின் பின்னால் உள்ள மாணவர் "நான் என்ன நிறம்"? எனக் கேட்டல்.
5. ஏனைய மாணவர் 'கறுப்பு' எனக் கூறுவர். சொல்லாதபோது ஆசிரியர் வழி காட்டல்.
6. மேசையின் பின்னால் உள்ள மாணவர் 'நான் எப்படிப் பறப்பேன்' எனக் கேட்பார்.
7. ஏனைய மாணவர் கை அசைத்துப் பறத்தல்.
8. ஆசிரியர் வினாக் கேட்ட மாணவரின் சேட்டின் முன்பக்கத்தில் காகத்தின் படமும் பெயரும் உள்ள அட்டையைக் கொழுவி விடுதல்

அப்பிள்ளை வெளியே வந்து ஏனைய பிள்ளைகளுடன் இணைந்த பின் அனைவரும் காகம் போல் சிறகடித்துக் கொண்டு கீழே உள்ள பாடலைப் பாடியவாறு வட்டமாகச் சுற்றி வருவர். ஆசிரியரும் வட்டத்தின் நடுவில் நின்று பாடலைப் பாடுவார்.

காகம் காகம் காகம்
கறுப்பு நிறக் காகம்
காலையில் கரையும் காகம்
கா கா கா கா காகம்.

இவ்வாறு ஏனைய பிள்ளைகள் செயற்படுவதற்கு கிளி, குயில், கோழி, சேவல் என்பவற்றின் படங்களையும் பயன்படுத்த முடியும்.

மதிப்பீடு :- வினாக்களுக்கு விடை கூறுதல்.

கற்றல் விரிவாக்கம் :- மேற்படி பறவைகள் தொடர்பாக அறிந்தவற்றைக் கேட்டுக் கலந்துரையாடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி- பேசுதல் (எண்ணங்களை வெளிப்படுத்தல்)


தேர்ச்சி :- சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பணிவுடன் பேசுவார்.

செயற்பாடு :- 2.17 பணிவுடன் பேசுதல்

வளம் :- ஒளிரும் கல்

அணுகுமுறை :- முன்னாயத்தமின்றி உரையாடல்

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை அரைவட்டமாக நிற்கவிடல்
2. அரை வட்டத்தின் முடிவில் சிறு ஒளிரும் கற்கள் உள்ள தட்டு ஒன்றை வைத்தல்.
3. ஆசிரியர் 'அந்த தட்டில் உள்ள கற்கள் மிகவும் சக்தி உள்ளவை, நீங்கள் கேட்பவற்றை உங்களுக்குத் தரும்' என பிள்ளைகளுக்குக் கூறுதல்.
4. ஆசிரியர் பிள்ளைகளுக்கு வழிகாட்டும் வகையில் முதலில் தட்டில் உள்ள கல்லை எடுத்து தனக்கு விருப்பமானவற்றைத் தரும்படி கேட்டல்.
5. பிள்ளைகளில் ஒருவர் முன்னே சென்று தட்டில் உள்ள கல் ஒன்றை எடுத்து தனக்கு விருப்பமானவற்றை தரும்படி கேட்டல்.
6. ஏனைய பிள்ளைகள் அவதானமாக செவிமடுப்பர். ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு விடை சொல்லுதல்.
7. இவ்வாறே ஒவ்வொரு பிள்ளையும் செயற்படுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- பணிவாகக் கேட்கும் முறையினை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- உங்கள் பிறந்த நாளுக்காக பரிசு வாங்கித் தரும்படி அம்மாவிடம்/ அப்பாவிடம் கேட்டல். ஒருவர் அம்மாவாகவும் ஒருவர் பிள்ளையாகவும் நடித்து விருப்பமானவற்றை அம்மாவிடம் கேட்டல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல் - (தொலைபேசி உரையாடல்)

தேர்ச்சி :- அவதானமாகச் செவிமடுத்து சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உரையாடுவார்.

செயற்பாடு :- 2.18 தொலைபேசி உரையாடல்.

வளம் :- அடியில் சிறு துளையுள்ள பேணிகள், நூல்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. துளையிடப்பட்ட பேணிகளை நிறப் பேப்பர்களால் ஒட்டி அலங்கரித்தல்.
2. இரண்டு பேணிகளையும் நூலினால் இணைத்தல். கழராமல் முடிச்சுப் போடுதல்.
3. ஆசிரியரும் ஆசிரிய உதவியாளர் அல்லது பெற்றோரும் இணைந்து தொலைபேசியில் உரையாடுதல்.
4. பின்னர் உரையாடிய முறை தொடர்பாக பிள்ளைகளுடன் கலந்துரையாடுதல்.
5. அடுத்து இவ்விரண்டு பேராக பிள்ளைகள் தொலைபேசி உரையாடலை மேற்கொள்ளல்.
6. இவ்வாறே பிள்ளைகள் இருவர் இருவராக செயற்படுதல்.

மதிப்பீடு :- அவதானமாகச் செவிமடுப்பதையும் பொருத்தமாக உரையாடுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- விளையாட்டுத் தொலைபேசிகளை பயன்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல்

தேர்ச்சி :- கதை ஒன்றை ஆக்கிக் கூறுவார்.

செயற்பாடு :- 2.19 கதை சொல்லல்

வளம் :- மூன்று துண்டங்களாக்கப்பட்ட முயல், சிங்கம் ஆகியவற்றின் படங்கள்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளிடம் மூன்று துண்டங்களாக வெட்டப்பட்ட சிங்கம், முயல் என்பவற்றின் படங்களைக் கொடுத்து அவற்றைப் பொருத்தி உருவம் ஆக்குமாறு கூறுதல்.
2. படத்தைப் பொருத்திய பின் அவற்றின் பெயர் (முயல், சிங்கம்) கூறுதல்.
3. முயலும் சிங்கமும் பற்றிய கதையை மிகவும் சுருக்கமாக இலகுவான மொழி நடையில் கூறுதல்.
4. கூறி முடிந்ததும் பிள்ளைகளிடம் வினாக்களைக் கேட்டு கதையை பிள்ளைகள் மூலம் கட்டி எழுப்புதல்.
5. ஆசிரியர் ஒவ்வொரு வாக்கியமாகக் கதையைச் சொல்ல பிள்ளைகள் திருப்பிச் சொல்லுதல்.
6. விரும்பிய பிள்ளை முன்வந்து கதை சொல்லுதல்.

மதிப்பீடு :- கதையை அவதானமாக செவிமடுப்பதையும், கூறுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டில் இத்தகைய வேறு கதைகளை பெற்றோரிடம் கேட்டு வந்து வகுப்பில் கூறுமாறு சொல்லுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல் - பார்த்தவற்றை விபரித்தல்


தேர்ச்சி :- சுற்றாடலில் பார்த்த பொருட்களின் பெயர்களைக் கூறுவார்.

செயற்பாடு :- 2.20 களப் பயணம் செல்லல்

வளம் :- காட்போட் குழாய்கள், சணல் நூல், பசை

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. இரண்டு காட்போட் துண்டுகளை ஒரே நேரத்தில் இரண்டு கண்களாலும் பார்க்கக் கூடியவாறு இணைத்து தொலைநோக்கு கருவி (பைனாகுலர்) ஆக்குதல்.
2. பிள்ளைகள் வெளியே உலா வருதல்.
3. உலா வரும்போது தொலைநோக்கு கருவியால் பார்த்து காண்பவற்றைக் கூறச் சொல்லல்.
4. பிள்ளைகள் தாம் பார்த்த பறவைகள் விலங்குகள் பூச்சிகள், பூக்கள் என்பவற்றினைப் பற்றிக் கூறுதல். அவைபற்றி விபரித்தல்.
5. பிள்ளையோடு கூட உலா வரும் பெற்றோரோ அல்லது ஆசிரியரோ பிள்ளை கூறாதவை பற்றி வினாக்கள் கேட்டு கூறச் செய்தல்.

மதிப்பீடு :- பார்த்தவற்றைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பகுதிகளை அவதானிக்க விட்டு பெயர் கூற வழிப்படுத்தல். உ+ம் மரத்தின் பகுதியாகிய இலைகள் - வேப்பிலை, மாவிலை, புளியம் இலை, பூவரசமிலை, முருங்கையிலை என்றவாறு கூற வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – சிந்தித்துப் பேசுதல்

தேர்ச்சி :- புதிருக்கான விடையைக் கூறுவார்

செயற்பாடு :- 2.21 பாடலின் ஊடாகச் சிந்தித்தல்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
2. புதிர்ப் பாடலை முன்வைத்தல்.
3. வினாக்களைக் கேட்டல்.

மதிப்பீடு :- சரியாக விடை கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- உணவுப் பொருள், வாகனங்கள் என்பன விடையாகக் கிடைக்கக் கூடிய புதிர்ப் பாடல்களை ஆக்கிச் சிந்திக்கத் தூண்டுதல்.

1. வீட்டில் இதனை வளர்ப்போமாம்
விரும்பிப் பாலைக் குடித்திடுமாம்
தோட்ட மெல்லாம் சுற்றிடுமாம்
துரத்தி எலியைப் பிடித்திடுமாம்
என்ன பிராணி இதுவென்றே
எனக்கு உடனே கூறிடுவீர் ?

2. வீட்டில் இதனை வளர்ப்போமாம்
விரும்பி குழையும் தின்றிடுமாம்
மே மே என்று அழைத்திடுமாம்
மெல்லக் குட்டியும் சென்றிடுமாம்
என்ன பிராணி இதுவென்றே
எனக்கு உடனே கூறிடுவீர் ?

3. வீட்டை நன்றாய்க் காத்திடுமாம்
விரும்பி நாமும் வளர்த்திடுவோம்
வள் வள் என்றே குரைத்திடுமாம்
வாலை வாலை ஆட்டிடுமாம்
என்ன பிராணி இதுவென்றே
எனக்கு உடனே கூறிடுவீர் ?

4. கூட்டில் இதனை வளர்ப்போமாம்
கொஞ்சிக் கதையும் பேசிடுமாம்
கொவ்வைப் பழத்தை விரும்பிடுமாம்
கொத்திக் கொத்தித் தின்றிடுமாம்
என்ன பிராணி இதுவென்றே
எனக்கு உடனே கூறிடுவீர் ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – பேசுதல்

தேர்ச்சி :- பரிச்சயமான பொருள் பற்றி பேசுவார்.

செயற்பாடு :- 2.22 பேசுதல்

வளம் :- பட அட்டைகள் (பழங்கள், காய்கறிகள், பிராணிகள்)

அணுகுமுறை :- விளையாட்டு



செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் வட்டமாக நிற்றல்.
2. பட அட்டைகள் சிலவற்றைக் கொண்ட சிறு கூடையை வட்டத்தில் பிள்ளைகளிடையே சுற்ற விடல்.
3. ஆசிரியர் கைகளைத் தட்ட கூடையைப் பெற்ற பிள்ளை அதில் உள்ள ஒரு பட அட்டையினை எடுத்து ஏனையோருக்குக் காட்டுதல்.
4. அட்டையில் காட்டப்பட்ட படம் பற்றி ஒரு வாக்கியம் கூறுதல்.
5. மீண்டும் ஆசிரியர் கைதட்ட, கூடையை மற்றைய பிள்ளையிடம் கைமாற்றல்.
6. இவ்வாறு ஒவ்வொரு பிள்ளைக்கும் சந்தர்ப்பம் கொடுத்தல்.

மதிப்பீடு :- வாக்கியம் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதுபோல பாடசாலையில், சூழலில் உள்ள பொருள் பற்றி வாக்கியம் கூறவிடல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - பார்வை பிரித்தறிகை

தேர்ச்சி :- தரப்பட்ட உருக்களில் மேலதிகமாக உள்ள உருவைத் தெரிந்தெடுப்பார்.


செயற்பாடு :- 2.23 உருத் தெரிதல்

வளம் :- உரு அட்டைகள் கொண்ட பைகள் (மாம்பழம், குருவி, தேநீர்க் குவளை)

அணுகுமுறை :- செயற்பாடு


செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. தனித் தனி உருஅட்டை கொண்ட பைகளைக் குழுக்களுக்கு வழங்குதல்.
3. பை ஒன்றை எடுத்து அதில் உள்ள உருக்களை அவதானிக்க விடல்.
4. வேறுபட்ட உருவை எடுத்துக் காட்டச் செய்தல்
5. இதே போல ஏனைய பைகளையும் எடுத்துச் செயலில் ஈடுபடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதிப்பீடு :- வேறுபட்டதைத் தெரிந்தெடுப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதனைப்போல வேறு படங்களையும் பயன்படுத்திப் பயிற்சி அளித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - பார்வை பிரித்தறிகை

தேர்ச்சி :- தரப்பட்ட உருத் தொகுதியில் குறைபாடுடைய உருவைத் தெரிந்தெடுப்பார்.

செயற்பாடு :- 2.24 உருத் தெரிதல்

வளம் :- உரு அட்டைகள் கொண்ட மூன்று பைகள் (மாம்பழம், தலை, தேநீர்க் குவளை)


அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. தனித் தனி உருஅட்டை கொண்ட பைகளைக் குழுக்களுக்கு வழங்குதல்.
3. பை ஒன்றை எடுத்து அதில் உள்ள உருக்களை அவதானிக்க விடல்.
4. வேறுபட்ட உருவை எடுத்துக் காட்டச் செய்தல்.
5. இதே போல ஏனைய பைகளையும் எடுத்துச் செயலில் ஈடுபடல்.

மதிப்பீடு :- வேறுபட்டதைத் தெரிந்தெடுப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதனைப்போல வேறு படங்களையும் பயன்படுத்திப் பயிற்சி அளித்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - பார்வை பிரித்தறிகை

தேர்ச்சி :- வேறுபட்ட உருவைத் தெரிந்தெடுப்பார். (திசை)

செயற்பாடு :- 2.25 உருத் தெரிதல்

வளம் :- உரு அட்டைகள் கொண்ட பைகள் (லொறி, மீன், புறா)


அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. லொறி உரு அட்டை கொண்ட பையைக் குழுக்களுக்கு வழங்குதல்.
3. உருக்களை எடுத்து ஒரு வரிசையில் அடுக்க விடுதல்.
4. திசை வேறுபாடுடைய உருவை அவதானிக்க விடுதல்.
5. வேறுபட்ட உருவை எடுத்துக் காட்ட விடுதல்.
6. இதேபோன்று ஏனைய உருத்தொகுதிகளுக்கும் செய்தல்.

மதிப்பீடு :- வேறுபட்டதைத் தெரிந்தெடுப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதனைப்போல வேறு படங்களையும் பயன்படுத்திப் பயிற்சி அளித்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - பார்வை பிரித்தறிகை

தேர்ச்சி :- பருமனில் வேறுபட்ட உருவைத் தெரிந்தெடுப்பார்.

செயற்பாடு :- 2.26 உருத் தெரிதல்

வளம் :- உரு அட்டைகள் கொண்ட மூன்று பைகள் (பழம், சாடி, ஆமை)


அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. உருஅட்டை கொண்ட பை ஒன்றைக் குழுக்களுக்கு வழங்குதல்.
3. உருக்களை வரிசையில் அடுக்க விடுதல்.
4. வேறுபட்ட உருவை எடுத்துக் காட்டச் செய்தல்.
5. இதே போன்று ஏனைய தொகுதிகளையும் எடுத்துச் செய்ய விடுதல்.
6. அறிவுறுத்தலுக்கு அமையப் பிள்ளைகள் செயற்படல்.

மதிப்பீடு :- வேறுபட்டதைத் தெரிந்தெடுப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதனைப்போல வேறு படங்களையும் பயன்படுத்திப் பயிற்சி அளித்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - பார்வை பிரித்தறிகை

தேர்ச்சி :- தரப்பட்ட வடிவங்களில் வேறுபட்ட வடிவத்தைத் தெரிந்தெடுப்பார்.

செயற்பாடு :- 2.27 வடிவம் தெரிதல்

வளம் :- உரு அட்டைகள் கொண்ட பைகள் (படத்தில் தரப்பட்டவாறு)

அணுகுமுறை :- செயற்பாடு


செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. படஅட்டை கொண்ட பைகளைக் குழுக்களுக்கு வழங்குதல்.
3. அறிவுறுத்தலுக்கு அமையப் பிள்ளைகள் செயற்படல்.


மதிப்பீடு :- வேறுபட்டதைத் தெரிந்தெடுப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதனைப்போல வேறு படங்களையும் பயன்படுத்திப் பயிற்சி அளித்தல்.


பை - 1




பை - 2



பை - 3



பை - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - பார்வை பிரித்தறிகை


தேர்ச்சி :- துண்டங்களை இணைத்து உருவமாக்குவார்.

செயற்பாடு :- 2.28 உருவம் ஆக்குதல்

வளம் :- முழு உருவப் பட அட்டை மூன்று துண்டுகளாக்கப்பட்ட படம்

அணுகுமுறை :- விளையாட்டு.


செயலொழுங்கு :-



1. ஆசிரியர் பிள்ளைகளிடத்தில் வெட்டப்பட்ட உரு அட்டைத் துண்டுகளைக் கொண்ட தபால் உறைகளைக் கொடுத்தல்.
2. அதனைப் பிரித்து பார்க்கும்படி கூறல்.
3. அவ்வுறையினுள் உள்ள முழு உருவப் படத்தையும் துண்டங்களையும் வெளியே எடுத்தல்.
4. மூன்று துண்டங்களைப் பொருத்தி உருவத்தை ஆக்குதல்.

மதிப்பீடு :- துண்டங்களைப் பொருத்தி முழுவுரு ஆக்குதலை அவதானித்தல்,

கற்றல் விரிவாக்கம் :- இதுபோல வேறு படங்களையும் பொருத்த விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – ஞாபகத்தில் இருத்திக் கூறுதல்

தேர்ச்சி :- ஆசிரியர் கேட்கும் வினாவிற்கு ஏற்பத் துலங்குவார்.

செயற்பாடு :- 2.29 ஞாபகப்படுத்தல்

வளம் :- (பந்து புத்தகம், தண்ணீர்ப் போத்தல், பூ, கல்) – பட அட்டைகள், உண்மைப்பொருட்கள் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. 5 பொருட்களை மேசையில் வைத்தல் (பந்து புத்தகம், தண்ணீர்ப் போத்தல், பூ, கல்)
2. பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் அப்பொருட்களின் படங்களைக் கொடுத்தல்.
3. பின்னர் எல்லோரையும் மேசையில் உள்ள பொருட்களைப் பார்க்கும்படி கூறுதல்.
4. சில விநாடிகளின் பின்னர் அவர்களை திரும்பி நிற்குமாறு அல்லது கண்களை மூடுமாறு கூறிவிட்டு மேசையில் உள்ள ஒரு பொருளை எடுத்து மறைத்தல்.
5. மறைத்திருந்த பொருள் என்ன? என்பதை ஆசிரியர் வினவுதல்.
6. பிள்ளைகள் கையில் உள்ள பட அட்டையை எடுத்து உயர்த்திக் காட்டுதல்.

மதிப்பீடு :- மறைத்த பொருளை ஞாபகப்படுத்துவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மேசையில் வைக்கும் பட அட்டையில் பொருத்தமான சோடியை இனங்காணவிடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – வாசித்தலுக்கான முன் ஆயத்தம்

தேர்ச்சி :- படங்களை வாசிப்பார்.

செயற்பாடு :- 2.30 படம் பார்த்துப் பெயர் கூறல்

வளம் :-

- குடும்ப உறுப்பினர் மரம் (படம்)
- பட அட்டைகள் (அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி)
- பட அட்டைகள் (கப்பல், பட்டம், மரம், சங்கு)

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. குடும்ப உறுப்பினர் மரத்தை வகுப்பறையின் முன்னே தொங்க விடல் பெயர்களைக் கலந்துரையாடல்.
2. ஆசிரியர் ஒரு பட அட்டையைத் தூக்கிக் காட்டி பிள்ளையிடம் அதன் பெயரைக் கேட்டல்.
3. இவ்வாறு ஏனைய பட அட்டைகளையும் காட்டி வாசிக்க விடல்
4. கப்பல், பட்டம், மரம், சங்கு படங்களை ஒவ்வொன்றாகக் காட்டி பெயர் கூறல்.
5. பிள்ளைகள் ஆசிரியருடன் சேர்ந்து பெயர் கூறுதல்.
6. படங்களை ஒவ்வொன்றாகக் காட்டுதல், பிள்ளைகள் பெயர் கூறுதல்.
7. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.


மதிப்பீடு :- படங்களை இனங்கண்டு சரியாக வாசித்தலை அவதானித்தல்.


கற்றல் விரிவாக்கம் :- குடும்ப உறுப்பினர் படங்களைப் பெயரட்டைகளுடன் தொடர்பு படுத்த விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – உடல் உள இயக்கச் செயற்பாடு (கை, கண் இயைபாக்கம்)

தேர்ச்சி :- கைவிரல்களைப் பயன்படுத்துவார்.

செயற்பாடு :- 2.31 மடித்தல், மீன் ஆக்கஞ் செய்தல்.

வளம் :- நிறக் கடதாசி வகைகள், கத்திரிக்கோல், பசை, அட்டை


அணுகுமுறை :- செயற்பாடு


செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளை “ப” வடிவில் அமரச் செய்தல்.
2. நாங்கள் இன்று ஆக்க வேலையில் மீன் ஒன்றைச் செய்வோமா? என வினவி மீன் ஆக்கமொன்றைக் காட்சிப்படுத்தல்.
3. ஒவ்வொருவருக்கும் நிறக் கடதாசிகள் வழங்கல்.மீன் ஆக்கம் செய்வதற்கு வேண்டிய படிமுறைகளை ஆசிரியர் செய்து காட்டுதல்.
4. பிள்ளைகளும் சேர்ந்து செய்தல்.
5. பிள்ளைகள் தாம் ஆக்கிய உருவத்திற்கு நிறந் தீட்டுதல்.


மதிப்பீடு :- ஆக்கம் செய்து நிறந் தீட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதனைப் போல குருவி ஒன்று செய்தல்.





பின்புறம் மடித்தல்.



குருவிக்கு நிறந் தீட்டல் அட்டையில் ஒட்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – உடல் உள இயக்கச் செயற்பாடு (கை, கண் இயைபாக்கம்)

தேர்ச்சி :- துண்டங்களை பொருத்தி ஒட்டுவதன் மூலம் முழு உருக்களை ஆக்குவார்.

செயற்பாடு :- 2.32 உருக்களை ஒட்டுதல்.


வளம் :- வெட்டப்பட்ட உருக்களின் பகுதிகள்( யானை, முயல், காகம், கிளி), அட்டைகள், பசை

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. ஒவ்வொரு குழுவுக்கும் இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்ட உருவங்களைக் கொடுத்தல்.
3. அவ்வுருவங்களை ஒட்டுவதற்கு அட்டைகள் வழங்குதல்.
4. ஒட்டப்பட்ட உருவங்கள் பற்றி கலந்துரையாடுதல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் பொருத்தமான முறையில் உருவங்களை ஒட்டுதலை அவதானித்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி - உடல் உள இயக்கச் செயற்பாடு (கை, கண் இயைபாக்கம்)

தேர்ச்சி :- உருவங்களை வெட்டுவார்.

செயற்பாடு :- 2.33 வெட்டுதல்.

வளம் :- உருவம் வரையப்பட்ட நிற அட்டைகள், கத்திரிக்கோல், வெள்ளை அட்டைகள்.

அணுகுமுறை :- செயற்பாடு.


செயலொழுங்கு :-


1. பிள்ளைகளை வட்டமாக அமரச்செய்தல்.
2. அவர்களின் முன்னே உருவங்கள் வரையப்பட்ட நிற அட்டைகளை வழங்குதல்.
3. வரையப்பட்ட உருவத்தை கத்தரிக்கோலால் வெட்ட வழிகாட்டல்.
4. பிள்ளைகளை வெட்டவிடல்.

மதிப்பீடு :- கத்தரிக்கோல் பிடிக்கும் முறை, வெட்டும் முறையை மதிப்பிடல்.

கற்றல் விரிவாக்கம் :- இதனைப்போல வேறு உருவங்களை வழங்கி அவற்றை வெட்டவிடல்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – உடல் உள இயக்கச் செயற்பாடு (கண், கை இணைதல்)

தேர்ச்சி :- ஒத்த நிறங்களை இணைப்பார்.

செயற்பாடு :- 2.34 நூலால் கோர்த்தல்

வளம் :- உரு அட்டைகள், நூல்கள், நிற பலூன்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு நிற பலூன்களை ஊதிக் கட்டி விடுதல்.
3. துளைகள் இடப்பட்ட பட அட்டைகளை பிள்ளைகள் மத்தியில் வைத்தல்.
4. நிற பலூனின் நிறத்திற்கு ஏற்ற விதத்தில் பொருத்தமான பட அட்டையை நூலால் கோர்த்தல்.(உ+ம்:- சிவப்பு - அப்பிள், பூ, பச்சை - இலை, வாழைக்காய் , மஞ்சள் - மாம்பழம், தோடம்பழம்)
5. ஒவ்வொரு குழுவும் இவ்வாறு பாடுவர்.

சிவப்பு நிற பலூன்கள் - ஆகாயத்தில் பறக்கும்
சிவப்பு நிற அப்பிள் போல

பச்சை நிற பலூன்கள் - ஆகாயத்தில் பறக்கும்
பச்சை நிற இலைகள் போல

மஞ்சள் நிற பலூன்கள் - ஆகாயத்தில் பறக்கும்
மஞ்சள் நிற தோடம்பழம் போல

மதிப்பீடு :- பிள்ளைகள் துளைகளில் நிறத்திற்குப் பொருத்தமாக நூலைக் கோர்ப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- நிறங்களை வேறு பிரித்தறிவதை உறுதிப்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – உடல் உள இயக்கச் செயற்பாடு

தேர்ச்சி :- கை விரலைப் பயன்படுத்தி அச்சுப் பதிப்பார்.

செயற்பாடு :- 2.35 அச்சுப் பதித்தல்.


வளம் :- மஞ்சள்பொடி, குங்குமப்பொடி, வெள்ளைத்தாள், நிறப் பென்சில் விரும்பிய நிறம்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளைக் குழுக்களாக்கி, குழு ஒவ்வொன்றிற்கும் நிறக்கலவை, வெள்ளைத்தாள் ஒன்று, நிறப் பென்சில்கள் வழங்குதல்.
2. வெள்ளைத்தாளில் குழுவிலுள்ள ஒவ்வொருவரும் தமது ஒருவிரலை மட்டும் நிறக்கலவையில் தோய்த்து அச்சுப்பதித்தல்.
3. அவ்வாறு ஒவ்வொரு பிள்ளையின் பெருவிரலின் அச்சுப் பதித்த பிறகு அதன் மூலம் என்ன உருவம் வரையலாம் என வினவுதல்.
4. மீன், குருவி, மனித முகம், சூரியன், பூ, பூனை போன்ற உருவங்கள் வரைய வழிப்படுத்துதல்.
5. பிள்ளைகளின் கற்பனைக்கு ஏற்ப உருவங்கள் ஆக்குதல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் விரலை அழுத்தி அச்சுப்பதிப்பதை அவதானித்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – உடல் உள இயக்கச் செயற்பாடு

தேர்ச்சி :- விரலசைவுப் பயிற்சியைப் பெறுவார்.

செயற்பாடு :- 2.36 விரல் பொம்மைகள்

வளம் :- தடித்த அட்டைகள், நிறப் பென்சில்கள், படங்கள், பசை, கத்தரிக்கோல், படங்களை ஒட்டுவதற்கு பொருத்தமான பொருட்கள்(பஞ்சு, துண்டு, கடதாசிகள்)

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் தான் உருவாக்கிய சேவல் ஒன்றின் படத்தை விரலில் கொழுவியபடி அசைத்துக் காட்டுதல்.
2. ஆசிரியர் செய்வதை ஆர்வமுடன் பிள்ளைகள் அவதானித்தல்.

> கோழிச் சேவல் நானல்லோ
> கொத்திக் கொத்திக் காட்டிடுவேன்
> காலைப் பொழுது விடிவதையே
> கூவி நானும் காட்டிடுவேன்

3. பிள்ளைகளைச் சிறு குழுக்களாக்குதல்.
4. அவர்களுக்குப் பொருத்தமான சிறு படங்களைக் கொடுத்து அதனை அட்டையில் ஒட்டச் செய்தல்.
5. படங்களை பொருத்தமான பொருட்களால் ஒட்டச் செய்தல்.
6. பிள்ளைகளின் விரல்களில் அப்படங்களை கொழுவுவதற்கு ஏற்ப உருவாக்குதல்.
7. 2 அல்லது 3 விரல்களில் பட அட்டைகளைக் கொழுவி அசைத்து மகிழவும் குரல் எழுப்பவும் செய்தல்.

மதிப்பீடு :- விரல் பயிற்சியில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதனைப் பயன்படுத்தி பேசவும் கதை ஒன்றை ஆக்கவும் முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – உடல் உள இயக்கச் செயற்பாடு

தேர்ச்சி :- தேவைக்கேற்றபடி விரலை அசைப்பார்.

செயற்பாடு :- 2.37 உதைபந்தாட்டம் விளையாடுவோம்.

வளம் :- மட்டையில் வெட்டப்பட்ட மனிதப் பொம்மைகள் (விரல் பொம்மை), இறப்பர்வளையம்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஒரு மேசையினைச் சுற்றி பிள்ளைகளை நிற்கச் சொல்லுதல்.
2. மேசையின் மத்தியில் சிறிய பந்து வடிவத்தில் கடதாசி உருண்டைகளை வைத்தல்.
3. பிள்ளைகளின் வலது கையில் இரண்டு விரல்களைப் பயன்படுத்த, பொம்மை ஒன்றை இறப்பர் வளையத்தினால் கட்டி விடல்.
4. விரல்களைக் கால்களாகப் பாவனை செய்து அசைத்து ஓடி உருண்டைப் பந்தினை தட்டி விளையாடல்.
5. எவர் அந்த உருண்டைப் பந்தை வெளியே விழுத்துகின்றாரோ அவர் வெற்றி பெற்றவர் ஆவர்.

மதிப்பீடு :- கைவிரலை அசைத்து விளையாடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இது போன்று வேறு விரல் பொம்மை விளையாட்டுக்களை உருவாக்கி விரல் பயிற்சியினை வழங்குதல்.

பந்தடிப்போம் பந்தடிப்போம் பந்தடிப்போமே

பாலர் நாங்கள் கூடி ஆடிப் பந்தடிப்போமே

வட்டமாக வந்து நாங்கள் பந்தடிப்போமே

கூட்டமாகக் கூடி நாங்கள் பந்தடிப்போமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – உடல் உள இயக்கச் செயற்பாடு

தேர்ச்சி :- செவிமடுத்த பெயருக்குரிய பொருளை ஆக்குவார், ஒப்பிடுவார்.

செயற்பாடு :- 2.38 தலைவரின் ஆக்கச்செயலைப் பின்பற்றுதல்.

வளம் :- களிமண்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் முதுகுப்பக்கம் ஒட்டியவாறு சோடிகளாக இருப்பர்.
2. இருவரின் கையிலும் களி சம அளவில் இருக்கும்.
3. ஒருவர் விரும்பிய ஒரு உருவம்/வடிவம் செய்வார்.
4. உருவம் ஆக்கும்போதே மற்றவருக்கு அதன் பெயரைச் சொல்லுவார்.
5. மற்றவரும் அதனைச் செய்வார்.
6. இருவரும் தாம் ஆக்கியதைப் பார்ப்பர், ஒப்பிடுவர்.
7. இவ்வாறே மாறி மாறி ஒருவர் சொல்ல மற்றவர் ஆக்குதலும் பார்த்து ஒப்பிடுதலும் இடம்பெறும்.

மதிப்பீடு :- உருவம் ஆக்கும்போது விரல்கள் உட்பட உள்ளங்கை தொழிற்படும் முறையை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஆசிரியர் பொருளின் பெயரைக் கூற பிள்ளைகள் களிமண்ணில் உருவங்களை ஆக்குதல் ஆக்கிய பொருட்களைப் பற்றிச் சொல்லுதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – எழுதுதலுக்கான முன் ஆயத்தம்

தேர்ச்சி :- புள்ளிக் கோட்டினை இணைப்பார்.

செயற்பாடு :- 2.39 இணைத்தல்

வளம் :- செயலட்டைகள், (படத்தில் உள்ளவாறு)


அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளிடம் செயலட்டைகளை வழங்குதல்.
2. புள்ளிக் கோடுகளை இணைக்குமாறு கூறுதல்.


மதிப்பீடு :- சரியாகப் புள்ளிகளை இணைத்து உருவமாக்குதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதனைப் போல புள்ளிக் கோடிடப்பட்ட பல விதமான உருக்களை இணைக்க விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளிகளை இணைத்து வரைவோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – எழுதுதலுக்கான முன் ஆயத்தம்

தேர்ச்சி :- வளைகோடுகள் வரைவார்.

செயற்பாடு :- 2.40 வளைகோடு வரைதல்

வளம் :- செயலட்டைகள், -(படம் வளைகோடு), நிறப் பெனிசில்கள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளிடம் செயலட்டைகளை வழங்குதல்.
2. புள்ளிக் கோடுகளை இணைத்துக் காட்டுதல்.
3. புள்ளிக் கோடுகளை இணைக்குமாறு கூறுதல்.

**புள்ளிகளை இணைத்து வரைவோம்**



மதிப்பீடு :- வளைகோடுகள் வரைவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மணல், மண்ணில் வளைகோடுகள் வரைய விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – எழுதுதலுக்கான முன் ஆயத்தம்

தேர்ச்சி :- நேர்கோடுகளை வரைவார்.

செயற்பாடு :- 2.41 "ப" வடிவம்

வளம் :- செயலட்டை (புள்ளியிடப்பட்ட 'ப'), நிறப் பென்சில்

அணுகுமுறை :- செயற்பாடு


செயலொழுங்கு :-

1. பிள்ளைகளுக்குச் செயலட்டையினை வழங்குதல்.
2. புள்ளிகளை இணைப்பதற்கு வழிகாட்டல்.
3. புள்ளிகளை இணைக்க விடல்.

மதிப்பீடு :- நேர் கோடுகளை வரைதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- நேர் கோட்டால் அமைந்த வெவ்வேறு வடிவங்களை இணைக்க விடல்.

## புள்ளிகளை இணைத்து வரைவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – எழுதுதலுக்கான முன் ஆயத்தம்

தேர்ச்சி :- சரியான முறையில் பென்சிலைப் பிடிப்பார்.


செயற்பாடு :- 2.42 வலஞ்சுழியாகப் புள்ளிக் கோடுகளை இணைத்தல்

வளம் :- புள்ளிக் கோடுகள் கீறப்பட்ட அட்டைகள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் செய்து காட்டுகின்ற முறையில் பென்சிலைப் பிடித்தல்.
2. புள்ளிக் கோடுகள் வரையப்பட்ட அட்டைகளை வழங்குதல்.
3. ஆசிரியரின் வழிகாட்டலுக்கு ஏற்ப பென்சிலைப் பிடித்துப் புள்ளிக் கோட்டை இணைத்தல்.




மதிப்பீடு :- பென்சில் பிடிக்கும் முறையை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இவ்வாறே ஏனைய வடிவங்களை இணைக்க வழிகாட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி - எழுதுதலுக்கான முன் ஆயத்தம்

தேர்ச்சி :- எழுத்தின் புறவுருவின் மேல் திசைமுகத்திற்கு அமைவாக ஒட்டிகளை ஒட்டி எழுத்தாக்குவார்



செயற்பாடு :- 2.43 ஒட்டுதல்

வளம் :- பெரிதாக எழுத்துக்கள் எழுதப்பட்ட A4 தாள் (ட, ப, ம, ய), பசை, பல வர்ணப் பத்திரிகைத் தாள்கள்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. எழுத்துக்கள் எழுதப்பட்ட A4 தாளினைப் பிள்ளைகளுக்கு வழங்குதல்.
2. ஆசிரியர் எழுத்துக்களின் மேல் உரிய திசை முகத்தை அனுசரித்து பத்திரிகைத் தாட்களைச் சிறிய துண்டுகளாகக் கிழித்து ஒட்டிக் காண்பித்தல்.
3. பிள்ளைகளை ஒட்ட விடுதல்.

மதிப்பீடு :- திசைமுகத்தை அனுசரித்துப் புறவுருவின் மேல் ஒட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஏனைய எழுத்துக்களையும் உரிய திசைமுகத்தில் ஒட்ட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மொழி விருத்தி – எழுதுதலுக்கான முன் ஆயத்தம்

தேர்ச்சி :- இடஞ்சுழியாகப் புள்ளிகளை இணைத்து எழுத்தாக்குவார்.

செயற்பாடு :- 2.44 புள்ளிகளை இணைத்தல்

வளம் :- எழுத்தட்டைகள் (ம, ய,)

அணுகுமுறை :- செயற்பாடு


செயலொழுங்கு :-

1. ஆசிரியர் முதலில் புள்ளிகளை இணைத்து எழுத்தாக்கிக் காட்டல்.
2. பிள்ளைகளுக்கு எழுத்தட்டைகளை வழங்கல்.
3. செயற்பட விடுதல்.

மதிப்பீடு :- இடஞ்சுழியாகப் புள்ளிகளை இணைப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இவ்வாறே வலஞ்சுழியாக வளைகோடு, நேர்கோடு வடிவிலான எழுத்துக்களை புள்ளிகளை இணைத்து ஆக்கவிடல். (ர, ச, க, ந, த)


## புள்ளிகளை இணைத்து வரைவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளிகளை இணைத்து வரைவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# அறிவாற்றல்

# விருத்தி - கணிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாற்றல் விருத்தி – கணிதம்

முன்பள்ளிகளில் கற்பிக்கும் முன்பள்ளி ஆசிரியர்கள் கணித எண்ணக்கரு விருத்தி தொடர்பாக அறிந்திருக்க வேண்டிய விடயங்கள் வருமாறு.

- முன்பள்ளிகளுக்கு முதன் முதலாக வரும் பிள்ளைகள் சில கணித எண்ணக்கருக்களைக் கொண்டவர்களாகவே வருகின்றார்கள்.
- அவ் எண்ணக்கருக்களை மேலும் விருத்தி செய்ய உதவி செய்வதும், வழிகாட்டி நெறிப்படுத்துவதும் முன்பள்ளி ஆசிரியர்களின் பொறுப்பாகும். இந் நோக்கத்தினை அடைவதற்கு ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்ட சில அனுபவங்களைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இது முறை சார்ந்த பாடசாலைக் கற்றலுக்கு சிறந்தவொரு பின்னணியை ஏற்படுத்திக் கொடுக்கும்.
- வகைப்படுத்தல் என்பது பிள்ளைகளுக்கு முக்கியமான ஒரு திறனாகும். இது எளிமையானதொன்றல்ல. ஆயினும் அவர்கள் விரும்பக்கூடியவாறு தொடர்புடைய அனுபவங்களை வழங்குவதன் மூலம் மகிழ்ச்சியடைவார்கள். வகைப்படுத்தல் பலவகையில் இடம்பெறலாமாகையால் அதனைச் செயற்படுத்தும் முறைகள் பலவாகும்.
- வகைப்படுத்தல் எண்ணக்கரு தொடர்பான அறிவு எண்களைக் கற்பதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் பெரும் உதவியளிக்கக்கூடியது.
- வகைப்படுத்தல் மீது பிள்ளைகள் காட்டும் ஆர்வம் ஏனைய செயற்பாடுகளுடன் அதனை ஒன்றிணைக்க உதவும்.
- வடிவங்களுடனான வகைப்படுத்தல் செயற்பாடுகள் பிள்ளைகளுக்கு எளிமையானது. அவர்களால் நிறம் போன்ற குறித்த ஒரு பண்பின் அடிப்படையில் பொருள்களை வகைப்படுத்த முடியும். எவ்வாறாயினும் நிறம், வடிவம் போன்ற இரு பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்துவது என்பது அவர்களது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும்.
- வகைப்படுத்தல் என்பது கணிதபாடத்தில் வரும் எண்ணக்கருவான தொடையைக் கற்பதற்கு வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வடிவங்களைக் கற்பதற்கு இணைந்த செயற்பாடுகள் உதவுகின்றது. முதலில் தொட்டளைந்து பெற்றுக் கொள்ளும் அனுபவத்தைத் தொடர்ந்தே வடிவங்கள் பற்றிய புலக்காட்சி ஏற்படுகின்றது.

- முன்பள்ளிப் பருவத்தில் கிடைக்கும் முப்பரிமாண வடிவங்கள் பற்றிய அனுபவங்கள் பின்னைய பருவங்களில் கேத்திர கணித வடிவங்களின் கற்றலை எளிமையாக்குகின்றது.

- கணிதத்தில் வரும் தொடர்பு என்ற எண்ணக்கரு மக்களிடையே காணப்படும் தொடர்பு போன்று முக்கியமானதாகும்.

  உ – ம் -'இராகவனின் மகள் ரதி' என்று நாங்கள் சொல்லும்போது அது இருவரிடையே உள்ள உறவுத் தொடர்பைக் காட்டுவதைப் பார்க்கின்றோம். அதாவது தந்தைக்கும் பிள்ளைக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கின்றது. இதேபோல நாங்கள் 'தேநீர் ஒரு குடிபானம்', 'கோப்பி ஒரு குடிபானம்' எனும்போது தேநீருக்கும் கோப்பிக்கும் இடையே ஒரு ஒத்த தன்மை இருப்பதைப் பார்க்கின்றோம்.

- ஒத்ததன்மை, உறவு, ஒப்பீடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே வெவ்வேறு வகையான தொடர்புகள் உள்ளன.

- வகைப்படுத்தல், ஒன்று ஒன்றுக்கான தொடர்பு, தொடர்பு, வரிசைப்படுத்தல், அமைவிடம் அல்லது அயல், மாறின்மை போன்றன முன் எண் எண்ணக்கருக்களாகும். முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளால் மாறின்மை பற்றிய எண்ணக்கருவை விளங்கிக் கொள்ள முடியாது. எவ்வாறாயினும் மாறின்மை தொடர்பான அடிப்படை அனுபவங்களை இப்பருவத்தில் முன்வைப்பது தவறாகாது.

- ஒரு காலத்தில் கணிதத்தைக் கற்பித்தல் என்பது எண்குறிகளைக் கற்பித்தல் என்றே மனிதனால் நம்பப்பட்டது. இதற்கு காரணம் அவர்கள் எண்குறிகளுடன் தொடர்பான செயற்பாடுகளையே கணிதமாகக் கற்றனர். எண்குறிகளுடன் தொடர்புபட்ட எண்ணக்கருவானது பிற்காலத்திலேயே கையாள இருப்பதனால் முன்பள்ளிப்பருவத்தில் செயல்முறைகளுடன் கூடிய செயற்பாடுகள் ஊடாகவே கணிதம் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எண்களை 4 1/2 வயதிற்குப் பிற்பட்ட காலத்திலேயே அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

- எண்களைப் படிமுறை ஒழுங்கிலேயே அறிமுகம் செய்யப்பட வேண்டும்.
    - எண்களின் பெயர்களைச் செவிமடுத்தல்.
    - பொருட்களுடன் இணைந்ததாக எண்களின் பெயர்களை அறிமுகம் செய்தல்.
    - எண்குறி குறிக்கும் எண் பெயர்களை வாசித்தல்
    - எண் குறிகளை வாசித்தல்
    - எண் குறிகளின் படம் வரைதல். (இது எழுதுதலைக் குறிக்காது.)

- ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து வேலை செய்யும் பொழுது கற்றல் உபகரணங்கள் பிள்ளைகளுக்கு கிடைப்பது ஒரு கடிமான விடயமல்ல.

- நாளாந்த வாழ்க்கையில் சந்திக்கும் இன்னுமோர் கணித எண்ணக்கரு அளவீடுகள் ஆகும்.

- கணிதத்தை விளங்கிக் கொள்வதற்கு அளவீடுகள் அவசியமானது.

- பிள்ளைப் பருவத்தின் ஆரம்பகால கட்டங்களிலேயே அளவீடுகளான நீளம், நிறை, கொள்ளளவு, காலம், பணம் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

- முன்பள்ளி நிகழ்ச்சி யாவும் எப்பொழுதும் ஒன்றிணைந்ததொன்றாகும். கருப்பொருள் அல்லது தலைப்பொன்றை அடிப்படையாகக் கொண்டு பல பாடப்பரப்புக்கள் ஒன்றிணைக்கப்படுகின்றன. ஆகவே கணிதமும் பெரும்பாலான தருணங்களில் இவ்வகையான ஒன்றிணைந்த கற்பித்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

- இந்நோக்கத்தை நிறைவு செய்வதற்கு ஒரு ஆசிரியருக்கு கணித எண்ணக்கரு பற்றிய அறிவு நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஒரு ஆசிரியர் கணித எண்ணக்கருக்களை நாளாந்த, வாராந்த, மாதாந்த செயற்பாடுகளில் சேர்த்துக் கொள்வது அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விருத்தியை மதிப்பீடு செய்யும் பொழுது அறிவாற்றல் விருத்தியைப் போல கணித எண்ணக்கரு விருத்தியையும் கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டும்.

- இந்நோக்கத்திற்காக ஒவ்வொரு பிள்ளையையும் அவதானிக்கப்பட வேண்டும். அதே வேளை அவதானிப்பின் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்கள் கவனமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

- விருத்தியை மதிப்பீடு செய்வது இரு வழிகளில் முக்கியமானது. அவை
    - பிள்ளைகளில் அபிவிருத்தி அடையாத திறன்களை இனங்காண்பதற்கும் அதனடிப்படையில் அப்பகுதியில் மேலும் பல அனுபவங்களை வழங்குவதற்கும்.
    - பிள்ளைகளால் விளங்கிக் கொள்ளப்படாத எண்ணக்கருக்களை விருத்தி செய்வதற்கும் புதிய அல்லது அதிக வெற்றிகரமான கற்பித்தல் முறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கும்

- பிள்ளைகளது விருத்தி தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடுவதற்கும் வழி காட்டுவதற்கும் மதிப்பீடுகள் பயனுடையவை ஆகும்.

### கணித எண்ணக்கரு விருத்தியோடு தொடர்புடைய திறன்களை விருத்தி செய்வதற்கு தேவையானவை.

பிள்ளைகள் அவதானித்தல், செய்துகாட்டல், தேடல், உருவாக்குதல், பிரயோகித்தல் மூலமாகக் கணிதத் திறன்களை விருத்தி செய்து கொள்கின்றார்கள். மேலும் சூழலில் உள்ள பொருட்களைப் பயன்படுத்தல், வடிவங்கள் ஆக்குதல், தொடர்புபடுத்தல், வகைப்படுத்தல், சிப்பி, சோகி போன்றவற்றுடன் வேலைகளில் ஈடுபடல், மண், நீருடன் விளையாடல், ஒலிகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் மேலும் தமது கணித அறிவை வளப்படுத்திக் கொள்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணித எண்ணக்கரு விருத்தி

- பிள்ளைகளது எண்ணக்கரு உருவாக்கத்தில் புறச்சூழலும் உள்ளார்ந்த ஊக்குவிப்புக்களும் பெரும் பங்காற்றுகின்றன.

- வகைப்படுத்துதல், வடிவம், எண்கள், அளவீடுகள், தொடர்புகள் போன்ற எண்ணக்கருக்கள் கணித எண்ணக்கரு விருத்திக்கு உதவுகின்றன. உண்மைப் பொருள்களூடாக பெற்றுக்கொள்ளும் தொடரான (படிப்படியான) அனுபவங்கள் வகைப்படுத்தல், வடிவம், எண்கள், அளவீடுகள், தொடர்பு போன்ற எண்ணக்கரு விருத்திக்கு உதவுகின்றன.

- ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறையே கணித எண்ணக்கருக்களைக் கற்பதற்குச் சிறந்த முறையாகும். எவ்வாறாயினும் ஆசிரியர்கள் பொருத்தமான கருப்பொருளினூடாக ஒன்றிணைந்த அணுகுமுறையைப் பயன்படுத்த வேண்டும்.

முன்பள்ளி கல்வியை முடித்து பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் யாவரும் ஒரே விதமான கணித முன் அனுபவங்களைப் பெற்றிருக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் இங்கு செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இச்செயற்பாடுகள் யாவும் விளையாட்டினூடாகவும், செய்து பார்த்தலூடாகவும் நிறைவு செய்வதற்கேற்ற வகையில் திட்டமிடப்பட்டுள்ளன. இங்கு 73 செயற்பாடுகளும், ஒரு ஒழுங்கு முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆயினும் இவை தரப்பட்ட ஒழுங்கிலேயே கட்டாயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றில்லை. ஆசிரியர்கள் பிள்ளைகளின் ஆற்றலுக்கும் தேவைக்கும் ஏற்ப இவற்றினை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

பெரும்பாலான செயற்பாடுகள் விளையாட்டினூடாகவே முன்வைக்கப்பட்டுள்ளன. இதனை நடைமுறைப்படுத்தும் ஆசிரியரகள் போதனை செய்வதாக அல்லாது பிள்ளைகள் செய்து பார்த்து. விளையாடி அனுபவம் பெற வழிகாட்ட வேண்டும். அதற்கு போதிய கற்பித்தல் வளங்களைப் பெற்றுக் குழுச் செயற்பாட்டினூடாக முன்னெடுப்பது அவசியமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே உள்ள அட்டவணை தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதான தலைப்புக்களையும் உப தலைப்புக்களையும், செயற்பாடுகளின் எண்ணிக்கையையும் காட்டுகிறது.

| இல | பிரதான தலைப்பு | உப தலைப்பு | செயற்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | முன் எண் எண்ணக்கரு | • வகைப்படுத்தல்<br>• தொடர்பு<br>• அமைவிடம்<br>• வரிசைப்படுத்தல்<br>• ஒன்று ஒன்றுக்கான ஒத்திருக்கை<br>• மாறின்மை | 04<br>02<br>03<br>04<br>07<br>03 |
| 02 | கணித எண்ணக்கரு | • வடிவம்<br>• அளத்தல்<br>நீளம்<br>பரப்பளவு<br>நிறை<br>கொள்ளளவு<br>காலம்<br>• கோலம்<br>• பணம்<br>• முழுவதின் பாதி | 06<br>05<br>02<br>04<br>01<br>01<br>02<br>01<br>01 |
| 03. | கணித எண்ணக்கரு – எண் | • எண்ணுதல்<br>• எண் விளக்கம்<br>• எண் குறி | 05<br>05<br>17 |
| | | | 73 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – வகைப்படுத்தல்

தேர்ச்சி :- பொருட்களை இன அடிப்படையில் மூன்று கூட்டங்களாக வகைப்படுத்துவார்

செயற்பாடு :- 3.1 கூட்டமாக்குதல்

வளம் :- சோடா மூடி, சிறு கற்கள், புளியம் விதை, 3 ஐஸ்கிறிம் கிண்ணம்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் மேசையில் பொருட்களை ஒரு குவியலாகவும் அதன் முன்னே கிண்ணங்கள் மூன்றையும் வைத்தல்.
2. பொருட்கள் பற்றிக் கலந்துரையாடல்.
3. பொருட்களை வகைப்படுத்திக் கிண்ணத்தினுள் போட்டுக் காட்டுதல்.
4. பிள்ளைகளைக் குழுக்களாக்கி வட்டமாக இருத்தல்.
5. ஒவ்வொரு குழுவிற்கும் 5 சோடா மூடி, 5 சிறு கல், 5 புளியம் விதை, 3 கிண்ணம் வீதம் வழங்கல்.
6. பிள்ளைகளை வகைப்படுத்த விடுதல்.
7. வகைப்படுத்திய முறையைக் கூறச் செய்தல்.

மதிப்பீடு :- வகைப்படுத்துதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பூக்கள், இலைகளைப் பயன்படுத்தி வகைப்படுத்தலில் ஈடுபடுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – வகைப்படுத்தல்


தேர்ச்சி :- பருமன் அடிப்படையில் இரு கூட்டங்களாக்குவார்

செயற்பாடு :- 3.2 கூட்டங்கள் ஆக்குதல்.

வளம் :-

1. பருமனில் வேறுபட்ட ஒரே வகையான படங்கள் ஒட்டப்பட்ட ஒரே அளவான சதுர அட்டைகள் (5cm x 5cm)
   பருமனில் வேறுபட்ட இரு சேவல் பட அட்டைகள், சதுரமுகிகள், கோல்கள், வளையங்கள், குவளை
2. சிறிய பாத்திரம் ஒன்றும், பெரிய பாத்திரம் ஒன்றும்.

அணுகுமுறை :- விளையாட்டு



செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வெளியே அழைத்துச் சென்று அரைவட்டத்தில் நிற்கச் செய்தல்.
2. ஆசிரியர் பிள்ளையின் முன் சிறிய, பெரிய வெற்றுப் பாத்திரங்களை வைத்தல்.
3. ஆசிரியர் பருமனில் வேறுபட்ட ஒரே வகையான உருவை எடுத்து பிள்ளைகளுக்குக் காட்டிக் கலந்துரையாடி முன் வைத்துள்ள பெட்டியில் போட்டுக் காண்பித்தல். (பெரிய பெட்டியில் பெரிய உருவையும், சிறிய பெட்டியில் சிறிய உருவையும் போடுதல்)
4. தயார்படுத்திய உரு அட்டைகளைப் பிள்ளைக்கு வழங்குதல்.
5. பிள்ளைகள் உரு அட்டைகளை அவதானித்து ஒவ்வொருவராக வந்து பெட்டியில் இடுவதற்கு வழிப்படுத்தி சரியாக இடுகின்றாரா என அவதானித்தல்.

மதிப்பீடு :- பெரிது, சிறிதை இனங்காண்கிறார்களா என்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பெற்றோரின் உதவியுடன் வீட்டில் உள்ள பொருட்களை பெரிது, சிறிது என இரு கூட்டங்களாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு –வகைப்படுத்தல்

தேர்ச்சி :- நிறத்தின் அடிப்படையில் பொருட்களை மூன்று கூட்டங்களாக்குவார்.

செயற்பாடு :- 3.3. நிறங்களை வேறாக்குதல்.

வளம் :-

| | |
|---|---|
| சிவப்பு நிறப் பொருள்கள் | 5. சிவப்பு பெட்டி ஒன்று |
| நீல நிறப் பொருள்கள் | 5, நீலம் பெட்டி ஒன்று |
| பச்சை நிறப் பொருள்கள் | 5, பச்சை பெட்டி ஒன்று |

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் மேசை மீது நிறமுள்ள பொருட்தொகுதியை வைத்தல். கலந்துரையாடல்.
2. சிவப்பு, நீலம், பச்சை நிறம் ஒட்டப்பட்ட மூன்று பெட்டிகளை மேசைக்கு முன்னே வைத்து, பிள்ளைகளுடன் கலந்துரையாடி, ஒரு பொருளை எடுத்து உரிய நிறப் பெட்டியில் இட்டுக் காட்டுதல்.
3. விரும்பிய ஒரு பிள்ளையை அழைத்து தொகுதியில் ஒரு பொருளை எடுத்து முழு வகுப்பு பிள்ளைகளுக்கும் காண்பித்து நிறத்தின் பெயரைக் கூறி பெட்டியில் இட வழிப்படுத்தல்.
4. பொருட்தொகுதியில் உள்ள அனைத்தும் முடியும் வரை ஈடுபடுத்தல்.
5. பிள்ளைகளை குழுவாக்கி ஒவ்வொரு குழுவையும் தனித்தனியே அழைத்து விளையாடவிடல். ஆசிரியர் சரிபார்த்து வழிகாட்டல்.
6. இடர்படும் பிள்ளைக்கு மேலதிக பயிற்சி வழங்கல்.

மதிப்பீடு :- உரிய நிறப் பெட்டியில் இடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- விளையாட்டாக உடுப்புவகை, மரக்கறிவகை, பழங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஈடுபடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – வகைப்படுத்தல்.

தேர்ச்சி :- பொருட் தொகுதியில் இருந்து தான் தெரிவு செய்த பொருள் ஒன்றை உரிய பெட்டியினுள் வைப்பார்.

செயற்பாடு :- 3.4. பொருட்களைத் தொகுதிகளாக்குதல்.

வளம் :- பிள்ளைகளுக்கு பரிச்சயமான விளையாட்டு பொருட்கள், வெற்று அட்டைப் பெட்டிகள் - 5

| பென்சில்கள், தாயக்கட்டைகள், சோடா மூடிகள், பந்துகள் , விதைகள் |
|---|

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-


1. பிள்ளைகளை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் செல்லல்.
2. விரும்பிய 5 பிள்ளைகளை முன்னே வரவழைத்தல்.
3. ஒருவர் பின் ஒருவராக நிற்கச் செய்தல்.
4. பொருள் தொகுதி அடங்கிய பெட்டியைப் பிள்ளைகளுக்கு முன்னே 2m தூரத்தில் வைத்தல்.
5. மேலும் 3m தூரத்தில் (படத்தில் உள்ளது போன்று) 5 அட்டைப் பெட்டிகளை வைத்து ஒவ்வொரு வெற்றுப் பெட்டியின் உள்ளும் வேறாக்கிப் போடவேண்டிய பொருட்களின் படம் வரைந்த ஒட்டியை ஒட்டி விடுதல்
6. ஆசிரியர் கை தட்டியதும் முதல் மாணவர் ஓடிச் சென்று பெட்டியில் உள்ள ஒரு பொருளை எடுத்துக் கொண்டு ஓடிச் சென்று அப்பொருளின் படம் ஒட்டப்பட்ட பெட்டியில் இட்டு வெளியே செல்லல்.
7. அதே போன்று ஏனைய மாணவர்களையும் செய்யவிடல்.
8. பிள்ளைகளைக் குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவையும் நேராக நிற்கவிட்டு செயற்பாட்டினைத் தொடருதல். (படத்தில் உள்ளது போன்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடு :- பொருளை உரிய பெட்டியில் இடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வேறு பொருட்கள், பட அட்டைகளைப் பயன்படுத்தி இச் செயற்பாட்டில் ஈடுபட விடுதல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – தொடர்பு.

தேர்ச்சி :- பொருட்களை இனங்கண்டு பொருத்தமாகச் சோடி சேர்ப்பார்.

செயற்பாடு :- 3.5. பொருட்களைச் சோடி சேர்த்தல்.

வளம் :- ஒன்றுக்கொன்று தொடர்புடைய உண்மைப் பொருட்கள். (ஒரு குழுவுக்கு ஐந்து சோடிகள். படத்தில் குறிப்பிடப்பட்டவை)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளைக் குழுக்களாக்கல்.
2. வட்டமாக இருக்கச் செய்து பொருட்களை நடுவில் பரப்பி வைத்தல்.
3. உருவில் காட்டப்பட்ட பொருட்களை முன்வைத்து தொடர்புடைய பொருட்கள் பற்றிக் கலந்துரையாடல்.
4. குழுக்களில் ஒரு பிள்ளை ஒரு பொருளை எடுத்து அதனுடன் தொடர்புடைய மற்றைய பொருளை எடுத்துச் சோடி சேர்த்தல்
5. ஏனையோர் அதனை அவதானித்துக் கலந்துரையாடுதல்.
6. ஏனைய தொடர்புடைய சோடிகளை ஒன்று சேர்த்தல்.

மதிப்பீடு :- தொடர்புள்ள பொருட்களை இனங்கண்டு சோடி சேர்ப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சூழலில் உள்ள இது போன்ற பொருட் சோடிகளை கூறுவதற்கு வழிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – தொடர்பு

தேர்ச்சி :- போத்தல்களுக்கு பொருத்தமான மூடிகளைத் தெரிவு செய்வார்.

செயற்பாடு :- 3.6. போத்தல்களுக்குப் பொருத்தமான மூடிகளை எடுத்தல்.

வளம் :-

- வெவ்வேறு அளவுள்ள 5 போத்தல்கள்,
- அவற்றுக்கான மூடிகள்,
- மூடிகளை வைப்பதற்கான தட்டு

(குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பொருட்தொகுதி)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் போத்தல்களையும் மூடிகளையும் மேசையில் வைத்து பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.
2. பிள்ளைகளை ஒவ்வொருவராக போத்தல்களுக்கான மூடியை எடுத்து மூட விடல்.
3. பிள்ளைகளை 5 பேர் கொண்ட குழுக்களாக இருக்கச் செய்தல்.
4. ஒவ்வொரு குழுவுக்கும் 5 போத்தல்களையும் அவற்றின் மூடிகளைக் கொண்ட தட்டையும் வழங்குதல்.
5. போத்தல்கள் ஒவ்வொன்றையும் பொருத்தமாக மூடுமாறு குழுக்களுக்கு கூறுதல்.
6. எல்லா பிள்ளைகளும் ஈடுபட உதவுதல்.

மதிப்பீடு :- போத்தல்களுக்குரிய மூடிகளைத் தெரிவு செய்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சில போத்தல்களையும் பல்வேறு அளவுள்ள பல மூடிகளையும் கொடுத்து சரியான மூடியை தெரிவு செய்ய விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு - அமைவிடம்

தேர்ச்சி :- ஊர்வலம் ஒன்றில் முன், பின், நடுவில் செல்வதை இனங்கண்டு கூறுவார்.

செயற்பாடு :- 3.7. ஊர்வலம் செல்லல்

வளம் :- நாய், பூனை, குரங்கு முகமூடிகள் (அல்லது படங்கள்)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. மைதானத்திற்குச் செல்லல்.
2. மூவர் கொண்ட குழுக்களாக்குதல்.
3. ஒரு குழுவை அழைத்து முகமூடிகளை அணிவித்தல்.
4. ஊர்வலமாகச் செல்ல விடுதல்.
5. ஏனைய குழுக்களை முன், பின், நடுவில் செல்பவர்களை இனங்காண விடுதல்.
6. ஏனைய குழுக்களையும் ஈடுபடுத்தல்.

மதிப்பீடு :- முன், பின், நடுவில் உள்ளவற்றை இனங்கண்டு கூறுவதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :-

- விளையாட்டு வாகனங்களைப் பயன்படுத்தி செயற்படுத்தல்.
- முகமூடிகளின் எண்ணிக்கையை அதிகரித்துச் செயற்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – அமைவிடம்

தேர்ச்சி :- தன்னை மையப்படுத்தி தூர, கிட்ட உள்ள பொருட்களை இனங்கண்டு கூறுவார்.

செயற்பாடு :- 3.8 கிட்ட, தூரம் உள்ள பொருட்களை இனங்காணல்.

வளம் :- பிள்ளை நாளாந்தம் விளையாடும் விளையாட்டுப் பொருட்கள் பந்து, பூனை,சேவல், கிளி

அணுகுமுறை :- விளையாட்டு



செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை திறந்த வெளிக்கு அழைத்துச் செல்லல்.
2. 'ப' வடிவில் நிற்கச் செய்தல்.
3. விரும்பிய இரண்டு பிள்ளைகளை முன்னே அழைத்தல்.
4. இரு பிள்ளைகளையும் வெவ்வெறு இடத்தில் நிறுத்தி ஒரு பிள்ளைக்கு அருகில் பூனையையும், மற்றைய பிள்ளைக்கு அருகில் பந்தையும் வைத்தல்.

பிள்ளைகளிடம் பின்வருவன போன்ற வினாக்களை வினவுதல்.

- பந்து யாருக்கு கிட்ட இருக்கிறது?
- குமாருக்கு கிட்ட பூனையா, பந்தா உள்ளது?
- பூனை யாருக்கு கிட்ட உள்ளது?

5. கலந்துரையாடி கிட்ட, தூர என்பதை அறிமுகம் செய்தல்.
6. பிள்ளைகளைச் சோடிகளாக்கி இது போன்ற செயற்பாட்டினை மேற்கொள்ளல்.

மதிப்பீடு :- கிட்ட, தூரம் உள்ள பொருளை சரியாக அனுமானித்து கூறுகிறாரா என்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஏனைய பாடக் கற்றல் சந்தர்ப்பங்களிலும் இந்த எண்ணக்கருவை வலியுறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு - அமைவிடம்

தேர்ச்சி :- தூரம், கிட்ட, மேலே, கீழே என்ற எண்ணக்கருக்களை விளங்கிப் பயன்படுத்துவார்.

செயற்பாடு :- 3.9 அமைவிடம் கூறல்

வளம் :- பொம்மை, பூஞ்சாடி, பந்து, கார்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. முழுவகுப்பு நிலையில் பொருட்களை வைத்து மேலே, கீழே, தூர, கிட்ட அறிமுகம் செய்தல்.
2. 5 பேர் கொண்ட குழுக்களாக்குதல்
3. குழுக்களுக்கு வளங்களை பகிர்ந்தளித்தல்.
4. ஆசிரியர் மேலே என்று கூற குழுக்களில் ஒருவர் மேசையின் மேல் ஒரு பொருளை வைத்தல்.
5. இவ்வாறு ஏனைய அமைவிடங்களையும் கூற, குழுக்கள் பொருட்களை எடுத்து வைத்தல்.
6. ஆசிரியர் பிள்ளைகளை ஒவ்வொருவராகச் சுட்டி மேலே, கீழே, தூர, கிட்ட உள்ள பொருட்கள் எவையெனக் கேட்டல்.
7. இவ்வாறே ஆசிரியர் பிள்ளைகளின் பெயர் சுட்டி பொருட்களின் அமைவிடங்களை வினாவுதல்.

மதிப்பீடு :- தூரம், கிட்ட, மேலே, கீழே போன்ற அமைவிடங்களை விளங்கியிருப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மைதானத்திற்குச் சென்று மரம் ஒன்று சார்பாக மேற்படி சொற்களைப் பயன்படுத்திக் கலந்துரையாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – வரிசைப்படுத்தல்.

தேர்ச்சி :- 6 வட்டதட்டுக்களை பருமன் அடிப்படையில் வரிசைப்படுத்துவார்.

செயற்பாடு :- 3.10 தட்டுக்களை வரிசைப்படுத்தல்.

வளம் :- காட்போட்டில் வெட்டி எடுக்கப்பட்ட வெவ்வேறு அளவுள்ள 6 வட்டத் தட்டுக்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் வட்டத் தட்டுக்களை அளவுக்கேற்ப அடுக்கிக் காட்டுதல்.
2. பிள்ளைகளை குழுக்களாக்குதல்.
3. வட்டத்தட்டுக்களை குழுக்களுக்குப் பகிர்ந்துகொடுத்தல்.
4. வட்டத்தட்டுக்களை சிறியதிலிருந்து பெரியதுவரை அடுக்குதல்.
5. வட்டத்தட்டுக்களை பெரியதிலிருந்து சிறியதுவரை.அடுக்குதல்.
6. இச் செயற்பாட்டை மீண்டும் மீண்டும் செய்தல்.

மதிப்பீடு :- பருமனுக்கமைய வரிசைப்படுத்துகிறார்களா என்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வெவ்வேறு பருமனுடைய மூடிகளை வரிசைப்படுத்தவிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு -வரிசைப்படுத்தல்.

தேர்ச்சி :- உயரத்திற்கேற்ப குழாய்களை வரிசைப்படுத்துவார்.

செயற்பாடு :- 3.11 உயரத்துக்கு ஏற்ப வரிசைப்படுத்துதல்.

வளம் :- வெவ்வேறு உயரமுள்ள 5 பிளாத்திக்கு குழாய்த்துண்டுகள் - ஒரு குழுவுக்கு (குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப வளங்கள்)


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவுக்கும் வெவ்வேறு நீளமுள்ள ஐந்து குழாய்களை வழங்குதல்.
2. அவற்றை உயரத்தின் அடிப்படையில் ஒழுங்கில் நிலைக்குத்தாக வைக்குமாறு கூறுதல்.
   (கூடியதில் இருந்து குறைந்தது, குறைந்ததில் இருந்து கூடியது)
3. குழுக்களை அவதானித்து வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- உயர அடிப்படையில் வரிசைப்படுத்துவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வெவ்வேறு அளவுடைய சூழலில் உள்ள பொருட்களைப் பயன்படுத்தி வரிசைப்படுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – வரிசைப்படுத்தல்


தேர்ச்சி :- பருமன் அடிப்படையில் 5 பொருட்களை வரிசைப்படுத்துவார்.

செயற்பாடு :- 3.12 பருமனுக்கேற்ப வரிசைப்படுத்தல்.

வளம் :- படத்திலுள்ளது போன்று வித்தியாசமான பருமனில்

- கழிவுக் கடதாசியினால் நிரப்பப்பட்ட பைகள் - 05
- வெற்றுப் பேணிகள், - 05
- பெட்டிகள், - 05
- கட்டைகள். - 05

அனுகுமுறை :- விளையாட்டு



செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை 4 குழுக்களாக்குதல்.
2. குழுக்களுக்கு வளங்களை வழங்குதல். ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தொகுதிவளங்கள். (பேணிகள், பெட்டிகள், பைகள், கட்டைகள்)
3. பருமனுக்கு ஏற்ப வரிசைக் கிரமத்தில் அடுக்க விடல்.
4. அடுக்கிய முறையைக் கலந்துரையாடல்.
5. குழுக்களிடையே பொருட்களை மாற்றிச் செயற்பாட்டைத் தொடரல்.
6. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கல்.

மதிப்பீடு :- பருமன் அடிப்படையில் வரிசைப் படுத்துவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீடுகளில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட ஊக்குவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – வரிசைப்படுத்தல்

தேர்ச்சி :- 1 – 3 எண்ணிக்கைக்கு ஏற்ப வரிசைப்படுத்துவார்.

செயற்பாடு :- 3.13 எண்ணிக்கைக்கு ஏற்ப வரிசைப்படுத்தல்

- வளங்கள் 1 – 3 எண்ணிக்கையான உருக்கள் வரையப்பட்ட நூல் கட்டப்பட்ட உரு அட்டைகள். (1 கார், 2 கார், 3 கார். 1 வண்ணத்துப்பூச்சி 2 வண்ணத்துப்பூச்சி, 3 வண்ணத்துப்பூச்சி. 1 பலூன்,2 பலூன்,3 பலூன்.)

(பிள்ளைகளின் அளவிற்கு ஏற்ப தயாரித்தல். )

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை வெளியே அழைத்துச் சென்று வட்டத்தில் நிற்க விடல்.
2. உருஅட்டைகளைக் கழுத்தில் தொங்க விடல்.
3. ஆசிரியர் கை தட்டப் பிள்ளைகள் வட்டத்தில் நடத்தல்.
4. கை தட்டல் நிற்கும் போது ஒத்த உரு அட்டைகளைக் கொண்ட பிள்ளைகள் ஒன்று சேருதல்.
5. ஒவ்வொரு குழுவில் உள்ள பிள்ளைகளும் உருக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப (1,2,3) வரிசையில் நிற்றல்.

மதிப்பீடு :- ஒத்த உருக்களுக்குரியவர்கள் ஒன்று சேருவதையும், எண்ணிக்கைக்கு ஏற்ப தொடர் ஒழுங்கில் வரிசையில் நிற்பதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- உருக்களின் எண்ணிக்கையை 5 வரை அதிகரித்து இச் செயற்பாட்டைச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – ஒன்று ஒன்றிற்கான ஒத்திருக்கை


தேர்ச்சி :- ஒன்று ஒன்றிற்கான (1:1) ஒத்திருக்கை செய்யும் அனுபவத்தைப் பெறுவர்.

செயற்பாடு :- 3.14 போஞ்சி விதையை அடுக்குதல்.

வளம் :- 1 – 5 எண்ணிக்கைக்கு புள்ளி இடப்பட்ட தனித்தனி அட்டைகள், போஞ்சி விதைகள் - குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப (படத்தில் உள்ளவாறு)

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. புள்ளிகள் இடப்பட்ட அட்டையைக் காண்பித்து பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.
2. ஓர் அட்டையை ஒரு பிள்ளையிடம் கொடுத்து அட்டையில் உள்ள புள்ளிகளின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையில் போஞ்சி விதையை அடுக்குவதற்கு வழிப்படுத்தல்.
3. பிள்ளைகளைக் குழுக்களாக்கி வளங்களைப் பகிர்ந்தளித்தல்.
4. பட அட்டையில் உள்ள புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வித்துக்களை அடுக்க விடல்.
5. இடர்பாடுடைய பிள்ளைகளுக்கு உதவி புரிதல்
6. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- ஒத்த எண்ணிக்கையில் விதைகளை அடுக்குகின்றார்களா என்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- புள்ளிகளுக்குப் பதிலாக உருக்கள் உள்ள அட்டைகளைப் பயன்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – ஒன்று ஒன்றுக்கான ஒத்திருக்கை

தேர்ச்சி :- விதைகளின் எண்ணிக்கைக்கேற்ப சமனான ஒலி எழுப்புவார்.

செயற்பாடு :- 3.15 எண்ணிக்கைக்கு ஏற்ப ஒலி எழுப்புதல்

வளம் :- புளியம் விதை, குரைக்கும் நாய்க்குட்டி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. மாணவர்களுக்கு புளியம் விதை பகிர்ந்தளித்தல்.
2. மந்திர நாய்க் குட்டிக்கு எவ்வாறு எண்ணத் தெரியும் என்பதை பிள்ளைக்கு கூறுதல்.
3. நீங்கள் எடுத்து வைத்த எண்ணிக்கைக்கு ஏற்ப நாய் குரைக்கும் என்பதை கூறுதல்.

   உ-ம் : 2 புளியம் விதை - வள் வள்
4. எல்லா பிள்ளைகளையும் அரை வட்டத்தில் இருத்தல்
5. ஒவ்வொரு பிள்ளையும் மூன்று புளியம் விதைகளை எடுத்து அவர்களுக்கு முன்னதாக வைக்க விடுதல்.
6. பின்பு ஆசிரியர், நாய் குரைக்கும் போது நீங்கள் ஒவ்வொரு விதையை எடுத்து மறு பக்கத்தில் வைக்க வேண்டும் என்பதைக் கூறுதல்.
7. விளையாட்டை ஆரம்பித்து இடர்படும் பிள்ளைக்கு உதவி புரிதல்.
8. இதே போன்று 1 – 5 வரை விளையாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டல்.

மதிப்பீடு :- விதைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒலி எழுப்பப்படுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகள் நாய்போல் குரைக்க மற்றப்பிள்ளைகள் அத்தொகையை எடுத்து வைப்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – 1:1 ஒத்திருக்கை

தேர்ச்சி :- அட்டையில் உள்ள (1 - 5) புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிராணிகளின் பெயர் கூறுவார்.

செயற்பாடு :- 3.16 பிராணிகளின் பெயர் கூறுதல்.

வளம் :- 1 - 5 எண்ணிக்கைக்கு புள்ளி இடப்பட்ட தனித் தனி அட்டைகள்

அனுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை மூவர் கொண்ட குழுக்களாக்குதல்.
2. குழுவில் ஒருவர் புள்ளி அட்டை ஒன்றை எடுத்து இன்னொரு பிள்ளைக்குக் காட்டி அட்டையில் உள்ள புள்ளிகளின் எண்ணிக்கைக்குச் சமனான பிராணிகளின் பெயர்களைக் கூறுமாறு கேட்டல்.
3. 3வது பிள்ளை விடைகள் சரியானவையா என்பதை கூறுதல்.
4. 1 – 5 வரையான புள்ளிகள் யாவும் பயன்படுத்தும் வரை எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் அளித்து செயற்பாட்டைத் தொடருதல்.

மதிப்பீடு :- பிராணிகளின் பெயர் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பழங்கள், வர்ணங்கள், தாவரங்களின் பெயர்கள், கூறுவதற்கு இச் செயற்பாட்டைச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு- ஒன்று ஒன்றுக்கான ஒத்திருக்கை

தேர்ச்சி :- 1 - 1 இற்கான ஒத்திருக்கை செய்வார்.


செயற்பாடு :- 3.17 ஒத்திருக்கை விளையாட்டு

வளம் :- புள்ளி அட்டைகள் (1 – 5 வரை ), வெண்கட்டி

அனுகுமுறை :- விளையாட்டு.

செயலொழுங்கு :-

- ஆசிரியர் ஒரு பெரிய வட்டம் அமைத்துக் கொள்ளுதல்.
- அதனுள் முக்கோணி, வட்டம், சதுரம், செவ்வகம் போன்ற வடிவம் கொண்ட 5 வீடுகளை வரைந்து கொள்ளுதல்.
- வீடுகளினுள் புள்ளிகளை வரைந்து, அவ் அட்டைகளை படத்திலுள்ளது போல் வைத்துவிடுதல்.
- வடிவங்கள் வீடு என்பதையும், புள்ளிகள் வீட்டில் உள்ள அங்கத்தவர்கள் என்பதையும் பிள்ளைகளுக்குக் கூறுதல்.
- விளையாட்டு ஒழுங்கினைப் பிள்ளைகளுக்குக் கூறுதல்



1. பிள்ளைகளை 15 பேர் கொண்ட குழுக்களாக்கி வட்டத்தைச் சுற்றி நிற்க விடுதல்.
2. ஆசிரியரின் கை தட்டுதலுக்கு பிள்ளைகள் வட்டத்தைச் சுற்றி ஓடுதல்.
3. கை தட்டும் ஒலி நிற்கும் போது பிள்ளைகள் வீடுகளிலுள்ள புள்ளிகளின் எண்ணிக்கைக்குச் சமனாக ஒன்று சேர்ந்து வீடுகளினுள் செல்லுதல்.
4. வீடுகளில் பிள்ளைகள் நிற்கும் போது சரியாக நிற்கின்றார்களா என பிள்ளைகளை அவதானிக்கச் செய்தல், கலந்துரையாடல்.
5. மீண்டும் மீண்டும் விளையாட்டைத் தொடருதல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒன்று சேர்கிறார்களா என்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- புள்ளிகள் இல்லாது தனியே எண் அட்டைகளை பயன்படுத்தி விளையாட்டில் ஈடுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – ஒன்று ஒன்றுக்கான ஒத்திருக்கை

தேர்ச்சி :- ஐந்துக்குக் குறைவான ஐஸ்கிறீம் கிண்ணம் , கரண்டி கொண்ட இரு தொகுதிகளை 1-1 என்ற வகையில் ஒப்பீடு செய்து கூடுதலாக உள்ள தொகுதியை இனங் காண்பார்.

செயற்பாடு :- 3.18. 1-1 ஒத்திருக்கை செய்தல்.

வளம் :- ஒரு குழுவுக்கு – 5 ஐஸ்கிறீம் கிண்ணம், 5 கரண்டி (குழுக்கேற்ப தயார்ப்படுத்தல்)

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

- ஆசிரியர் மேசையில் 5 ஐஸ்கிறீம் கிண்ணம் 4 கரண்டி வைத்துக் கலந்துரையாடுதல்.
- ஐஸ்கிறீம் கிண்ணமா, கரண்டியா கூடுதலாக உள்ளது என வினாவுதல்.
- கரண்டிகளைக் கிண்ணத்தினுள் வைக்க விட்டு கிண்ணங்கள் அதிகம் என்பதை விளக்குதல்.

1. பிள்ளைகளைக் குழுக்களாக பிரித்து, அமரச் செய்தல்.
2. ஒவ்வொரு குழுவுக்கும் முன்னே 3 ஐஸ்கிறீம் கிண்ணங்களையும் 5 கரண்டிகளையும் இரு தொகுதிகளாக வைத்தல்.
3. கிண்ணங்களினுள் கரண்டிகளை ஒவ்வொன்றாக வைக்க விடுதல்
4. கூடுதலாக உள்ளது பற்றிக் கலந்துரையாடிக் கரண்டி அதிகமானது என்பதை வெளிக்கொணரல்.
5. தொகுதியில் உள்ள பொருட்களின் எண்ணிக்கையை மாற்றிக் கொடுத்து எது அதிகமானது என்பதைக் கண்டறியச் செய்தல்.
6. எல்லா பிள்ளைகளையும் ஈடுபடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | 1:1 ஒத்திருக்கை செய்வதையும் எதில் அதிகமாக உள்ளன என்பதைக் கூறுவதையும் அவதானித்தல் |
| கற்றல் விரிவாக்கம் | :- | இரு தொகுதிகளில் குறைவாக உள்ள தொகுதியை இனங்காண விடல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – ஒன்று ஒன்றுக்கான ஒத்திருக்கை

தேர்ச்சி :- ஐந்துக்குக் குறைவான போத்தல்கள், மூடிகள் கொண்ட இரு தொகுதிகளை 1-1 என்ற வகையில் ஒப்பீடு செய்து சமனான அளவு உண்டு என்பதைக் கண்டு பிடிப்பார்.


செயற்பாடு :- 3.19. 1-1 ஒத்திருக்கை செய்தல்.

வளம் :- ஒரு குழுவுக்கு – 5 போத்தல்கள், 5 மூடிகள்

- வகுப்பறையில் உள்ள மாணவர் குழுக்கேற்ப போத்தல்களும் மூடிகளும்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளைக் குழுக்களாக பிரித்து, அமரச் செய்தல்.
2. ஒவ்வொரு குழுவுக்கும் முன்னே 4 போத்தல்களையும் 4 மூடிகளையும் இரு தொகுதிகளாக வைத்தல்.
3. எல்லாப் போத்தல்களையும் மூடப் போதியளவு மூடிகள் உண்டா? என வினாவுதல்.
4. குழு நிலையில் போத்தல்களை மூடிப்பார்க்க விடல்
5. போத்தல்களும் மூடிகளும் சம தொகையானவை என்பதை வெளிக்கொணர்தல்
6. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பின் திரும்பவும் கழற்றி குவியலாக்குதல்.
7. எண்ணிக்கையை அதிகரித்துச் செயற்பாட்டில் ஈடுபடுதல்
8. எல்லா பிள்ளைகளையும் ஈடுபடுத்தல்.

மதிப்பீடு :- 1:1 ஒத்திருக்கை செய்யும் முறையையும் இருதொகுதியிலும் சமதொகை உண்டு என்று கூறுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தொடர்புடைய வேறு சோடிப் பொருட்களை வைத்துச் செயற்பட விடல் (ஐஸ்கிறீம் கிண்ணம், கரண்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – ஒன்று ஒன்றுக்கான ஒத்திருக்கை

தேர்ச்சி :- ஒன்று ஒன்றுக்கான ஒத்திருக்கை செய்வதன் மூலம் சோடியாக உள்ள பகுதிகளை இனங்கண்டு பொருத்துவார்.

செயற்பாடு :- 3.20 உரு அட்டைகளைச் பொருத்தல்.

வளம் :- 1-5 உருக்கள் உள்ள இரு துண்டங்களாக்கப்பட்ட அட்டைகளைக் கொண்ட காகித உறை. (ஒரு குழுவிற்கு) (படத்தில் காட்டியவாறு தெளிவான விளிம்பினைக் கொண்டதாக வெட்டப்பட்டிருத்தல்),


அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. குழுக்களுக்கு காகித உறையை வழங்குதல்.
2. உரு அட்டைகளை எடுத்துப் பிள்ளைகளைப் பொருத்த விடல்
3. ஆசிரியர் வழிகாட்டல்.
4. எல்லாப் பிள்ளைகளையும் ஈடுபடுத்தல்.

மதிப்பீடு :- உரு அட்டைகளை சரியாகப் பொருத்துவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- துண்டுகளின் எண்ணிக்கையை 3, 4 ஆக அதிகரித்து வெட்டிப் பொருத்தவிடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – எண் மாறின்மை

தேர்ச்சி :- 5 விதைகளை வெவ்வேறு கோல ஒழுங்கில் வைக்கப்பட்டபோதும் தொகை மாறாது எனக் கூறுவார்.

செயற்பாடு :- 3.21. விதை அடுக்குதல்

வளம் :- ஒரே அளவான பாக்கு விதைகள் - 10

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-


1. பிள்ளைகளை வட்டத்தில் இருக்கச் செய்தல்.
2. ஆசிரியரும் பிள்ளைகளுடன் வட்டத்தில் இருத்தல்.
3. 5 பாக்குகளை ஒரு வரிசையிலும் மற்றைய 5 பாக்குகளை கூடிய இடைவெளி கொண்ட இன்னொரு வரிசையிலும் அடுக்குதல்.
4. இரு வரிசையிலும் ஒரேயளவு பாக்கு உள்ளதா? என வினவுதல்.
5. ஒரு வரிசையிலுள்ள பாக்குகள் ஒவ்வொன்றின் முன்னும் மற்றைய குவியற் பாக்குகளை வைக்கச் செய்தல்.
6. இரு வரிசையிலும் ஒரேயளவு பாக்கு என வெளிக்கொணரல்.
7. மீளவும் முன்னைய ஒழுங்கில் வைத்தல்.
8. கலந்துரையாடல்.
9. வரிசை ஒழுங்கை மாற்றி பிள்ளைகளை மீள ஈடுபடுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 1



படி 2



மதிப்பீடு :- பிள்ளைகளின் துலங்கல்களையும் ஈடுபாட்டையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பொருட்களை மாற்றியும் எண்ணிக்கையைக் கூட்டியும் செயற்பாட்டில் ஈடுபடுத்தல் 1ம் நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- முன் எண் எண்ணக்கரு – எண் மாறின்மை

தேர்ச்சி :- குறித்த ஒரு தொகுதிப் பொருட்கள் தொகையளவில் எப்பொழுதும் சமனானவை என்பதை இனங் காணும் அனுபவம் பெறுவார்.

செயற்பாடு :- 3..22 ஒத்திருக்கை செய்தல்.

வளம் :- சோடா மூடிகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் 5 சோடா மூடிகளை வழங்குதல்.
3. சோடா மூடிகளை வெவ்வேறு ஒழுங்கில் அடுக்க விடுதல்.
4. அவதானித்தல், வழிப்படுத்தல்.
5. வெவ்வேறு ஒழுங்கில் அடுக்கிய போதும் மூடிகளின் எண்ணிக்கையில் மாற்றமில்லை என உணரச் செய்தல்.

மதிப்பீடு :- 5 மூடிகளைக் கொண்டு வெவ்வேறு ஒழுங்கில் அடுக்குவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- எண்ணிக்கையை அதிகரித்து வெவ்வேறு கோலங்களில் அமைக்க விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – கனவளவு மாறின்மை

தேர்ச்சி :- நீரைக் கொண்டிருக்கும் பாத்திரத்தின் வடிவம் மாறுகின்றபோதும் நீரின் அளவு மாறாது என்ற அனுபவத்தைப் பெறுவார்.

செயற்பாடு :- 3.23. ஒப்பிட்டுப் பார்த்தல்

வளம் :-

1. அரை லீற்றர், ஒரு லீற்றர் வெற்றுக் குடிநீர் போத்தலில் வெட்டி எடுக்கப்பட்ட, பருமனில் வேறுபட்ட (பெரிய, அகன்ற) பாத்திரங்கள்,
2. நீர், வாளி
3. இறப்பர் வளையம்



அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. பாத்திரங்களைக் குழுக்களுக்கு வழங்கல்.
3. ஒடுங்கிய பாத்திரத்தில் நீரை எடுத்துவைத்தல்.
4. நீர் மட்டத்தை அவதானித்து இறப்பர் வளையமிடல்.
5. அதனை அகன்ற பாத்திரத்தில் ஊற்றல்.
6. நீரின் அளவு பற்றிக் கலந்துரையாடல்.
7. மீண்டும் ஒடுங்கிய பாத்திரத்தில் ஊற்றி அவதானிக்க விடல்.
8. மீண்டும் மீண்டும் எல்லோரையும் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் ஈடுபாட்டை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஒரு பாத்திரத்தில் குறித்தளவு நீரை எடுத்து இரண்டு வேறுபட்ட பருமனுடைய பாத்திரத்தில் தனித் தனியே ஊற்றி அவதானிக்க விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – வடிவம்

தேர்ச்சி :- ஒத்த திண்ம வடிவங்களை இனங்காண்பார்.

செயற்பாடு :- 3.24. ஒத்த திண்ம வடிவங்களை இனங்காணல்.

வளம்

- பல நிறங்களில் (பந்துகள், சதுரமுகிகள், உருளைகள்)
- பைகள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் திண்ம வடிவங்கள் வைக்கப்பட்ட பைகளை வழங்குதல். (வளத்தில் குறிப்பிடப்பட்டவை போன்று)
2. குழுவில் உள்ளவர்கள் பொருட்களை கைகளில் எடுத்தல்.
3. ஆசிரியர் பிள்ளைகளின் முன்னே ஒரு வடிவத்தை நிலத்தில் வைத்தல்.
4. ஆசிரியர் சுட்டும் குழுவில் உள்ள பிள்ளை தனது கையில் அத்தகைய உருவம் உள்ளதா எனத் தேடுதல்.
5. பிள்ளையின் கைகளில் குறித்த வடிவம் இருந்தால் அதனை ஆசிரியர் வைத்த வடிவத்திற்குப் பக்கத்தில் வைத்தல்.
6. அவ்வாறே ஏனைய குழுக்களும் தமது பைகளில் குறித்த வடிவங்கள் இருப்பின் அவற்றை எடுத்து ஆசிரியர் வைத்த வடிவத்திற்கு பக்கத்தில் வைத்தல்.
7. ஏனையோர் சரிபார்த்தல்
8. பைகளில் உள்ள எல்லா பொருட்களும் எடுக்கப்படும் வரை விளையாட்டினைத் தொடரல்.

மதிப்பீடு :- ஒத்த வடிவங்களை இனங் காணுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இது போன்று வேறு வடிவங்களை பயன்படுத்தி விளையாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – வடிவம்.

தேர்ச்சி :- ஒத்த திண்ம வடிவங்களை இனங்கண்டு சோடி சேர்ப்பார்.

செயற்பாடு :- 3.25 ஒத்த வடிவங்களைக் கண்டு பிடித்தல்.

வளம் :- நிறப் பந்துகள் 2, சதுரங்கள் 2, சதுர முகிகள் 2, உருளைகள் 2, பிரமிட்டுக்கள் 2. ஆகியவை அடங்கிய பை (ஒரு குழுவுக்கு)
குழு எண்ணிக்கைக்கு ஏற்ப பைகளைத் தயார்படுத்தல்


அணுகுமுறை :- விளையாட்டு.

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைச் சோடியாக்கி ஒவ்வொரு சோடிக்கும் பைகளைக் கொடுத்தல்.
2. ஒரு சோடியை அழைத்தல்.
3. சோடியில் ஒருவர் வடிவங்களை வெவ்வேறு இடங்களில் ஒளித்து வைத்தல்.
4. மற்றைய பிள்ளை தன்னிடம் உள்ள வடிவத்துக்கு ஒத்த வடிவத்தை தேடிக் கண்டுபிடித்தல்.
5. இது போன்று எல்லா சோடிகளும் விளையாடுதல்.

மதிப்பீடு :- ஒத்த வடிவங்களை இனங் காண்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வகுப்பறையைச் சுற்றி வைக்கப்பட்ட திண்ம வடிவங்களை பிள்ளைகள் தேடி எடுக்க விடுதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப் பொருள் :- கணித எண்ணக்கரு – வடிவம்

தேர்ச்சி :- முக்கோணி, வட்டம், சதுரம், செவ்வகம் ஆகிய தள கணித வடிவங்களை இனங் காண்பார்.


செயற்பாடு :- 3.26 “வடிவங்களை இனங் காணல்.

வளம் :- காட் போட்டில் வெட்டப்பட்ட தள வடிவங்கள்.



அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் காட்போட்டில் வெட்டப்பட்ட தள வடிவங்களை காட்சிப்படுத்தி அவற்றின் பெயர்களைக் கூறிக் கலந்துரையாடுதல்.
2. தள வடிவங்களை தரையில் பெரிய வட்ட வடிவில் அடுக்குதல்.
3. ஆசிரியர் விளையாட்டை விளக்குதல்.

> ஆசிரியர் கையைத் தட்டுதல். பிள்ளைகள் வட்டமாக நடத்தல். கைதட்டலை நிறுத்தும் போது பிள்ளைகள் நிற்கும் இடத்திற்கு அருகில் உள்ள வடிவத்தினை எடுத்து உயர்த்திக் காட்டல்.

4. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கல்.

மதிப்பீடு :- ஒத்த வடிவங்களை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- கற்றல் நிலையத்தில் அவ் வடிவங்களைக் கீறுவதற்கும் நிறந் தீட்டுவதற்கும் ஊக்குவித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு - வடிவம்

தேர்ச்சி :- ஒத்த வடிவங்களை இனங்கண்டு உரிய இடங்களில் ஒட்டுவார்.

செயற்பாடு - 3.27. ஒத்தவடிவங்களை ஒன்றாக்குவோம்.

வளம :-

- பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் மூன்று வீதம் கிடைக்கக்கூடியவாறு தாளில் வெட்டி எடுக்கப்பட்ட முக்கோணிகள், வட்டங்கள், செவ்வகங்கள், சதுரங்கள்
- பெரிய கடதாசித் தாள், பசை.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-


1. ஆசிரியர் வகுப்பறையின் முன்னே முக்கோணி, செவ்வகம்,சதுரம், வட்டம், வரையப்பட்ட பெரிய கடதாசித்தாள்களை தொங்கவிடல்.
2. ஒரு பிள்ளையை அழைத்து ஒரு வடிவத்தை தெரிவு செய்து உரிய இடத்தில் ஒட்டவிடல்.
3. இவ்வாறு பல பிள்ளைகளுக்கும் ஒட்ட வழிகாட்டல்.
4. பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் முக்கோணி, செவ்வகம்,சதுரம், வட்டம், வரையப்பட்ட தாளினையும், முக்கோணிகள்(3), செவ்வகங்கள்(3), வட்டங்கள் (3) சதுரங்கள் மூன்றையும் கொடுத்தல்.
5. ஏதாவது ஒரு வடிவத்தை ஒட்டுமாறு கூறுதல்.
6. சரிபார்த்து உதவி தேவைப்படுவோர்களுக்கு வழிகாட்டுதல்.
7. எல்லா வடிவங்களையும் ஒட்டுதல்.
8. செய்தவற்றை காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்.

மதிப்பீடு :- ஒத்த வடிவங்களை இனங்காண்பதையும் உரிய இடத்தில் ஒட்டுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகள் செய்தவற்றை வீட்டிற்கு எடுத்து சென்று வீட்டில் பெரியவரின் உதவியோடு மேலும் ஒவ்வோர் வடிவத்தை வெட்டி ஒட்ட விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – வடிவம்


தேர்ச்சி :- ஒத்த வடிவங்களை இனங் காணுவார்

செயற்பாடு :- 3.28. ஒத்தவடிவங்களை இனங்காணல்.

வளம் :- அட்டையில் வெட்டி எடுக்கப்பட்ட தளவடிவங்கள்
( சதுரம்-2, வட்டம், 2 முக்கோணி -2 செவ்வகம்-2 )
(பிள்ளைகள் தொகைக்கேற்ப)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளைச் சோடி ஆக்கி ஒவ்வொரு சோடிக்கும் சதுரம், வட்டம், செவ்வகம், முக்கோணி ஒவ்வொன்றிலும் 2 வீதம் கொடுத்தல்.
2. ஒரு சோடியை அழைத்தல்.
3. சோடியில் ஒருவர் வடிவங்களை வெவ்வேறு இடங்களில் ஒளித்து வைத்தல்.
4. மற்றைய பிள்ளை தன்னிடம் உள்ள வடிவத்திற்கு ஒத்த வடிவத்தைத் தேடிக் கண்டுபிடித்து சோடியாக்குதல்.
5. இது போன்று எல்லா சோடிகளும் விளையாடுதல்.

மதிப்பீடு :- ஒத்த வடிவத்தை ஒன்று சேர்ப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வெவ்வேறு உருக்களைக் கொண்டு
விரிவுபடுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – வடிவம்

தேர்ச்சி :- ஒத்த கேத்திர கணித தள வடிவங்களை இனம் கண்டு தொடர்புபடுத்துவார்.


செயற்பாடு :- 3.29 தள வடிவங்களைத் தொடர்புபடுத்தல்.

வளம் :- அட்டைகளில் (4cm x5cm) இரண்டு விதமான தள வடிவங்கள் வரையப்பட்ட சிறிய அட்டைகள்

(படத்தில் காட்டியவாறு ஒரு குழுவுக்குப் பத்து வீதம்)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை ஐந்து பேர் கொண்ட குழுக்களாக்கல்.
2. குழுவில் உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் பத்து அட்டைகளில் இரண்டு வீதம் வழங்குதல்.
3. பிள்ளை ஒருவர் ஒரு அட்டையை மேசையில் போட அவ் வடிவை ஒத்த வடிவம் உள்ள அட்டையைக் கொண்டிருக்கும் பிள்ளை, தனது அட்டையை அதற்குப் பக்கத்தில் வைத்தல். (படத்தில் உள்ளது போல்)
4. இவ்வாறு எல்லா அட்டைகளும் முடியும் வரை விளையாட்டை தொடரல்.
5. மீண்டும் மீண்டும் இச் செயற்பாட்டில் ஈடுபடல்.

மதிப்பீடு :- ஒத்த தள வடிவங்களை இனம் கண்டு தொடர்புபடுத்துவார்.

கற்றல் விரிவாக்கம் :- சூழலில் காணப்படும் வடிவங்களின் படங்களை சேகரித்து ஒட்ட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – அளத்தல்


தேர்ச்சி :- பொருட்களை ஒப்பிட்டு நீளம் கூடியது, நீளம் குறைந்தது என இனங்காண்பார்.

செயற்பாடு :- 3.30. நீளங்களை ஒப்பிடுதல்.

வளம் :- வெவ்வேறு நீளங்கள் கொண்ட பென்சில், தடி, பானக்குழாய், பேணி

அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு



1. வெவ்வேறு அளவுகளில் உள்ள பென்சில்கள் இரண்டை பிள்ளைகளுக்குக் காண்பித்து அவர்களுடன் நீளம் தொடர்பாகக் கலந்துரையாடல்.
2. பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் வளங்களை பகிர்ந்தளித்தல்.
3. பிள்ளைகள் ஒரே வகைப் பொருட்கள் இரண்டை எடுத்து அருகருகே வைத்து அவற்றின் நீளங்களை ஒப்பிட்டுப் பார்க்க வழிப்படுத்தல்.
4. நீளம் குறைந்த, நீளம் கூடிய பொருட்களை கூறச் செய்தல்.
5. வெவ்வேறு வகையான பொருட்களை வழங்கி இச் செயற்பாட்டை மீண்டும் செய்தல்.

மதிப்பீடு :- இரு பொருட்களை ஒப்பிட்டு நீளம் கூடிய, நீளம் குறைந்தவற்றைக் காட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வகுப்பறைக்கு வெளியே உள்ள பொருட்களைப் பயன்படுத்தி இனங்காணவிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு அளத்தல்

தேர்ச்சி :- இரு நீளமான பொருட்களை ஒப்பிட்டு நீளம் கூட, நீளம் குறைய என இனங்காண்பார்.

செயற்பாடு :- 3.31. நீளங்களை ஒப்பிடுதல்

உபகரணம் :- நான்கு பாம்புகளின் மாதிரி அல்லது பொருள், Clay (களிமண்)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் தான் கொண்டு வந்த பாம்பு மாதிரிகளைக் காட்டி கலந்துரையாடல்.
2. அவற்றை அருகருகே வைத்து அவற்றின்நீளங்களை ஒப்பிட்டுக் கலந்துரையாடல்.
3. நாலு பேர் கொண்ட குழுக்களாகப் பிள்ளைகளை இருத்துதல்.
4. ஒவ்வொரு குழுவுக்கும் களிமண் பசை வழங்குதல்.
5. குழுவில் ஒவ்வொருவரும் பாம்பு மாதிரிகளின் உருக்களைச் செய்தல்.
6. செய்த பாம்பு மாதிரிகளை வரிசையில் வைத்தல்.
7. நீளமானது, கட்டையானது, மிகவும் கூடிய நீளமானது, மிகவும் குறைந்த நீளமானது என ஒப்பிட்டுக் கலந்துரையாடல்.

மதிப்பீடு :- நீளங்களை ஒப்பிட்டு நீளமானது, கட்டையானது, மிகவும் கூடிய நீளமானது, மிகவும் குறைந்த நீளமானது எனக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீடுகளில் கிடைக்கக்கூடிய நாடாக்கள் தடிகளை ஒப்பிட்டு நீளம் கூடியது, நீளம் குறைந்தவற்றை இனங்காண விடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – அளத்தல்

தேர்ச்சி :- இரு பொருட்களின் உயரங்களை ஒப்பீடு செய்து உயரம் கூடியது, உயரம் குறைந்தது என இனங்காண்பார்.

செயற்பாடு :- 3.32 'உயரங்களை ஒப்பிடுதல்'

வளம் :- முன்பள்ளியிலுள்ளவை (தளபாடங்கள், மேசை, கதிரை, போத்தல், பெட்டி, தடிகள்)

அணுகுமுறை :- செயற்பாடு



செயலொழுங்கு :-

1. ஆசிரியர் இரண்டு பிள்ளைகளை அழைத்து அருகருகில் நிற்க வைத்தல்.
2. அவர்களின் உயரத்தை ஒப்பீடு செய்து உயரம் கூடிய வரையும், உயரம் குறைந்தவரையும் இனங்காண வழிகாட்டல்.
3. போத்தல் ஒன்றை மேசையில் வைத்து அதனருகே உயரம் குறைந்த போத்தல் ஒன்றை எடுத்து வைக்கச் செய்தல்.
4. இவ்வாறே வெற்றுப் பேணி ஒன்றை மேசையில் வைத்து உயரம் கூடிய (உயரம் கூடிய, உயரம் குறைந்த ) பேணி ஒன்றை எடுத்து வைக்கச் செய்தல்.
5. உயரம் கூடிய, உயரம் குறைந்த பொருட்களை இனங்காண வழிப்படுத்தல்.
6. பிள்ளைகளை ஐந்து பேர் கொண்ட குழுக்களாக்குதல்
7. குழுக்களுக்கு வகுப்பறையில் உள்ள பொருட் சோடிகளை வழங்கி உயரம் கூடிய, குறைந்ததைக் காட்டுமாறு கூறுதல்.

மதிப்பீடு :- இரு பொருட்களை ஒப்பிட்டு உயரம் கூடியது, உயரம் குறைந்தது என இனங்காணுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சூழலில் உள்ள மரம், செடி, மிருகங்கள், கட்டிடங்களில் உயரம் கட்டை என இனங்காண விடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – அளத்தல்

தேர்ச்சி :- பொருளின் நீளத்தை அனுமானித்து அதற்குச் சமமான நூற்றுண்டைத் தெரிவு செய்வார்.

செயற்பாடு :- 3.33. நீளத்தை அனுமானித்தல்

வளம் :- முன்பள்ளிகளில் உள்ள தளபாடங்களின் நீளத்திற்கு ஏற்ப வெட்டப்பட்ட நூல் துண்டுகள் - 4

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் நூற்றுண்டொன்றைக் காட்டுதல்.
2. அந்த நூலின் நீளத்திற்குச் சமமான நீளமுள்ள வகுப்பறையில் உள்ள பொருளை அனுமானித்து கூறச்செய்தல்.
3. அந்த நூலை எடுத்து அப்பொருளை அளந்து காட்டுதல்.
4. ஆசிரியர் பல்வேறு நீளமுள்ள நூல் துண்டுகளை மேசையில் வைத்தல்.
5. பிள்ளைகளைச் சோடிகளாக்குதல்.
6. பிள்ளைகள் ஆசிரியர் கூறும் வகுப்பறையில் உள்ள பொருளின் நீளத்திற்குச் சமனான நூல் துண்டை பொருளின் முன்னே வைத்துக் காட்டுதல். (படத்தில் உள்ளவாறு)
7. இவ்வாறு ஏனைய பொருட்களின் நீளத்திற்கும் சமமான நூற்றுண்டுகளை எடுத்து முன்னே வைக்க விடல்.
8. நூல் துண்டுகளை ஒன்று சேர்த்து மீண்டும் செயற்படுத்தல்.

மதிப்பீடு :- பொருளின் நீளத்தை அனுமானித்து சமனான நூற்றுண்டை எடுத்து வைப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- குறுகிய நூலிலிருந்து நீளமான நூல்வரை ஒழுங்கு செய்ய விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – அளத்தல்


தேர்ச்சி :- கால் பாதங்களால் அளந்து அனுபவம் பெறுவார்.

செயற்பாடு :- 3.34 கால்களால் அளத்தல்.

வளம் :- வெண்கட்டி, நாடா.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. வகுப்பறையில் ஒரு மீற்றர் வரையான நீளமுடைய கோடுகளை குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வெவ்வேறு இடங்களில் வரைந்து விடல்.
3. கோட்டின் மீது பாதங்களை வைத்து அளக்கும் முறையை ஆசிரியர் செய்து காட்டல்.
4. ஆசிரியர் பாத அடிகளை எண்ணியவாறு அளந்து காட்டல்.
5. பிள்ளைகளையும் கோட்டின் மீது நடந்தவாறு எண்ணி அளக்க விடல்.
6. அனுபவங்களைப் பரிமாறல்.
7. ஆசிரியரின் பாதத்தால் அளந்தது குறைந்த தடவையும், தமது பாதத்தால் அளந்தது கூடிய தடவையும் வருகின்றது என்பதைப் பிள்ளைகள் உணரச் செய்தல்.

மதிப்பீடு :- அளக்கும் முறையை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சிறிய தடி, அல்லது மரக்கட்டை ஒன்றைக் கொடுத்து நீளங்களை அளந்து பார்க்கச் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – அளத்தல்

தேர்ச்சி :- கையின் புறவுருவை ஒப்பிட்டுப் பார்ப்பார்.

செயற்பாடு :- 3.35. கைகளை ஒப்பிடுதல்.

வளம் :- பேப்பர், பென்சில், சிறிய கத்தரிக்கோல்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் பிள்ளைகள் பார்க்கக்கூடியதாக தனது கையை வெள்ளைத் தாளின் மீது வைத்துப் புற உருவை வரைந்து வெட்டிக் காட்டுதல்.
2. பிள்ளைகளை இருவர் கொண்ட குழுக்களாக்குதல்.
3. பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் பேப்பர், பென்சில், சிறிய கத்தரிக்கோல் கொடுத்தல்.
4. பிள்ளைகளைக் கையைப் பேப்பரில் வைத்துப் புற உருவை வரைய விடல்,தேவையானவர்களுக்கு உதவுதல்.
5. ஆசிரியர் உதவியுடன் வரைந்த புற உருவை வெட்டி எடுத்தல்.
6. பிள்ளைகளின் சுருக்கப் பெயரை அவற்றில் குறிப்பிடுதல்.
7. குழுவிலுள்ள இருவரும் அவற்றை ஒன்றன் மேல் ஒன்று அடுக்கி, ஒப்பிட்டுப் பார்த்து அளவு வேறுபாட்டை அவதானித்தல்.

மதிப்பீடு :- கையின் புற உருவின் அளவை ஒப்பிட்டுக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இவற்றைப் பயன்படுத்தி

1. 'உதவும் கரங்கள்' என்ற வேலை அட்டவணைகளைத் தயாரித்தல்.
2. முன்பள்ளியில் நாளாந்த வேலைகளின் பட்டியலைத் தொங்க விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – அளத்தல்

தேர்ச்சி :- வெற்றுத் தீப்பெட்டிகளைப் பயன்படுத்தி அடைக்கப்பட்ட வெளி ஒன்றின் மேற்பரப்பை நிரப்புவார்.


செயற்பாடு :- 3.36. வெளிகளை நிரப்புதல்

வளம் :-

1. வெற்றுத் தீப்பெட்டிகள்
2. தாளில் வரையப்பட்ட(கொப்பித் தாள்) (13 x 9cm), (10 x 9 cm) செவ்வகங்கள் - 2

அனுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-




1. பிள்ளைகளைக் குழுக்களாக்கி வளங்களை வழங்குதல்.
2. செவ்வகங்களில் தீப்பெட்டிகளை அடுக்க விடுதல்
3. கலந்துரையாடல் மூலம் பிள்ளைகளின் சிந்தனையைத் தூண்டல்.

எந்த வடிவத்தை மூடுவது இலகு?

எதனை மூட அதிக எண்ணிக்கையான தீப்பெட்டிகள் தேவை?

மதிப்பீடு :- ஒழுங்காக அடுக்கி நிரப்புவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- புளியம் விதை, சோடா மூடி, தீப் பெட்டி போன்றவற்றை பயன்படுத்தி வெளியை நிரப்பவிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு - அளத்தல்

தேர்ச்சி :- குவியலாக காணப்படும் பொருட்களை ஒப்பிட்டு அதிகமாக, குறைவாக உள்ள குவியல்களை வேறுபடுத்துவார்.

செயற்பாடு :- 3.37 குவியல்களை ஒப்பிடுதல்.

வளம் :- சிறு கற்கள், போஞ்சி விதைகள், சிப்பிகள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் போஞ்சி விதைகளை பயன்படுத்தி இரு குவியல்களை ஆக்கி குறைவு, கூட எனப் பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.
2. மேற்படி வளங்களில் ஒன்றை ஒவ்வொருவருக்கும் வழங்குதல்.
3. பிள்ளைகள் ஒவ்வொருவரையும் இரு குவியலாக்குவதற்கு ஆசிரியர் வழிப்படுத்தல்.
4. ஆக்கிய குவியல் பற்றிச் சொல்லும் படி பிள்ளைகளை கேட்டல்.
5. ஒரு பிள்ளை சொல்லும் போது மற்றைய பிள்ளைகள் அவர் கூறுவதை அவதானித்தல், கலந்துரையாடல்.

மதிப்பீடு :- குறைவு, கூட என ஒப்பிட்டு வேறுபடுத்தும் ஆற்றலைப் பிள்ளைகள் பெற்றுக் கொண்டனரா என்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வெவ்வேறு வடிவங்களில் குவியல்களை ஆக்கி அவை பற்றி பிள்ளைகள் கூற ஊக்கமளித்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – அளத்தல்

தேர்ச்சி :- இரு பாத்திரத்தில் உள்ள நீரை ஒப்பிட்டு எதில் கூடிய அளவு நீர் உள்ளது என்பதையும், எதில் குறைந்த அளவு நீர் உள்ளது என்பதையும் கண்டு பிடிப்பார்.

செயற்பாடு :- 3.38 இரு பாத்திரங்களில் உள்ள நீரை ஒப்பிடுதல்.

வளம் :- வெற்றுப் பாத்திரம்,இறப்பர் வளையம், தண்ணீர் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பாத்திரங்கள் (குவளை, சாடி), புனல் போத்தல்.

அனுகுமுறை :- செயற்பாடு



செயலொழுங்கு :-

1. படத்தில் காட்டியபடி பாத்திரங்களை ஒழுங்கு செய்தல்.
2. இரு பாத்திரங்களைக் காட்டி எது கூடிய அளவு நீரைக் கொள்ளும் என கலந்துரையாடல்.
3. இரு (குவளை, சாடி), பாத்திங்களையும் நீரால் நிரப்புதல்.
4. புனலைப் பயன்படுத்தி ஒரு போத்தலுக்குள் சாடியில் உள்ள நீரை ஊற்றி நீர் மட்டத்தைச் சுற்றி இறப்பர் வளையத்தைப் போடுதல்.
5. பின்னர் போத்தலில் உள்ள நீரை வெளியே ஊற்றி குவளையில் உள்ள நீரை போத்தலுக்குள் ஊற்றி நீர் மட்டத்தில் இறப்பர் வளையத்தைப் போடுதல்.
6. இரண்டு இறப்பர் வளையங்களையும் அவதானிப்பதன் மூலம் நீரினது அளவு மட்டத்தை ஒப்பிடுதல்.
7. இதிலிருந்து கூடிய அளவு நீர் உள்ள பாத்திரத்தை இனங்காணல்.
8. குழுக்களுக்கு வளங்களைப் பகிர்ந்தளித்து செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தி அவதானித்தல்.

மதிப்பீடு :- நீரின் அளவை ஒப்பிட்டுப் பார்ப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இரு ஒரே அளவான பாத்திரங்களில் நீரை ஊற்றி அருகருகே வைத்து ஒப்பிட்டுப் பார்க்க விடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு - அளத்தல்


தேர்ச்சி :- இரண்டு பொருட்களை ஒப்பீடு செய்து பாரம் கூடியது, பாரம் குறைந்தது, சம அளவுடையது எது என இனங்காண்பார்.

செயற்பாடு :- 3.39 நிறைகளை ஒப்பிடுதல்.

வளம் :- ஆறு தகர பேணிகள், மணல், வெள்ளைக் கடதாசி, பசை

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-




1. ஆசிரியர் இரு பேணிகளில் மண்ணை முழுமையாகவும், இரு பேணிகளில் 1/3 அளவிற்கும், இரு பேணிகளை வெறுமையாகவும் வைத்து கடதாசியினால் மூடி ஒட்டுதல். (முன் ஆயத்தம்)
2. பிள்ளைகளைக் குழுக்கள் ஆக்குதல்.
3. குழுக்களுக்கு வளங்களைப் பகிர்ந்தளித்தல்.
4. ஏதாவது 2 பேணிகளைத் தூக்கிப் பார்த்து பாரத்தை உணரச் செய்தல்.
5. அவற்றை ஒப்பீடு செய்து பாரம் கூடியது, பாரம் குறைந்தது, அல்லது சமனானது எனக்கூறல்.

மதிப்பீடு :- இரு பொருட்களைத் தூக்கிப் பார்த்து பாரம் கூடிய, குறைந்த, சமனான பொருட்களை இனங்காணுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஒப்பீடு செய்வதன் மூலம் சூழலில் உள்ள பாரம் கூடிய, குறைந்த பொருட்களை இனங்காணல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – அளத்தல்

தேர்ச்சி :- பாரத்திற்கேற்ப பாத்திரங்களை வரிசைப்படுத்துவார்.

செயற்பாடு :- 3.40. பாரத்திற்கேற்ப வரிசைப்படுத்தல்.

வளம் :- 4 கிண்ணம், கடதாசித் துண்டுகள், அரிசி, மண், நாணயங்கள் - ஒரு குழுவிற்கு

அணுகுமுறை :- விளையாட்டு.

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. குழுக்களுக்கு வளங்களை வழங்குதல்.
3. கிண்ணங்களில் கடதாசித்துண்டு, அரிசி, மண், நாணயங்களை நிரப்பி மூடச் செய்தல்.
4. கிண்ணங்களைத் தூக்கிப் பார்க்கும்படி கூறல்.
5. பாரம் குறைந்ததில் இருந்து பாரம் கூடியது வரை வரிசையில் வைக்க விடல்.
6. அவதானித்து வழிகாட்டல்.

மதிப்பீடு :- பாரத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்துவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சூழலில் உள்ள சில பொருட்களை எடுத்து இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு –அளத்தல்


தேர்ச்சி :- தராசைப் பயன்படுத்தி நிறையைச் சமநிலைப்படுத்துவார்.

செயற்பாடு :- 3.41 தராசில் நிறுத்தல்.

வளம் :- மாதிரித் தராசு, பற்றரி - 2,மணல், மண்பொதி – 2, சதுரமுகி – 2 பந்து – 2 .

அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-



1. மாதிரித்தராசைத் தொங்கவிட்டு ஒரு பக்கத் தட்டில் பற்றரி ஒன்றை இட்டுக் காட்டுதல்.
2. மற்றைய பக்கத் தட்டில் மண்ணை இட்டுச் சமநிலைப்படுத்தல்.
3. இவ்வாறு வெவ்வேறு பொருட்களைத் தராசில் இட்டு மேற்படி செயற்பாட்டைத் தொடருதல்.
4. பிள்ளைகளைக் குழுக்களாக்கித் தராசையும் பொருட்களையும் குழுக்களுக்கு வழங்குதல்.
5. ஒரு பக்கத் தட்டில் ஒரு பொருளை இட்டு அதனைச் சம நிலைக்குக் கொண்டு வர மறு பக்கத் தட்டில் இன்னுமொரு பொருளை இட்டுக் காட்ட விடுதல்
6. ஏனைய பொருட்களையும் ஒவ்வொன்றாக இட்டுச் சமநிலைப்படுத்த விடுதல்.
7. இடர்படும் குழுக்கு உதவி புரிதல்.

மதிப்பீடு :- பொருட்களை இட்டுத் தராசைச் சமநிலைக்கு கொண்டு வருவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பொருட்களை இட்டு மண்ணைப் பயன்படுத்தி அதனைச் சமன் செய்ய விடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – காலம்


தேர்ச்சி :- காலை, மாலை, இரவு என்ற எண்ணக்கருக்களில் அனுபவம் பெறுவார்.

செயற்பாடு :- 3.42 படங்களை ஒட்டுதல்

வளம் :- படங்கள், பசை, கடதாசித் தாள் (மூன்றாகப் பிரிக்கப்பட்ட)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. காலை, மாலை, இரவில் பிள்ளைகள் அவதானித்தவற்றைக் கலந்துரையாடல்.
2. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
3. வளங்களைப் பகிர்ந்தளித்தல்.
4. முதலில் காலையில் நிகழும் நிகழ்வுகளின் படங்களை ஒட்டுதல்.
5. இரண்டாவதாக இரவில் நிகழும் நிகழ்வுகளின் படங்களை ஒட்டுதல்.
6. மாலையில் நிகழும் நிகழ்வுகளை ஒட்டுதல்.
7. காட்சிப்படுத்தி அவதானித்தல்.

மதிப்பீடு :- காலை, மாலை, இரவில் நிகழும் நிகழ்வுகளைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- நேற்று, இன்று, நாளை என்ற எண்ணக்கரு தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – கோலம்

தேர்ச்சி :- பொருட்களைப் பயன்படுத்தி கோலம் ஆக்குவார்

செயற்பாடு :- 3.43. கோலம் ஆக்குதல்.

வளம் :- சிப்பி, பென்சில், கற்கள், பொத்தான்கள்


அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. ஆசிரியர் பொருட்களை சிப்பி – பென்சில் - சிப்பி – பென்சில் என்ற ஒழுங்கில் வைத்துக் கலந்துரையாடல்.
3. வெவ்வேறு விதமான கோலங்களை ஆக்கிக் காட்டுதல்.
4. குழுக்களுக்கு வளங்களை பகிர்ந்தளித்து கோலமாக்க விடல்.
5. அவதானித்து வழிப்படுத்தல்.
6. எல்லாப்பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கல்.
7. வெவ்வேறு விதமான கோலங்களை அமைக்கத் தூண்டுதல்.
8. இடர்படும் குழுவுக்கு உதவிபுரிதல்.

மதிப்பீடு :- கோலமாக அடுக்குவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மூன்று வித்தியாசமான பொருட்களை உபயோகித்துக் கோலங்களை ஆக்க விடுதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு –கோலம்

தேர்ச்சி :- கோலத்தின் அடிப்படையில் மாலை கட்டுவார்.

செயற்பாடு :- 3.44 கோலமாக மாலைகட்டல்

வளம் :- சிவப்பு, பச்சை, நீல நிற கடதாசிக் கீலங்கள், பசை.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் சிவப்பு, பச்சை, நீலம் என்ற ஒழுங்கில் படத்தில் உள்ளது போல் மாலை ஒட்டிக் காட்டல்.
2. பிள்ளைகளுக்கு மூன்று நிறக் கடதாசிக் கீலங்களை வழங்கி மாலையாக்க விடுதல்.
3. பிள்ளைகள் கோலத்திற்கமைய ஒட்டுவதற்கு உதவுதல்.
4. மாலைகளை வகுப்பறையில் தொங்க விடுதல்.

மதிப்பீடு :- கோலத்தில் ஒட்டி மாலையாக்குவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வெவ்வேறு விதமான கோலங்களில் மாலையாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – பணம்


தேர்ச்சி :- ரூபா 5, ரூபா 2, சில்லறை நாணயங்களின் வடிவத்தையும் பெறுமதியையும் கூறுவார்.

செயற்பாடு :- 3.45 அச்சுப்பதித்தல்.

வளம் :- ரூபா5, ரூபா2 பெறுமதியான நாணயக் குற்றிகள், வெள்ளைக்கடதாசி, பென்சில்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-




1. ஆசிரியர் குழுவாக உள்ள பிள்ளைகளிடம் நாணயக்குற்றிகளை கொடுத்து விளையாடவிடல்.
2. நாணயங்கள் பற்றிக் கலந்துரையாடல்.
3. நாணயங்களில் உள்ளவற்றை அவதானிக்கச் செய்தல்.
4. ஆசிரியர் ஒரு வெள்ளைத் தாளில் ரூபா 5 நாணயத்தை வைத்து அச்சுப்பதித்துக் காட்டுதல்.
5. பெறுமதி குறிக்கப்பட்டுள்ளதைக் காட்டுதல்.
6. பிள்ளைகளையும் அச்சுப்பதிக்கவிடல்.
7. தேவையான பிள்ளைகளுக்கு உதவுதல்.
8. செய்தவற்றை காட்சிப்படுத்தல்.

மதிப்பீடு :- நாணயத்தின், வடிவத்தையும், பெறுமதியையும் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வேறு நாணயங்களையும் அச்சுப்பதிக்க விடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – அரைவாசி


தேர்ச்சி :- அரை என்பதன் எண்ணக்கருவை விளங்கிக் கொள்வார்.

செயற்பாடு :- 3.46 வெட்டுதலும் ஒன்று சேர்த்தலும்.

வளம் :- எலுமிச்சம் பழம், கத்தி

அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-



1. வெட்டப்படாத எலுமிச்சம் பழத்தைக் காட்டுதல்.
2. பின்னர் அந்தப் பழத்தினை இரண்டு பாதிகளாக வெட்டிக் காட்டுதல்.
3. பாதிகள் இரண்டு என்பதையும், அவற்றை ஒன்று சேர்த்தால் முழுமையான பழம் என்பதையும் காட்டல்.
4. அரைவாசி என்பதையும் இரண்டு அரைவாசிகளை ஒன்று சேர்த்தால் முழுப்பழம் என்பதையும் விளக்குதல்.
5. இவ்வாறான வேறு பொருட்களையும் வெட்டிக் காட்டிக் கலந்துரையாடல்.

மதிப்பீடு :- அரைவாசி என்பதை விளங்கிப் பிரயோகிப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வேறு அன்றாடப் பாவனைப் பொருட்களைப் பயன்படுத்தி அரைவாசியை எடுத்துக்காட்ட விடுதல். (அப்பளம், தோசை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண்ணுதல்

தேர்ச்சி :- 1 முதல் 10 வரையான எண்களைத் தொடரொழுங்கில் எண்ணுவார்

செயற்பாடு :- 3.47 எண்ணுதல்

வளம் :- எண் பாடல் அட்டை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் முழுமையாகப் பாடலைப் பாடிக் காட்டுதல்.
2. முதல் இரு வரிகளையும் முழுமையாகப் பாடிக் காட்டுதல்.
3. ஆசிரியருடன் சேர்ந்து முதல்இரு வரிகளையும் பிள்ளைகள் பாடுதல்.
4. பிள்ளைகள் முதல் இரு வரிகளையும் குழுக்களாகப் பாடுதல்.
5. விரும்பிய பிள்ளைகள் தாமாகவே முன் வந்து தனியாகப் பாடிக் காட்டுதல்.
6. தொடர்ந்து இதே ஒழுங்கு முறையில் அடுத்த இரு வரிகளையும் பாடப் பயிற்சியளித்தல்.
7. இவ்வாறே பாடலை முழுமையாகப் பாட வழிகாட்டுதல்.

ஒன்று இரண்டு மூன்று
ஒன்றாய் வாழ்வது நன்று
நான்கு ஐந்து ஆறு
நாங்கள் உண்போம் சோறு
ஏழு எட்டு ஒன்பது
ஏணிப்படிகள் ஒன்பது
எட்டு ஒன்பது பத்து
எள்ளில் உள்ளது சத்து

ஒன்று இரண்டு மூன்று
நான்கு ஐந்து ஆறு
ஏழு எட்டு ஒன்பது
எட்டு ஒன்பது பத்து

மதிப்பீடு :- பிள்ளைகள் பாடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- எண் பெயர்கள் மட்டும் கொண்டதாக பின்வரும் பாடலை தாளலயத்துடன் பாடிக் காட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு - எண்ணுதல்

தேர்ச்சி :- (1-5) பொருட்களை எண்ணுவார்.

செயற்பாடு :- 3.48 பொருட்களை எண்ணுதல்.

வளம் :- 5 இலை, 4 தடி, 3கல், 2சோக், 1 கட்டை போன்ற எண்ணிகளைக் கொண்ட பெட்டி (ஒரு குழுவிற்கு)


அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. பொருட்கள் உள்ள பெட்டியைக் குழுக்களுக்கு வழங்கல்.
3. பொருட்களை எடுத்து ஒவ்வொரு வகையையும் தனித்தனித் தொகுதிகளாக வைக்கவிடல்.
4. அவ்வாறு ஆக்கப்பட்ட ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள பொருட்களை எடுத்து உரத்து எண்ணவிடல்.
5. ஆசிரியர் அவதானித்து வழிகாட்டல்.

மதிப்பீடு :- எண்ணும் முறையையும் எண்ணுதலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சூழலில் உள்ள மரங்களைக் காட்டி எண்ண விடல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் (எண்ணுதல்)

தேர்ச்சி :- விளையாட்டினூடாக 1-5 எண்ணுவார்.

செயற்பாடு :- 3.49 பந்தைத் துள்ள அடித்து எண்ணுதல்.

வளம் :- 1-5 உரு அட்டைகள் (பூ, கார், நாய், தொப்பி, பந்து), பந்து


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஒரு நாய், இரு பூக்கள், மூன்று பந்து, நான்கு கார்கள், ஐந்து தொப்பி என்றவாறு உருவ அட்டைகளை நிலத்தில் எட்ட எட்ட வைத்தல்.
2. ஒரு பிள்ளையை அழைத்து அட்டைக்கு அட்டை நகர்ந்து அட்டையில் உள்ள உருக்களின் எண்ணிக்கைக்கேற்ப பந்தினை நிலத்தில் அடித்துத் துள்ள வைத்து எண்ணவிடல்.
3. இவ்வாறு எல்லாப் பிள்ளைகளையும் ஈடுபடுத்தல்.

மதிப்பீடு :- உருக்களின் எண்ணிக்கைக்கு பந்தைத் துள்ளவைத்து அடித்து எண்ணுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- எண் குறிகளைக் கொண்ட அட்டைகளைப் பயன்படுத்தி விளையாட்டில் ஈடுபடுத்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண்ணுதல்

தேர்ச்சி :- 1 தொடக்கம் 4 வரை தொடரொழுங்கில் எண்ணுவார்.

செயற்பாடு :- 3.50 கால்களை எண்ணுதல்.

வளம் :- உருக்கள், படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் ஆட்டுக் குட்டியின் கதை ஒன்றைக் கூறுதல்.
2. ஆட்டுக் குட்டியின் உருவை முன்வைத்து பிள்ளைகளுடன் கலந்துரையாடி கால்களை எண்ணுதல்.
3. நான்கு கால்கள் உள்ள மிருகங்களின் படங்களை குழுக்களுக்கு வழங்குதல்.
4. குழுவில் உள்ள ஒவ்வொரு பிள்ளையும் உருக்களை எடுத்து கால்களை எண்ணுவதற்கு வழிப்படுத்தல்.
5. இடர்படும் பிள்ளைகளுக்கு உதவி வழங்குதல்.
6. எண்ணிய பின்பு வேறு மிருகம் ஒன்றை எடுத்து மீண்டும் எண்ணுதல்.

மதிப்பீடு :- 1-4 வரை தொடரொழுங்கில் எண்ணுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சுற்றாடலில் காணப்படும் 4 கால்கள் உள்ள மிருகங்களை இனங்கண்டு கூறுவதற்கு ஊக்கமளித்தல். பிள்ளைகளுக்கு விரும்பிய நான்கு கால் மிருகத்தை வரைவதற்கு ஊக்கமளித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண்ணுதல்

தேர்ச்சி :- 1-5 எண்ணும் போது விடுபடும் எண்ணை இனங்கண்டு கூறுவார்.

செயற்பாடு :- 3.51 எண்ணும் போது விடுபட்ட எண்ணை இனங்காணுதல்.

வளம் :- பந்து

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை அரைவட்டத்தில் நிற்கவிடல்.
2. அவர்களின் முன்னே ஆசிரியர் நின்று ஒன்று தொடக்கம் ஐந்து வரை எண்ணும் பொழுது ஏதாவது ஒரு எண்ணைக் கூறாமல் விட்டு எண்ணுதல்.
3. ஆசிரியர் பந்தை ஒரு பிள்ளைக்கு எறிதல். அந்தப்பிள்ளை விடுபட்ட எண்ணைக் கூறுதல்.

உதாரணமாக,

> ஆசிரியர் 1, 2, 4, 5 என எண்ணுவார். பந்தைப் பெறும் பிள்ளை 3 என்ற விடையைக் கூறுதல்.

4. சரியான விடையைக் கூறாவிட்டால் ஆசிரியர் மீண்டும் எண்ணிப் பின்னர் பந்தை வேறொரு பிள்ளைக்கு அனுப்புதல்.
5. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வரை விளையாட்டை தொடர்தல்.

மதிப்பீடு :- எண்ணும்போது 1 – 5 இற்கு இடைப்பட்ட விடுபட்ட எண்ணைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மேற்படி விளையாட்டைப் பிள்ளைகளைக் கொண்டு செய்ய விடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் விளக்கம்

தேர்ச்சி :- 1 – 5 வரையான எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டளைக்குத் துலங்குவார்.

செயற்பாடு :- 3.52 கட்டளைக்கு துலங்குதல்.

வளம் :-

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வெளியான இடத்திற்கு அழைத்துச் செல்லல்.
2. ஆசிரியரின் வெவ்வேறு கட்டளைகளுக்குப் பிள்ளைகள் துலங்க வேண்டும் எனக் கூறுதல்.
3. 'உருகிப் போதல்' என்று கூறும்போது பிள்ளைகள் ஓடிவிளையாடல்.
4. ஆசிரியர் 'உறைந்து போகவும்' என்று கூறி ஒரு எண்ணைக் கூறுதல். பிள்ளைகள் அவயவங்களால் எண்ணிக்கைக்கு ஏற்ப நிலத்தைத் தொடல்.

அதாவது 'உறைந்து போகவும் 4' என்று கூறினால் எல்லாப் பிள்ளைகளும், தமது உடம்பின், நான்கு அவயவங்களால் நிலத்தை தொட வேண்டும். உதாரணமாக இரண்டு கால்களாலும் இரண்டு கைகளாலும் நிலத்தைத் தொடுதல். ஆசிரியர் 'உறைந்து போகவும் 1' எனக் கூறினால் ஒற்றைக் காலில் நிற்றல்.

5. ஆசிரியர் 'உருகிப் போகவும்' என்று கூறியதும், பிள்ளைகள் மீண்டும் ஓடி, விளையாட்டைத் தொடரல்.
6. இவ்வாறு ஏனைய எண்களுக்கும் செயற்பாட்டைத் தொடரல்.

மதிப்பீடு :- எண் பெறுமானத்திற்கும் கட்டளைக்கும் ஏற்ப துலங்கலை சரியாக வெளிப்படுத்துவதை அவதானித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் விரிவாக்கம் :- 'உறைந்து போகவும்' என்று கூறப்பட்டதும், பிள்ளைகள் இன்னொருவருடன் சோடி சேர்ந்து கொள்வார்கள். பின்னர் சரியான எண்ணிக்கையை உடம்பின் அவயவங்களால் தொட்டுக் காட்டுவார்கள். இவ்வாறு பல சவாலான முறைகளைக் கையாளலாம் .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- 3.2.2.4 கணித எண்ணக்கரு –எண் விளக்கம்

தேர்ச்சி :- 1 – 5 எண்ணிக்கைக்கேற்ப எண்ணிகளை எடுத்து வைப்பார்.

செயற்பாடு :- 3.53 எண்ணிகளைத் தெரிதல்.

வளம் :- ஐந்து எண்ணிகள் கொண்ட பை, மேளம்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை வட்டமாக இருத்துதல்.
2. ஒவ்வொரு பிள்ளைக்கும் எண்ணிகளை வழங்குதல்.
3. ஒரு பிள்ளை,(1 -5) இடைப்பட்ட ஓர் எண்ணிக்கைக்கு ஏற்ப மேளத்தை அடித்தல்.
4. பிள்ளைகள் மேளத்தின் அடிகளின் எண்ணிக்கைக்கேற்ப தம் முன்னே எண்ணிகளை எடுத்து வைத்தல்.
5. ஆசிரியர் சரிபார்த்தல்.
6. மீண்டும் மீண்டும் எல்லா எண்பெறுமானத்திற்கும் (1 – 5) விளையாட்டைத் தொடருதல்.

மதிப்பீடு :- எண்ணிக்கைக்கு ஏற்ப எண்ணிகளை எடுத்து வைப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஆசிரியர் மேளத்தைத் தட்ட, தட்டொலிகளின் எண்ணிக்கைக்கேற்ப பிள்ளைகள் கை கொட்டுதல் அல்லது தமது விரல்களால் எண்ணிக்கையை காட்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண்விளக்கம்

தேர்ச்சி :- 1 - 6 எண்ணிக்கைக்கேற்ப எண்ணிகளைத் தெரிவு செய்வார்.

செயற்பாடு :- 3.54. எண்ணி எடுத்தல்

வளம் :- இரு பந்துகள், உயரமான வெற்றுப் பிளாஸ்டிக் போத்தல்கள் 12, போத்தல் மூடிகள் - 20 (மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப எண்ணிகள் மாறுபடலாம்)

அணுகுமுறை :- விளையாட்டு


செயலொழுங்கு :-


1. ஆசிரியர் பிள்ளைகளை இரு குழுக்களாகப் பிரித்தல்.
2. படத்தில் உள்ளது போல் அவர்களை நேர்கோட்டில் நிற்க விடுதல்.
3. ஒவ்வொரு குழுவுக்கும் முன் போத்தல்களை படத்தில் உள்ளது போல் முக்கோண வடிவில் அடுக்கி விடுதல்.
4. ஒவ்வொரு குழுவிற்கும் 10 போத்தல் மூடிகளைக் கொடுத்தல்.
5. முதலாவது குழுவிலுள்ள ஒருவரைப் பந்தை உருட்டிச் சில போத்தல்களைத் தட்டி விழுத்தச் செய்தல்.
6. இரண்டாவது குழு தட்டி விழுத்திய போத்தல்களின் எண்ணிக்கைக்குச் சமனான மூடிகளை முதலாவது குழுவிற்குக் கொடுத்தல்.
7. அடுத்து இரண்டாவது குழுவிற்கு பந்தை உருட்டச் சந்தர்ப்பம் வழங்கல்
8. முதலாவது குழு விழுத்திய போத்தல்களின் எண்ணிக்கைக்குச் சமனான மூடிகளை இரண்டாவது குழுவிற்குக் கொடுத்தல்.
9. இவ்வாறு இரு குழுக்களும் மாறிமாறி விளையாட்டைத் தொடருதல்.
10. ஒரு குழுவின் மூடிகள் முடியும் போது விளையாட்டு நிறுத்தப்படும்.

மதிப்பீடு :- எண்ணிக்கைக்கு ஏற்ப எண்ணிகளை எடுத்து வைப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இரண்டு பிள்ளைகளைச் சோடியாக்கி விளையாடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு -எண் விளக்கம்

தேர்ச்சி :- 1-5 பொருட்களை எண்ணி எண்ணிக்கையைக் கூறுவார்.

செயற்பாடு :- 3.55 எண்ணுதல்

வளம் :- 1 பந்து, 5 போத்தல்கள் (பிளாஸ்ரிக்)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. 3 cm இடைவெளியில் 5 போத்தல்களை வரிசையாக அடுக்குதல்.
2. போத்தல்களிலிருந்து 3 m தூரத்தில் ஒரு கோடு வரைதல்.
3. வரையப்பட்ட நேர்கோட்டில் பிள்ளைகளை விடுதல்.
4. ஒரு பிள்ளையை போத்தல்களை எண்ணிக் கூறச் செய்தல்.
5. ஒரு பந்தை அவரிடம் கொடுத்து அதிக போத்தல் விழக் கூடியவாறு எறிய விடல்.
6. மற்றைய பிள்ளைகளிடம் எத்தனை போத்தல் விழுத்தப்பட்டதென்றும், எத்தனை போத்தல் எஞ்சியுள்ளது என்றும் எண்ணிக் கூறச் செய்தல்.
7. ஏனையோர் சரிபார்த்தல்.
8. மீண்டும் போத்தல்களை அடுக்கி ஏனையோருக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- எண்ணுவதையும் சரியாக எண்ணிக்கையைக் கூறுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- போத்தல்களின் எண்ணிக்கையையும், தூரத்தையும் அதிகரித்து விளையாடவிடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண்விளக்கம்

தேர்ச்சி :- கை தட்டும் தடவைகளை எண்ணி அதற்கேற்ப உரு அட்டைகளைத் தெரிவு செய்வார்.

செயற்பாடு :- 3.56. உரு அட்டையைத் தெரிவு செய்தல்.

வளம் :- உரு அட்டை (1 – 5)

அணுகுமுறை :- விளையாட்டு.

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை வெளியே அழைத்துச் சென்று அரை வட்டத்தில் நிற்க விடல்.
2. அட்டைகளைத் தரையிலே பரப்பி வைத்தல்.
3. ஆசிரியர் கை தட்டுதல்.
4. கை தட்டும் எண்ணிக்கைக்குச் சமனான உருக்களை உடைய அட்டையை பிள்ளையைக் கொண்டு எடுத்தல்.
5. 1 -5 வரையான எண்ணிக்கை அட்டைகள் பயன்படுத்தும் வரை மீண்டும் செயற்பாட்டைத் தொடருதல்.
6. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- கைதட்டும் தடவைகளை எண்ணி எண்ணிக்கைக்கு ஏற்ப உரு அட்டையை எடுத்துக் காட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகள் சுயமாக விளையாடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் குறி

தேர்ச்சி :- எண்குறிகளில் அனுபவம் பெறுவார்.

செயற்பாடு :- 3.57 எண் குறிகளின் மீது ஒத்த எண்குறிகளை வைத்தல்.

வளம் :- கலண்டர் தாளில் எண்களை வெட்டி ஒட்டிய(1 – 5) எண் அட்டைகள், கலண்டரின் ஒரு மாதத்திற்கான கலண்டர் தாள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-







1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. கலண்டரில் எண்களைக் காட்டுதல்.
3. வெட்டி எடுக்கப்பட்ட ஓர் எண் அட்டையை எடுத்து கலண்டர் தாளின் சரியான எண் கட்டங்களின் மீது பொருந்தும் படி வைத்து காண்பித்து கலந்துரையாடல்.
4. குழுக்களுக்கு கலண்டர் தாளையும், ஒரு தொகுதி எண் அட்டைகளையும் வழங்கல்
5. கலண்டரிலுள்ள எண்ணின் மேல் எண் அட்டையை வைக்க விடல்.
6. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கல்.

மதிப்பீடு :- எண் குறிகளை இனங்கண்டு பொருத்துவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- 1 - 5 வரையான எண்களிற்கு மேற்பட்ட எண்பெறுமானங்களுக்கும் இச் செயற்பாட்டைத் தொடருதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் குறி.

தேர்ச்சி :- 1 – 5 எண் பெயருக்கேற்ப எண் குறிகளைத் தெரிவு செய்வார்.

செயற்பாடு :- 3.58 எண்குறிகளை இனங்காணல்

வளம் :- (1 – 5) எழுதப்பட்ட எண் அட்டைகள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-




1. ஆசிரியர் வகுப்பறையின் பல்வேறு இடங்களில் அல்லது நிலத்தில் எண் அட்டைகளை வைத்தல்.
2. ஆசிரியர் 1 இலிருந்து எண்ணத் தொடங்கி ஒரு எண்ணில் நிறுத்துதல்.
3. பிள்ளைகள் ஆசிரியர் நிறுத்திய எண் உள்ள எண் அட்டையை நாடி ஓடுதல்.
4. ஆசிரியர் சரிபார்த்தல்.
5. அவ் அட்டைக்குரிய எண் பெயரை உரத்துக் கூற விடல்.
6. ஆசிரியர் மீண்டும் 1 இலிருந்து எண்ணி விளையாட்டைத் தொடர்தல்.

மதிப்பீடு :- உரிய எண் குறி இருக்கும் இடத்திற்குச் செல்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- 1-10 வரை உள்ள எண் அட்டைகள் ஒவ்வொன்றிலும் இரண்டு வீதம் தயாரித்து ஒத்த எண்களைச் சோடி சேர்க்க விடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் குறி

தேர்ச்சி :- 1- 5 எண் குறிக்குரிய எண் பெயர்களைக் கூறுவார்.

செயற்பாடு :- 3.59. எண் பெயர் கூறுதல்.

வளம் :- 1- 5 எழுதப்பட்ட சிறிய அட்டைகள்.( ஆசிரியருக்கு)
1- 5 எழுதப்பட்ட பெரிய அட்டைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-




1. ஆசிரியர், பெரிய எண் அட்டைகளை நிலத்தில் வட்ட வடிவமாக அடுக்குதல்
2. ஆசிரியர் கை தட்டும் போது பிள்ளைகள் வட்டமாக வலம் வருதல்.
3. ஆசிரியர் கைதட்டலை நிறுத்தி, ஒரு சிறிய எண் அட்டையைத் தூக்கிக் காட்டுதல்.
4. பிள்ளைகள் வலம் வருவதை நிறுத்துதல்.

காட்டப்பட்ட எண் அட்டையை ஒத்த பெரிய அட்டைக்கு அண்மையில் உள்ள பிள்ளை அந்த எண்ணின் பெயரைக் கூறுதல்.

> உ-ம்
> ஆசிரியர் கையில் உள்ள சிறிய அட்டையில் 'மூன்று' என்ற எண் இருந்தால் மூன்று உள்ள பெரிய அட்டைக்கு அண்மையில் உள்ள பிள்ளை 'மூன்று' என கூறல்.

6. இவ்வாறு எல்லா எண்களுக்கும் செய்தல்.
7. சரியான எண் பெயர் கூறுவதை அவதானித்தல்.

மதிப்பீடு :- 1 – 5 எண் குறிக்குரிய எண் பெயரைச் சரியாக கூறுதலை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- ஆசிரியரின் வகிபாகத்தை பிள்ளை ஏற்று விளையாட விடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் குறி

தேர்ச்சி :- (1 – 5) எண் பெயருக்கேற்ப எண் குறியை இனங்கண்டு துலங்குவார்

செயற்பாடு :- 3.60 கட்டளைக்கு ஏற்பத் துலங்குதல்.

வளம் :- 1 -5 வரை எழுதப்பட்ட எண் அட்டைகள்.

| 3 | 1 | 5 | 4 | 2 |
|---|---|---|---|---|

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டத்தில் நிற்க விடல்.
2. 1 – 5 வரையான எண் அட்டைகளை நிலத்தில் பரப்பி விடுதல்.
3. பிள்ளைகளுக்கு ஆசிரியர் கட்டளைகளைக் கூறுதல்.

உ-ம்

ஒன்றைத் தொடு

மூன்றிற்கு நட

இரண்டுக்குப் பாய்

4. பிள்ளைகள் கட்டளைக்கு ஏற்ப துலங்குதல்.

மதிப்பீடு :- எண் குறிக்கேற்ப துலங்குவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இரண்டு கட்டளைக்குத் துலங்க விடல்.

உ – ம் :-

இரண்டிற்குப் பாய், மூன்றிற்கு நட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு –எண் குறி

தேர்ச்சி :- ஒன்று, இரண்டு எண் குறியீட்டை வாசிப்பார்.
(1-6) பொருட்களை எண்ணி எண்ணிக்கையைக் கூறுவார்.

செயற்பாடு :- 3.61. எண்ணுதல்

வளம் :- 1, 2 எண்ணிடப்பட்ட இரண்டு பெட்டிகள்,
ஒரு சிறிய இறப்பர் பந்து, கற்கள், இரண்டு கிண்ணங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-




1. பிள்ளைகளை அரை வட்டமாக நிற்க விடல்.
2. அவர்களின் முன்னே எண்ணிடப்பட்ட பெட்டிகளை வைத்தல்.
3. பெட்டிகளின் முன்னே கிண்ணம் ஒவ்வொன்றை வைத்தல்
4. ஒரு பிள்ளையை அழைத்து பந்தைக் கொடுத்து நிலத்தில் அடித்துத் துள்ள வைத்து எண்ணிடப்பட்ட பெட்டி ஒன்றில் பந்தை விழச் செய்தல். 3 சந்தர்ப்பம் வழங்குதல்
5. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பந்து விழுந்த பெட்டியின் எண்ணிற்குச் சமனான எண்ணிக்கையுடைய கற்களை எடுத்து பெட்டிகளின் முன்னே வைக்கப்பட்ட கிண்ணத்தில் இடுதல்.
6. 3 சந்தர்ப்பங்களின் பின்பு இரு கிண்ணத்திலும் உள்ள கற்களை உரத்து எண்ணுதல்.
7. ஏனையோரும் சேர்ந்து எண்ணுதல்.
8. அனைத்துப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் கொடுத்தல்.

மதிப்பீடு :- எண்ணுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சூழலில் காணப்படும் 1 – 5 இற்குட்பட்ட தொகுதியை எண்ணுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண்ணுதல்


தேர்ச்சி :- 1 – 6 தொடரொழுங்கில் எண்ணுவார்.

செயற்பாடு :- 3.62 எண்ணியவாறு பாய்தல்.

வளம் :-

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. உருவில் உள்ளது போல் 6 சதுரம் கொண்ட நீள்சதுரப் பெட்டி வரைதல்.
2. 1, 2, 3, 4, 5, 6 எண் குறிகளை எழுதுதல்
3. ஒரு பிள்ளையை அழைத்து ஆரம்பிக்கும் இடத்தில் விடுதல்.
4. 1 – 6 கட்டங்களில் எண்ணியவாறு ஒழுங்காகப் பாய விடுதல் - (பாயும் போது ஏனையோர் எண்பெயரைக் கூறல்)
5. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கல்.

மதிப்பீடு :- குறிப்பிட்ட எண் பெட்டிகளுள் ஒழுங்காகப் பாய்வதையும் உரிய எண்பெயர் கூறுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. ஒற்றைக் காலில் கெந்திச் செல்லல்.
2. விளையாட்டுப் பொருள் ஒன்றைத் தலையில் அல்லது கையில் வைத்து விழாது நடத்தல்.
3. 5,4,3,2,1 என்றவாறு திரும்பிச் செல்லவிடல்.
4. ஆசிரியர் குறிப்பிடும் எண் ஒன்றில் இருந்து மற்றொரு எண்ணிற்குப் பாய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் குறி

தேர்ச்சி :- 1-5 எண் குறிக்கேற்ப உரு அட்டையைத் தெரிவு செய்வார்.

செயற்பாடு :- 3.63. உரு அட்டைகளைத் தெரிவு செய்தல்.

வளம் :-

- விளையாட்டுப் பொம்மைகள்
- 1 - 5 எண் குறி அட்டைகள் - (ஆசிரியருக்கு)
- (1 – 5) எண்ணிக்கைக்குச் சமமாக உருவங்கள் வரையப்பட்ட உரு அட்டைகள். (குழு ஒன்றிற்கு)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-




1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. உரு அட்டைகளைக் குழுக்களுக்கு வழங்கல்
3. ஒரு பொம்மை மூலம் ஓர் எண்குறி உள்ள அட்டையை ஆசிரியர் தூக்கிக் காண்பித்தல்.
4. அவ்வெண்ணிற்குரிய உருவை வைத்திருக்கும் பிள்ளைகள் உரு அட்டையைத் தூக்கிக் காட்டுதல்.
5. மீண்டும் மீண்டும் செயற்பாட்டில் ஈடுபடல்.

மதிப்பீடு :- எண் குறிக்கேற்ப சரியான உரு அட்டையைக் காட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- எண் அட்டைகளுக்கு ஏற்ப உருவ அட்டைகளை பொருத்தவிடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் குறி

தேர்ச்சி :- ( 1-5 ) எண் குறிக்கேற்ற எண்ணிக்கையில் விரல் அடையாளமிடுவார்

செயற்பாடு :- 3.64 எண்ணிக்கைக்கு ஏற்ப அடையாளமிடல்.

வளம் :- 1 – 5 வரை எழுதப்பட்ட கடதாசித் தாள் A5, நிறச்சாயம் (பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை வட்டமாக இருத்துதல்.
2. ஒவ்வொரு பிள்ளையிடமும் ஆசிரியர் 1-5 வரையான எண் குறிகளை A5 தாளில் எழுதிக் கொடுத்தல் (படத்தில் உள்ளவாறு)
3. பிள்ளைகள் நிறக்கலவையில் தமது கட்டை விரலை தோய்த்தபின் படத்தில் காட்டியவாறு எண்குறிகளுக்கு ஏற்றவாறு அடையாளம் இடல்.
4. ஆசிரியர் வழிகாட்டல்.
5. ஆக்கங்களை காட்சிப்படுத்தல், பார்த்து மகிழ்தல்.

மதிப்பீடு :- எண் குறிக்கேற்ற எண்ணிக்கையில் அடையாளமிடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இவற்றை எண்குறி ஒழுங்கில் அடுக்கிப் புத்தகமாக்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு - எண் குறி

தேர்ச்சி :- (1-5 ) எண்குறிக்கு ஏற்ற எண்ணிக்கையில் உருக்களைத் தெரிவு செய்து ஒட்டுவார்.


செயற்பாடு :- 3.65 உருக்களை ஒட்டுதல்

வளம் :- ஒருபிள்ளைக்கு

- வெட்டியெடுக்கப்பட்ட சிறிய பட உருக்கள் - 15.
- 1 – 5 எண் குறி எழுதப்பட்ட அட்டைகள்
- A4 தாள், பசை

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் எண்குறி அட்டை ஒன்றை காண்பித்து பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.
2. காட்டப்பட்ட எண்குறிக்குச் சமமான உருக்களை எடுத்து ஒட்டிக் காட்டுதல்.
3. குழுக்களுக்கு வளங்களை வழங்கி இச் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.
4. குழுக்கள் செய்தவற்றைக் காட்சிப்படுத்தல்.

மதிப்பீடு :- எண் குறிக்கேற்ற எண்ணிக்கையில் உருக்களைத் தெரிவு செய்வதையும், ஒட்டுதலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- 5 இற்கு மேற்பட்ட எண்களிற்கு இச் செயற்பாட்டைச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கருப்பொருள் :- கணித எண்ணக்கரு –எண் குறி

தேர்ச்சி :- (1 - 5) புள்ளி எண்ணிக்கைக்கு ஏற்ப எண்குறியைத் தெரிவார்.

செயற்பாடு :- 3.66. எண் குறியைத் தெரிதல்.

வளம் :- ஒரு குழுவிற்கு

- முகங்களில் 1 – 5 எண் குறி எழுதப்பட்ட தாயக்கட்டை.-
- முகங்களில் 1 – 5 எண்ணிக்கைக்கு ஏற்ப புள்ளியிடப்பட்ட தாயக்கட்டைகள் - (படத்தில் காட்டியவாறு)




அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை குழுக்களாக்குதல்.
2. தாயக் கட்டைகளை ஒவ்வொரு குழுவுக்கும் கொடுத்தல்.
3. அறிவுறுத்தலுக்கு அமைவாக பிள்ளைகளை விளையாட விடல்.
   - ஒரு பிள்ளை புள்ளி உள்ள தாயக் கட்டை ஒன்றை உருட்டுதல். மேல் நோக்கிய பக்கத்தில் உள்ள உருக்கள் எண்ணிக்கையை அவதானித்தல்.
   - 2வது பிள்ளை எண்குறி எழுதப்பட்ட தாயக்கட்டையை எடுத்து முதலாவது தாயக்கட்டையில் அவதானித்த உருக்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்குறி விழும் வரை உருட்டல்.
4. குழுவிலுள்ள ஏனையோர் சரிபார்த்தல்.
5. எல்லாப் பிள்ளைகளும் விளையாடுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்து வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- உருவுக்கு ஏற்ப எண்குறிகளை இனங் காண்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஓய்வு நேரங்களில் இவ் விளையாட்டை விளையாட ஊக்குவித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் குறி

தேர்ச்சி :- 1 – 5 எண் குறி உள்ள அட்டைகளைத் தொடரொழுங்கில் தொங்கவிடுவார்.

செயற்பாடு :- 3.67 எண் அட்டைகளை தொங்கவிடுதல்.

வளம் :- படத்தில் உள்ளவாறு (1 – 5) எண்குறி எழுதப்பட்டு நூல் இணைக்கப்பட்ட மீன் அட்டைகள் (குழு ஒன்றிற்கு)

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-




1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. குழுக்களுக்கு எண்குறி (1,2,3,4,5) எழுதப்பட்ட மீன் படங்களை வழங்குதல்.
3. கற்றல் நிலையத்தில் ஒரு நூலை இரண்டு கம்பங்களுக்கு இடையில் கட்டுதல்.
4. ஒவ்வொரு குழுவும் மீன் படங்களை எண் வரிசையில் தொங்கவிடல்.

மதிப்பீடு :- எண் குறிகளை தொடரொழுங்கில் வரிசைப்படுத்தித் தொங்கவிடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- எண் குறி அட்டைகளைத் தொடரொழுங்கில் அடுக்கி ஒரு எண்குறியை மறைக்கும் போது அதனைக் கூற விடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் குறி


தேர்ச்சி :- 1 – 5 எண்குறிக்கேற்ப எண்ணிக்கையில் இறப்பர் வளையம் இடுவார்.

செயற்பாடு :- 3.68 இறப்பர் வளையமிடல்.

வளம் :- 5 சதுர வடிவமான பலகைத் துண்டுகள், 30 ஆணிகள், இறப்பர் நாடாக்கள் 1–5 வரையான எண்குறி அட்டைகள் (ஒரு குழுவிற்கு)

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-




1. பலகையின் மேல் அரைப் பகுதியில் படத்தில் உள்ளது போல் ஒரு வரிசையில் 5ஆணிகளையும், முன்னே ஒரு ஆணியையும் அறைதல்.
2. பிள்ளைகளை 5 குழுக்களாக்குதல்
3. குழுக்களுக்கு ஆணி அறையப்பட்ட பலகை, இறப்பர் நாடா, 1 – 5 எண் அட்டைகள், வழங்கல்.
4. குழுவில் உள்ள ஒருவர் எண் அட்டை ஒன்றை எடுத்து முன் ஆணியில் கொளுவுதல்..
5. மற்றொருவர் எண் அட்டையில் உள்ள எண்ணிற்கேற்ப ஆணிகளில் இறப்பர் நாடாவைப் போடுதல்.
6. ஏனையோர் சரிபார்த்தல்
7. குழுவில் எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கல்.

மதிப்பீடு :- எண் குறிக்கு ஏற்ற எண்ணிக்கைக்குத் தடமிடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பலகையில் ஆணிகளை மூன்று நிரைகளில் அறைந்து இறப்பர் நாடாக்களை கொண்டு ஒரே எண்ணிக்கைக்குப் பல வகைப்பட்ட வடிவங்களை ஆக்க விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் குறி


தேர்ச்சி :- 1- 5 எண்குறிக்கேற்ப கிளிப்புக்களைப் பொருத்துவார்.

செயற்பாடு :- 3.69 1 – 5 கிளிப்புப் பொருத்துதல்.

வளம் :- 1 -5 எண்குறி இடப்பட்ட பேப்பர்த் தட்டுக்கள், பேப்பர் கிளிப்புகள் (ஒரு குழுவிற்கு)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-




1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. குழுக்களுக்கு வளங்களைப் பகிர்தல்.
3. பிள்ளைகள் தட்டிலுள்ள எண் குறிக்கேற்ப கிளிப்புக்களைத் தட்டின் விளிம்பில் செருக விடல்.
4. இவற்றை அவதானித்து ஆசிரியர் வழிகாட்டுதல்.
5. பிள்ளைகள் ஒவ்வொன்றாக கிளிப்புக்களை கழற்றும் போது எண்ணியவாறு கழற்றுதல்.

மதிப்பீடு :- எண் குறிக்கேற்ப கிளிப்புகளைச் சரியாகப் பொருத்துவதையும் கழற்றும்போது எண்ணுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. சேலைத் துண்டுகளில் சரியான எண்ணிக்கையில் காப்பூசிகளைக் (ஊசிகள்) குத்துதல்.
2. பாத்திரங்களில் சரியான எண்ணிக்கையில் சிறிய கற்களை இடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு. எண் குறி

தேர்ச்சி :- ( 1-5 ) குறிக்கேற்ற எண்ணிக்கையில் எண்ணிகளைத் தெரிவுசெய்வார்.


செயற்பாடு :- 3.70 எண் சரம் செய்தல்.

வளம் :- (ஒரு குழுவிற்கு)

- நூல்துண்டு - 5, உறிஞ்சிக் குழாய் துண்டுகள் - 15
- 1 – 5 வரை எழுதப்பட்டு துளையிடப்பட்ட எண் அட்டைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-




1. பிள்ளைகளுக்கு வளங்களைப் பகிர்ந்தளித்தல்.
2. எண் குறிக்கேற்ப உறிஞ்சு குழாய்களை ஆசிரியர் கோர்த்துக் காட்டுதல்.
3. எண்குறிக்கேற்றவாறு பிள்ளைகளைக் கோர்க்க விடுதல்.
4. அதனை சரமாகக் கட்டுதல்.
5. இவ்வாறே ஒவ்வொரு எண் குறிக்கும் கோர்த்துச் சரமாக்கல்
6. ஆசிரியர் வழிகாட்டல்.
7. தொடரொழுங்கில் தொங்கவிடல்.

மதிப்பீடு :- எண்குறிக்கு ஏற்ற எண்ணிக்கையில் எண்ணிகளைக் கோர்த்துச் சரமாக்குவதை அவதானித்தல்.

கற்றல்விரிவாக்கம் :- வேறுபொருட்களைப் பயன்படுத்தி இதுபோன்ற எண் மாலைகளை வீட்டில் செய்யவிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு - எண் குறி

தேர்ச்சி :- 1 – 5 எண்ணிக்கைக்கு ஏற்ப எண் குறியுடன் எண் பெயர் கொண்ட அட்டையைத் தெரிவு செய்வார்.

செயற்பாடு :- 3.71 எண்குறி அட்டை தெரிதல்.


வளம் :-

- சோடா மூடி அல்லது புளியம் விதை
- 1 – 5 எண் குறியுடன் எண்பெயர் எழுதப்பட்ட அட்டைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை ஐவர் கொண்ட குழுக்களாக்குதல்.
2. குழுக்களுக்கு 15 சோடா மூடிகளும் (1 - 5) எண்குறிகளுடன் எண்பெயருள்ள அட்டைகளும் வழங்குதல்.
3. குழுக்கள் சோடா மூடிகளை (1,2,3,4,5) என்ற எண்ணிக்கையில் 5 கூட்டங்களாக எடுத்து வைத்தல்.
4. அவற்றின் முன்னே எண்ணிக்கைக்குப் பொருத்தமான எண்குறி, எண்பெயர் அட்டையை வைத்தல்.
5. எல்லோருக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.




மதிப்பீடு :- எண்ணிக்கைக்கு ஏற்ப எண்குறி அட்டையைத் தெரிவு செய்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- எண்ணிக்கைக்கு ஏற்ப எண் குறி அட்டைகளைத் தெரியவிடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண் குறி

தேர்ச்சி :- எண் குறிக்கேற்ப எண் பெயரைத் தெரிவு செய்வார்.

செயற்பாடு :- 3.72 எண் குறிக்கேற்ப எண் பெயரைத் தெரிதல்.

வளம் :- ( 1-5 ) வரையான எண் குறி அட்டை

( 1-5 ) வரையான எண் பெயர் அட்டை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-




1. வகுப்பறைக்கு வெளியே பிள்ளைகளுக்கு தெரியக் கூடியவாறு எண் அட்டைகளை வைத்தல்.
2. ஆசிரியர் எண் குறி அட்டை ஒன்றைத் தூக்கிக் காட்டல்.
3. பிள்ளைகள் அதற்கேற்ற எண்பெயர் அட்டை உள்ள இடத்தை நோக்கி ஓடுதல்.
4. (1-5) வரையான எல்லா எண் குறிக்கும் இதனைச் செய்தல்.

மதிப்பீடு :- எண் குறிக்கு ஏற்ப எண் பெயரைத் தெரிவு செய்வதை அவதானித்தல்.

கற்றல்விரிவாக்கம் :- எண் குறி அட்டைகளையும், எண் பெயர் அட்டைகளையும் முறையே இரண்டு நிரல்களில வைத்து தொடர்புபடுத்த விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கணித எண்ணக்கரு – எண்குறி


தேர்ச்சி :- 1 – 5 வரையான எண் குறிகளை இனங்கண்டு வரைவார்.

செயற்பாடு :- 3.73 எண்குறிகளை வரைதல்.

வளம் :- 1 – 5 வரை எழுதப்பட்ட எண் குறி அட்டைகள் (4"x 4") , பென்சில், பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான அளவு காகித அட்டைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளுக்கு காகித அட்டைகளை வழங்குதல்.
2. மேசை மீது 1 - 5 வரையான எண் குறி அட்டைகளை வரிசையாக வைத்தல்.
3. ஒவ்வொரு எண் குறியையும் பார்த்து தனித் தனி காகித அட்டைகளில் வரையுமாறு பிள்ளைகளுக்குக் கூறுதல்.
4. ஆசிரியர் அழைக்கும் பிள்ளை தான் வரைந்த எண் அட்டையை மேசையிலுள்ள உரிய அட்டையின் மீது வைக்குமாறு கூறுதல்.
5. அவதானித்து வழிகாட்டல்.
6. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கல்.

மதிப்பீடு :- எண் குறிகளை வரைவதையும், உரிய எண்குறியின் மீது அடுக்குவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகள் வரிசைக் கிரமத்தில் நிலத்தின் மீது எழுதப்பட்ட எண் கோட்டின் மீது பெயர் கூறி நடக்க விடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# சுற்றாடலைப் புரிந்து கொள்ளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடலை புரிந்து கொள்ளுதல்

- பிள்ளையைச் சுற்றியுள்ள இடத்தில் காணப்படும் மனிதன் உட்பட அனைத்து பொருட்களும் நிகழ்வுகளும் சுற்றாடலின் கூறுகள் ஆகும். ஆகவே வீட்டினதும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தினதும் சுற்றாடலே பிள்ளையின் சுற்றாடல் ஆகும்.
- சுற்றாடலை விருப்புக்குரியது, வெறுப்புக்குரியது என வகைப்படுத்தலாம்.
- சுற்றாடலை கண்டறியவும் புரிந்து கொள்ளவும் ஐந்து புலன் உணர்வுகளைப் பயன்படுத்துவது அவசியமாகும்.
- கண்டறியப்பட்ட சுற்றாடலானது மனிதர், விலங்குகள், பறவைகள், ஊர்வன, மீன்கள், புழுக்கள், தாவரங்கள், போன்ற உயிருள்ளவற்றையும், வளி, நீர், வீடுகள், தொழிற்சாலைகள், புத்தகங்கள் போன்ற உயிரற்றவற்றையும் கொண்டிருக்கும்.
- சுற்றாடலின் எல்லாக் கூறுகளும் பிள்ளையின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாய் இருப்பதுடன் பிள்ளையின் மதிப்பார்ந்த கற்றலுக்கு பல சந்தர்ப்பங்களை வழங்கக்கூடியதாகவும் இருக்கும்.
- பிள்ளையானது சுற்றாடலை பார்த்தல், தொட்டு உணருதல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், ஆகிய புலனுணர்வுகளினூடாகக் கண்டறிகிறது.
- சுற்றாடலுடன் இடைத்தாக்கமுறுவதன் மூலமே எல்லா கண்டறிதல்களும் நிகழ்கின்றன.
- சுற்றாடலினுள் இடைத்தாக்கமுறுவதன் மூலமே பிள்ளையினது அவதானித்தல் ஆக்கச் செயற்பாடு, சித்திரம், சங்கீதம், நாடகம், சொல் சார்ந்த தொடர்பாடல் இனம் காணுதல் ஆகிய திறன்கள் விருத்தியடைகின்றன.
- பிள்ளையின் விருத்தி நிலைகள் தொடர்பாக பூரண விளக்கமுடைய ஆசிரியர் ஒருவர் பொருத்தமான கற்றல் செயற்பாடுகளைத் தயாரித்து முன்வைப்பார்.
- இதனூடாகப் பிள்ளையானது சுறுசுறுப்பாக இருப்பதற்கானதும் பொருட்களைக் கையாளுவதற்கானதுமான தரமான திறன்களைப் பெற்றுக்கொள்வர்.
- நீர், கற்கள், மணல், களி, பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் விளையாடும் பிள்ளைகள் பரிசோதனை செய்பவர்களாகவும் அவதானிப்பவர்களாகவும் மாறுவது மாத்திரமன்றி கண்டுபிடிப்பாளர்களாகவும் ஆவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பல்வேறு இடங்களையும் தரிசிக்கும் போது பிள்ளைகளின் சுற்றாடல் தொடர்பான விளக்கம் விரிவடையும்.
- சிறிய களப்பயணங்கள் கூட கவனத்துடன் திட்டமிடப்பட வேண்டும். (பிள்ளைகளின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது) பல்வேறு விடயங்கள் தொடர்பாக வளர்ந்தோரிடம் உரையாடுவதற்கான சந்தர்ப்பங்கள் முக்கியமானவையாகும். இதனூடாக பிள்ளைகள் அதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வார்கள்.
- இவ்வாறான குறுகிய களப்பயணங்களின் போது பெற்றோர்களின் உதவி பெறப்படுமாயின் அதிக எண்ணிக்கை கொண்ட பிள்ளைகளின் குழுக்களைக் கையாளுவது இலகுவாயிருக்கும்.
- பிள்ளைகளின் நடத்தைகளை அவதானித்துப் பதிவு செய்வதன் மூலம் பிள்ளைகள் என்ன விடயத்தை அதிகம் விரும்புகின்றார்கள் என ஆசிரியர் நன்கு அறிந்திருப்பர். இந்த அனுபவமானது பிள்ளைகளுக்கு மிகவும் விருப்பமானதும் பொருத்தமானதுமான விளையாட்டுக்களையும் செயற்பாடுகளையும் திட்டமிடுவதில் பெரிதும் உதவும்.
- வேர்கள், கிழங்குகள், நீர்த்தாவரங்கள் போன்றவற்றைத் தொடர்புபடுத்தல், வடிவத்திற்கேற்ப இலைகளை வகைப்படுத்தல். தொடுகை மூலம் மரப்பட்டைகளின் தன்மையை கற்றல் போன்ற செய்முறை சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் பிள்ளைகளின் சுற்றாடல் தொடர்பான கண்டறியும் ஆர்வத்தைத் தூண்டலாம்.
- முன்பள்ளி நிலையங்களில் சுற்றாடல் மூலை ஒன்றை பேணுவதன் மூலம் பிள்ளைகளைச் சுற்றாடலில் ஆர்வம் காட்டச் செய்யமுடியும்.
- பல்வேறு விதமான பூக்கள், பழங்கள், தானியங்கள், மண், இறகுகள், இலைகள் ஆகியவற்றை பிள்ளைகள் சுற்றாடல் மூலைக்கு கொண்டு வருதல் வேண்டும்.
- கற்றலானது தெரிந்ததில் இருந்து தெரியாததற்கும் எளிமையில் இருந்து சிக்கலானதிற்கும் இட்டுச் செல்வதன் மூலமே நிகழும்.
- பிள்ளைகள் தங்கள் வகுப்பறையில் உள்ள சுற்றாடல் மூலையை, நிலைய வளவு முழுவதையும் உள்ளடக்கியதான சுற்றாடல் பூங்காவாக மாற்றி அமைப்பதற்கு முன்வருவார்கள்.
- முன்பள்ளி நிலையமானது பிள்ளைகள் அங்கும் இங்கும் ஓடித்திரியக் கூடியதாகவும் பல்வேறு செயற்பாடுகளை செய்யக்கூடியதாகவும் விசாலமான வளவைக் கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மேலும் நிலையத் தோட்டமானது மரங்கள், பூக்கள், பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள் மற்றும் ஏனைய உயிரினங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கக் கூடியளவு வசதிகளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.
- மேலும் பறவைகளின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப அவற்றின் அலகுகள், கால்கள், என்பவற்றின் இசைவாக்கங்களை அவதானிப்பதற்கு பிள்ளைகளை இட்டுச் செல்லவேண்டும்.
- சுயமாக பறவைகளின் படங்களைப் பார்ப்பதற்கும் இறகுகளை சேகரிப்பதற்கும் படங்களை வரைவதற்கும் இச்செயற்பாடுகள் பிள்ளைகளைத் தூண்டும்.
- இவ்வாறான இயற்கைச் சுற்றாடல் தவிர சமூகச்சுற்றாடலுடனும் பிள்ளைகள் தமது அன்றாட வாழ்க்கையில் தொடர்புபட்டுள்ளனர்.
- இவற்றைவிட பிள்ளைகள் தமது பெற்றோரையும் உறவினரையும் தவிர வேறு மனிதர்களையும் சந்திப்பார்கள். அவ்வாறானவர்களுடன் உரையாடுவதால் அவர்கள் பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொள்கின்றார்கள். இதன்மூலம் சமூகத்திறன்கள் விருத்திசெய்யப்படுகின்றன.
- சமூகத்திறன்களுடன் பிள்ளைகளின் மனப்பாங்கு நல்ல முறையில் உருவாவதுடன் மொழித் திறனும் விருத்தியடைகின்றது.
- முன்பள்ளிக் காலத்தில் பிள்ளைகளில் வளர்ச்சியும் விருத்தியும் நிகழ்கின்றது.
- எனவே நல்ல பழக்கவழக்கங்கள், மனப்பாங்குகள், தொடர்புகள் விருத்தி செய்யப்படுவது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்.
- மேலே குறிப்பிட்ட தகவல்கள் மூலம் சுற்றாடலுடன் பிள்ளைகள் ஈடுபடுவதனால் அவர்களுடைய அறிவு, திறன், மனப்பாங்கு எவ்வாறு விருத்தியடைகின்றது என்பது தொடர்பான விளக்கம் தரப்பட்டுள்ளது. எனவே நிலைய ஆசிரியர் பொருத்தமான உகந்த முறையில் நிலையத்தின் செயற்பாடுகள் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
- கூர்மையான அவதானம் மூலம் பிள்ளைகளின் விருப்பு, வெறுப்பு போன்ற தகவல்களை வேறு எந்த நபரிலும் பார்க்க நன்கு தெரிந்தவராக ஆசிரியர் இருப்பதால் விடயங்கள் கருமங்கள் அவருக்கு கடினமானதொன்றாக இருக்கமாட்டாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடலைப் புரிந்து கொள்ளுதல் - சுருக்கம்

1. பிள்ளைகளின் விருத்தியில் சுற்றாடல் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது.
2. ஆசிரியர் முன்பள்ளி நிலைய சுற்றாடலை கவர்ச்சிகரமாகவும் கற்றல் பெறுமானங்கள் மிகுந்த இடமாகவும் பேணவேண்டும்.
3. வகுப்பறை, நிலைய வளாகம் என்பன பிள்ளைகள் சுயாதீனமாகவும் பாதுகாப்பாகவும் உலாவித் திரியக் கூடியதாகவும் பரிசோதனைகளிலும் ஆய்வுகளிலும் ஈடுபட்டு திறன் விருத்தி செய்யக்கூடிய வாய்ப்புக்களை வழங்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
4. சமூகத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்ல பண்புகளையும் பழக்கவழக்கங்களையும் விருத்தி செய்யக்கூடியதாக, பிள்ளைகள் இடைவினை கொள்ளக்கூடிய சமூகச் சுற்றாடல் அமைந்திருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | ஐம்புலன் விருத்தி |
| தேர்ச்சி | :- | தொடுகை மூலம் பொருட்களை இனங்காணும் ஆற்றலை விருத்தி செய்வார். |
| செயற்பாடு | :- | 4.1 கண்ணைக்கட்டி விளையாடு. |
| வளம் | :- | பிள்ளைக்குப் பரிச்சயமான பொருள் தொகுதி, கண்ணை மூடிக்கட்ட மென்மையான துணித்துண்டு. |
| அணுகுமுறை | :- | விளையாட்டு |
| செயலொழுங்கு | :- | |

1. பொருட்களை மேசையில் வைத்தல்.
2. பிள்ளைகள் பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்து தடவிப்பார்க்க விடுதல்.
3. பிள்ளை ஒன்றை அழைத்து அவரின் கண்களைக் கட்டியபின் ஒரு பொருளைக் கொடுத்து இனங்காண விடுதல்.
4. இதே போல் ஏனைய பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | செயற்பாட்டின் போது துலங்கலை அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கம் | :- | பாதத்தால் பொருட்களைத் தொட்டு இனங்காண விடுதல். |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- ஐம்புலன் விருத்தி

தேர்ச்சி :- தொட்டுணர்ந்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார்.

செயற்பாடு :- 4.2 மாயப் பெட்டி

வளம் :- சாதாரண காட்போட் பெட்டி, விளையாட்டுப் பொருட்கள், சொக்ஸ்(காலுறை), உருவப்படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பின்வருமாறு மாயப் பெட்டி ஒன்றை ஒழுங்குபடுத்தல். காட்போட் பெட்டியின் ஒரு பக்கத்தில் 7cm விட்டமுடைய துவாரம் ஆக்குக. துவாரத்தில் சொக்சை ஒட்டுக. பெட்டியைச் சுற்றி உருவப்படங்களை ஒட்டி அலங்கரித்தல்.
2. மேசையில் உள்ள பொருள் தொகுதியை மாணவர்கள் தடவிப் பார்க்க விடுதல். அவற்றின் பெயர்களை கேட்டறிதல்.
3. பொருட்களை பிள்ளைக்குத் தெரியாமல் பெட்டியில் வைத்தல்.
4. ஒரு பிள்ளையை அழைத்து பெட்டியினுள் கையை நுழைத்து பொருளை இனங்காண விடுதல்.
5. இதே போல் ஏனைய பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- செயற்பாட்டின் போது இனங்கண்டு பெயர் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகளைக் குழுக்களாக்கி தொழிற்பட விடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- ஐம்புலன்கள்

தேர்ச்சி :- சுற்றாடலில் இருந்து பெறப்பட்ட பொருட்களை மணத்தின் மூலம் இனங்கண்டு கூறுவார்.

செயற்பாடு :- 4.3 மணத்தினால் இனங்காண்போம்.

வளம் :- பாத்திரங்கள், பால், தாவரப் பானங்கள், பூக்கள், இலைகள், வினாகிரி, மண்ணெய், மெல்லிய துணித்துண்டு.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பொருட்களை தனித்தனியாக பாத்திரங்களில் இடல்.
2. பிள்ளை ஒருவரை அழைத்து கண்களைக் கட்டுதல்.
3. வழங்கப்பட்ட பொருட்களை மணந்து இனங்காண வழிப்படுத்துதல்.
4. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தீப் பெட்டியில் பொருட்களை இட்டு பொதி செய்து பெட்டியில் துளையிட்ட பின் மணந்து இனங்காண விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- எதிர்வுகூறல்

தேர்ச்சி :- பிரச்சினைகளை விடுவிக்கும் ஆற்றலை விருத்தி செய்வார்.

செயற்பாடு :- 4.4. ஊசல்.

வளம் :- வெற்றுக் குளிர்பான போத்தல்-10, நூல் 2 m, றபர், (மரத்துண்டு / பெரிய உலர்கலம்)


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஊசல் ஒன்றைத் தயாரித்தல்.

சிறிய மரத் துண்டை அல்லது உலர்கலத்தை துணியில் பொதிசெய்து கூரையில் கட்டி ஊசலின் பொதி நிலத்திற்கு அண்மையாக இருக்குமாறு தொங்க விடல்.

2. போத்தல்களை சதுர வடிவில் ஊசலைச் சுற்றி அடுக்குதல். முறையே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்ற எண்ணிக்கையில் சதுரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் நிலைக்குத்தாக இருக்கக்கூடியதாக அடுக்குதல்.



3. ஊசலின் குண்டை இழுத்து அசைய விடுக. ஊசலின் மோதலினால் போத்தல்கள் விழுவதை அவதானிக்க விடல்.
4. ஊசலை அசைய விட முன்னர் பிள்ளையிடம் எந்தப் போத்தலை விழுத்துவீர்? / எத்தனை போத்தல்களை விழுத்துவீர்? என வினாவுதல்.
5. பிள்ளைகளைச் செயற்பட விட்டு யார் அதிக போத்தல்களை விழுத்தினார்கள் என்பதை அறிய விடல்.

மதிப்பீடு :- மாணவரின் துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- போத்தல்களை முக்கோணி/ ஐங்கோணி வடிவில் அடுக்கிச் செயற்பட விடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- எதிர்வு கூறல்

தேர்ச்சி :- சாய்தளமொன்றில் வைக்கப்படும் பொருள் ஒன்று இயங்கும் விதத்தை அவதானித்துக் கூறுவார்.

செயற்பாடு :- 4.5 சாய்வான பாதை

வளம் :- வெவ்வேறு பருமன், நிறை கொண்ட பந்துகள், ஒரு நீளப் பலகை, சீமெந்து அரிகல்-03

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. படத்தில் காட்டியவாறு சாய்தளம் ஒன்றை அமைத்தல்.
2. பிள்ளைகளிடம் நீங்கள் சாய்வான தளத்தைப் பார்த்தீர்களா? அதில் ஏதாவது பொருளை வைத்துப் பார்த்தீர்களா? என வினவுதல்.
3. சாய்தளத்தின் மேல் முனைக்கருகில் கிடையாக கோடு ஒன்று வரைதல். அக் கோட்டில் பந்து ஒன்றை வைத்தல். பந்து உருண்டு ஓடியபின் ஓய்வை அடையும் இடத்தை அடையாளம் இடுதல். இதே போல் வெவ்வேறு பொருட்களை வைத்து செயற்பட விடல்.
4. பின்வருவன போன்ற வினாக்களை வினாவுவதன் மூலம் அவர்களின் ஆர்வத்தை வளர்த்தல்.

- எந்தப் பந்து நீண்ட தூரத்திற்கு சென்றது?
- எந்தப் பந்து குறைந்த தூரத்திற்கு சென்றது?
- நீண்ட தூரம் பந்து சென்றதற்கான காரணம் யாது?
- சிறிய மாபிள் குண்டுகளை இடும் போது எவ்வளவு தூரம் செல்லும்?
- பலகையைச் சிறிது உயர்த்தி வைத்தால் பந்து செல்லும் தூரத்தில் என்ன மாற்றம் நிகழும்?


5. மேற்படி வினாக்களுக்கு விடை காணும் விதமாகச் செயற்பாடுகளைச் செய்ய வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- துலங்கல்களை அவதானித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் விரிவாக்கம் :-

1. விளையாட்டுக் கார் ஒன்றை விட்டுப் பார்க்க.
2. விளையாட்டுக் காரில் பாரம், ஏற்றி மீண்டும் விட வழிப்படுத்துக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- எமது வீடும் முன்பள்ளியும்.

தேர்ச்சி :- வீட்டைப்பற்றியும் வீட்டில் உள்ளோர் பற்றியும் கூறுவார்.

செயற்பாடு :- 4.6 மாதிரி வீடு.

வளம் :- பழைய அட்டைப்பெட்டி, வானீஸ் தாள், குடும்ப உறுப்பினர்களின் படங்கள், வர்ணக் கட்டிகள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. வீடும் அங்குள்ளவர் பற்றியும் கலந்துரையாடுதல்.
2. வீடு ஒன்றை அமைத்தல், அது பற்றிக் கலந்துரையாடுதல்.
3. குடும்ப உறுப்பினர், வீட்டிற்கு வருவோர் பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடுதல்.
4. அம்மா, அப்பாவின் செயல்களையும் வீட்டில் நடைபெறும் செயற்பாடுகளையும் போலச் செய்யவிடுதல்.

மதிப்பீடு :- வீட்டின் அவசியத்தையும், நடைபெறும் செயல்களையும் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- விருந்தினரை வரவேற்றல், சிற்றூண்டிகள் பரிமாறல் போன்றவற்றைப் போலச் செய்தல் வீட்டின் படம் வரைய விடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப் பொருள் :- எமது வீடும் முன்பள்ளியும்.

தேர்ச்சி :- முன்பள்ளியும் முன்பள்ளியில் உள்ளோர் பற்றியும் கூறுவார்.

செயற்பாடு :- 4.7. மாதிரி முன்பள்ளி.

வளம் :- பழைய அட்டைப்பெட்டி, வானீஸ் தாள், மாணவர் ஆசிரியர் படங்கள், வர்ணக்கட்டிகள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. முன்பள்ளியும் அங்குள்ளவர் பற்றியும் கலந்துரையாடல்.
2. முன்பள்ளி ஒன்றை அமைத்தல், அது பற்றிக் கலந்துரையாடல்.
3. முன்பள்ளியில் உள்ளவர்கள், வருவோர் பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.
4. ஆசிரியரின் செயல்களைப் பிள்ளை பாவனை செய்தல்.

மதிப்பீடு :-

1. முன்பள்ளியின் அவசியம் பற்றிக் கூறுவார்.
2. முன்பள்ளியில் நடைபெறும் செயற்பாடுகளை பாவனை செய்வார்.

கற்றல் விரிவாக்கம் :-

1. முன்பள்ளியை அழகுபடுத்தல்.
2. முன்பள்ளிக்கு பிள்ளைகள் வரும் முறைகள் பற்றிக் கலந்துரையாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சுற்றாடலில் உள்ள தாவரங்கள்.

தேர்ச்சி :- சுற்றாடலில் உள்ள தாவரங்கள் பற்றிக் கூறுவார்.

செயற்பாடு :- 4.8. சுற்றாடல் கள ஆய்வு

வளம் :- பை, மாதிரிகள், பசை, அட்டை.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. முன்பள்ளிச் சுற்றாடலில் பொருத்தமான இடத்தைச் தெரிவு செய்து பிள்ளைகளை அழைத்துச் செல்லல்.
2. அங்குள்ளவற்றை ஐம்புலனூடாக உற்று நோக்க வழிப்படுத்தல்.
3. அவதானித்த தாவரங்களின் பெயர்களைக் கூற விடுதல்.
4. சில இயல்புகளின் அடிப்படையில் தாவரங்களை வகைப்படுத்த வழிகாட்டல். (உயரத்தின் அடிப்படையில்)
5. பொருத்தமான மாதிரிகளைச் சேகரிக்க வழிப்படுத்தல்.
6. வகுப்பறையில் அவற்றை பாகுபடுத்தி காட்சிப்படுத்தல். (தாவர வகை, இலைகளின் வகை,....)

மதிப்பீடு :- ஆசிரியர் காட்டும் தாவரத்தின் பெயர் வகையை கூறுவார்.

கற்றல் விரிவாக்கம் :-

1. வேறு தாவரங்களை சேகரித்தல்.
2. ஆக்கங்கள் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள். :- சுற்றாடலில் உள்ள தாவரங்கள்.

தேர்ச்சி :- விசேட இயல்புள்ள தாவரங்களையும், தாவரங்களின் பயன்பாடுகளையும் கூறுவார்.

செயற்பாடு :- 4.9 எம்மைக் கவரும் தாவரங்கள்

வளம் :- கற்பூரவள்ளி, துளசி, தோடை, எலுமிச்சை, தொட்டாற் சுருங்கி

அணுகுமுறை :- கள ஆய்வு

செயலொழுங்கு :-

1. விசேட இயல்புடைய தாவரங்களைச் சேகரித்தல்.
2. அவற்றை காட்சிப்படுத்தல்.
3. ஆசிரியரின் உதவியுடன் விசேட இயல்புக்கமைய வகைப்படுத்தல். (மணம், நிறம், முட்கள், மேற்பரப்பின் தன்மை)
4. தாவரங்களின் பெயர்களைக் கூறுதல்.

மதிப்பீடு :- காட்சிப்படுத்தப்பட்ட தாவரத்தின் விசேட இயல்பைக் கூறுவதையும், குறித்த இயல்புடைய தாவரத்தின் பெயரைக் கூறுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மணமுள்ள தாவரப் பகுதிகளை பொதி செய்து தாவரத்தை இனங்காண விடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப் பொருள் :- சுற்றாடலில் உள்ள தாவரங்கள்.

தேர்ச்சி :- விதைகள் தாவரங்களாக வளர்வதை அவதானித்துக் கூறுவார்

செயற்பாடு :- 4.10 மரம் வளர்ப்போம்

வளம் :- விதைகள், மண், நீர், பூச்சாடிக்குரிய பாத்திரம்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்
2. பிள்ளைகள் சேகரித்த விதைகளை வகுப்பிற்கு கொண்டுவருதல்.
3. சுற்றாடலில் சேகரிக்கப்பட்ட, பூச்சாடிக்குப் பொருத்தமான பாத்திரங்களில் விதைகளை நாட்ட வழிப்படுத்தல்.
4. பாத்திரத்தை பொருத்தமான இடத்தில் வைத்து பராமரித்தலும், அவதானித்தலும்.

மதிப்பீடு :- ஆர்வத்துடன் தாவரத்தை வளர்ப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- முன் பள்ளியில் தோட்டம் / பூந்தோட்டம் அமைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சுற்றாடலில் உள்ள தாவரங்கள்.

தேர்ச்சி :- அவதானங்களை நடித்தல் மூலம் முன்வைப்பார்.

செயற்பாடு :- 4.11 நாங்கள் தாவரங்களாவோம்.

வளம் :- வித்துக்கள், மண், நீர், பாத்திரங்கள்.

அணுகுமுறை :- நடிப்பு

செயலொழுங்கு :-



1. தாவரங்கள் என்ற கருப்பொருளின் கீழ் **'மரம் வளர்ப்போம்'** என்ற செயற்பாட்டினை மீள நினைவூட்டுதல்.
2. பிள்ளைகள் வளர்த்த நாற்றுக்களின் வளர்ச்சி தொடர்பான தகவல்களை மீட்டல்.
3. அத் தகவல்களை வைத்துக் கொண்டு உருவாக்கிய கதையை அபிநயத்துடன் முன்வைத்தல்.

> இப்பொழுது நாங்கள் மண்ணின் கீழ் விதையாகவுள்ளோம். நாங்கள் மிகவும் சிறியவர்கள் ஆவோம். மெதுவாகச் சூட்டை உணர்கின்றோம். ஆயினும் நீர் ஊற்றிய படியால் ஈரலிப்பையும் உணர்கின்றோம். இப்பொழுது நாங்கள் மெது மெதுவாக வெளியே வருகின்றோம். நாம் மேலும் சிறிது வளர்ந்து விட்டோம். தரைக்கு மேலே வளர்ந்து விட்டோம். இலைகள் தோன்றி விட்டன. நாம் சிறிது சிறிதாக வளருகின்றோம். காற்று வீசுகின்றது. மழை பொழிகின்றது. நாங்கள் நனைந்து விட்டோம். ஈரலிப்பாக இருக்கிறோம் களைத்து விட்டோம். சூரியன் உதிக்கின்றது. எமது கிளைகள் பரந்து விரிவடைகின்றன. வெய்யிலில் காய்கின்றோம்.'

மதிப்பீடு :- ஆசிரியரைப் பின்பற்றி பிள்ளைகளின் நடிக்கும் ஆற்றலை மதிப்பிடல்.

கற்றல் விரிவாக்கம் :- வெவ்வேறு தாவர விதைகளை நாட்டி முளைப்பதை அவதானிக்க விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சுற்றாடலில் உள்ள தாவரங்கள்.

தேர்ச்சி :- ஒத்த வடிவமுள்ள இலைகளை ஒன்றுபடுத்திக் காட்டுவார்.

செயற்பாடு :- 4.12. வடிவொத்த இலைகளை இணைத்தல்

வளம் :- சுற்றாடலில் உள்ள பல்வேறு வகையான இலைகள்.

அணுகுமுறை : விளையாட்டு.

செயலொழுங்கு :-



1. ஆசிரியரும் பிள்ளைகளும் சுற்றாடலுக்குச் சென்று பல்வேறு இலைகளைச் சேகரித்தல்.
2. சேகரித்த இலைகளுடன் மாணவர்கள் வட்டமாக நிற்றல்.
3. ஆசிரியர் தம்மிடமுள்ள குறித்த இலைக்கு ஒத்த வடிவமுள்ள இலையைத் தேர்ந்தெடுக்க வழிப்படுத்தல்.
4. பிள்ளைகள் தொகைக்கேற்ப குழுக்களாக்கி இலைகளின் தொகுதியை வழங்கி தட்டுகளில் வகைப்படுத்த வழிகாட்டல்.

மதிப்பீடு :- வழங்கப்பட்ட இலையொன்றின் ஒத்த வடிவமுள்ள இன்னுமொரு இலையைத் தேர்ந்தெடுப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. இலைகளைக் கொண்டு ஆக்கங்கள் செய்தல்.
2. பெற்றோரின் உதவியுடன் இலைகளை உலர வைத்து தாளில் ஒட்டிக் காட்சிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- பிராணிகள்

தேர்ச்சி :- வீட்டில் வாழும் பிராணிகள் தொடர்பான தகவல்களைக் கூறுவார்.

செயற்பாடு :- 4.13 வீட்டில் வாழும் பிராணிகள்

வளம் :- வீட்டில் வாழும் பிராணிகளின் படங்கள்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. வீட்டில் வாழும் பிராணிகளின் படங்களைக் காட்டுதல். (பூனை, நாய், எலி, சிலந்தி,.......)
2. அவற்றின் தோற்றம் உணவுப் பழக்கம்,நடத்தை தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
3. பிள்ளைகள் அவ் விலங்குகளின் ஒலிகளை ஒலிக்க விடுதல்.
4. தாம் அறிந்த பிராணிகள் என்ற தலைப்பில் படங்களை ஒட்ட வழிப்படுத்துதல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் துலங்கல், ஒப்படைகளை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகளால் பேணப்படும் பிராணிகளின் புத்தகத்தில் தொடர்ச்சியாக அவதானிக்கும் விலங்குகளின் படங்களை ஒட்டுதல். விசேட இயல்பு தொடர்பான படங்களை வரைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- பிராணிகள்.


தேர்ச்சி :- பிராணிகள் வாழுமிடம் தொடர்பாக தேடி அறிந்து கூறுவார்.

செயற்பாடு :- 4.14 பிராணிகள் வாழுமிடம்

வளம் :- இயற்கைச் சுற்றாடலில் பிராணிகளின் வாழிடத்துடன் கூடிய பிராணிகளின் படங்கள், வாழ்விடங்களின் படங்கள், அவற்றுக்குரிய பிராணிகள், சேகரித்த கூடுகள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. சுற்றாடலில் பிராணிகள் வாழுமிடத்தைக் காட்டும் படத்தைக் காட்சிப்படுத்துதல்.
2. இவை தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
3. (பொந்துகள், கூடுகள், வளைகளில் வாழ்பவை)
4. தனிய வாழ்விடங்கள் மட்டும் உள்ள படத்தைக் காட்சிப்படுத்துதல். பிராணிகளின் படங்களை வழங்கி அவற்றுக்குரிய வாழ்விடத்தில் பொருத்தமாக வைக்க வழிப்படுத்துதல்.
5. இதே போல ஏனைய குழுக்களுக்கும் தொழிற்பட சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தமது வீட்டுச் சுற்றாடலில் உள்ள பிராணிகள் வாழுமிடம், உண்ணும் உணவு, உண்டாக்கும் ஒலிகள் தொடர்பாக தேடியறிதல். இத் தகவல்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- பிராணிகள்

தேர்ச்சி :- சுற்றாடலில் உள்ளவை தொடர்பாக மேலும் தகவல்களைச் சேகரிக்க ஆர்வத்துடன் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 4.15 பிராணிகளின் எச்சங்களைச் சேகரித்தல்.

வளம் :- விலங்குகளின் ஓடுகள், பறவைகளின் இறகுகள், முட்டைக் கோது, சிப்பி, நத்தை ஓடு

அணுகுமுறை :- செயற்பாடு


செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக இருக்க விடுதல்.
2. சேகரித்த பொருட்கள் தொடர்பாக அவர்கள் அறிந்தவற்றை வினவுதல். ஆசிரியர் சில தகவல்களைக் கூறுதல்.
3. *உ-ம்: எப் பறவையின் இறகு?*
4. *சிப்பி, சோகி, ஓடுகள் எப்படி வந்தன?*
5. *வித்துக்கள் எவ்வாறு வந்தது? (வீட்டில் இல்லாத தாவரவித்துக்கள்.)*

இப் பொருட்களை தொடர்ந்து கற்றலுக்காக சுற்றாடல் மூலையில் வைக்குக.

மதிப்பீடு :- பிள்ளைகளின் அனுபவங்களைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஓய்வு நேரத்தில் அப் பொருட்களை அவதானித்து அவை தொடர்பாக தகவல்களை கலந்துரையாடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- பிராணிகள்.

தேர்ச்சி :- அவதானித்தலினூடாக பூச்சிகளின் இயல்பு பற்றி அறிக்கைப்படுத்துவார்.

செயற்பாடு :- 4.16 பூச்சிகளின் விருந்து

வளம் :- யோக்கட் மூடிகள், பிஸ்கற், மீன், இறைச்சி, தேன், சோறு போன்றன சிறிதளவு

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல், செயற்பாட்டில் ஈடுபட வழிகாட்டல்.
2. யோக்கட் மூடிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகை உணவை இடுதல்.
3. தட்டுக்களை யன்னல் ஓரத்தில் வைத்தல்.
4. பிள்ளைகளை ஓரளவு தூரத்திற்கப்பால் இருந்து அவதானிக்க விடல்.
5. 20 நிமிடத்தின் பின் அருகில் சென்று அவதானிக்க விடல்.
6. பின்வரும் வினாக்கள் மூலம் அவதானத்தை கூர்மைப்படுத்துதல்..

*வீட்டு ஈக்கு விருப்பமான உணவு எது?*
*எறும்புக்கு விருப்பமான உணவு எது?*
*உணவுத் துணிக்கைகளை காவிச் செல்கின்றனவா?*
*பெரிய உணவுத் துணிக்கைகளை எவ்வாறு கொண்டு செல்கின்றன?*

மதிப்பீடு :- துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. இங்கு வைக்கப்படாத ஏனைய உணவுகள் மீதுள்ள விருப்பம் தொடர்பாக வினவுதல்.
2. மேலதிக உணவுகளை வைத்து அவதானிக்க விடல்.
3. வெவ்வேறு நிறமுடைய ஒரேமாதிரியான தட்டுக்களில் குறித்த ஒரு உணவை வைத்து அவதானிக்கவிடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- உறவு கொள்வோர்.

தேர்ச்சி :- வகுப்பிலுள்ள மாணவர்கள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கூறுவார்.

செயற்பாடு :- 4.17. போத்தலைச் சுழற்றுதல்

வளம் :- மூடியுடன் கூடிய உயரமான வெற்றுப் போத்தல்

அணுகுமுறை :- விளையாட்டு.

செயலொழுங்கு :-



1. மாணவர்களை வட்டமாக அமரச் செய்தல்.
2. ஆசிரியர் போத்தலை வட்டத்தின் மையத்தில் வைத்து சுழற்றுதல். போத்தல் நின்றவுடன் போத்தல் மூடி எந்த மாணவனை நோக்கி நிற்கின்றதோ அம்மாணவன் வினவப்படும் வினாவுக்கு விடையளிக்க வேண்டுமென அறிவுறுத்தல். (வினாக்கள் - அவனது சுயவிபரம், விருப்பு, வெறுப்பு தொடர்பான விபரங்களை கொண்டதாக அமையும்.)

   *உ-ம்: உமக்கு விருப்பமான நிறம் என்ன?*

   *உமக்கு எத்தனை அண்ணா உண்டு?*
3. மேலே கூறியவாறு செயற்பாடுகளில் ஈடுபட்டு விடையளிக்க எல்லா பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.
4. மாணவர் கூறிய விடைகளை மீளவும் வலியுறுத்தி வகுப்பில் முன் வைக்க வேண்டும்.

மதிப்பீடு :- சக மாணவர்களின் சுய விபரம், விருப்பு தொடர்பான விபரங்களை எடுத்துக் கூறுவார்.

கற்றல் விரிவாக்கம் :- மாணவர்களை குழுக்களாக்கி சுயமாகச் செயற்படவிடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- உறவு கொள்வோர்

தேர்ச்சி :- ஆக்கபூர்வமான செயற்பாடு மூலம் ஏனைய பிள்ளைகள் தொடர்பான விபரங்களை அறிந்து எடுத்துக் கூறுவார்.

செயற்பாடு :- 4.18 நட்புறவு மூலை

வளம் :- காட்போட் அட்டைப் பெட்டி, படங்கள்(பூ, உணவு, விலங்கு), வர்ணக்கட்டிகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் தான் ஆக்கிய பெட்டியைக் காட்டி செயற்பாட்டை விபரித்தல்.
2. பெட்டியின் ஐந்து முகங்களில் தனக்கு விருப்பமான நிறம், விலங்கு, பழம், பொருள்,....... என்பவற்றின் படங்களை ஒட்டிக் காட்சிப்படுத்தல்.
3. இதே போல் பிள்ளைகளும் தங்கள் பெட்டிகளைத் தயாரித்தல்.
4. பெட்டியில் உள்ள விபரங்களை அவதானித்து மாணவரின் விருப்பமான விபரங்களை வினவி அறிந்து கொள்ளுதல் . (இப் பெட்டியை வேறு விளையாட்டிற்கும் பயன்படுத்தலாம்.)

மதிப்பீடு :- பிள்ளைகள் தொடர்பான விபரங்களைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஒழுங்குபடுத்தப்பட்ட பெட்டியில் இருந்து வகுப்பில் அதிகமானோர் விரும்பும் நிறத்தை அறிதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- எமது உணவு

தேர்ச்சி :- தாம் உண்ணும் பழங்களின் பெயர்களை கூறுவார்.


செயற்பாடு :- 4.19 பழக் கூடை அமைப்போம்.

வளம் :- பழவகைகள் / பழ அட்டைகள், கூடைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பழங்கள் / பழ அட்டைகளைப் பெற்றோரின் உதவியுடன் சேகரித்தல்.
2. பிள்ளைகளை வட்டமாக நிற்கவிட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பழம் / பழ அட்டை வீதம் வழங்கல்.



3. ஆசிரியர் ஒரு கூடையை எடுத்து நடுவில் வைத்து தன்னிடமுள்ள பழங்களைக்காட்டி அவற்றின் பெயரை வினவி, ஒவ்வொன்றாக வைத்து பழக்கூடையை அமைத்தல்.
4. மாணவர்களைக் குழுக்களாக்கி பழக் கூடை அமைக்க உதவுதல்
5. பழங்கள் உண்ணுவது உடலுக்கு அவசியமென வலியுறுத்தல்.

மதிப்பீடு :- தாம் உண்ணும் பழங்கள் மூன்றின் பெயரைக் கூறுவதையும். ஒற்றுமையாகச் செயற்படுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பெற்றோரின் உதவியுடன் பழ அட்டைகளைப் பயன்படுத்தி பழக் கூடையை ஒட்டிவர வழிகாட்டல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- எமது உணவு

தேர்ச்சி :- தாம் உண்ணும் காய்கறிகளின் பெயர்களை கூறுவார்.

செயற்பாடு :- 4.20. காய்கறிக் கூடை ஆக்குவோம்

வளம் :- காய்கறிகள் /காய்கறி அட்டைகள், கூடைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் காய்கறிகள் / காய்கறி அட்டைகளை பெற்றோரின் உதவியுடன் சேகரித்தல்.
2. பிள்ளைகளை வட்டமாக நிற்கவிட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காய்கறி வீதம் வழங்கல்.
3. ஆசிரியர் ஒரு கூடையை எடுத்து மத்தியில் வைத்து தன்னிடமுள்ள காய்கறி ஒவ்வொன்றையும் பெயர் கூறி கூடையில் வைத்தல்.
4. பிள்ளைகளைக் குழுக்களாக்கி இவ்வாறு காய்கறிக் கூடை அமைக்க உதவுதல்.
5. காய்கறிகள் உடலாரோக்கியத்திற்கு அவசியமென வலியுறுத்தல்.

மதிப்பீடு :- தாம் உண்ணும் காய்கறிகள் மூன்றின் பெயரைக் கூறுவதையும் ஒற்றுமையாகச் செயற்படுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பெற்றோரின் உதவியுடன் காய்கறி அட்டைகளைப் பயன்படுத்தி காய்கறிக் கூடையை ஒட்டிவர வழிகாட்டல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- எமது உணவு

தேர்ச்சி :- இலைக்கஞ்சி தயாரிப்பதற்கான பொருட்களை இனங்காண்பார்.

செயற்பாடு :- 4.21. இலைக்கஞ்சி அருந்துவோம்

வளம் :- இலைக்கஞ்சி தயாரிப்பதற்கான உணவுப் பொருட்களும் பாத்திரங்களும்.

அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-

1. பெற்றோரின் உதவியுடன் பொருட்கள், பாத்திரங்களைச் சேகரித்தல்.
2. இலைக்கஞ்சிப் பொருட்களை இனங்காண வழிப்படுத்தல்.
3. இலைக்கஞ்சி தயாரித்தல் (ஒவ்வொரு படிமுறைச் செயற்பாட்டையும் மாணவருக்குக் கூறுதல்.)
4. இலைக்கஞ்சி பருகுதல்.
5. இலைக்கஞ்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தல்.

மதிப்பீடு :- இலைக்கஞ்சி தயாரிப்பதற்கான இரு பொருட்களின் பெயர்களைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் இலைக்கஞ்சி பருகுவதை வழக்கப்படுத்திக் கொள்ள பெற்றோரை வலியுறுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- எமது உணவு

தேர்ச்சி :- நாம் உட்கொள்ளும் உணவு வகைகளை எடுத்துக் கூறுவார்.

செயற்பாடு :- 4.22 கடை அமைப்போம்.

வளம் :- தானியங்கள், பழங்கள், காய்கறிகள், மாமிச உணவு

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. உணவுப் பொருட்களை பொருத்தமாக வகைப்படுத்திக் காட்சிப்படுத்தல்.
2. காலை, மதியம், இரவு வேளை உணவு ஆக்கப் பயன்படுத்தும் பொருட்களை இனங்கண்டு கூறவிடுதல்.
3. கலந்துரையாடல் மூலம் எந்த வேளை உணவில் பிரதான உணவாக தானியங்கள் பயன்படுத்தப்படுகின்றதென்பதைக் கேட்டறிதல்.
4. ஒரு வேளைக்குரிய போஷாக்குணவுத் தொகுதியை ஆக்க வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- ஆசிரியர் காட்டும் உணவுப் பொருளின் பெயரை கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- குறித்த வேளை உணவைத் தயாரிக்க தேவையான உணவுப் பொருட்களை ஒன்று சேர்த்து காட்சிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- போக்குவரத்து

தேர்ச்சி :- தரையில் செல்லும் வாகனங்களை இனங்காண்பார்.

செயற்பாடு :- 4.23 வாகனங்களை உருட்டி விளையாடுவோம்

வளம் :- கார்,பஸ், புகையிரதம், மோட்டார் சைக்கிள், லொறி, வான், பைக்கோ போன்ற விளையாட்டு வாகனங்கள்.

அணுகுமுறை :- விளையாட்டு.

செயலொழுங்கு :-

1. மாணவர்களை அரைவட்ட வடிவில் அமர்த்துதல்
2. மாணவர் எண்ணிக்கைக்குப் போதுமான வாகனங்கள் இருத்தல்.
3. வாகனம் தொடர்பாகக் கலந்துரையாடல்.
4. ஒவ்வொரு பிள்ளைகளும் ஒரு போக்குவரத்துச் சாதனம் வழங்கி கையாள வழிப்படுத்தல்.
5. சில வாகன ஒலிகளை ஒலிக்குமாறு அறிவுறுத்தல்.

மதிப்பீடு :-

1. தரையில் செல்லும் வாகனங்கள் மூன்றின் பெயர்களைக் கூறுவதையும் பிள்ளைகள் வாகனங்களைக் கையாண்டு செயற்படும் திறனையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. புகைவண்டி ஓடுவதைப் போலச் செய்து காட்டல்.
2. தீப்பெட்டியில் புகைவண்டி மாதிரி ஆக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- போக்குவரத்து

தேர்ச்சி :- நீரிலும், வானிலும், செல்லும் வாகனங்களை இனங்காண்பார்.

செயற்பாடு :- 4.24 காகிதக் கப்பல் விடுவோம்

வளம் :- விளையாட்டு விமானம், கெலிகொப்டர், வள்ளம், காகிதக் கப்பல் - பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை அரை வட்ட வடிவில் அமர்த்துதல்.
2. மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாகனம் வழங்கல் அவற்றின் பெயர் பற்றிக் கலந்துரையாடல்.
3. அவற்றைக் கையாண்டு களிப்புறவிடல்.
4. நீர் மூலைக்கு அழைத்துச் செல்லல், குழுக்களாக்கி ஒவ்வொருவருக்கும் ஒரு காகிதக் கப்பல் வழங்கல்.
5. குழுவாக நீரில் கப்பல் விட்டு மகிழ்ச்சியுறவிடல்
6. கப்பல் பாட்டு பாடி ஆடவிடல்.

மதிப்பீடு :-

1. இசையும், அசைவும் செயற்பாட்டை அவதானித்தல்.
2. ஆசிரியர் காட்டும் போக்குவரத்துச் சாதனத்தின் பெயரைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பரசூட் விடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- போக்குவரத்து

தேர்ச்சி :- போக்குவரத்து விதிகளின் படி ஒழுகுவார்.

செயற்பாடு :- 4.25 வீதியில் கவனமாகச் செல்வோம்.

வளம் :- விளையாட்டு முற்றத்தில் வீதி அமைப்பு மாதிரியை அமைத்தல். (சந்தி, மஞ்சள்கோடு, பஸ்தரிப்பிடம்,.....)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைத் தொகைக்கு ஏற்ப குழுக்களாக்கல்.
2. வீதியமைப்பு மாதிரி ஒன்றை ஆக்குதல்.
3. அதனைச் சுற்றி மாணவர்களை நிற்க விடுதல்.
4. வீதியில் - வலது பக்கமாக நடத்தல்.
   பாதசாரிகள் கடவையில் வீதியைக் கடத்தல்.
   பேருந்து தரிப்பிடத்தில் ஒழுகவேண்டிய முறை தொடர்பாக செயல்மூலம் காட்டுதல், அதன் அவசியத்தை வலியுறுத்தல்.
5. மாணவர்களைச் சோடிகளாக விட்டு செயற்பட வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- மேலே கூறிய மூன்று விதிகளையும் கடைப்பிடிப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பேருந்தில் பயணம் செய்யும் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணர்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கொண்டாட்டங்கள்.

தேர்ச்சி :- கோயிலுக்குச் செல்லும் முறையைச் செய்து காட்டுவார்.

செயற்பாடு :- 4.26 கோவிலுக்குச் செல்வோம்.

வளம் :- பூத்தட்டு, பூக்கள், தேங்காய், கற்பூரம், வெற்றிலை, பாக்கு, பால், பழம்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்லல்.
2. கோவிலுக்குச் செல்லும் போது கொண்டு செல்லும் பொருட்களை, ஆயத்தம் செய்தல் தொடர்பாகக் கலந்துரையாடல்.
3. நாங்கள் பூப்பறிக்கச் செல்வோம்; அதோ அழகான பூக்கள்; கிளைகள் உடையாது பூப்பறிப்போம் எனக் கூறுதல்.
4. பின்வரும் பாடலைப்பாடி ஆடுதல்.

*பூப்பறிப்போம் பூப்பறிப்போம்*

| | |
|---|---|
| *வண்ண வண்ணப் பூக்கள்* | *சிவப்பு நிறத்தில் பூக்கள்* |
| *வடிவான பூக்கள்* | *மஞ்சள் நிறத்தில் பூக்கள்.* |
| *மணம் கமழும் பூக்கள்* | *வெள்ளை நிறத்தில் பூக்கள்* |
| *மனதுக்கினிய பூக்கள்* | *பார்க்கப் பார்க்க அழகு.* |

5. ஏனைய பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்.
6. கோவிலுக்குச் செல்லல்.
7. வழிபாட்டில் ஈடுபடவிடுதல்.

மதிப்பீடு :- கோவிலுக்குக் கொண்டு செல்லும் பொருட்கள் நான்கின் பெயரைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதே போன்று ஏனைய மதக்கோவில்களுக்கும் செல்லும் முறைகளை அறிந்து கொள்ளல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கொண்டாட்டங்கள்.

தேர்ச்சி :- சித்திரைப் புதுவருடப்பிறப்பில் நடைபெறும் செயற்பாடுகளில் தாமும் ஆர்வத்துடன் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 4.27 புத்தாண்டு

வளம் :- வெற்றிலை, பாக்கு, பழம். கைவிசேடப் பொருட்கள், பொங்கல் பொருட்கள்,


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை மருத்துநீர் வைத்து தோய்ந்து நீராடி,புத்தாடை அணிந்து வருமாறு முன்னரே அறிவுறுத்தல்.
2. பெற்றோர் உதவியுடன் பொருட்களைச் சேகரித்தல்.
3. கொண்டாட்டத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பிள்ளைகள் பங்குபற்ற வழிப்படுத்தல்.
4. செய்த செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடி மீள வலியுறுத்தல்.

மதிப்பீடு :- குறித்த செயற்பாடொன்றில் ஈடுபடுவதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிற்கு விருந்தினர் வரும் போது மேற்கொள்ள வேண்டிய வரவேற்பு, உபசரிப்புச் செயற்பாடுகளை செய்து காட்டல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கொண்டாட்டங்கள்.

தேர்ச்சி :- ஒளி விழாவில் நடைபெறும் செயற்பாடுகளில் தாமும் ஆர்வத்துடன் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 4.28 ஒளிவிழா

வளம் :- நத்தார்த் தாத்தா உடை,சிற்றுண்டிகள், கலை நிகழ்ச்சி தொடர்பான கருவிகள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஒளிவிழா தொடர்பான முன்னாயத்தங்களை ஒரு வாரத்திற்கு முன் திட்டமிட்டுக்கொள்ளலும், பெற்றோரின் உதவி /பங்களிப்பை பெற்றுக் கொள்ளலும்.
2. மாணவர்களுக்கு கலைநிகழ்ச்சி. வகிபங்கு தொடர்பாக பயிற்சியினை வழங்கல்.
3. ஒளிவிழாவை நடாத்துதல் - (பங்குத்தந்தை/ அருட்சகோதரி மாணவர்கள், பெற்றோர் பங்குபற்றுவார்கள்.)
4. நிகழ்ச்சி நிரலின் படி நிகழ்வுகளை நடத்துதல்.
5. சிறப்பு நிகழ்வாக நத்தார் தாத்தா வருதல்.
6. சிற்றுண்டி பரிமாறுதல்.
7. ஒளிவிழா நிறைவுறுதல்.

மதிப்பீடு :-

1. கலை நிகழ்வுகளில் பங்கேற்றலை அவதானித்தல்.
2. 'நத்தார் தாத்தா' நிகழ்வில் மாணவர்களின் துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வகுப்பறையில் 'நத்தார் தாத்தா' போலச் செய்வதற்கு அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கொண்டாட்டங்கள்.

தேர்ச்சி :- றம்ஸான் விழாவின் சிறப்பினைக்கூறுவார்.

செயற்பாடு :- 4.29 றம்ஸான் கொண்டாட்டம்.

வளம் :- சிற்றுண்டிகள், கலை நிகழ்வுப் பொருட்கள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. றம்ஸான் விழா தொடர்பான முன்னாயத்தங்களை ஒரு வாரத்திற்கு முன் திட்டமிடல், பெற்றோர் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்.
2. மாணவர்களுக்கு பயிற்சியளித்தல்.
3. றம்ஸான் சிறப்பு பற்றி மௌலவி உரையாற்றுதல்.
4. மாணவர்கள் தங்கள் கலை நிகழ்வை அரங்கேற்றுதல்.
5. சிற்றுண்டி பரிமாறுதல்.

மதிப்பீடு :-

1. றம்ஸானின் சிறப்புக்கள் பற்றி இரு வாக்கியம் கூறுவதையும் கலை நிகழ்வில் பங்கேற்றலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நிலம்.

தேர்ச்சி :- சுற்றாடலில் உள்ள கல் மாதிரிகளைப் பாகுபடுத்தும் ஆற்றலை விருத்தி செய்வார்.

செயற்பாடு :- 4.30 பாறைகளின் காட்சியகம்.

வளம் :- வெவ்வேறு வகையான பாறைகள். (சுண்ணக்கல், கருங்கல், முருகைக்கல், மாபிள், கல், நீர் பாயுமிடத்தில் உள்ள கல்) பிளாஸ்ரிக் பாத்திரங்கள்


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. குழுக்களுக்கு கல் மாதிரிகளை வழங்குதல்.
3. ஒவ்வொரு கல் மாதிரியையும் பிள்ளையை அவதானிக்க விடல்.
4. அவற்றின் நிறம், தன்மை ஆகியவற்றை (பளபளப்பு, கரடு முரடு, அழுத்தமானது) *(தொட்டுணர்ந்து)* அவதானித்தல் மூலம் வெளிக் கொணர்தல்.
5. அவற்றைப் பெயரிட்டு ஒரு காட்சியத்தை அமைத்தல்.

மதிப்பீடு :- பிள்ளையின் துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தொடர்ச்சியாக பாறைகளின் மாதிரிகளை சேகரித்து காட்சியகத்தை மேலும் வளப்படுத்தல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நிலம்

தேர்ச்சி :- களிமண், மணல் மண் என்பவற்றின் இயல்புகள் சிலவற்றைக் கூறுவார்.

செயற்பாடு :- 4.31 களியும் மணலும்.

வளம் :- களிமண் குவியல், மணல் மண் குவியல், கரண்டி, சவள், பாத்திரங்கள், நீர்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல், வளங்களை வழங்குதல்.
2. வழங்கப்பட்ட பொருட்களை பயன்படுத்தி பிள்ளைகளை விளையாட விடல்.
3. பின்வரும் வினாக்கள் மூலம் பிள்ளைகளைத் தொழிற்படத் தூண்டுதல்.

> உலர்ந்த மணல் மூலம் நாம் யாது செய்யலாம்?.
> மணலை நனைக்கும் போது யாது நிகழும்?
> களி மண்ணில் இருந்து என்னென்ன செய்யலாம்?.
> களி மண் + மணல் மண் கலவையில் இருந்து யாது செய்யலாம்?.
> இவற்றை வெய்யிலில் உலர விடும் போது யாது நிகழும்?
> களி மண் + மணல் கலவையிலுள்ள கூறுகளைப் பிரிக்கலாமா? (வழங்கப்பட்ட துணி மூலம் அரித்துக் காட்டுக)

4. செயற்பாட்டின் முடிவில் இடத்தைத் துப்பரவு செய்த பின் அவர்களின் அனுபவங்களைக் கலந்துரையாடுதல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் துலங்கலை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- மட்பாத்திரங்கள் செய்யுமிடம், களிமண்ணால் சுவர் அமைக்கும் இடம் ஆகியவற்றைப் பார்வையிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நிலம்.

தேர்ச்சி :- ஆசிரியரினால் வழங்கப்படும் காந்தம் தொடர்பான அறிவினைப் பயன்படுத்தி பிள்ளை கண், தசை நார் ஒருங்கிணைவு அனுபவத்தைப் பெற்றுக் கொள்வார்.

செயற்பாடு :- 4.32. மீன் பிடித்தல்.

வளம் :- காந்தம், காகித மீன்கள், பேப்பர் கிளிப், வர்ணக் கட்டிகள், நூல், தடி


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. காகித மீன்களை வெட்டி பிள்ளைகளை வர்ணம் தீட்ட விடல்.
2. மீன்களின் வாயில் பேப்பர் கிளிப்பைச் செருகுதல்.
3. காந்தத்தையும் கோலையும் நூலால் இணைத்தல். (தூண்டில்)
4. பிள்ளைகளை வட்டமாக அமர விடல்.
5. ஒவ்வொரு பிள்ளையாக அழைத்து மீன்களைப் பிடிக்க விடல்.
6. சற்றுத் தொலைவில் உள்ள மீன்களைப் பிடிப்பது போன்ற சவாலான செயற்பாடுகளையும் வழங்குதல்.

மதிப்பீடு :- மீன் பிடித்தலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பருமன் / நிறம்/ வடிவத்தின் அடிப்படையில் குறித்த மீனை பிடிக்க வழிப்படுத்துக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நிலம்

தேர்ச்சி :- சுற்றாடலில் காணப்படும் பொருட்களின் இயல்புகளை கண்டறிவார்.

செயற்பாடு :- 4.33 காந்தம்.

வளம் :- வெவ்வேறு வடிவமான காந்தங்கள், பல் வகையான பொருட்கள் (இரும்பு, அலுமினியம், கல்,......)


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பொருட்களைக் கொடுத்து பிள்ளைகளை விளையாட விடல்.
2. அவர்கள் கண்டுபிடித்தவற்றை வெளிப்படுத்த தூண்டுதல்.
3. ஒரு பாரம் தூக்கி ஒன்றைச் செய்து செயற்பட விடல்.
4. காந்தத்தினால் கவரக் கூடிய, கவர முடியாத பொருட்களை வகைப்படுத்த வழிப்படுத்துதல்.

மதிப்பீடு :- காந்தத்தின் கவரும் இயல்பு தொடர்பாகக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வெவ்வேறு வகையான காந்தங்கள் கவரும் பொருட்களின் (பேப்பர் கிளிப், ஆணிகள்) எண்ணிக்கையை அறிதல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நீர்

தேர்ச்சி :- செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் அவற்றின் பெறுபேறுகளை விளங்கிக் கொள்வதற்கும் வழங்கப்பட்ட வாய்ப்புக்களை பயன்படுத்துவார்.

செயற்பாடு :- 4.34 குமிழிகளுடன் விளையாடுவோம்.

வளம் :- பான உறிஞ்சு குழாய், அகன்ற வாய்ப் பாத்திரங்கள், சவர்க்காரக் கரைசல்.

அணுகுமுறை :- விளையாட்டு.

செயலொழுங்கு :-

1. பாத்திரத்திலுள்ள சவர்க்காரக் கரைசலைக் காட்டி அதனுள் குழாய் வைத்து ஊதும் போது யாது நிகழும்? என வினவுதல்.
2. பிள்ளைகளின் முன் அனுபவங்களையும்,கற்பனை செய்யும் ஆற்றலையும் வெளிக் கொணர்தல்.
3. குழுக்களாக்கி சவர்க்காரக் கரைசல், உறிஞ்சு குழாய் வழங்குதல்

குறிப்பு: பாத்திரங்கள் கழுவும் சவர்க்காரக் கரைசலில்,(VimDishWash) இருபங்கும் கிளிசரினில் ஒரு பங்கும் கலந்து சிறந்த சவர்க்காரக் கரைசலை ஆக்கலாம்.

4. கரைசலை ஊதவிடல்.
5. இக் குமிழ்கள் எவ்வாறு உருவாகிறதெனக் கலந்துரையாடி. அவை வளி அடைக்கப்பட்ட சிறிய பந்துகள் என விளங்கிக் கொள்ள வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- வளியை ஊத விட்டு அவதானித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் விரிவாக்கம் :-

1. சவர்க்காரக் கரைசலுடன் உணவுச் சாயம் ஒன்றைச் சேர்க்குக. குழாயால் ஊதி பாத்திரம் நிறையக் குமிழ்களை உண்டாக்குக. வெள்ளைத் தாள் ஒன்றை அதன் மேல் வைக்குக. பின் அத் தாளை எடுத்து தாளில் **குமிழிகளின் அடையாளம்** இருப்பதை அவதானிக்க விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நீர்

தேர்ச்சி :- வழங்கப்பட்ட பொருட் தொகுதியை நீரில் மிதப்பவை, அமிழ்பவை எனப் பாகுபடுத்துவார்.

செயற்பாடு :- 4.35. மிதத்தலும் அமிழ்தலும்

வளம் :- அகன்ற வாயுடைய பாத்திரங்கள் மூன்று, சுற்றாடலில் சேகரிக்கப்பட்ட பொருட்கள், நீர்


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்கி பொருள்களை வழங்குதல்.
2. ஒரு பாத்திரத்துள் நீர் ஊற்றுதல்.
3. நீர் ஊற்றிய பாத்திரத்தினுள் பிள்ளை தம்மிடம் உள்ள பொருட்களை இட்டு மிதப்பவற்றை ஒரு பாத்திரத்தினுள்ளும் அமிழ்பவற்றை வேறொரு பாத்திரத்திலும் இட வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- செயற்பாட்டின் போது செயல்களை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதே போல் வீட்டில் வேறு பொருட்களுடன் செயற்பட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நீர்

தேர்ச்சி :- வெளி தொடர்பான எண்ணக்கருவை விளங்கி வெளிப்படுத்துவார்.

செயற்பாடு :- 4.36 குவளை நிரம்பி விட்டதா?

வளம் :- குவளை, குறுணிக்கல், மணல், நீர்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. மேற்படி பொருட்களை பிள்ளைகளுக்குக் காட்டுதல்.
2. குறுணிக்கற்கள் மூலம் குவளையை பூரணமாக மட்டத்திற்கு நிரப்ப அறிவுறுத்தல்.
3. குவளை நிரம்பிவிட்டதா என வினவுதல். மேலும் குறுணிக்கற்களை இடமுடியுமா என வினவுதல். முடியாது என்பதை வெளிக்கொணர்தல்.
4. அப் பாத்திரத்தினுள் மணலைச் சிறிது சிறிதாக இடுதல்.
5. மணலால் நிரப்பப்பட்டதைக் காட்டுதல்.
6. மேலும் மணல் இடமுடியுமா என வினவுதல். 'முடியாது' என்பதை வெளிக்கொணர்தல்.
7. இதே போல் அதே பாத்திரத்தினுள் நீரை விட்டு நிரப்பிக் காட்டுதல்.
8. மேலும் நீரை இடமுடியுமா? என வினவுக 'முடியாது' என்பதை வெளிக்கொணர்தல்.

மதிப்பீடு :- செயற்பாட்டின் போது துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. என்ன நடந்தது? எனக் கலந்துரையாடுக.
2. வீட்டில் சுயமாக செய்து பார்க்க அறிவுறுத்துக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நீர்

தேர்ச்சி :- அவதானிக்கும், தீர்மானம் எடுக்கும் திறனை விருத்தி செய்து கொள்வார்.

செயற்பாடு :- 4.37 நீரின் வடிவத்தைத் தேடல்.

வளம் :- பல்வேறு வடிவமான கண்ணாடிப் பாத்திரங்கள், நீர்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஒரு போத்தலை நீரால் நிரப்புதல். நீரின் வடிவம் யாது? என வினவுதல்.
2. போத்தலின் வடிவத்தையே நீர் பெற்றது என வெளிக் கொணர்தல்.
3. அடுத்த போத்தலை நிரப்புதல். நீரின் வடிவம் யாது? என வினவுக. 'போத்தலின் வடிவத்தையே நீர் பெற்றுள்ளது' என வெளிக்கொணர்தல்.
4. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல், வெவ்வேறு வடிவமுள்ள போத்தல்களை வழங்குதல்
5. பிள்ளைகளைக் கொண்டு போத்தல்களில் நீரை நிரப்ப விடல்
6. 'எப்பொழுதும் பாத்திரத்தின் வடிவத்தையே நீர் பெறும்' என்பதை வெளிக் கொணர்தல்.

மதிப்பீடு :- செயற்பாட்டின் போது துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டில் சுயமாக செய்ய பெற்றோருக்கு அறிவுறுத்துக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நீர்

தேர்ச்சி :- நீர் தொடர்பான அனுபவங்களைப் பெற வழங்கிய வாய்ப்பைப் பயன்படுத்துவார்.

செயற்பாடு :- 4.38 மழையை உருவாக்குவோம்.

வளம் :- நீர், பெரிய பிளாஸ்ரிக் குளிர்பானப் போத்தல்.

அணுகுமுறை :- விளையாட்டு.

செயலொழுங்கு :-

1. போத்தலை நீரால் நிரப்புதல். துளைகள் இடப்பட்ட மூடியால் மூடுதல்.
2. குழுக்களுக்கு நீர் நிரப்பப்பட்ட போத்தல்களை வழங்குதல்.
3. போத்தலை நசுக்கி வானத்தில் மழை பொழிவது போன்ற நிகழ்வை உருவாக்க வழிகாட்டுதல்.
4. அம் மழைநீர் சுவரில் உருவாகும் உருவங்களில் பிராணிகள், பூச்சிகளின் உருவங்களை இனங்காண முடிகின்றதா என வினவுதல். இனங்காண வழிப்படுத்துதல்.

மதிப்பீடு :- பிள்ளையின் துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- நீரை நீண்ட தூரத்திற்கு விசிறச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நீர்.

தேர்ச்சி :- நீருடன் பல்வேறு பொருட்களின் இடைத்தாக்கத்தை அவதானித்துக் கூறுவார்.

செயற்பாடு :- 4.39 நீரினால் ஏற்படும் மாற்றங்கள்

வளம் :- சிறிய கண்ணாடிக் குப்பிகள்,(ஊசிமருந்துக்குப்பி) நீர், சீனி, உப்பு மரத்தூள், சலவைத்தூள், அரிசிமா.........

அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்கிப் பொருட்களை வழங்குதல்.
2. சிறிய குப்பியினுள் நீர் எடுத்து சிறிதளவு சீனியை இட்டுக் குலுக்கி பிள்ளைகளை அவதானிக்கச் செய்தல்.
3. சீனித் துணிக்கைகள் மறைந்து விட்டதை வெளிக் கொணர்தல்.
4. இவ்வாறு வேறு பொருட்களையும் இட்டு அவதானிக்கச் செய்தல்..
5. கலந்துரையாடல் மூலம் நீரில் இடும் போது மாற்றத்திற்கு உள்ளாகும், உள்ளாகாத பொருட்கள் என வகைப்படுத்துதல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மேலும் வேறு பொருட்களை வீட்டில் செய்து பார்க்க அறிவுறுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- வானம்

தேர்ச்சி :- அவதானித்தல் மூலம் கற்பனையையும், ஆக்கச் செயற்பாட்டையும் ஊக்குவிக்கும் போது துலங்குவார்.

செயற்பாடு :- 4.40 மாதிரி வானம் ஆக்குவோம்

வளம் :- ஒவ்வொரு பிள்ளைக்கும் - பெரிய கறுப்பு கடதாசி, வெள்ளைத் தாள்

அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-

1. முகில்கள் நிறைந்த நாள் ஒன்றில் பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்லல்.
2. வானத்தையும், முகில்களையும் அவதானிக்கச் செய்தல். (சூரியனை நேரடியாக உற்று நோக்குதல் கூடாது)
3. வகுப்பறைக்கு மீண்டும் வந்ததும் முகில்களின் பருமன், வடிவம், நிறம், அவற்றின் அசைவு தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
4. ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு கறுப்புத் தாளும், வெள்ளைத் தாளும் கொடுத்தல்
5. ஆசிரியர் வெள்ளைத் தாளைக் கிழித்துத் துண்டுகளை பொருத்தமாக கறுப்புத் தாளில் ஒட்டி ஆக்கிய ஆக்கத்தை சுவரில் காட்சிப்படுத்த வேண்டும்.
6. பிள்ளைகளை இரசிக்க விடுதல்.
7. பிள்ளைகள் தமக்கு வழங்கப்பட்ட பொருட்களைக் கொண்டு ஆக்கத்தை ஆக்குதல்.

மதிப்பீடு :- பிள்ளையின் ஆக்கத்தை மதிப்பிடல்.

கற்றல் விரிவாக்கம் :- இதே போன்று இன்னுமொரு நாளில் முகில்களில் தோன்றும் விலங்கு,மரம்,போன்ற உருவங்களை அவதானிக்க வழிப்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- வானம்

தேர்ச்சி :- வானிலை மாற்றங்களை அவதானித்து நடித்தல் மூலம் வெளிப்படுத்துவார்.

செயற்பாடு :- 4.41. வானிலை

வளம் :- —

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. வெய்யில், மழை, காற்று, முழக்கம், நிகழும் நாட்களில் மாற்றங்களை பிள்ளைகள் அவதானிக்க விடல்.( அந்தந்த வானிலை நிகழும் காலத்தில் அவதானிக்கச் செய்தல்.)
2. இந் நாட்களில் சிறு குழுக்களாக நிகழ்வையும் இடத்தையும் *(மரங்கள், கொடிகள், பூக்கள், நீர் நிலைகள், வளவுக் கூரை என்பவற்றை)* அவதானிக்க விடல்
3. அவதானித்த மாற்றங்களை அசைவு மூலம் வெளிப்படுத்தத் தூண்டுதல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் நடிப்பையும் துலங்கலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- குறித்த வானிலை (மழை) நிகழும் போது மாற்றங்களைத் தொடர்ந்து அவதானிக்க விடுதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- ஒளி

தேர்ச்சி :- சூரிய ஒளியின் பாதையை தேவைக்கேற்ப மாற்றுவார்.

செயற்பாடு :- 4.42. ஒளியைத் திசை திருப்பி விளையாடுவோம்.

வளம் :- தளவாடிகள் 02

அணுகுமுறை :- விளையாட்டுமுறை


செயலொழுங்கு :-


1. பிள்ளைகளை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் செல்லுதல்.
2. தளவாடியைப் பயன்படுத்தி குறித்த புள்ளியின் (சூழலில் உள்ள ஓர் இடம், மரக்கிளை) மீது சூரிய ஒளி படுமாறு செய்ய அறிவுறுத்துதல்.
3. பின் வகுப்பறையினுள் உள்ள ஒரு புள்ளியில் படச் செய்யுமாறு அறிவுறுத்துதல்.
4. எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கியதை உறுதி செய்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகளை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. இரு ஆடிகளைப் பயன்படுத்தி ஒளியை இருமுறை திசை திருப்பும் சந்தர்ப்பத்தை வழங்குக.
2. காகத்தின் மீது ஒளியைப் படச் செய்தல். படம் வரைதல்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- ஒளி

தேர்ச்சி :- வெவ்வேறு நிற ஒளிகளை ஆக்கிக் காட்டுவார்.

செயற்பாடு :- 4.43 நிற ஒளிகள் பெறுவோம்.

வளம் :- செலோபேன் தாள் (பல நிறங்கள்), பிறிஸ்டல் போர்ட், பைண்டர்கம், தளவாடி.

அணுகுமுறை :-

செயலொழுங்கு :-

1. படத்தில் காட்டியவாறு 10cm விட்டமுடைய துவாரங்கள் கொண்ட சதுர அட்டைகளை வெட்டி எடுத்தல்.
2. இரு அட்டைகளுக்கிடையே நிறசெலோபேன்தாளை வைத்து ஒட்டுதல்.
3. தளவாடியின் உதவியுடன் திருப்பப்பட்ட ஒளிக்கற்றையின் குறுக்கே இவ் அட்டையைப் பிடித்து சுவரில் நிற ஒளியைப் பெற்றுக் காட்டுதல்.
4. பிள்ளைகளைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

மதிப்பீடு :- தாம் விரும்பிய ஒளியைக் காட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. வெசாக் கூடு அமைத்தல்.
2. இரு நிற ஒளிக்கற்றைகளைக் கலந்து புதிய வர்ணத்தைப் பெறுக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- ஒலி

தேர்ச்சி :- சுற்றாடலில் உண்டாகும் பல்வேறு விதமான ஒலிகளை இனங்கண்டு கூறுவார்.

செயற்பாடு :- 4.44 ஒலி உலா

வளம் :- புத்தளிப்புக் கருவிகள்,ஏனைய ஒலி எழுப்பும் கருவிகள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை முன்பள்ளிகளுக்கு அருகாமையிலுள்ள ஒலி உண்டாகும் இடத்திற்கு அழைத்துச் செல்லல். (தொழிற்சாலை, கம்மாலை, தையலகம், வாகனத் திருத்துமிடம்........)
2. அங்கு சென்றதும் கண்களை மூடிக் கொண்டு ஒலிகளைச் செவிமடுக்க விடுதல்.
3. கண்களைத் திறந்த பின் செவிமடுத்த ஒலிகள் தொடர்பாகக் கூறவிடல்.
4. வகுப்பறைக்கு வந்து புத்தளிப்புக் கருவிகள், ஏனைய ஒலி எழுப்பும் கருவிகள் மூலம் ஒலிகளை எழுப்பி விளையாடவிடுதல்.
5. நன்கு பரீட்சயமான ஒலிப் பொருட்களை மறைவில் இருந்து ஒலிக்க, பிள்ளைகள் அவ்வொலியை இனங்காண விடுதல்.

மதிப்பீடு :- ஒலிக்கப்படும் ஒலிமுதலை இனங்கண்டு கூறுவார்.

கற்றல் விரிவாக்கம் :- முன் பள்ளிச் சூழலில் கேட்கும் ஒலிகளை இனங்காணச் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- காற்று

தேர்ச்சி :- வளி தொடர்பாகவும் விழவிடப்படும் பரசூட்டின் இயக்கம் தொடர்பாகவும் கண்டறிந்து கூறுவார்.

செயற்பாடு :- 4.45 பரசூட் விளையாட்டு

வளம் :- 'லஞ்ரிசு', 45 cm நீளமான நூல் துண்டுகள் நான்கு, பிளாஸ்ரிக் பொருள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. படத்தில் காட்டியவாறு நூலை லஞ் ரிசுவின் நான்கு மூலைகளிலும் தனித்தனியாக கட்டி நூலின் மறு முனைகளை ஒன்றாகச் சேர்த்து பிளாஸ்ரிக் துண்டில் கட்டுதல்.
2. சிறிது உயரமான இடத்தில் ஏறி நின்று பரசூட்டை விழவிடல்.
3. நன்கு தொழிற்படுகிறதா? என செவ்வை பார்த்தல்.
4. பெற்றோரின் உதவியுடன் ஒவ்வொரு பிள்ளைக்கும் இதனைப்போன்ற ஒவ்வொரு பரசூட்டைத் தயாரித்துக் கொள்ளல்.
5. உயரமான இடத்தில் ஏறி நின்று விடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.
6. விழவிடப்பட்ட கல் ஒன்றை விட பரசூட் மெதுவாக விழுகிறது என்பதை அவதானிக்கச் செய்தல்.

மதிப்பீடு :- செயற்பாட்டில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பெரிய தாளையும் நீண்ட நூலையும் பயன்படுத்தி பிறிதொரு பரசூட்டைச் செய்து விழ விட்டு ஏற்படும வேறுபாட்டை அவதானிக்கச் செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- காற்று

தேர்ச்சி :- அவதானத்தினூடாக பிள்ளை தனது சுற்றாடல் தொடர்பான அறிவினை விருத்தி செய்வார்.

செயற்பாடு :- 4.46 வீசும் காற்று

வளம் :- _

அணுகுமுறை :- செயல் மூலம்.

செயலொழுங்கு :-

1. வகுப்பறைக்கு வெளியே பிள்ளைகளை அழைத்துச் செல்லல்.
2. சுற்றாடலில் காற்றினால் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்க விடுதல். (தூசி கிளம்புதல், புகை கிளம்புதல்,இலை,கிளைகள் அசைதல்,ஒலி உண்டாதல்,..........)
3. ஆசிரியர் பிள்ளையிடம், அவதானத்திற்கு இட்டுச் செல்லும் வினாக்களை வினாவுதலின் ஊடாக அவரது அவதானத்தை கூர்மைப்படுத்த முடியும்.

*மரக்கிளைகள் இலைகள் அசைகிறதா?*
*ஊதுபத்தியின் புகை அசைகிறதா?*

4. ஆசிரியர் தகவல்களைத் தொகுத்துக் கூறுதல்.

மதிப்பீடு :- சுழல் காற்றினால் ஏற்படும் மாற்றங்கள் இரண்டைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வகுப்பறையில் காற்றில் பறக்கக்கூடிய பொருட்களை வழங்கி விளையாட விடுதல். (கடதாசி ஆக்கங்கள், காற்றில் பறக்கும் விதைகள்,......)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

கருப்பொருள் :- காற்று

தேர்ச்சி :- குறித்த உயரத்தில் இருந்து பொருட்களை விழ விடும் போது மெதுவாக தரையை அடையும் பொருட்களை இனங்காண்பார்.

செயற்பாடு :- 4.47 வளியில் மிதப்பவை

வளம் :- வெவ்வேறு நிறையும் பருமனும் கொண்ட பொருட்கள (பஞ்சு, இறகு,மரச்சீவல்,குறுணிக் கற்கள், றெஜிபோம், தாள் நாணயம், குற்றி நாணயம்.)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பொருட்களை மேசையில் காட்சிப்படுத்துதல்.
2. ஆசிரியர் கதிரையில் ஏறி நின்று ஒவ்வொரு பொருளாக விழ விடுதல்.
3. அவதானத்தின் அடிப்படையில் ***மெதுவாகத் தரையை அடைவன, விரைவாகத் தரையை அடைவன*** எனப்பொருட்களை வகைப்படுத்துதல்.
4. மெதுவாக தரையில் விழும் பொருட்களின் தோற்றத்தை அவதானிக்க விடுதல்.

மதிப்பீடு :- இதே போல் புதிய பொருள் ஒன்றை வழங்கும் போது அது எத் தொகுதியில் அடங்குமெனக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மேலும் பல பொருட்களை வழங்கிச் செவ்வை பார்க்க விடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- தொடர்பாடல்.


தேர்ச்சி :- பிள்ளைகள் தமது செவிமடுத்தல் திறன்களையும் ஒலிகளை ஒப்பிடும் திறன்களையும் மேம்படுத்திக் கொள்வார்.

செயற்பாடு :- 4.48 ஒலிப் பெட்டிகள்.

வளம் :- மூடியுடனான பிளாஸ்ரிக் கிண்ணம்-08 *(குளிர்களி கிண்ணம்.)*, அரிசி,பயறு, குரக்கன், புளியம் விதை, மணல், குறுணிக்கல்,கடலை,........

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஒவ்வொரு பொருளிலும் சமவளவினை ஒரு கொள்கலனில் இட்டு மூடி வர்ணக் கடதாசிகளால் ஒட்டுதல்.
2. அவற்றை மேசையில் வைத்தல். பிள்ளைகள் ஒவ்வொன்றாக குலுக்கி இனங்காணவிடல்.
3. குறித்த ஒரு பொருளினை இட்ட இரு வெவ்வேறு பாத்திரங்களை இனங்காண முடிகின்றதா? என வினவுதல்.
4. அடைக்கப்பட்ட பொருட்களின் மாதிரிகளைக் காட்டுதல். எப் பெட்டியில் எப் பொருள் உள்ளதென இனங்காண முடிகிறதா என வினவுதல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பொருட்களை மணத்தல் மூலம் இனங்காணும் செயற்பாட்டைச் செய்தல். (மூடிகளில் துளை இடப்பட வேண்டும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- தொடர்பாடல்

தேர்ச்சி :- விளையாட்டுத் தொலைபேசி உரையாடல் மூலம் மகிழ்ச்சி பெறுவார்.

செயற்பாடு :- 4.49 தொலைபேசியில் உரையாடுவோம்.

வளம் :- பிளாஸ்ரிக் கிண்ணம் (யோக்கட் கப் - 02, மெல்லிய நைலோன் நூல் 2m.)


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. படத்தில் காட்டியவாறு விளையாட்டுத் தொலைபேசி ஒன்றை ஆக்கல்.
2. நூல் தளர்வின்றி இருக்கக் கூடியதாகவும் நூலில் கைபடாதவாறும் தொலைபேசியைப் பயன்படுத்தும் முறையைக் காட்டுதல்.
3. பிள்ளைகளைச் சோடிகளாக உரையாட விடுதல்.
4. உரையாடத் தயங்கும் பிள்ளைகளை உற்சாகப்படுத்தி உரையாட வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- நைலோன் நூலிற்குப் பதிலாக தங்கூசி நூலைப் பயன்படுத்தியும் பிளாஸ்ரிக் கப்பின் வாயைப் பலூன் றபர் மென் சவ்வினால் இறுக்கமாக மூடியும் உரையாட விடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# ஆக்க அழகியல்

# திறன் விருத்தி

## சித்திரமும் கைவேலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்க அழகியல் திறன் விருத்தி

- பிள்ளை பாடல், நடிப்பு, வரைதல் மூலம் தனது எண்ணங்களை வெளிப்படுத்துகின்றது.
- பிள்ளையின் புலனுணர்வுகளான தொடுதல், பார்த்தல், மணத்தல்,கேட்டல், சுவைத்தல் ஆகியன ஆக்கத்திறனுக்கு தூண்டுகோலாக அமைகின்றன.
- முன்பள்ளியில் பொருத்தமான ஓர் இடத்தை இச்செயற்பாடுகளை விருத்தி செய்ய ஒதுக்கீடு செய்வதன் மூலம் ஆசிரியர் பிள்ளைகளின் தேடலுக்கு வழியமைக்கலாம்
- ஒழுங்கமைக்கப்படும் குறித்த பகுதி அடிக்கடி செயற்பாடுகளுக்கு ஏற்ற மாதிரி மாற்றியமைப்பதன் மூலம் பல்வேறு செயற்பாடுகளை ஆற்றவும் பிள்ளையின் சுதந்திர வெளிப்படுத்தலுக்கான சந்தர்ப்பத்தை வழங்கவும் முடியும்.
- இதனாற் பிள்ளைகள் தமது ஆக்கங்களை மகிழ்ச்சியாக வெளிப்படுத்த இயலும்.
- தங்கள் உணர்வுகள் எண்ணங்களை விரும்பும் வழியில் வெளிப்படுத்த பிள்ளைகட்குதவும்.
- சுதந்திரமான தேடலுக்குப் பிள்ளையை அனுமதிக்கும் போது நிறைய விடயங்களை கற்கவும் பொருத்தமான கருவிகளை தெரிவு செய்து ஆக்கத்தை வெளிப்படுத்தவும் பிள்ளைக்கு வாய்ப்புக் கிட்டும்.
- சிறப்பான முழுமையான ஆற்றுகைகளை இவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது நோக்கமுமல்ல. அவசியமுமில்லை.
- ஒவ்வொரு பிள்ளையும் ஒரே மாதிரியான ஆற்றுகையை ஆற்ற வேண்டுமென்பது அவசியமில்லை.
- ஒரு பிள்ளை குறைந்த நேரத்திலும் இன்னொரு பிள்ளை கூடிய நேரத்திலும் இதனை மேற்கொள்ளலாம். நேர விரயம் இதில் முக்கியமில்லை. பிள்ளையின் சுதந்திர செயற்பாடே முக்கியமாகின்றது.
- ஆக்கச் செயற்பாடுகள் பிள்ளைகட்கிடையில் தொடர்பாடல், அனுபவப் பகிர்வு, உத்திகள், கருவிகளைப் பகிரல் ஆகியவற்றிற்கான சந்தர்ப்பத்தை அளிக்கின்றது.
- பிள்ளைகளின் செயற்பாடுகளிற்கு குந்தகம் ஏற்படாதவாறு ஆசிரியர் பிள்ளைகளுடன் உரையாடவும் பிள்ளைகளுடைய செயற்பாடுகளை அவதானிக்கவும் வேண்டும்.
- பெரியோர் (வளர்ந்தோர்), பிள்ளைகளுக்கு ஆக்க விருத்தியில் வளங்கள், பொருத்தமான நுட்பம், அனுபவம் என்பனவற்றில் வழிகாட்டமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புதிய கண்டுபிடிப்பிற்கோ அல்லது புதிய ஆக்கத்திறனிற்கோ உரிய வழியில் தேவையான வழிகாட்டல்களைச் செய்து உதவிட முடியும்.
- பிள்ளை செய்வதை மறுதலித்து மாற்றம் செய்வதை விடுத்து, பிள்ளையின் வேலையில் ஆசிரியர் பிள்ளைக்கு உதவிடலே பொருத்தமானது.
- பிள்ளை தனது குடும்ப கலாசாரம், தனது சொந்தச் சமூகம், இனப் பண்பாடுகளுக்கு ஏற்றவாறே ஆக்கத்தை வெளிப்படுத்தும்.

## ஆக்கத்திறன் விருத்தியைத் தூண்டுவதில் சித்திரத்தின் பங்கு

- பிள்ளைகள் அன்றாடம் தமது சூழலில் நிறங்களையும் கோலங்களையும் வடிவங்களையும் அவதானிக்கின்றனர்.
- பிள்ளை தனது 2 வயதுப் பராயத்தில் நுண்ணிய விரற் தசைநார் விருத்தியுறாத நிலையிலும் பென்சிலையோ அல்லது கட்டிகளையோ பிடித்து ஒழுங்கீனமாக கிறுக்குகின்றது. பென்சிலை உரிய முறையில் பிடிக்க முடியாத நிலையே இவ்வயதில் காணப்படும்.
- புலனுணர்வும் தசைநார்களும் ஒத்திசைவடையாத விருத்தியற்ற நிலையிலும் படிப்படியாகத் தனது முறைமையான கிறுக்கலில் முன்னேற்றத்தை நோக்கிச் செல்கின்றது.
- ஈற்றில் தனது கிறுக்கலில் எதனைச் செய்தேன் எனவும் விபரிக்க கூடியதாகவுள்ளது.
- இப்பராயத்தில் பிள்ளை தனக்குரிய வேகத்தில் விருத்தியுறவிடலே சிறந்தது.
- பெற்றோர்,ஆசிரியர் ஆர்வ மிகுதியால் தத்ரூபமான சித்திரங்களை வரையத் திணிக்கக் கூடாது.
- திணிப்புகள் பிள்ளையின் புலக் காட்சி விருத்தியையும் ஆக்கத்திறனையும் மழுங்கடிக்கச் செய்துவிடும்.
- வரைதலுக்கான கோலங்கள் ஒழுங்கீனமான கிறுக்கலிலிருந்தே ஆரம்பிக்கின்றன.
- மூன்று வயதில் பிள்ளை விரைவான உடல் வளர்ச்சியினால் முறைமையான ஒழுங்கான கிறுக்கலைச் செய்யக் கூடியதாகவுள்ளது.
- பிள்ளையின் விருத்தியில் அடுத்த கட்டமாகிய 3 – 4 வயதில் காட்சிகளை வரைவதில் முறையான கிறுக்கலில் ஈடுபடும்.. இதன்போது தனது சித்திரத்தின் பெயர் விபரங்களை பொருத்தமின்றியும் பதிவு செய்யும்.
- உடல் விருத்தி, அறிவியல் விருத்தி, ஆக்க விருத்தி என்பன ஒன்றிணைந்திருப்பதை பிள்ளையின் சித்திரத்தில் காணக்கூடியதாக இருந்தாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு திணிக்க முற்படாமல் / பிள்ளை சொந்த வேகத்தில் விருத்தியுற சுதந்திரம் அளிக்க வேண்டும்.

## சித்திரம் வரைதலில் ஈடுபடும் பிள்ளைக்குச் சந்தர்ப்பம் வழங்கும்போது கவனஞ் செலுத்த வேண்டிய காரணிகள்.

- முதலாவது காரணி பிள்ளைக்கு ஊக்கமளித்தல்.
- ஏனைய காரணிகள் தூண்டுதல், தேவையான வளங்களை வழங்குதல், புத்தாக்கத்தை செய்ய உற்சாகப்படுத்தல் என்பனவாகும்.
- ஆசிரியர் நட்புடனும் நேயத்துடனும் சுதந்திரமான சூழலை உருவாக்கிச் செயற்பாடுகளைப் பிள்ளைக்களிப்பது முக்கியமானது.
- சில பிள்ளைகள் வரைதலில் அதிக நாட்டமுடையவராகவும் ஏனையோர் எப்போதாவது வரைய விருப்பம் காட்டுபவராகவும் இருப்பர். இதற்கான காரணங்களை ஆசிரியர் விளங்கிக் கொள்ளவேண்டும்.
- படங்கள் வரைதலில் அக்கறை காட்டாத அல்லது விருப்பம் காட்டாத பிள்ளைகள் உடற்குறைபாடோ, உளக்குறைபாடோ அல்லது சமூக மனவெழுச்சி விருத்திக் குறைபாடோ உடையவராக இருக்கலாம்.
- இவ்வாறான நிலமைகளைச் சரியாக ஆசிரியர் விளங்கிக் கொண்டால் பிள்ளையுடன் வேலையிலீடுபடும்போது இதற்கான பரிகாரங்களைக் காணவும் முடியும்.
- பிள்ளைகள் வரைதலிலீடுபடும்போது தமக்கிடையே மன அழுத்தங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஆசிரியர், மாணவரிடையே போட்டி ஏற்படுவதைத் தவிர்ப்பது சாலச் சிறந்தது.
- பிள்ளைகளிடையேயான போட்டிகள் மனவெழுச்சி இடர்பாடுகளைத் தோற்றுவிக்கும். வரைதலில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் போட்டி பிள்ளைகளின் மனதைச் சிதைவுறச் செய்யும்.
- வெவ்வேறு பொருட்களைக் கொண்ட ஆக்க வரைதலிற் பிள்ளை ஈடுபடுவதற்குத் தூண்டப்பட வேண்டும்.
- வெவ்வேறு அளவு கொண்ட சோக் கட்டிகள், துணிவகைகள். நிறங்கள் என்பன போதுமான அளவு வழங்கப்பட வேண்டும்.
- பிள்ளை சுதந்திரமாக கற்றலில் ஈடுபடக் கூடியவாறு நிறக்கடதாசிகள், பேஸ்ரல்(கிறேயோன்) சோக், கத்திரிக்கோல், பசை நாடா, கிளே, துணித்துண்டுகள் போன்றவற்றை போதுமான அளவு வழங்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவற்றை விட மேலும் இறகுகள், கம்பளி நூல், தடித்த அட்டை, காய்ந்த இலைகள், பூக்கள், ஸ்ரிக்கர்கள் (ஒட்டி) என்பனவும் ஆக்கத்திறன் விருத்திக்கான வளங்கள் ஆகும்.
- மகிழ்ச்சியான சூழ்நிலையில் நிறங்களைக் கலந்து புதிய நிறம் உருவாக்கல், வடிவங்களை ஒப்பிடுதல் ஆகிய குழுச் செயற்பாடுகள் செய்விக்கப்பட வேண்டும்.
- பிள்ளைகளின் ஆக்க வேலைகள் கவர்ச்சிகரமான வழியில் காட்சிப்படுத்துவதன் மூலம் பிள்ளைகள் தங்கள் ஆக்கங்களைப் பார்ப்பதன் ஊடாக உற்சாகமடைவதுடன் மேலும் பல ஆக்க வேலைகளில் ஈடுபடவும் தூண்டப்படுவர்.
- பிள்ளைகளின் ஆக்க வேலைகள் அவர்களின் கண்மட்டத்தில் காட்சிப் படுத்தப்படுவதுடன் அவை மெச்சப்படவும் வேண்டும்
- தங்கள் பிள்ளைகளின் ஆக்க வேலைகளைப் பார்த்துப் பாராட்டப் பெற்றோர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.
- புதிய காட்சிப்படுத்தலுக்குரிய இடத்தைப் பெறுவதற்கு பழைய ஆக்கங்களை அவ்விடத்திலிருந்து அகற்றி பிள்ளைகளிடம் அவற்றை வீட்டிற்குக் கொடுத்தனுப்பலாம். மீதமானவற்றை பிள்ளைகளின் கோவையில் (FILE) சேமித்து வைத்து எதிர் காலத்தில் மாணவரின் முன்னேற்றத்தை மதிப்பிடப் பயன்படுத்தப்படலாம்.

### ஆக்கத்திறன் விருத்தியை மேம்படுத்துவதில் சங்கீதத்தின் பங்கு

- பிள்ளைகள் சூழலில் கேட்கும் ஒலிகளைப் பாவனை செய்து காட்ட முயற்சிப்பர். குழந்தைகள் கூட பாடல்கள், இசை ஒலிகளுக்குத் துலங்கல் காட்டுவர்.
- ஒரு வளர்ந்தவர் ஒலியை ஒலிக்கும் பொழுது பிள்ளையும் அதனை ஒலிக்கும் வளர்ந்தவர் அதனை மீள ஒலிக்கும்போது பிள்ளையும் அதனை ஒலிக்கும்.
- இதனைத் தொடர்ந்து செய்யும்பொழுது பிள்ளை தனது முதல் அனுபவத்திற்கேற்ப தனது முறையை எதிர்பார்த்திருக்கும்.
- உங்களுடைய நட்பைத் தேடும்பிள்ளை உங்களை அவதானிக்கத் தயாராகும். ஒரு பிள்ளை ஒரு சிறு பாடலை பாடுவதற்குத் தானாகவே முன் வரலாம்.
- பிள்ளையானது கை தட்டியோ அல்லது வேறு செயற்பாடுகளினூடாகப் பாடுவதற்கோ விருப்பம் காட்டும்.
- பிள்ளைகள் எப்பொழுதும் இசைக் கருவிகளைப் பயன்படுத்தி ஒலிகளை எழுப்ப விருப்பம் காட்டுவர். இதனாலேயே அவர்கள் புத்தளிப்புக் கருவிகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயோகித்து ஒலிகளை எழுப்புவர். மேளம், கிலுக்கிகள் போன்றவை அவர்களால் அடிக்கடி பயன்படுத்தப்படும் புத்தளிப்புக் கருவிகளாகும்.

❖ அனுபவமுள்ளவர்களை அழைத்து இசைக்கருவிகளை இசைத்துக் காட்டுவதன் மூலம் பிள்ளைகளுக்கு நல்ல அனுபவத்தை ஏற்படுத்தலாம். ஆயினும் இவை பிள்ளையால் இரசிக்கக்கூடியதாகவும் சுருக்கமானதாகவும் இருக்க வேண்டும். அவர்கள் இவற்றை இரசிப்பதை கை தட்டல், தலை அசைத்தலின் மூலம் வெளிக்காட்டுவர்.

## ஆக்கத் திறன் விருத்திக்கு உதவுவதில் நடித்தல்

❖ பிள்ளைகள் புதிய ஆடைகளை அணிந்து மற்றையோருக்கு முன்னால் நடிக்க மிகவும் விரும்புவர்.
❖ அவர்கள் நகைகள், தலை அலங்காரங்கள், கைக்கடக்கமான அணிகலன்களை அணிவதில் ஆர்வம் காட்டுவர்.
❖ ஆசிரியர்கள் தாம் பங்குபற்றாது பிள்ளைகள் மட்டும் பங்குபற்றும் ஒரு குழு நடிப்பை முன்வைக்கச் செய்ய வேண்டும்.
❖ சிலவேளைகளில் ஆசிரியரைத் தொடர்புபடுத்தி ஒரு நடிப்பினைப் பிள்ளைகளால் முன்வைக்க முடியும்.
❖ பொம்மலாட்டம் நடிப்பதற்கான விருப்பைத் தூண்டும்.
❖ சிரட்டைகள், பழைய சப்பாத்து சொக்ஸ், அகப்பை, நூல், தடிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி பொம்மலாட்டத்திற்கான பொம்மைகள் ஆக்கலாம்.
❖ இதிலும் செயற்பாடுகளே முக்கியத்துவமானது முடிவுப் பொருள் அல்ல.
❖ பிள்ளைகளை அவதானிப்பதும், எப்படி ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமுடையவர்கள் என்பதை விளங்கிக் கொள்வதுமே ஆசிரியரின் பங்களிப்பாக இருக்க வேண்டும்.
❖ இவற்றை விளங்கிக் கொள்வதன் மூலம் பிள்ளைக்குத் தேவையான வழிகாட்டல்களை ஆசிரியரால் செய்ய முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கத் திறன் விருத்திக்கு தொடுகையினதும் மணத்தலினதும் பங்கு

- பிள்ளை தொடுதல் மூலம் குறிப்பிட்ட சில பொருட்களை அடையாளம் காண்கின்றது.
- ஆக்கத்திறன் விருத்திக்கான கலந்துரையாடலுக்கும் பிள்ளைகளைத் தூண்டுவதற்கும் இவ் அனுபவங்கள் பயனுடையவை.
- மணத்தல் வாசனைகளுக்கிடையேயுள்ள ஒத்த தன்மையை அல்லது வேறுபாடுகளை விளங்கிக் கொள்ள உதவும்.
- கறுவா போன்ற பொருட்கள் அல்லது வாசனைத் திரவியங்களின் மணங்கள் அதனுடன் தொடர்புடைய பொருட்களை இனங்காண்பதற்கான அனுபவத்தை பிள்ளைக்கு வழங்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்க அழகியல் திறன் விருத்தி – சுருக்கம்

- ❖ உடல் விருத்தி, ஆக்கத்திறன் விருத்தி போன்றவற்றுடன் பிள்ளைகள் சித்திரம் வரைதலுக்கான ஆக்கச் சோதனைகளில் ஈடுபட முயற்சிப்பர்.

- ❖ சித்திரம் வரைதலுக்கான கோல விருத்தி கிறுக்கலில் இருந்து ஆரம்பிக்கின்றது. பல மட்டங்களில் விருத்தியாகின்றது. அதாவது ஒழுங்கற்ற கிறுக்கலில் ஆரம்பித்து ஒழுங்கான கிறுக்கலுக்கு இட்டுச் செல்லும்.

- ❖ பாடல்களை இரசிப்பதற்கான அடிப்படையை, பாடல்களையும் இசை ஒலிகளையும் செவிமடுத்தலும் பாடலுடன் இசைக்கருவிகளை வாசித்தலும் உருவாக்கும்.

- ❖ நடித்தலில் பொம்மலாட்டமும் பாத்திரமேற்று நடித்தலும் பிள்ளைகளில் வேறுபட்ட நடத்தைகளையும் கதைகளைக் கற்பனை செய்யும் ஆற்றலையும் பாவனை செய்தலையும் தூண்டும்.

- ❖ தொடுகையும் மணத்தலும் ஆக்கத்திறனைத் தூண்டும்.

- ❖ ஆக்கத் திறன் விருத்திக்கு உதவும் எல்லாச் செயற்பாடுகளும் கூட்டுறவாகவும் போட்டித்தன்மை அற்றதாகவும் இருக்க வேண்டும்.

- ❖ ஆக்கத்திறன் விருத்திச் செயற்பாடுகள் பிள்ளைகளை அறிவதற்குரியச் சந்தர்ப்பங்களை ஆசிரியருக்கு வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயற்கைப் பொருட்களைக் கொண்டு வெவ்வேறு நிறங்களை உருவாக்கும் முறைகள் சில பின்வருமாறு.**

- நிறங்களை ஆக்கும் பொழுது அவற்றை தடித்ததாகவும் கடும் நிறமாகவும் ஆக்க முயற்சிக்க வேண்டும்.
- நிறச் சாயங்களைத் தடிப்பாக்குவதற்கு கோதுமை மா மரவள்ளிக்கிழங்கு மா அல்லது கிழங்குவகைகளைப் பயன்படுத்தலாம்.
- விரும்பத்தகாத மணங்கள் உருவாவதைத் தடுப்பதற்கு சிறிதளவு உப்பைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- சுற்றாடலில் உள்ள வெவ்வேறு வகைத் தாவரங்களைப் பயன்படுத்தி வெவ்வேறாக நிறச் சாயங்களை உருவாக்கலாம்.

## இயற்கையில் இருந்து நிறம், சாயம் பெற்றுக் கொள்ளல்

சுற்றாடலில் உள்ள பொருட்களைக் கொண்டு நிறச் சாயங்கள் செய்யும் முறைகளை அறிந்து கொள்வது நன்று. சாயங்களைச் செய்யும் போது தடிப்பாகவும் பிரகாசமாகவும் செய்து கொள்ள வேண்டும். செய்த சாயங்களுக்கு மாப்பொருளும் உப்பும் சேர்த்துக் கொண்டால் தடிப்பாகவும் கெட்டுப் போகாமலும் இருக்கும். சுற்றாடலில் உள்ள தாவரங்களின் வேர், இலை, பூ, காய், பட்டை முதலியவற்றில் இருந்து இயற்கையான சாயங்களைப் பெற்றுக்கொள்ள முயல வேண்டும்.

### சிவப்பு

- சிவந்த செவ்வரத்தைப் பூக்களை அவித்து தேசிக்காயச் சாறைச் சேர்க்கவும்.
- போகன்வில்லா பூவின் சாறு சிவப்பாகும்.
- கண்டல் பட்டையை இடித்து, அவித்தால் சிவப்பு நிறம் வரும்.
- மஞ்சளையும் சுண்ணாம்பையும் சேர்த்து அவித்தால் சிவப்பு நிறம் வரும்.
- வெற்றிலைச் சாறும் சுண்ணாம்பும் சிவப்பாகும்
- தேசிக்காய்ப் புளியும் சுண்ணாம்பும் சிவப்பாகும்.

### மஞ்சள்

- மாமரத்தின் பட்டையை நசுக்கி தண்ணீரைச் சிறிது சேர்த்து வரும் சாற்றில் சிறிது தேசிக்காய்ச் சாற்றைச் சேர்க்க மஞ்சள் நிறம் வரும்.
- பூவரசம் மரக் காயினால் வரைந்தால் மஞ்சள் உருவாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மஞ்சள் கிழங்கை அரைத்தெடுத்தாலும் மஞ்சள் நிறம் வரும்.

நீலம்

- சிவந்த செவ்வரத்தைப் பூக்களைத் தண்ணீரில் அவித்துப் பிழிந்தால் நீல நிறம் வரும்.
- நீலப் பொடியை தண்ணீரில் கலக்க வரும்.

பச்சை

- கொவ்வை இலைச்சாறு, பலவகைத் தாவரங்களின் இலைகளை அரைத்தெடுத்தாலும் பச்சை நிறம் வரும்.
- மஞ்சள் பொடியோடு நீலப் பொடியைச் சேர்த்து நீரில் கலந்தால் பச்சை நிறம் வரும்.

செம்மஞ்சள் நிறம்

- சிவப்புப் பொடியை மஞ்சள் பொடியோடு நீரில் கலந்தால் செம்மஞ்சள் நிறம் வரும்.
- மஞ்சள் பொடியோடு சவர்க்கார கரைசலைச் சேர்த்தால் செம்மஞ்சள் நிறம் வரும்.

பழுப்பு நிறம் / மண்ணிறம்

- மண்ணிறக் 'கிளே' clay யை நீரில் கரைத்து தெளியவைத்த பின் வடித்து நீரை வெளியேற்றி விட்டால் மண்ணிறக் கலவை வரும்.
- சதுப்பு நில தாவரமான கண்டல் மரப் பட்டையைத் தட்டிச் சாற்றைப் பிழிந்து காய்ச்சினால் சாயம் வரும். வாழைச் சாற்றையும் பயன்படுத்தலாம்.

கறுப்பு

- மரக் கரியைத் துளாக்கி நீர் சேர்த்தால் கறுப்பு நிறம் வரும்.
- விளக்குக் கரியை கரைப்பதால் கறுப்பு உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை

- சிப்பி சுட்டால் வெண் பொடி வரும். அதனைச் சிறிதளவு நீரில் கரைத்தால் வெள்ளை நிறம் வரும்.

## நிறம் தீட்டும் தூரிகைகள்

- பல பொருட்களைக் கொண்டு தூரிகை செய்யலாம். செவ்வரத்தைப் பூவின் பூக்காம்பு, காய்ந்த பாக்குத் தோல், தென்னந் தும்பு போன்ற பலவற்றைச் சிறு தடியில் கட்டித் தூரிகையாகப் பயன்படுத்தலாம்.
- மிருகங்களின் உரோமம் (மாட்டின் வால் உரோமம்)

## பசைக் கூழ்

- கோதுமை மாவை வெந்நீரில் குழைத்தெடுக்கலாம். மாப் பொருள் உள்ள கிழங்கு வகையை அவித்துக் கடைந்தெடுக்கலாம். சோற்றையும் பசையாகப் பயன்படுத்தலாம். கோதுமை மா, உருளைக்கிழங்கு போன்றவற்றில் பசை செய்து கொஞ்சம் உப்பையும் கலந்துவிட்டால் கெட்டுப் போகாது.
- வேம்பு, முந்திரி,ஈரப்பலா மரங்களின் பிசினும் பசையாகப் பயன்படுத்தலாம்.

## ஆக்கச் செயற்பாடுகளுக்குத் தேவையான பொருட்கள்

பலவகை மரங்களின் பட்டைகள், பாளை, பன்னாடை, கற்கள், பெட்டிகள், பழைய சஞ்சிகைகள், துணித்துண்டுகள், நாடாக்கள், பிளாஸ்ரிக் கோப்பைகள், தட்டுக்கள், பப்பாசித்தண்டு, வைக்கோல், பிளாஸ்ரிக் தண்டு, விதைகள், இலைகள், போத்தல் மூடிகள், பழைய பாய், பேப்பர், கௌவி, தென்னம்பட்டை, ஈர்க்கில், நூல், பழைய நாட்காட்டி, றப்பர் வளையம், களி, மெழுகுதிரி இன்னும் சூழலில் காணப்படும் பொருட்கள் அனைத்தும் பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - கிறுக்கல் சித்திரம்

தேர்ச்சி :- மணலில் விரலால் கீறுவார்.

செயற்பாடு :- 5.1 மணலில் கீறுதல்.

வளம் :- விரல், மணல்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. மணல்மூலை / மணல் பரப்பிய இடத்துக்குப் பிள்ளைகளை அழைத்துச்செல்லுதல்.
2. பிள்ளைகள் பார்த்துக்கொண்டு இருக்கையில் ஆசிரியர் தனது விரலால் மணலில் கீறுதல்.
3. பிள்ளைகளைச் சுதந்திரமாய் விரலால் கீறவிடுதல்.
4. கீறியவற்றைப் பிள்ளைகள் பார்வையிடச் செய்தல்.

மதிப்பீடு :-

1. விரல்களைப் பயன்படுத்தி கீறுவதையும் கீறியவற்றையும் அவதானித்தல்.
2. வெவ்வேறு கோலங்கள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்கச் செய்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. விரலால் கீறி மகிழ்ந்த பிள்ளைகளைத் தடியால் மணலில் கீறச் செய்தல்.
2. வீட்டிலும் கீறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு பெற்றோரை வழிப்படுத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - கிறுக்கல் சித்திரம்

தேர்ச்சி :- சுயாதீனமாகக் கிறுக்குவார்.

செயற்பாடு :- 5.2 கிறுக்குதல்.

வளம் :- வெண்கட்டி, மாணவர் கரும்பலகை,


அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. கரும்பலகையை அவதானிக்கக்கூடிய வகையில் பிள்ளைகளை நிற்கவிடல்.
2. ஆசிரியர் கரும்பலகையில் கிறுக்கிக் காட்டுதல்.
3. ஒவ்வொரு பிள்ளையையும் கிறுக்கலில் ஈடுபடச்செய்தல்.
4. பிள்ளைகளின் அனைத்து கிறுக்கல் செயல்பாடுகளையும் அவதானித்தல்.

மதிப்பீடு :- சுயாதீனமாகக் கிறுக்குவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் கிறுக்கலில் பிள்ளைகள் ஈடுபட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - கிறுக்கல் சித்திரம்

தேர்ச்சி :- கிறுக்கி வர்ணம் தீட்டுவார்.

செயற்பாடு :- 5.3 வர்ணம் தீட்டல்.

வளம் :- A3 தாள், பஸ்ரல் வர்ணம்

அணுகுமுறை :- செயற்பாடு.


செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் அனைவரும் அவதானிக்கக்கூடிய வகையில் ஆசிரியர் தாளில் பஸ்ரலால் கிறுக்குதல்.
2. கிறுக்கியதன் அடைப்புகளில் ஆசிரியர் பஸ்ரல் நிறம் தீட்டிக்காட்டுதல்.
3. பிள்ளைகள் ஒவ்வொருவரையும் கிறுக்கி நிறந்தீட்டச் செய்தல்.
4. கிறுக்கி நிறம் தீட்டிய சித்திரங்களைக் காட்சிப்படுத்தல்.
5. கிறுக்கல் சித்திரங்களில் வெளிப்படும் வடிவங்கள் / உருவங்களைக் கண்டு பிடித்துக்கூற வழிப்படுத்துதல்.

மதிப்பீடு :-

1. விரல்கள் , கைகளின் பயன்பாடு என்பவற்றை அவதானித்தல்.
2. கிறுக்குவதையும் வடிவங்களை ஆக்குவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் தாளில் வர்ணக் கட்டிகளால் கிறுக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு பெற்றோரை வழிப்படுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - சுரண்டல் சித்திரம்.

தேர்ச்சி :- சுரண்டுதல் மூலம் பல நிறங்களை உருவாக்குவார்.

செயற்பாடு :- 5.4. பஸ்ரல் வர்ணங்களைச் சுரண்டுதல்.

வளம் :- A4 தாள், பஸ்ரல் வர்ணம், கிளிப் (தகட்டுத் தன்மை உடையது), பேனா நீபிள்.


அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளுக்கு A4 தாள், பஸ்ரல் வர்ணம், கிளிப் போன்றவற்றைப் பகிர்ந்தளித்தல்.
2. பிள்ளைகளை அரைவட்ட வடிவில் நிற்கவிட்டு ஆசிரியர் A4தாளில் பிரகாசமான வர்ணத்தை (மஞ்சள், செம்மஞ்சள்) தாள் முழுவதும் பூசி அதன் மேல் கறுப்பு வர்ணத்தை பூசுதல். பின்னர் அதில் கிளிப்பால் சுரண்டுதல்.
3. பிள்ளைகளை வர்ணங்களைப் பூசிச் சுரண்ட விடுதல்.
4. பிள்ளைகளின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்துதல்.

மதிப்பீடு :- பஸ்ரல் வர்ணம் தேய்ப்பதையும் சுரண்டுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டில் வெவ்வேறு காட்சிகளை சுரண்டல் சித்திரமாக அமைக்க பெற்றோரை வழிப்படுத்துதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - அச்சுப்பதித்தல்.

தேர்ச்சி :- கிறயோன் சோக்கால் தேய்ப்பதன் மூலம் வடிவங்களை அச்சுப்பதிப்பார்.

செயற்பாடு :- 5.5 வடிவங்களை அச்சுப்பதித்தல்.

வளம் :- பஸ்ரல் சோக்குகள், பிறிஸ்டல் போட்டில் வெட்டி எடுக்கப்பட்ட வடிவங்கள், A4 தாள்கள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளிடம் வெட்டப்பட்ட வடிவங்களைக் கொடுத்தல்.
2. A4 தாள்களைக் கொடுத்தல்.
3. பஸ்ரல் சோக்குகளைக் கொடுத்தல்.
4. ஆசிரியர் A4 தாளின் கீழ் வடிவங்களை வைத்து தாளின் மேல் பஸ்ரலால் உரோஞ்சி அச்சுப்பதித்தல்.
5. பிள்ளைகளை அச்சுப்பதிக்க வழிப்படுத்துதல்.
6. பிள்ளைகள் அச்சுப்பதித்தவற்றைக் காட்சிப்படுத்தல்.

மதிப்பீடு :- தேய்க்கும் முறையையும் வடிவம் பெறுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வெவ்வேறு உருவங்களை அச்சுப்பதிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - அச்சுப்பதித்தல்

தேர்ச்சி :- நீர் வர்ணத்தைப் பயன்படுத்தி உள்ளங்கையை அச்சுப்பதிப்பார்.

செயற்பாடு :- 5.6 உடலுறுப்புகளை அச்சுப்பதித்தல்

வளம் :- நீர்வர்ணம், A4 தாள்கள்

அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-

1. கிண்ணங்களில் நீர் வர்ணங்களைத் தயார் செய்தல்.
2. பிள்ளைகளிடம் A4 தாள்களை வழங்குதல்.
3. நீர் வர்ணத்தினுள் உள்ளங் கையைத் தோய்த்து A4தாளில் ஆசிரியர் அச்சுப் பதித்துக் காட்டுதல்.
4. பிள்ளைகள் ஆசிரியரின் வழிகாட்டலுக்கமைய நீர்வர்ணத்தால் அச்சுப்பதித்தல்.
5. அச்சுப்பதித்து உலர்ந்த பின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்.

மதிப்பீடு :- அச்சுப்பதிக்கும் முறையை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் பிள்ளைகள் வேறுபட்ட வர்ணங்களையும் தாள்களையும் பயன்படுத்தி அச்சுப்பதிக்கப் பெற்றோரை வழிப்படுத்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - அச்சுப்பதித்தல்

தேர்ச்சி :- கசக்கிய துணியைப் பயன்படுத்தி அச்சுப்பதிப்பார்.

செயற்பாடு :- 5.7 அச்சுப்பதித்தல்.

வளம் :- A4 தாள்கள், பருத்தித்துணி , நிறக்குழம்பு

அணுகுமுறை :- செயற்பாடு .

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. வர்ணங்களைக் கரைத்து நிறக் குழம்புகளாக்குதல்.
3. வளங்களைக் குழுக்களுக்குப் பகிர்ந்தளித்தல்.
4. A4 தாளில் பஞ்சு / சுருக்கிய துணியால், நிறக்குழம்பைத் தோய்த்து அச்சுப் பதிக்கச் செய்தல்.
5. ஏதோ ஒரு ஒழுங்கைக் கடைப்பிடிக்கச் செய்தல்.
6. பல நிறக்குழம்புகளையும் பயன்படுத்தச் செய்தல்.

மதிப்பீடு :- அச்சுப்பதிக்கும் முறையை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- கடதாசியைப் பயன்படுத்தி அச்சுப்பதித்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - ஒட்டுச்சித்திரம்

தேர்ச்சி :- குறித்த வடிவம் ஒன்றினுள் நிறக் கடதாசிகளை ஒட்டிச் சித்திரமாக்குவார்.

செயற்பாடு :- 5.8 ஒட்டுதல்

வளம் :- வர்ணத்தாள், A4 தாள்கள், பசை, கழிவுப்பொருட்கள்,

அணுகுமுறை :- செயற்பாடு .

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளிடம் எல்லைப்படுத்தப்பட்ட மாம்பழம் ஒன்றின் புறவுருவினை வழங்குதல்.
2. கழிவுப்பொருட்கள் (வெட்டிக்கிழித்த சீத்தைத் துணி, வர்ணச் சஞ்சிகைகள்), பசை வழங்குதல்.
3. ஆசிரியர் வரையறுக்கப்பட்ட மாம்பழ வடிவத்தினுள் ஒட்டிய சித்திரத்தைக் காட்டுதல்.
4. பிள்ளைகளை வரையறுக்கப்பட்ட வடிவங்களுக்குள் ஒட்டச் செய்தல்.
5. ஒட்டிய ஆக்கங்களைக் காட்சிப்படுத்துதல்.

மதிப்பீடு :- எல்லைக்குள் ஒட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- கழிவு, இயற்கைப் பொருட்களால் ஒட்டுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - இயற்கை வர்ணம்.

தேர்ச்சி :- இயற்கை வர்ணங்களை இனங்கண்டு நிறந் தீட்டுவார்.

செயற்பாடு :- 5.9 வர்ணம் தீட்டுதல்

வளம் :- A4 தாள்கள், இயற்கையாகக் கிடைக்கும் பொருட்கள் (பூவரசம் காய்/ பூ, செவ்வரத்தம் பூ, போகன்வில்லா பூ, இலைகள் போன்றவை)


அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளுக்கு A4 தாள்கள் ஒவ்வொன்று வழங்குதல்.
2. ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் வர்ணங்கள் கிடைக்கக் கூடிய இயற்கைப் பொருள்கள் வழங்குதல்.
3. ஆசிரியர் வர்ணந் தீட்டிக் காட்டுதல்.
4. சுதந்திரமாக வர்ணந்தீட்டுமாறு பிள்ளைகளை வழிப்படுத்துதல்.
5. வர்ணந் தீட்டியவற்றைக் காட்சிப்படுத்துதல்.

மதிப்பீடு :- இயற்கை வர்ணங்களை இனங்காண்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வரையறுக்கப்பட்ட வடிவங்களுக்குள் இயற்கைப் பொருட்களால் நிறந் தீட்டலுக்கு வழிப்படுத்துதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - வர்ணம் தீட்டல்.

தேர்ச்சி :- சுயாதீனமாக வர்ணம் தீட்டுவார்.

செயற்பாடு :- 5.10 வர்ணம் தீட்டல்.

வளம் :- A4 தாள்கள், கிறயோன் வர்ணம்


அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளுக்கு A4 தாளினையும் கிறயோன் வர்ணத்தினையும் பகிர்ந்தளித்தல்.
2. பிள்ளைகளை அரை வட்ட வடிவில் நிறுத்தி ஆசிரியர் A4 தாளில் யாதாயினும் ஒரு வர்ணத்தால் நிறந்தீட்டிக் காட்டுதல்.
3. பிள்ளைகளைச் சுதந்திரமாக நிறந்தீட்டவிடல்.
4. பிள்ளைகளின் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்தல்.

மதிப்பீடு :- கிறயோன் வர்ணத்தைப் பிடிக்கும் முறை, திசை என்பவற்றை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஒரு வர்ணத்தால் நிறந்தீட்டிய பிள்ளைகளை இரு வர்ணங்களைப் பயன்படுத்தி / பல வர்ணங்களைப் பயன்படுத்தி நிறந்தீட்டச் செய்தல். ஒரு வர்ணத்தின் மேல் வேறோர் வர்ணத்தை நிறந்தீட்டச் செய்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - வர்ணம் தீட்டுதல்.

தேர்ச்சி :- எல்லைக்குள் வர்ணம் தீட்டுவார்.

செயற்பாடு :- 5.11 வர்ணம் தீட்டுதல்.

வளம் :- A4 தாள்கள், கிறயோன் வர்ணம்


அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளுக்கு கேத்திர கணித வடிவங்கள் வரைந்த A4 தாளினையும் கிறயோன் வர்ணத்தையும் வழங்குதல்.
2. ஆசிரியர் கேத்திர கணித வடிவங்களினுள் நிறந்தீட்டிக் காட்டுதல்.
3. பிள்ளைகளை ஒவ்வோர் கேத்திர கணித வடிவத்திற்கும் ஒவ்வோர் நிறந் தீட்டவிடல்.
4. பின்னணிக்கு வேறு ஓர் நிறத்தை பயன்படுத்தி நிறந்தீட்டவிடல்.
5. அவர்களின் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துதல்.

மதிப்பீடு :- எல்லைக்கு வெளியே செல்லாதவாறு வர்ணம் தீட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பழங்கள், காய்கள், மிருகங்கள், பறவைகள் என்பவற்றின் கோட்டுப்படங்களைக் கொடுத்து நிறந்தீட்டச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - காட்சிச் சித்திரம்

தேர்ச்சி :- விரலால் வரைவார்.

செயற்பாடு :- 5.12 வரைதல்.

வளம் :- மணல், விரல்,

அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை மணல் உள்ள இடத்துக்கு அழைத்துச் செல்லல்.
2. அரைவட்டமாகப் பிள்ளைகளை நிற்க விடல்.
3. ஆசிரியர் விரலால் (பிள்ளைகளின் சூழல் சம்பந்தமான ) காட்சியை மணலில் கீறுதல்.
4. பிள்ளைகளை சுதந்திரமாக மணலில் கீற வழிப்படுத்துதல்.
5. வரைந்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்துதல்.

மதிப்பீடு :- விரலின் அசைவு, விரலின் பயன்பாடு என்பவற்றை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- மண்ணில் வரைய பிள்ளைகளக்கு சந்தர்ப்பம் வழங்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - காட்சிச் சித்திரம்

தேர்ச்சி :- பிள்ளை தான் பார்த்த சூழலில் உள்ள பொருள் ஒன்றை வரைவார்.

செயற்பாடு :- 5.13 காட்சிகளை வரைதல்.

வளம் :- A4 தாள், A3 தாள், கிறயோன்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. A4 தாளை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குதல்.
2. கிறயோன் சோக் வழங்குதல்.
3. ஆசிரியர் A4 தாளில் வரைவார்.
4. பிள்ளைகளை வரையுமாறு வழிப்படுத்துதல்.
5. வரைந்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்துதல்.

மதிப்பீடு :- விரல்களின் அசைவு, நிறத் தெரிவை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மேலும் வெவ்வேறு காட்சிகளை வரைய விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - வர்ணங்களை கையாளுதல்.

தேர்ச்சி :- நிறப்பசையைப் பயன்படுத்தி சித்திரம் ஆக்குவார்.

செயற்பாடு :- 5.14 தாளை மடித்தல்

வளம் :- A4 தாள்கள், நிறப் பசை

அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளுக்கு A4 தாள் ஒவ்வொன்று வழங்குதல்.
2. ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் நிறப்பசை வழங்குதல்.
3. ஆசிரியர் ஒரு A4 தாளை இரண்டாக மடித்து ஒரு பக்கத்தில் வர்ணப் பசையை சிறிதளவு ஊற்றி மறுபக்கத்தை மடித்து தடவி விரித்து சித்திரம் உருவானதைக் காட்டுதல்.
4. பிள்ளைகளை அவ்வழியே செயற்பட வழிப்படுத்துதல்.
5. பிள்ளைகள் ஆக்கியவற்றைக் காட்சிப்படுத்துதல்.

மதிப்பீடு :- தாளை மடிப்பதையும் சித்திரம் ஒன்றை உருவாக்குவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இரண்டு நீர் வர்ணங்களைப் பயன்படுத்தி சித்திரம் ஆக்க வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - வர்ணம் தீட்டுதல்

தேர்ச்சி :- நிறம் தீட்டுவார், தொங்க விடுவார்.

செயற்பாடு :- 5.15 சித்திரம் வரைதல்.

வளம் :- வெவ்வேறு வடிவங்களில் வெட்டப்பட்ட வெள்ளை பிறிஸ்டல் போட் துண்டுகள், கிறயோன், நூல்

அணுகுமுறை :- செயற்பாடு.


செயலொழுங்கு :-

1. வெட்டப்பட்ட பிறிஸ்டல் போட்டில் விரும்பிய வடிவங்களுக்கு நிறம் தீட்ட விடுதல்.
2. நிறம் தீட்டிய சித்திரங்களை நூலில் இணைத்தல்.
3. வகுப்பறையில் கட்டப்பட்ட கயிற்றில் இவற்றைத் தொங்க விடல்.

மதிப்பீடு :- நிறம் தீட்டல், நூலில் தொடுத்தல், தொங்கவிடல் ஆகிய செயற்பாடுகளை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. பல்வேறு வகைப்பட்ட பிளாஸ்திக் போத்தல்கள், பழைய CD க்கள் போன்றவற்றில் அசையும் சித்திரம் செய்ய வழிப்படுத்துதல்.
2. வீட்டிலும் செய்வதற்கு பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு பெற்றோரை வழிப்படுத்துதல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் ஒட்டுச் சித்திரம்

தேர்ச்சி :- மணலைப் பயன்படுத்திச் சித்திரம் ஆக்குவதில் அனுபவம் பெறுவார்.

செயற்பாடு :- 5.16 மணற் சித்திரம் வரைதல்.

வளம் :- A4 தாள், பளிங்கு மணல், பென்சில், பசை, நிறக்கலவைகள், தூரிகை

அணுகுமுறை :- செயற்பாடு.

செயலொழுங்கு :-

1. A4 தாளில் விரும்பிய வடிவை பென்சிலால் வரையச் செய்தல்.
2. வடிவத்தில் பசை பூசி மணலைத் தூவி ஒட்டச் செய்தல்.
3. ஒட்டிய வடிவத்திற்கு தூரிகையால் வர்ணம் பூசச் செய்தல்.
4. காட்சிப்படுத்தல்

மதிப்பீடு :- வடிவங்கள் வரைதல், பசை பூசுதல், மணல் தூவுதல், நிறந் தீட்டல் ஆகியவற்றை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிழிந்த தேங்காய்ப் பூ, உலர்ந்த தேயிலை என்பவற்றைப் பயன்படுத்திச் சித்திரம் ஆக்கச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - வரைதல்

தேர்ச்சி :- நீர் வர்ணத்தைப் பயன்படுத்தி வரைவார்.

செயற்பாடு :- 5.17 வரைதலும் நீர்த் தொட்டியின் கீழ் வைத்து அவதானித்தலும்.

வளம் :- கிறயோன், நீர்வர்ணம், தூரிகை, A4 தாள், நீருள்ள கிண்ணம்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. A4 தாளில் மீன்களை வெவ்வேறு அளவுகளில் கிறயோன் சோக்கினாற் கீற விடுதல்.
2. மீன்களின் பின்னணிக்கு வெண்நீல நிறம் நீர் வர்ணம் தீட்டல்
3. நிறம் உலர்ந்த பின்னர் நீர்த் தொட்டியின் கீழ் வைத்து அவதானிக்க விடல்.

மதிப்பீடு :- மீனுக்கும் பின்னணிக்கும் நிறந் தீட்டலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- கடல் வாழ் பாசி, சிப்பி, சோகி என்பவற்றை வரையவிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - அலங்காரம்

தேர்ச்சி :- பந்தை உருட்டுவதன் மூலம் அலங்காரச் சித்திரம் ஆக்குவார்.

செயற்பாடு :- 5.18 பந்தை உருட்டுதல்.

வளம் :- சதுரப் பெட்டி -1,சிறிய பந்துகள் -3, A4 தாள், சிறிய கிண்ணம் -2, மேசைக்கரண்டி, 3 – நிறச் சாயங்கள் - (ஒரு குழுவிற்கு)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை எண்ணிக்கைக்கு ஏற்பக் குழுக்களாக்குதல்.
2. குழுக்களுக்கு வளங்களைப் பகிர்ந்தளித்தல்.
3. ஆசிரியர் செய்து காட்டல்.

- சதுரப் பெட்டியினுள் A4 தாளினை வைத்தல்.
- நிறத்தில் தோய்க்கப்பட்ட பந்தினை பெட்டியினுள் இட்டுக் குலுக்கி உருட்டுதல்.
- இவ்வாறு ஏனைய நிறந் தோய்க்கப்பட்ட பந்துகளையும் தனித்தனியே பெட்டியில் இட்டுக் குலுக்கி உருட்டுதல்.
- பெட்டியினுள் இருந்து வெளியில் எடுத்துக் காயவிட்டுக் காட்சிப்படுத்தல்.

4. குழுக்களை ஈடுபடுத்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் ஈடுபாட்டை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- அதிகளவான நிறங்களையும், பந்துகளையும் பயன்படுத்தி ஆக்கங்களில் ஈடுபடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - அலங்காரம்

தேர்ச்சி :- நிறங்களைத் தெளிப்பதன் மூலம் ஆக்கங்கள் செய்வார்.

செயற்பாடு :- 5.19 தெளித்தல்

வளம் :- பழைய பற்தூரிகை, A4 தாள், நிறக்கலவைகள், இயற்கைப் பொருட்கள், பழைய சீப்பு

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. பாடசாலைக்கு வெளியே பிள்ளைகளை அழைத்துச்செல்லல்.
2. இயற்கைப்பொருட்களை எடுத்து வரும்படி செய்தல். (இலை,)
3. ஆசிரியர் உரிய முறையில் செய்து காட்டல்.

- A4 தாளை மேசையில் வைத்து வெவ்வேறு அளவுள்ள இலைகளை தாளின் மேல் வைத்தல்.
- பற்தூரிகையில் நிறங்களைத் தோய்த்துப் பழைய சீப்பின் உதவியுடன் தூரிகையை உராய்வதன் மூலம் தெளித்தல்.
- பின்பு இலைகளை எடுத்து தாளைக் காட்சிப்படுத்தல்.

4. பிள்ளைகளைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.

மதிப்பீடு :- செயற்பாட்டின் போது தூரிகையைப் பயன்படுத்தித் தெளிக்கும் திறனை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. வீட்டிலும் தெளித்தல் சித்திரம் செய்ய பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு பெற்றோரை வழிப்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - வர்ணம் தீட்டல்

தேர்ச்சி :- இயற்கைப் பொருட்களுக்கு நிறம் தீட்டி அழகுபடுத்துவார்.

செயற்பாடு :- 5.20 நிறம் தீட்டுதல்.

வளம் :- இலைகள், கற்கள், சிப்பி, சங்கு, தூரிகைகள், நிறக்கலவை, பசை, A4 தாள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பாடசாலைச் சூழலுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல்.
2. கற்கள், சருகுகள், சிப்பி எடுத்து வரச் செய்தல்.
3. எடுத்து வந்த பொருட்களை A4 தாளில் ஒட்டுதல்.
4. நிறக்கலவை, தூரிகை வழங்குதல்.
5. சுதந்திரமாக தூரிகையால் நிறம் தீட்டச் செய்தல்.

மதிப்பீடு :- நிறம் தீட்டலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வேறு பயன்படுத்தப்படாத பொருட்களுக்கும் நிறம் தீட்ட விடுதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | சித்திரம் - இயற்கைக் காட்சி |
| தேர்ச்சி | :- | படத்தை இனங் கண்டு சரியான விதத்தில் பொருத்திக் காட்டுவார். |
| செயற்பாடு | :- | 5.21 துண்டுகளைப் பொருத்துதல் |
| வளம் | :- | A4 தாளில் காலைக் காட்சி, மாலைக் காட்சி, கடற்கரைக் காட்சி |
| அணுகுமுறை | :- | செயற்பாடு |
| செயலொழுங்கு | :- | |

1. வரையப்பட்ட இயற்கைக் காட்சிகள் மூன்றினைக் காண்பித்தல்.
2. ஒவ்வொன்றையும் 4 துண்டுகளாக வெட்டி உறையினுள் இடுதல்.
3. பிள்ளைகளை 3 குழுக்களாக்குதல்.
4. ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு உறையினை வழங்குதல்.
5. பிள்ளைகளைத் துண்டங்களைப் பொருத்திக் காட்சியாக்க விடுதல்.
6. காட்சிப்படுத்தல்.

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | முழுமையான காட்சி உருவாக்குவதை அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கம் | :- | துண்டுகளின் எண்ணிக்கையை அதிகரித்து பொருத்த விடல். |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - புத்தாக்கச் சித்திரம்

தேர்ச்சி :- புதிய நுட்பங்களால் சித்திரம் ஆக்குவார்.

செயற்பாடு :- 5.22 ஒட்டுதலும் நிறந்தீட்டுதலும்

வளம் :- A4 தாள், நிறக்கலவைகள், தூரிகைகள், செலோரேப்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை A4 தாளில் செலோரேப்பினால் விரும்பிய கோலங்களில் ஒட்ட விடல்.
2. தூரிகையால் நிறக்குழம்பின் ஏதேனும் ஒரு நிறத்தை தாள் முழுவதும் பூசும்படி செய்தல்.
3. நிறந் தீட்டிய தாளின் மீது மீண்டும் செலோரேப்பை ஒட்டி வேறுநிற நிறக்குழம்பைப் பூசுமாறு செய்தல்.
4. இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்யச் செய்தல்.

மதிப்பீடு :- ஒட்டுதலையும் நிறந்தீட்டுதலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- அலங்கார வடிவில் செலோரேப்பை ஒட்டி நாலைந்து நிறங்களில் சித்திரம் ஆக்கச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - புத்தாக்கச் சித்திரம்

தேர்ச்சி :- புதிய நுட்பங்களைப் பயன்படுத்திப் புத்தாக்கச் சித்திரம் ஆக்குவார்.

செயற்பாடு :- 5.23 மெழுகால் வரைதலும் நிறந்தீட்டலும்.

வளம் :- A4 தாள், மெழுகுதிரி, நிறக்குழம்புகள், தூரிகை.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. A4 தாளில் மெழுகினால் ஊன்றி வரையும்படி செய்தல்.
2. தாள் முழுவதும் தூரிகையால் ஏதேனும் ஒரு நிற நிறக்குழம்பைப் பூசச் செய்தல்.
3. பூசிய நிறக்குழம்பு உலர்ந்த பின் மீண்டும் மெழுகினால் வரையச் செய்தல். பின் தாள் முழுவதும் வேறொரு நிற நிறக்குழம்பு பூசச் செய்தல்.
4. இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்வதால் பல்வேறு நிறங்களினால் கோலம் உருவானதை அவதானித்தல்.

மதிப்பீடு :- வரைதலையும் நிறந் தீட்டுதலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- மெழுகினால் அலங்காரங்கள் வரைந்து நிறந் தீட்டச் செய்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - ஒட்டுச் சித்திரம்

தேர்ச்சி :- பல நிறப் பென்சில் சீவலைப் பயன்படுத்தி அலங்காரம் ஒட்டுவார்.

செயற்பாடு :- 5.24 ஒட்டுவதால் சித்திரம் ஆக்குவோம்.

வளம் :- பலநிறப் பென்சில்கள், பென்சில் சீவிகள், பசை, A4 தாள்


அணுகுமுறை :- செயல்

செயலொழுங்கு :-

1. பென்சில் சீவிகளால் பலநிறப் பென்சில்களைச் சீவிக் கொள்ளல்.
2. A4 தாளில் பசையினைப் பூசி விரும்பிய கோலத்தில் சீவல்களை ஒட்டுதல்.
3. காட்சிப்படுத்தல்

மதிப்பீடு :- பசை பூசுவதையும் விரும்பிய கோலத்தில் ஒட்டுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- நெல் உமி, பூசணி விதை, பீர்க்கு விதை இவற்றைப் பயன்படுத்தி இதையொத்த ஆக்கங்களைச் செய்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - அச்சுப்பதித்தல்.

தேர்ச்சி :- கிறயோன் சோக்கால் தேய்த்து இலையை அச்சுப்பதிப்பார்.

செயற்பாடு :- 5.25 இலையை அச்சுப்பதித்தல்.

வளம் :- A4 தாள்கள், கிறயோன் சோக், இலைகள்.

அணுகுமுறை :- செயன்முறை

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை இலைகளுடன் வருமாறு கூறுதல்.
2. கிறயோன் சோக்குகளை வழங்குதல்.
3. ஆசிரியர் தாளின் கீழ் இலைகளை வைத்து பஸ்ரல் சோக்கினால் தாளின் மேல் தேய்த்து இலையின் அச்சை வெளிப்படுத்துதல்.
4. பிள்ளைகளை அச்சுப்பதிக்குமாறு வழிப்படுத்தல்.
5. பிள்ளைகள் அச்சுப்பதித்தவற்றைக் காட்சிப்படுத்துதல்.

மதிப்பீடு :- தேய்க்கும் முறையையும் இலையின் அமைப்புப் பெறுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வித்தியாசமான இலைகளைப் பயன்படுத்தி அச்சுப்பதிக்க விடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சித்திரம் - அச்சுப்பதித்தல்

தேர்ச்சி :- இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி அச்சுப்பதிப்பார்.

செயற்பாடு :- 5.26. இயற்கைப் பொருட்களால் அச்சுப்பதித்தல்.

வளம் :- நீர் வர்ணம், A4 தாள், இலைகள், வெண்டைக்காய், வாழைத் தண்டு, புல்வகை, பப்பாக் காய், வட்டத்துருத்தி


அணுகுமுறை :- செயற்பாடு


செயலொழுங்கு :-

1. கிண்ணங்களில் நீர் வர்ணங்களைத் தயார் செய்தல்.
2. பிள்ளைகளிடம் A4 தாள்களை வழங்குதல்.
3. இயற்கைப் பொருட்களை இரண்டாக வெட்டிப் பகிர்ந்தளித்தல்.
4. ஆசிரியர் அச்சுப்பதித்துக் காட்டுதல்.
5. பிள்ளைகளை அச்சுப்பதிக்க விடல்.
6. காட்சிப்படுத்தல்.

மதிப்பீடு :- அச்சுப்பதிக்கும் திறனை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வடிவங்கள், கோலங்கள் அச்சுப்பதித்தலில் ஈடுபடுத்தல்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – களிமண் ஆக்கம்

தேர்ச்சி :- விரல்களைப் பயன்படுத்திக் களிமண் பிசைந்து ஆக்கம் செய்வார்.

செயற்பாடு :- 5.27 களிமண் பிசைதல்.

வளம் :- களிமண், கிண்ணம், நீர், வாளி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வகுப்பறையின் வெளியே களிமண் உள்ள இடத்திற்கு கூட்டிச் செல்லல்.
2. பிள்ளைகளை வட்ட வடிவில் நிறுத்தி ஆசிரியர் தனது கையால் களி மண்ணை நீரை விட்டுப் பிசைந்து காட்டல்.
3. பிள்ளைகளைச் சுதந்திரமாக மண்ணை நீர் ஊற்றிப் பிசைவதற்கு விடுதல்.
4. களிமண்ணைப் பயன்படுத்தி பலகார ஆக்கங்கள் செய்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் நீர் ஊற்றி மண்ணைப் பிசைதலையும் ஆக்கம் செய்தலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிசைந்த களிமண்ணைக் கொண்டு பிராணிகள், தளபாடங்கள் செய்ய வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – களிமண் ஆக்கம்

தேர்ச்சி :- களிமண்ணின் மூலம் பல்வேறு வடிவங்களை ஆக்குவார்.

செயற்பாடு :- 5.28 வடிவங்கள் ஆக்குதல்

வளம் :- களிமண், கிண்ணம், நீர், வாளி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வகுப்பறைக்கு வெளியே களிமண், பரப்பிய இடத்திற்கு கூட்டிச் செல்லல்.
2. பிள்ளைகளை வட்ட வடிவில் நிறுத்தி ஆசிரியர் களிமண்ணில் நீர் விட்டுப் பிசைந்து தட்டி கேத்திர கணித வடிவங்களையும், கன வடிவங்களையும் செய்து காட்டுதல்.
3. பிள்ளைகளை நீர்விட்டு மண் பிசைந்து வடிவங்களை அமைக்க விடுதல்.

மதிப்பீடு :- பிசைதலையும் ஆக்கங்களையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. பழங்கள், காய்கள் ஆக்க வழிப்படுத்துதல்.
2. பாவனைப் பொருட்களை ஆக்க வழிப்படுத்துதல்.
3. பறவை, வேறு பிராணிகளின் வடிவங்களை ஆக்க வழிப்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை - கடதாசி ஆக்கம்

தேர்ச்சி :- வெட்டுதல் மூலம் கடதாசியில் அலங்காரக் கோலங்களை ஆக்குவார்.

செயற்பாடு :- 5.29 மடித்தல், வெட்டுதல்

வளம் :- A4 தாள், கத்தரிக்கோல்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. A4 தாளையும், கத்தரிக் கோலையும் ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குதல்.
2. ஆசிரியர் A4 தாளை இரண்டாக மடித்து வெட்டிக்காட்டுதல்.
3. பிள்ளைகளை A4 தாளை மடித்து வெட்ட வழிப்படுத்துதல்.
4. செய்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்துதல்.

மதிப்பீடு :- மடிக்கும் முறை, கத்தரிக்கோலைக் கையாளும் முறை, வெட்டும் முறை என்பவற்றை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தாளை நான்காக மடித்துச் சிறிய துண்டங்களை வெட்டி அகற்றி அழகான கோலங்களைச் செய்ய விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | கைவேலை - கடதாசி ஆக்கம் |
| தேர்ச்சி | :- | கடதாசிக் கீலங்களைப் பயன்படுத்தி மாலை ஆக்குவார். |
| செயற்பாடு | :- | 5.30 வெட்டுதலும் ஒட்டுதலும். |
| வளம் | :- | A4 தாள்கள், A4 நிறத்தாள்கள், கத்திரிக்கோல், பசை |
| அணுகுமுறை | :- | விளையாட்டு |
| செயலொழுங்கு | :- | |

1. தாள்கள், நிறத்தாள்கள், கத்தரிக்கோல் என்பவற்றைப் பிள்ளைகளுக்கு வழங்குதல்.
2. ஆசிரியர் தாளை ஒரேயளவான நாடாக்களாகவும், நாடாக்களைச் சம துண்டுகளாகவும் வெட்டிக்காட்டுதல்.
3. துண்டங்களை பசை பூசி ஒன்றோடொன்று இணைத்து ஒட்டி மாலை போல் ஆக்குதல்.
4. பிள்ளைகளைச் செய்ய வழிப்படுத்துதல்.
5. செய்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்துதல்.

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | வெட்டும் முறையையும், ஒட்டும் முறையையும் அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கம் | :- | கேத்திர கணித வடிவங்களை தாளில் வெட்டி எடுத்து அவற்றை ஒழுங்கமைவில் ஒட்டி வடிவங்களை உருவாக்க வழிப்படுத்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை - வீசு பொருள் ஆக்கம்

தேர்ச்சி :- பயன்பாட்டிலிருந்து நீங்கிய பொருட்களைக் கொண்டு புதிய ஆக்கங்களில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 5.31 தளபாடங்கள் செய்தல்.

வளம் :- வெற்றுத் தீப்பெட்டிகள், பசை


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளுக்கு வெற்றுத்தீப்பெட்டிகள், பசை ஆகியவற்றைப் பகிர்ந்தளித்தல்.
2. பிள்ளைகளை அரை வட்ட வடிவில் நிறுத்தி ஆசிரியர் தீப்பெட்டிகளைப் பயன்படுத்தி கதிரை, மேசை ஒட்டிக்காட்டுதல்.
3. தீப்பெட்டிகளை ஒட்டி கதிரை, மேசை உருவாக்குவதற்கு பிள்ளைகளை விடுதல்.
4. நிறைவு செய்த ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தல்.

மதிப்பீடு :- அடுக்குதலையும் ஒட்டுதலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டில் வெற்று தீப்பெட்டிகளை சேகரிப்பதற்கும், அவற்றைக் கொண்டு வேறு ஆக்கங்களைச் செய்வதற்கும் வழிப்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – வீசு பொருள் ஆக்கம்

தேர்ச்சி :- பாவனையிலிருந்து நீங்கிய பொருட்களைக் கொண்டு புதிய ஆக்கங்களில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 5.32 முறுக்குதல், கட்டுதல்

வளம் :- ரொபி சுற்றும் தாள்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ரொபி சுற்றும் உறைகளை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குதல்.
2. ஆசிரியர் ரொபி சுற்றுறையில் ஆக்கங்களைச் செய்து காட்டுதல்.
3. பிள்ளைகளை சுற்றுறையில் ஆக்கங்களைச் செய்ய வழிப்படுத்துதல்.

மதிப்பீடு :- முறுக்குதலையும் கட்டுதலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ரொபி சுற்றும் தாள்களில் சுருக்கங்களைச் செய்து நூல்களில் தொடுத்து மாலை வடிவம் செய்ய வழிப்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – பொருள் ஆக்கம்

தேர்ச்சி :- காய்ந்த புல்லினால் பூஞ்செண்டு செய்வார்.

செயற்பாடு :- 5.33 நிறந் தோய்த்தலும் ஒன்றாக்குதலும்.

வளம் :- காய்ந்த புல், பூண்டு, நீர்வர்ணம்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. நீர் வர்ணம், காய்ந்த புல் பூண்டுகளை வழங்கல்.
2. ஆசிரியர் பல்வேறு நிற நீர் வர்ணங்களில் காய்ந்த புல்பூண்டுகளைத் தோய்த்து உலர விடல்.
3. உலர்ந்த ஒவ்வொரு நிறங்களாலான புல் பூண்டுகளை ஒன்று சேர்த்து மலர்ச்செண்டு ஆக்கிக் காட்டுதல்.
4. பிள்ளைகளை மலர்ச்செண்டு செய்வதற்கு வழிப்படுத்துதல்.

மதிப்பீடு :- நீர் வர்ணங்களில் புற்களைத் தோய்த்து எடுப்பதையும் ஒன்று சேர்ப்பதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் பிள்ளைகளை இவ்வாறு மலர்ச் செண்டுகள் செய்ய சந்தர்ப்பம் வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – அலங்கார ஆக்கம்

தேர்ச்சி :- துணிகளைப் பயன்படுத்தி அலங்காரங்களில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 5.34 ஒட்டுதலும் அலங்கரித்தலும்

வளம் :- வெற்றுப் பெட்டிகள், பசை, சஞ்சிகைகள், வெட்டுத்துணிகள், இறகுகள், கத்தரிக்கோல்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளுக்கு வெற்றுப்பெட்டிகள், பசை, சஞ்சிகைகள், வெட்டுத்துணிகள், இறகுகள், போன்றவற்றை பகிர்ந்தளித்தல்.
2. பிள்ளைகளை அரைவட்ட வடிவில் நிறுத்தி ஆசிரியர் சஞ்சிகைகள், வெட்டுத்துணிகள், இறகுகள் போன்றவற்றை பெட்டியில் வெட்டி ஒட்டி அலங்கரித்துக் காட்டுதல்.
3. ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு பெட்டியை அலங்கரிக்க விடுதல்.
4. அலங்கரிக்கப்பட்ட பெட்டிகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி கோபுரம் ஆக்கல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் கத்தரிக்கோலால் வெட்டும் பொழுதும், அலங்கரிக்கும் பொழுதும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் பிள்ளைகள் பெட்டிகளை அலங்கரிப்பதற்கும் அவற்றை அடுக்கி வடிவங்களை செய்வதற்கும் வழிப்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – பொம்மை ஆக்கம்

தேர்ச்சி :- விரற் பொம்மைகள் ஆக்குவார். அசைத்துக் காட்டுவார்.

செயற்பாடு :- 5.35 பொம்மை செய்தல்.

வளம் :- வேறுபட்ட அளவிலான மூடிகள், சிறிய டப்பிகள், கறுப்பு நிற மாக்கர்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் பிள்ளைகளுக்கு மூடிகள், மாக்கர், டப்பிகள் போன்றவற்றை பகிர்ந்தளித்தல்.
2. பிள்ளைகளை அவதானிக்கச் செய்து ஆசிரியர் மூடிகளில் புள்ளி, நேர்கோடு, வளைகோடு போன்றவற்றால் எளிமையான மனித முகங்களை வரைந்து விரல்களின் மேல் கொழுவி அசைத்துக்காட்டல்.
3. பிள்ளைகள் மூடிகளில் முகங்களை வரைதல்.

மதிப்பீடு :- வரைதலையும் பொம்மை ஆக்கலையும் அசைத்தலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. மூடிகளில் மீது நிறக் கடதாசிகளை ஒட்டி அதில் முகங்களைக் கீற வழிப்படுத்துதல்.
2. ஆக்கப்பட்ட இம் முகங்களின் மூலம் பொம்மலாட்டம் ஒன்றைக் கதையுடன் நிகழ்த்த வழிப்படுத்துதல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | கைவேலை – அலங்கார ஆக்கம் |
| தேர்ச்சி | :- | சுவர் அலங்கார வட்டத்தட்டு ஆக்குவார் |
| செயற்பாடு | :- | 5.36 வட்டத்தட்டு செய்தல். |
| வளம் | :- | பிறிஸ்டல் போட், கத்திரிக்கோல். வர்ணத்தாள்கள், கம்பளி நூல் |
| அணுகுமுறை | :- | விளையாட்டு |
| செயலொழுங்கு | :- | |

1. பிறிஸ்டல் போட்டை வட்டமாக வெட்டுதல்.
2. வர்ணத்தாள்களில் அலங்காரம் வெட்டி எடுத்து வட்டத்தட்டில் ஒட்டுதல்.
3. வட்டத்தின் விளிம்பினை பஞ்சரினால் சம இடைவெளியில் துளையிடுதல்.
4. துளைகளினுள் கம்பளி நூலினை கோர்த்து அலங்கரித்தல்.
5. சுவரில் ஒட்டிக்காட்சிப்படுத்தல்.

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | வெட்டுதல், ஒட்டுதலை, நூல் கோர்த்தலை அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கம் | :- | வீட்டிலும் வட்டத்தட்டுச் செய்யப் பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் வழங்குதல். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – அசையும் ஆக்கம்

தேர்ச்சி :- அசையும் ஆக்கம் செய்வார்.

செயற்பாடு :- 5.37 வெட்டுதல், அலங்கரித்தல், தொங்க விடுதல்.

வளம் :- பிறிஸ்டல் போட், கத்திரிக்கோல். பெயின்ரிஸ்ரிக், நூல்.


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிறிஸ்டல் போட்டை சதுரமாக வெட்டி எடுத்தல்.
2. மத்தியில் இருந்து விரிந்து செல்லும் சுருள் வரைதல்.
3. பெயின்ரிங்ஸ்ரிக்கால் அலங்கரித்தல்.
4. சுருள் வடிவத்தைக் கத்தரிக்கோலால் வெட்டுதல்.
5. வடிவத்தின் தலையில் நூலைத்தொடுத்து தொங்கவிடுதல்.
6. பாம்பு போல் நெளிந்து அசைவதைப் பார்த்து மகிழ்தல்.

மதிப்பீடு :- வெட்டுதலையும் அலங்கரித்தலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் அசையும் பாம்பு செய்யச் சந்தர்ப்பம் வழங்குதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை - கடதாசி ஆக்கம்

தேர்ச்சி :- கடதாசியைப் பயன்படுத்தி மாலை ஆக்குவார்.

செயற்பாடு :- 5.38 மாலை செய்தல்

வளம் :- சஞ்சிகைகளில் இருந்து பெறப்பட்ட நிறத்தாள்கள், பசை, நூல், கத்தரிக்கோல்.


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. நிறத்தாள்களை நாடாக்களாக வெட்டச் செய்தல்.
2. பென்சிலைச் சுற்றி அழுத்தி எடுத்து உருளை வடிவமாக ஒட்டுதல்.
3. உருளை வடிவத்தை சம துண்டங்களாக வெட்டி எடுத்தல்.
4. துண்டங்களை நூலில் கோர்த்து மாலை வடிவமாகச் செய்தல்.

மதிப்பீடு :- வெட்டுதல், உருட்டுதல், கோர்த்தலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் கடதாசி, மணியைப் பயன்படுத்தி மாலை செய்யப் பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | கைவேலை - கடதாசி ஆக்கம் |
| தேர்ச்சி | :- | கடதாசியைப் பயன்படுத்தி இருவர்ண ஆக்கம் செய்வார். |
| செயற்பாடு | :- | 5.39 ஆக்கம் செய்தல் |
| வளம் | :- | A4 தாள், பென்சில், நிறத்தாள், பசை. |
| அணுகுமுறை | :- | விளையாட்டு |
| செயலொழுங்கு | :- | |

1. A4 தாளில் விரும்பிய வடிவம் வரையச் செய்தல்.
2. வரைந்த வடிவத்தை பென்சிலால் துவாரங்கள் இடுதல்.
3. துவாரம் நிறைந்த வடிவத்தை நிறத்தாளில் பசைபூசி ஒட்டுதல்.

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | வரைதல், துவாரமிடல், ஒட்டுதலை அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கம் | :- | வீட்டிலும் பிள்ளைகள் செய்ய சந்தர்ப்பம் வழங்குதல். |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – அலங்கார ஆக்கம்

தேர்ச்சி :- ஈர்க்குகளைப் பயன்படுத்தி அலங்காரங்கள் ஆக்குவார்.

செயற்பாடு :- 5.40 கோலம் ஆக்குதல்

வளம் :- ஒரேயளவான ஈர்க்குகள், பசை, பிறிஸ்டல் போட், A4 தாள்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிறிஸ்டல் போட்டில் ஈர்க்குகளை ஒரொழுங்கில் அடுக்கி கோலங்களை / வடிவங்களைச் செய்தல்.
2. அந்த வடிவங்களைப் பசையால் நன்றாகப் பூசி A4 தாளையும் பயன்படுத்தி அழகாக ஒட்டுதல்.
3. காட்சிப்படுத்துதல்.

மதிப்பீடு :- கோலம் வரைதல், ஒட்டுதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகளை வீட்டிலும் ஈர்க்குகளால் கோலங்கள் வடிவங்கள் செய்யச் சந்தர்ப்பம் வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – அலங்கார ஆக்கம்

தேர்ச்சி :- சுற்றாடலில் உள்ள இலைகளைப் பயன்படுத்தி கைச் சங்கிலி செய்வார்.

செயற்பாடு :- 5.41 அணிகலன் ஆக்குவோம்

வளம் :- பெரிய மரம், வெவ்வேறு அளவுடைய இலைகள்,

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வெளியே அழைத்துச் சென்று சில இலைகளைச் சேகரித்தல்.
2. மணிக்கட்டில் ஒட்டக்கூடிய செலோரேப்பை ஒட்டி அதில் இலைகளை ஒட்ட வைத்துக் காட்டுதல்.
3. பிள்ளைகளது கைகளில் செலோரேப்பை ஒட்டுதல்.
4. இலைகளை எடுத்து ஒட்டி கைச் சங்கிலி ஆக்குதல்.

மதிப்பீடு :- துலங்கலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இலைகளைப் பயன்படுத்தி தொப்பி செய்து அணியவிடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – கடதாசி ஆக்கம்

தேர்ச்சி :- கடதாசியை மடித்து விசிறி செய்வார்

செயற்பாடு :- 5.41 விசிறி ஆக்குதல்

வளம் :- A5 தாள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. A5 தாளைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தல்.
2. ஆசிரியர் கடதாசியை எடுத்து ஒரு மடிப்பு மடித்துக் காட்டுதல்.
3. தொடர்ந்து மாறிமாறி மடித்தல்.
4. விசிறி ஆக்குதல்.

மதிப்பீடு :- கடதாசியை மடிக்கும் முறையையும் விசிறி செய்யும் முறையையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- கடதாசியை மடிப்பதன் மூலம் வீடு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை – களிமண் ஆக்கம்

தேர்ச்சி :- இயற்கைப் பொருளைப் பயன்படுத்தி ஆக்க வேலையில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 5.42 உருவம் ஆக்குவோம்.

வளம் :- களி, இலை, பழங்கள், இறகுகள், விதைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. சுற்றாடலில் இருந்து இலை, பழங்கள், இறகுகள், விதைகள் சேகரித்தல்
2. பிள்ளைகளைக் குழுக்களாக்கி களி மண்ணை வழங்குதல்.
3. களி மண்ணையும் பொருட்களையும் கொண்டு விரும்பிய உருவ அமைப்புக்களை ஆக்குவதற்கு வழிப்படுத்தல்.
4. காட்சிப்படுத்தி அவதானித்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகளின் ஈடுபாட்டை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இயற்கைப் பொருளைப் பயன்படுத்தி புதிய ஆக்க முயற்சிகளில் ஈடுபடவிடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- கைவேலை - கடதாசி ஆக்கம்

தேர்சசி :- கடதாசிக் கூழைப் பயன்படுத்திப் புத்தாக்கங்கள் செய்வார்.

செயற்பாடு :- 5.43 கடதாசிக் கூழ் ஆக்கம் செய்தல்.

வளம் :- பழைய பத்திரிகை, கோதுமை மா, வாயகன்ற பாத்திரம், நீர்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

முன்னாயத்தம் :-

- பழைய பத்திரிகையைச் சிறு சிறு கீலங்களாக கிழிக்க விடல்
- இவற்றை நீர் உள்ள பாத்திரம் ஒன்றில் இட்டு ஒரு நாள் ஊறவிடல்



1. கோதுமை மாவினுள் நீரை விட்டுப் பசை தயாரித்தல்.
2. கடதாசிகளைப் பிழிந்து எடுத்து மாக்கூழினுள் போட்டு நன்றாகப் பிசைந்து கடதாசிக் களி ஆக்குதல்.
3. ஒவ்வொரு பிள்ளைக்கும் கடதாசிக் களியினைக் கொடுத்தல்.
4. கடதாசிக் களியைக் கொண்டு விரும்பிய ஆக்கம் ஒன்றைச் செய்ய விடல்.
5. செய்த ஆக்கங்களை வெய்யிலில் காயவிடல்.

மதிப்பீடு :- ஆக்க வேலையில் ஈடுபடுவதையும் உருவம் ஒன்றை ஆக்குவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- காய்ந்த ஆக்கங்களுக்கு வர்ணம் தீட்ட விடல் காட்சிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# ஆக்க அழகியல் திறன் விருத்தி

## இசையும் அசைவும் நாடகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - பாடல்

தேர்ச்சி :- பெயர் கூறிப் பாடுவார்.

செயற்பாடு :- 6.1 பெயரைக் கூறுதல்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
2. ஆசிரியர் தனது பெயரைப் பிள்ளைகளிடம் வினாவித் தனது பெயரைப் பிள்ளைகள் சந்தத்துடன் கூறவிடல்.(தாளலயத்துடன்)

ஆசிரியர் :- எனது பெயர் என்ன?
எனது பெயர் என்ன?

பிள்ளைகள் :- உங்கள் பெயர் சீத்தா.
உங்கள் பெயர் சீத்தா.

3. பிள்ளைகள் அனைவரையும் ஆசிரியரின் பெயரைச் சந்தத்துடன் கூறச் செய்தல்.
4. ஒவ்வொரு பிள்ளையையும் தனது பெயரைச் சந்தத்துடன் கூற வழிப்படுத்தல்.

உனது பெயர் என்ன?

உனது பெயர் என்ன?

எனது பெயர் பத்மா

எனது பெயர் பத்மா

மதிப்பீடு :- பிள்ளை ஆசிரியர் பெயரைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சகபாடிகளின் பெயரைச் சந்தத்துடன் கூறச் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - பாடல்

தேர்ச்சி :- செல்லப் பிராணி பற்றிய பாடலை ஆடிப் பாடுவார்.


செயற்பாடு :- 6.2. பாடலைப் பாடுதல்.

வளம் :- பசுவின் பொம்மை அல்லது படம்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. செல்லப்பிராணிகள் பற்றிக் கலந்துரையாடல்.
2. பசுவின் படத்தை அல்லது பொம்மையைக் காட்டி ஆசிரியர் கலந்துரையாடுதல்.
3. பிள்ளைகளை வட்டமாக நிற்க வைத்து ஆசிரியர் பாடலை முழுமையாக முன்வைத்தல்.
4. பிள்ளைகளுடன் சேர்ந்து பாடலைப் பாடுதல்.
5. குழுக்களாகப் பாடுதல்
6. விரும்பி முன்வருவோரைப் பாடவிடல்.



வெள்ளைப் பசு வந்தது

விரைவாய்ப் புல்லை மேய்ந்தது.

துள்ளிக் கன்றும் பாய்ந்தது.

சுவைத்துப் பாலைக் குடித்தது.

மதிப்பீடு :- பிள்ளைகள் பாடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஏனைய செல்லப்பிராணிகள் தொடர்பான பாடல்களைப் பாடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும்- பாடல்

தேர்ச்சி :- பறவைகளுக்கேற்ற ஒலி எழுப்பி அசைவார்.

செயற்பாடு :- 6.3. பாடி அசைதல்

வளம் :- பறவைகள் பாடல்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக நிற்க விடுதல்.
2. பறவைகளின் ஒலிகள் பற்றிக் கலந்துரையாடல்.
3. ஆசிரியர் பாடல் பாடுதல்.
4. பிள்ளைகள் பறவைக்குரிய ஒலி எழுப்பியவாறு அசைதல்.

கோழி ஒன்று வந்தது கொக் கொக் என்றது.

சேவல் ஒன்று வந்தது கொக்கரக்கோ என்றது.

கிளி ஒன்று வந்தது கீக்கீக் என்றது.

காகம் ஒன்று வந்தது கா கா என்றது.

மதிப்பீடு :- உரிய ஒலியை எழுப்பியவாறு அசைவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிராணிகளைப் போல் ஒலி எழுப்பி அசைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - பாடல்

தேர்ச்சி :- புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்தி ஒலிகளை எழுப்பியவாறு பாடுவார்.

செயற்பாடு :- 6.4. ஒலி எழுப்புதலும் பாடுதலும்

வளம் :- சிரட்டை, சோடாமூடி, மேளம் (பெரிய பேணியில் செய்தது)

அணுகுமுறை :- விளையாட்டு



செயலொழுங்கு :-

1. புத்தளிப்புக் கருவிகளைப் பிள்ளைகளிடம் கொடுத்தல்.
2. ஆசிரியர் ஒலியை எழுப்பிக் காட்டுதல்.
3. பாடலுடன் ஒலியை எழுப்பி ஆசிரியர் செய்து காட்டுதல்.
4. பிள்ளைகளுடன் சேர்ந்து ஆசிரியர் பாடி ஒலித்தல்.
5. பிள்ளைகளைக் குழுக்களாக்கிப் பாட விடுதல்.

டும் டும் சத்தம் எழுப்பிடுவோம்
டக் டக் ஒலியை எழுப்பிடுவோம்
ஜல் ஜல் என்றே கிலுக்கிடுவோம்
சின்னஞ் சிறுவர் கூடி நின்றே
சிறப்பாய் சத்தம் எழுப்பிடுவோம்

மதிப்பீடு :- புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்திப் பாடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வெவ்வேறு ஒலிகளை எதிரெதிர்த்திசையில் இருந்து எழுப்பி உணரச்செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - பாடல்

தேர்ச்சி :- குரலை இனங்கண்டு பாடியவரின் பெயரைக் கூறுவார்.

செயற்பாடு :- 6.5. ஒலியைச் செவிமடுப்போம்.

வளம் :- கைக்குட்டை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் கைகோர்த்து வட்டமாக நிற்கச் செய்தல்.
2. ஒரு பிள்ளையை அழைத்து அப்பிள்ளையின் கண்களைக் கைக்குட்டையால் கட்டி வட்டத்தின் நடுவில் நிற்க விடுதல்.
3. வட்டமாக நிற்கும் பிள்ளைகளில் ஒருவர் பாடலைப் பாடுதல்.
4. கண்கள் கட்டி நிற்கும் பிள்ளை, யார் பாடியது எனக் கண்டு பிடித்தல்.
5. இவ்வாறு ஏனைய பிள்ளைகளும் செயற்பாட்டைத் தொடர்தல்.

மதிப்பீடு :- ஒலி எழுப்பியவரின் பெயரைச் சரியாகக் கண்டு பிடிப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- புத்தளிப்புக் கருவிகளின் சத்தங்களையும் ஒலிக்கச் செய்து கருவியை இனங்காணச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - அழகியல்

தேர்ச்சி :- ஒலி மூலம் தேடுவார்.

செயற்பாடு :- 6.6. தேடுதல்

வளம் :- விளையாட்டுப் பொருட்கள், கைக்குட்டைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் வகுப்பறையில் பிள்ளைகளுக்கு ஒரு பொருளைக் காட்டுதல்.
2. பின்னர் ஒரு பிள்ளையின் கண்களைக் கைக்குட்டையால் கட்டுதல்.
3. காட்டிய பொருளை வகுப்பறையில் ஒழித்து வைத்தல்.
4. கைதட்டும் முறையிலிருந்து பொருளைக் கண்டுபிடித்தல்.

கண் கட்டிய பிள்ளை அப்பொருளுக்கு அருகில் வரும் போது பலத்த ஓசையையும் தூரத்தில் அப்பொருள் இருக்கும் போது மெதுவான ஓசையையும் எழுப்புதல்

மதிப்பீடு :- ஒலி மூலம் தேடிக் கண்டுபிடிப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- முன்பள்ளி முற்றத்தில் விளையாட வழிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - ஒலி

தேர்ச்சி :- ஒலி வரும் திசையை நோக்கி அசைவார்.

செயற்பாடு :- 6.7. ஒலி வரும் திசைக்கு அசைதல்.

வளம் :- மணி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைச் சோடி ஆக்குதல்.
2. ஒருவருக்குக் கண்ணைக் கட்டுதல், மற்றையவரிடம் மணி ஒன்றைக் கொடுத்தல்.
3. மணி வைத்திருப்பவர் ஒலியை எழுப்பி நிற்பாட்டுதல்.
4. கண்ணைக் கட்டியவர் ஒலிவரும் திசையை நோக்கிச் செல்லல், அப்போது மணி வைத்திருப்பவர் இடம் மாற்றி மாற்றி அசைந்து ஒலி எழுப்புதல்.
5. ஒவ்வொரு முறையும் ஒலிவரும் திசையை நோக்கி கண்கட்டியவர் அசைதல்.
6. ஏனைய சோடிகளும் இதனைச் செய்தல்.

மதிப்பீடு :- ஒலிவரும் திசை நோக்கி அசைவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஒலி எழுப்பும் தலைவனைக் கண்டுபிடித்தல் விளையாட்டு விளையாடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - பாடல்

தேர்ச்சி :- பாட்டின் ஊடாக விடையளிப்பார்.

செயற்பாடு :- 6.8 வேண்டுதலும் விடையளித்தலும்

வளம் :- பொம்மை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை இரண்டு குழுக்களாகப் பிரித்தல்.
2. குழு ஒன்றில் உள்ள பிள்ளைகளுக்கு ஒரு பொம்மையைக் கொடுத்தல்.
3. குழு இரண்டில் உள்ள பிள்ளைகள் பொம்மையைக் கோரிப் பாடுதல்.
4. குழு ஒன்று - நிராகரித்தல்.
5. குழு இரண்டு- குளிக்க வைப்பதற்கு பொம்மையைத் தரும்படி வினாவுதல்.
6. குழு ஒன்று- பொம்மை நித்திரை என்று நிராகரித்தல்.

குழு 2 : பொம்மை தாருங்கள் பொம்மை தாருங்கள்
சட்டை போடப் பொம்மை தாருங்கள்

குழு 1 : தரமாட்டோம் தரமாட்டோம்
நாங்கள் இப்போ தரமாட்டோம்

குழு 2 : பொம்மை தாருங்கள் பொம்மை தாருங்கள்
குளிக்க வார்க்கப் பொம்மை தாருங்கள்

குழு 1 : தரமாட்டோம் தரமாட்டோம்
பொம்மை நித்திரை தரமாட்டோம்

மதிப்பீடு :- பாட்டின் ஊடாக வேண்டுதலையும் நிராகரித்தலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இது போன்ற வேறு பாடலை ஆக்கிப் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - ஒலி

தேர்ச்சி :- செயற்கை ஒலிகளை இனங்காண்பார்.

செயற்பாடு :- 6.9. ஒலி உண்டாக்கல்

வளம் :- பெட்டி, மணி, ஊதி, கிழிப்பதற்குப் பேப்பர் வாரியடிக்கத் தண்ணீர், கிலுகிலுப்பை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியரிடம் இருக்கும் பொருட்களைப் பிள்ளைகள் பார்வையிடல்.
2. ஆசிரியர் ஒவ்வொரு பொருளாக ஒலித்துக் காட்டுதல்.
3. பிள்ளைகள் தங்கள் கைகளால் கண்களை மூடியபடி ஆசிரியர் ஒலிக்கச் செய்யும். ஒலியின் மூலம் பொருளைக் கண்டுபிடிக்க வேண்டும்.
4. கிடைக்கும் பொருட்கள் அத்தனையையும் பயன்படுத்தி இச் செயற்பாட்டைத் தொடரலாம்.

மதிப்பீடு :- ஒலியின் மூலம் பொருட்களை இனங்காணல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டில் உள்ள ஒலி எழுப்பும் பொருட்களில் ஒலியை உண்டாக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - ஆடல்

தேர்ச்சி :- இசையோடு இணைந்து ஆடுவார்.

செயற்பாடு :- 6.10 இசைக்கேற்ப அசைதல்

வளம் :- ஒலிப்பதிவு நாடா

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பாடலை இசைத்தலும் ஆசிரியர் அசைந்து காட்டலும்.
2. பிள்ளைகளைக் கண்களை மூடிக்கொண்டு அமைதியாக இருக்கச் செய்தல்.
3. மென்மையான இசையை ஒலிக்க விட்டு மூன்று / ஐந்து நிமிடங்கள் செவிமடுக்கச் செய்தல்.
4. இசைக்கு ஏற்ப பிள்ளைகள் கை, கால்களை அசைத்து ஆடுதல்.

மதிப்பீடு :- இசைக்கு ஏற்ப அசைவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் இசையைக் கேட்டு இசைக்கு ஏற்ப அசைவதற்கு வழிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - பாடல்

தேர்ச்சி :- இரசனையோடு செவிமடுத்துப் பாடலைப் பாடுவார்.

செயற்பாடு :- 6.11 பாடுதல்

வளம் :- றபான், சலங்கை, கிலுக்கி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பாடலைப் பிள்ளைகளுக்குத் திரும்பத் திரும்பப் பாடிக்காட்டுதல்.
2. ஆசிரியரோடு சேர்ந்து பிள்ளைகள் பாடலைப் பாடுதல்.
3. பிள்ளை தனியாகப் பாடல்.
4. அவ்வாறு தொடர்ந்து ஒவ்வொரு பிள்ளையையும் பாட வைத்து நிறைவு செய்தல்.

வாழைப்பழம் வாழைப்பழம்
வடிவான வாழைப்பழம்
தின்னத் தின்ன இனிக்கும் பழம்
சின்னஞ் சிறுவர் விரும்பும் பழம்

மதிப்பீடு :- இரசனையோடு செவிமடுப்பதையும், பாடுவதையும் அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- வீட்டுச் சூழலில் கேட்கும் பாடலைப் பிள்ளைகள் பாட முன்வருதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - பாடல்

தேர்ச்சி :- இசையோடு பாடி ஆடுவார்.

செயற்பாடு :- 6.12 பாடி ஆடுவோம்

வளம் :- கழுத்துப்பட்டி அல்லது சிறிய துணி (சால்வை)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பெற்றோர் சொற் கேட்டல், ஒழுக்கம் பற்றிக் கலந்துரையாடல்.
2. பாடலை ஆசிரியர் பாடல்.

நல்ல பிள்ளைகள் நாம் நல்ல பிள்ளைகள்

அம்மா அப்பா சொற்கேட்டு நடக்கும் பிள்ளைகள்

ஒன்று இரண்டு மூன்று நான்கு படிக்க வேண்டுமே.

ஒழுக்கத்துடன் நாம் வாழப் பழக வேண்டுமே.

3. பிள்ளைகள் சேர்ந்து பாடுதல்.
4. அப்பாடலின் இசைக்கு ஏற்றவாறு துணியை மேலும் கீழுமாக அசைத்து ஆடுதல்.

மதிப்பீடு :- பாடி ஆடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டில் வேறு பொருட்களை வைத்து இசைக்கு ஏற்ப ஆட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - பாடல்

தேர்ச்சி :- அலங்காரத்துடன் ஆடிப் பாடுவார்.

செயற்பாடு :- 6.13 அலங்காரத்துடன் ஆடிப் பாடுதல்.

வளம் :- நிறக் கடதாசி, காட்போட் குழாய்கள், நாடாக்கள், பசை, ஒலிப்பதிவுக் கருவி.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் தங்களுடைய காட்போட் குழாய்க்கு நிறக் கடதாசியை ஒட்ட வழிகாட்டல்.
2. குழாயில் சூரியனை வரைதல்.

சூரியனே சூரியனே
சூடு தரும் சூரியனே
காலை வரும் சூரியனே
மாலை எங்கு செல்கிறாய்

3. இந்த இசைக்கு ஏற்ப குழாய்களை அசைத்து ஆடுதல்.

மதிப்பீடு :- குழாயை அலங்காரம் செய்வதையும் அசைத்து ஆடுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- புத்தளிப்புக் கருவிகளை ஆக்குவதற்கு வழிப்படுத்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - பாடல்

தேர்ச்சி :- பாடி ஆடுவார்

செயற்பாடு :- 6.14 அசைந்து ஆடுதல்

வளம் :- தடி, றபான், சலங்கை, ஒலிப்திவுக்கருவி.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் பிள்ளைகளை வரிசையாக நிற்கவிடுதல்.
2. பிள்ளைகளின் கண் மட்டத்திற்கு நேராகத் தடியைப் பிடித்தல்.
3. ஒலிப்பதிவுக் கருவியில் ஆசிரியர் பாடலை ஒலிக்கவிடுதல் அல்லது பாடுதல்.

நேராய்த் தடியைப் பிடிப்போமே
நெளிந்து குனிந்து செல்வோமே
நிரையாய் ஆடிச் செல்வோமே
நிமிர்ந்து என்றும் நடப்போமே

4. இவ் இசைக்கு ஏற்ப பிள்ளைகள் ஆடி ஆடி தடியின் கீழாகச் சென்று எதிர்ப் பக்கத்தில் நிற்றல்.
5. ஏனைய பிள்ளைகள் அப்பாடலைத் தாளம் தட்டிப் பாடுதல்.

மதிப்பீடு :- பாடலுக்கு ஏற்ப குனிந்து, வளைந்து அசைதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டில் அவ்வாறு செயலை மேற்கொள்ளல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - பாடல்

தேர்ச்சி :- இரசனையோடு பாடுவார்.

செயற்பாடு :- 6.15 கைதட்டிப் பாடுதல்

வளம் :- பொம்மை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளை வட்டமாக இருக்கச் செய்தல்.
2. ஒரு பிள்ளை ஒரு பொம்மையை வைத்துக் கொண்டு பாட்டுப் பாடியபடி வட்டத்தைச் சுற்றுதல்.

சின்னச் சின்னப் பொம்மை

சிறிய நல்ல பொம்மை

என்ன வேண்டும் சொல்லு

ஏனோ பேசவில்லை

3. எல்லாப் பிள்ளைகளும் அப்பாடலைக் கைதட்டிப் பாடுதல்.
4. பாடல் முடிந்ததும் ஒரு பிள்ளையின் பின் பொம்மையை வைத்து விட்டு ஓடுதல்.
5. அப்பிள்ளை பொம்மையை எடுத்துத் திரும்பவும் விளையாட்டில் ஈடுபடல்.



மதிப்பீடு :- கை தட்டுவதையும் பாடுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் பெற்றோருடன் இச் செயற்பாட்டை விளையாடி மகிழ்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | இசையும் அசைவும் - வாகன ஒலி |
| தேர்ச்சி | :- | வாகன ஒலிகளை இனங்கண்டு போலச் செய்வார். |
| செயற்பாடு | :- | 6.16 போலச் செய்தல் |
| வளம் | :- | வாகனங்களின் ஒலிகளின் ஒலிப்பதிவு. |
| அணுகுமுறை | :- | விளையாட்டு |
| செயலொழுங்கு | :- | |

1. பிள்ளைகளை வட்டமாக நிற்க விடுதல்.
2. வாகன ஒலிகள் பற்றிக் கலந்துரையாடல்.
3. பிள்ளைகள் ஆசிரியர் ஒலிக்கும் வாகனத்தின் ஒலிக்குரிய செயற்பாட்டை இனங்காணலும், போலச் செய்தலும்.

| | |
|---|---|
| புகைவண்டி | - சுக்குப் புக்கு |
| கார் | - பீப் பீப் |
| சைக்கிள் | - றிங் றிங் |
| பஸ் | - பாம் பாம் |

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | வாகன ஒலியை இனங்காணுவதையும், போலச் செய்வதையும் அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கம் | :- | வேறு வாகன ஒலிகளுக்கும் போலச் செய்ய விடுதல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - அசைதல்

தேர்ச்சி :- தாளத்திற்கு ஏற்ப அசைவார்.

செயற்பாடு :- 6.17 தாளத்திற்கு அசைதல்

வளம் :- -

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை இரண்டு குழுக்களாகப் பிரித்தல்.
2. வரிசையில் முன்னால் நிற்பவரின் தோளைப் பின்னால் நிற்பவர் பிடித்தவாறு நிற்றல்.
3. ஆசிரியர் ஒலியை எழுப்ப இரு குழுக்களும் புகைவண்டியாகி நகர்தல்.
4. ஆசிரியர் கை தட்ட புகைவண்டியை நிறுத்தல்.
5. ஆசிரியர் ஒலி எழுப்ப புகைவண்டி மீண்டும் புறப்படல்.
6. மீண்டும் மீண்டும் விளையாட்டைத் தொடருதல்.

மதிப்பீடு :- புகையிரத செயற்பாட்டில் ஆசிரியரின் சமிக்ஞை ஒலிகளுக்கேற்ப நகர்தலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டில் வெவ்வேறு ஒலிகளுக்கு ஏற்ப இச் செயற்பாட்டைத் தொடர வழிப்படுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - ஒலி எழுப்புதல்

தேர்ச்சி :- பிராணிகளை இனங்கண்டு அவற்றின் ஒலிகளை எழுப்புவார்.

செயற்பாடு :- 6.18 மிருகங்கள், பறவைகளின் ஒலியை எழுப்புவோம்

வளம் :- மிருகங்கள், பறவைகளின் உருவப் பொம்மைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஒரு பெரிய பெட்டிக்குள் பொம்மைகளைப் போட்டு விடுதல்.
2. பிள்ளைகள் கைகளைத் தட்டிக் கொண்டு இருத்தல்.
3. ஒரு பிள்ளை முன் வந்து பொம்மையை எடுத்துக் காட்டுதல்.
4. ஏனைய பிள்ளைகள் அப் பொம்மையின் உருவத்தை இனங்கண்டு ஒலியை எழுப்புதல்.
5. இவ்வாறு ஏனைய பிள்ளைகளும் தொடருவர்.

மதிப்பீடு :- பிள்ளை உருவத்தை இனங்கண்டு ஒலி எழுப்புவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டுச் சுற்றாடலில் கேட்கும் ஒலிகளை இனங்கண்டு ஒலி எழுப்ப வழிப்படுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - செயற்கை ஒலி

தேர்ச்சி :- செயற்கை ஒலியை இனங்கண்டு கூறுவார்.

செயற்பாடு :- 6.19 செயற்கை ஒலிகளை இனங்காணல்

வளம் :- ஒலிப்பதிவுக் கருவி (கோயில் மணி ஓசை, நாதஸ்வர ஒலி, தவில் ஒலி)

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் எல்லோரும் அமைதியாக இருத்தல்.
2. ஒலிப்பதிவுக் கருவி மூலம் ஒலியைக் கேட்க விடுதல்.
3. அந்த ஒலி எங்கே இசைக்கப்படும் எனப் பிள்ளைகள் கூறுதல்.

மதிப்பீடு :- ஒலியை உள்வாங்கி இசை ஒலிக்கும் இடங்களை இனங்காண்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டில் கேட்கும் ஒலிகளை ஒலிப்பதற்கும் இனங்காண்பதற்கும் வழிப்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- இசையும் அசைவும் - புத்தளிப்புக் கருவி

தேர்ச்சி :- கழிவுப் பொருட்களைக் கொண்டு புத்தளிப்புக் கருவி செய்து இசைத்தவாறு அசைவார்.

செயற்பாடு :- 6.20 . அசைதல்

வளம் :- மூடியுள்ள பேணி, சிறிய கற்கள், பிளாஸ்ரிக் போத்தல், புளியம் விதை, மரக்கோல்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகள் கொண்டு வந்த பொருட்களைக் கொண்டு சிறு கருவி ஆக்கல்.
   உதாரணம்:- மூடியுள்ள பேணிக்குள் புளியம் விதை, இரு மரக்கோல்
2. ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு வாத்தியத்தைச் செய்தல்.
3. ஒவ்வொருவரும் தனித்தனியே இசைத்தல்.
4. எல்லாப் பிள்ளைகளும் சேர்ந்து ஒன்றாக இசைத்துக் கொண்டு நடத்தல்.

சூழலில் கிடைக்கும் கழிவுப்பொருட்களை நாம்
வீணாக்காது இசைக்கருவிகள் செய்து மகிழ்வோம்.
இசைக்கருவிகள் எல்லாவற்றையும் நாம்
எல்லோருமே இசைத்து மகிழ்வோம்.

மதிப்பீடு :- புத்தளிப்புக் கருவிகளை ஆக்குதலையும் இசைத்து அசைவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டில் உள்ள தளபாடங்களின் ஒலிகளை ஒலிக்கச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நாடகம்

தேர்ச்சி :- கதைப் பாத்திரங்களை ஏற்று நடிப்பார்.

செயற்பாடு :- 6.21 நடித்தல்

வளம் :- கதைப்படம்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் கதையினை வாசித்துப் பிள்ளைகளுக்குக் கூறுதல்.
2. கதையினூடாக ஆசிரியர் உணர்வுகளை வெளிப்படுத்திக் காட்டுதல்.
3. பிள்ளைகளுக்கு கதாபத்திரங்களை வழங்கி அப்பாத்திரங்களின் நடிப்பையும் உணர்வுகளையும் வெளிபடுத்த உதவுதல்.
4. மீண்டும் மீண்டும் செய்யச் சந்தர்ப்பம் வழங்குதல்.
5.

மதிப்பீடு :- நடிப்பை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வேறு கதைகளுக்கும் நடித்தல்.

பாலனுக்குச் சரியான பசி. விளையாடி முடித்து வந்தபோது அம்மா சமைத்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

‘எனக்குப் பசிக்கின்றது. என்னம்மா சாப்பிட இருக்கின்றது’.

‘கறி ஒன்றும் வைக்கவில்லை சோறு அவிந்து விட்டது. கொஞ்சம் பொறு கஞ்சி வடித்துத் தருகின்றேன்’

‘அம்மா அம்மா தேங்காய்ப் பூவும் உப்பும் போட்டுத் தாங்கோ’

(அம்மா கஞ்சியைக் கொடுக்க பாலன் குடித்தல்)

‘நல்லாயிருக்கம்மா’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நாடகம்

தேர்ச்சி :- பாத்திரமேற்று நடிக்கும் திறனைப் பெறுவார்.

செயற்பாடு :- 6.22. வீட்டு விலங்குகளாக நடித்தல்.

வளம் :- முகமூடி – நாய், பூனை, ஆடு, மாடு


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பெற்றோரும் ஆசிரியரும் முகமூடிகள் செய்து ஆற்றுகை வட்டத்தில் காட்சிப்படுத்தல்.
2. பிள்ளைகளை அழைத்துச் சென்று முகமூடிகளை அணிய வழிப்படுத்தல்.
3. ஆசிரியர் முகமூடிகளை அணிந்து நடித்துக்காட்டுதல்.
4. பிள்ளைகள் நடித்தல்
5. ஒரே வகை முகமூடி உள்ளவர்களைக் குழுக்களாக்கிச் செயற்பட விடுதல்.
6. ஒவ்வொரு குழுவிலும் இருவரை அழைத்து சுதந்திரமாக நடிக்க வழிப்படுத்தல்.
7. இவ்வாறு ஏனையவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- பாத்திரமேற்று நடிப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஏனைய விலங்குகள் போலவும் செய்து மகிழ அறிவுறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நாடகம்

தேர்ச்சி :- வேடஉடை, ஒப்பனை செய்யும் ஆர்வத்தைப் பெறுவார்.

செயற்பாடு :- 6.23 வேடஉடை, ஒப்பனை புனைதல்

வளம் :- ஒப்பனைப் பொருள்கள், வேட உடைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் தாம் விரும்பியவாறு ஒரு பாத்திரத்தினைப் பெற்றோரின் உதவியுடன் வேடம் புனைந்து வருவதற்கு வழிப்படுத்தல்.
2. வேடம் புனைந்த அடிப்படையில் அவர்களை விலங்குகள், பறவைகள், தாவரங்கள், என்ற வகைப்பாட்டிற்கு உட்படுத்தி அவர்களை அமரச் செய்தல்.
3. அனைவரினதும் வேடம் புனைதலை எல்லோரும் பார்வையிட வழிப்படுத்தல்.
4. வேடம் புனைந்தவர்களுக்குரிய பாராட்டுதல்கள் அனைவரும் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பமளித்தல்.

மதிப்பீடு :- வேடம் புனைந்தவர்கள் அனைவரினது பொருத்தப்பாட்டினை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வெவ்வேறு விதமான வேடம் புனைவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நாடகம்

தேர்ச்சி :- கதைப் பாடல்களைப் பாடும் திறனை வளர்ப்பார்.

செயற்பாடு :- 6.24. கதைப் பாடல்களைப் பாடுதல்.

வளம் :- சித்திரக் காட்சிகள் கொண்ட கதைப்படங்கள், சிறிய பாடல்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்கள் ஆக்குதல் (பிள்ளைகளின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்தல்)
2. கதைப்பாடல் கொண்ட படஅட்டையைக் குழுவிற்கு வழங்குதல்.
3. அப்பாடலை ஆசிரியர் பாடுதல், பிள்ளைகள் பாடுதல்.
4. அப்பாடலைக் குழுக்களாகப் பாட ஊக்கமளித்தல்.
5. பிள்ளைகள் தமது குரல்களை புறத்தெறியும் வகையில் பாடவழிப்படுத்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் அனைவரும் பாடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- அப்பாடலைத் தனித்தனியே பாடுவதற்கு ஊக்குவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நாடகம்

தேர்ச்சி :- தாவரங்களைப் போல அசைந்து காட்டுவார்.

செயற்பாடு :- 6.25. தாவரங்களைப் போல அசைவோம்

வளம் :- காணொளி, களக்காட்சி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. காணொளியில் தாவரங்கள் அடங்கிய காட்சிகளைப் பார்க்கச் செய்தல்.
2. தாவரங்களின் அளவுப் பிரமாணங்களை அவதானிக்க வழிப்படுத்தல்.
3. அத்தாவரங்கள் அசையும் அழகினை உற்று நோக்கச் செய்தல்.
4. அவற்றைப் போல எல்லாப் பிள்ளைகளும் சேர்ந்து அசைய வழிப்படுத்தல்.
5. ஒவ்வொரு பிள்ளையையும் அவர் அசைவு செய்து காட்டிய தாவரத்தின் பெயரைக் கூறி அசைவதற்கு வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- தாவரங்கள் போல அசைந்து காட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பல்வேறு விலங்குகளின் அசைவுகளைச் செய்வதற்கு வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நாடகம் - ஒப்பனை மேற்கொள்ளல்

தேர்ச்சி :- ஒப்பனை செய்யும் திறனைப் பெறுவார்.

செயற்பாடு :- 6.26 ஒப்பனை செய்து மகிழ்வார்.

வளம் :- ஒப்பனைப் பொருள்கள், A4 கலர்ப் பேப்பர்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளுக்கு ஒப்பனைப் பொருள்களைக் காண்பித்தல்.
2. ஒவ்வொரு பிள்ளையும் தாம் விலங்காக ஒப்பனை செய்ய விரும்புகிறார்கள் என்பதைச் சிந்திக்க வைத்தல்.
3. ஒவ்வொரு பிள்ளையும் தமக்கு விருப்பமானவர்களுடன் சோடி சேரச்செய்தல்.
4. ஆசிரியரும் பிள்ளைகளும் இணைந்து ஒப்பனை செய்து மகிழ்தல்.
5. தாம் விரும்பிய பாத்திரத்தினைத் தமது சோடிக்குக் கூறி அவரின் உதவியுடன் தமக்கான ஒப்பனையைச் செய்ய வழிப்படுத்தல்.
6. அனைவரையும் பார்வையிட வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் ஒப்பனை செய்யும் முறையை அவதானித்து அதற்குப் பயன்படுத்திய பொருள்களை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஒரு பிள்ளையை அழைத்து அவர் விரும்பிய விலங்கின் உருவத்தினை ஒப்பனை செய்து காட்டுதல்.
பெற்றோரின் உதவியுடன் பிள்ளைகள் விரும்பிய வெவ்வேறு பாத்திர ஒப்பனைகள் செய்வதற்கு வழிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நாடகம்

தேர்ச்சி :- சுற்றாடலில் உள்ள பொருட்களைக் கொண்டு புத்தாக்கச் செயல்களில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 6.27. அளிக்கை செய்வோம்

வளம் :- சுற்றாடலில் கிடைக்கும் பொருள்கள் சில (இலை, தடி, பேணி, போத்தல், விசில் )

அணுகுமுறை :- செய்து காட்டல்

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் அனைவரையும் வட்டமாக அமரச் செய்தல்.
2. விசில் ஊதியவுடன் ஓடிப்போய்ச் சுற்றாடலில் கிடைக்கும் ஒரு பொருளை எடுத்துவரச் செய்தல்.
3. அப்பொருளைப் பயன்படுத்தி ஒரு நிகழ்வு அல்லது ஒரு செய்கை செய்து காட்ட வழிப்படுத்தல்.
4. தாம் எடுத்த பொருள் தமது வாழ்வில் பயன்படும் விதத்தினைக் கலந்துரையாடல் செய்தல்.

மதிப்பீடு :- ஒவ்வொரு பிள்ளையும் சுற்றாடலில் எடுத்துவந்த பொருள்களை அவதானித்தல். அப்பொருளினைக் கொண்டு பிள்ளைகள் செய்யும் செயல்களை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகள் எடுத்த பொருளைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் சில செயல்கள் செய்து காட்டி அவர்களை செய்ய வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நாடகம்

தேர்ச்சி :- பாவனை செய்யும் ஆர்வத்தினைப் பெறுவார்.

செயற்பாடு :- 6.28. பசுவும் புலியும் விளையாடுதல்.

வளம் :- திறந்த வெளி


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. அனைத்துப் பிள்ளைகளையும் மைதானத்திற்கு அழைத்துச் செல்லல்.
2. கைகளைக் கோர்த்தபடி வட்டமாக நிற்க விடல்.
3. இருவர் தெரிவு செய்யப்பட்டு ஒருவர் பசுவாகவும் மற்றவர் புலியாகவும் தம்மைப் பாவனை செய்து பசுவும் புலியும் என்ற விளையாட்டினை விளையாட வழிப்படுத்துதல்.
4. இவ்வாறு பெரும்பாலான பிள்ளைகள் தம்மைப் பாவனை செய்வது போல் விளையாட வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- பிள்ளை பாவனை செய்வதையும் ஈடுபடுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வட்டத்தில் இருப்பவர்கள் வெவ்வேறு மிருகங்கள் போல பாவனை செய்து விளையாட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நாடகம்

தேர்ச்சி :- போலச் செய்வார்.

செயற்பாடு :- 6.29 வேடம் புனைந்து நடித்தல்

வளம் :- ஆற்றுகை செய்வதற்குரிய வெளி வேட உடை, ஒப்பனைகள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் தமக்கு வழங்கப்பட்ட பாத்திரங்களுக்கு ஏற்றவாறு வேடம் புனைதல்.
2. பாத்திரங்களுக்கு ஏற்றவாறு மொழியைப் பயன்படுத்திப் போலச் செய்தல்.

மதிப்பீடு :- அனைத்துப் பிள்ளைகளதும் போலச் செய்தலையும், ஆற்றுகையையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பெற்றோர் நண்பர்களுக்குச் செய்து காட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | நாடகம் |
| தேர்ச்சி | :- | பறவைகள் போலப் பாவனை செய்யும் திறனைப் பெறுவார். |
| செயற்பாடு | :- | 6.30 பறவைகளைப் போலச் செய்தல். |
| வளம் | :- | பறவைகளின் படங்கள், பறவைகளை ஒத்த முகமூடிகள் |
| அணுகுமுறை | :- | விளையாட்டு |
| செயலொழுங்கு | :- | |

1. பறவைகளின் படங்களைக் காட்சிப்படுத்தல்.
2. அவற்றைப் பார்வையிடச் செய்தல்.
3. விருப்பமான பறவையை நன்றாக அவதானிக்கச் செய்தல்.
4. அப்பறவை போலச் செய்து காட்ட வழிப்படுத்தல்.
5. அப்பறவையின் ஒலிகளை எழுப்புவதற்கு ஊக்கப்படுத்துதல்.

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | பாத்திரமேற்று நடிப்பதை அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கம் | :- | ஏனைய பறவைகள் போலவும் செய்து மகிழ வழிப்படுத்தல். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- நாடகம்

தேர்ச்சி :- வியாபாரியாகப் பாத்திரமேற்று நடிப்பார்.

செயற்பாடு :- 6.31. தொப்பி வியாபாரி கதையினை நடித்தல்

வளம் :- கூடை, தொப்பி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
2. ஆசிரியர் தொப்பி வியாபாரியின் கதையைக் கூறுதல்.
3. கதையில் வரும் பாத்திரங்களைப் பற்றிக் கலந்துரையாடல், நடித்துக் காட்டுதல்.
4. வியாபாரியைப் போல் நடிக்க விரும்பியோரை அழைத்தல்.
5. நடிக்க விடுதல்.

மதிப்பீடு :- வியாபாரியைப் போல நடிப்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இது போன்ற வேறு கதைகளிலும் வரும் ஒரு பாத்திரத்தைத் தெரிந்து நடித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | நாடகம் |
| தேர்ச்சி | :- | கதைப் பாடலில் வரும் பாத்திரமொன்றை நடித்துக் காட்டுவார். |
| செயற்பாடு | :- | 6.32. பாட்டியும் காகமும் |
| வளம் | :- | கதைப்பாடல் |
| அணுகுமுறை | :- | விளையாட்டு |
| செயலொழுங்கு | :- | |

1. பிள்ளைகளை வட்டமாக நிற்க விடுதல்.
2. ஆசிரியர் கதைப்பாடலைப் பாடிக் காட்டுதல்.
3. பாத்திரங்களைப் பற்றிக் கலந்துரையாடி நடித்துக் காட்டுதல்.
4. பாட்டியாக, காகமாக நடிக்க விரும்பியோரை அழைத்தல்.
5. நடிக்க விடுதல்.

பாட்டி வடை சுட்டாராம்
பார்த்த காகம் பறித்ததாம்
பாட்டி துரத்திச் சென்றாராம்
போட்டுக் காகம் பறந்ததாம்

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | வியாபாரியைப் போல நடிப்பதை அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கம் | :- | இது போன்ற வேறு கதைப்பாடலைப் பாத்திரமேற்று நடித்தல். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# சமூக மனவெழுச்சி விருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மனவெழுச்சி விருத்தி

சமூக விருத்தி

அறவொழுக்க விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக மனவெழுச்சி

பிள்ளைகளின் நல்ல மனவெழுச்சிக்காகக் குறித்த சில நிலைமைகள் தேவைப்படும். இந் நிலைமைகளைப் பிள்ளைகளுக்குச் சீரான அடிப்படையில் வழங்க வேண்டும். அவையாவன

- பெற்றோர், ஏனைய குடும்ப உறுப்பினர்கள், ஆசிரியர்களிடமிருந்து அன்பும் அரவணைப்பும்
- பிள்ளையும் ஒரு சமூக உறுப்பினர் என்ற உணர்வைத் தூண்டக்கூடிய நிலைமை
- பிள்ளைக்கு சமூகத்தில் ஓர் இடம் உண்டு என்பதையும், குடும்பத்திற்கும், பாடசாலைக்கும், சமூகத்திற்கும் உரியவர் என்பதையும் உணரக் கூடிய ஒரு சமூக நிலைமை
- சாதனை புரியும் தனது வேலைகளில் திருப்தி அடையவும், சுதந்திரமாக இருக்கவும், சுயமாகத் தீர்மானங்களை எடுக்கக் கூடியவருமான வாய்ப்புக்கள்
- தலைவராகவும் பின்பற்றுபவராகவும் செயற்படுவதற்கான நிலைமைகளைக் கற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள்
- மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடியவரான வாய்ப்புக்கள்
- மற்றவர்களுடன் பாதுகாப்பாக இருக்கும் உணர்வையும் தனது நடத்தையைப் பாராட்டக்கூடிய நிலையையும் கொண்ட நிலைமை
- மற்றவர்களை மதிக்கக்கூடியதாகக் கற்பதற்குரிய தன்னம்பிக்கையை உறுதிப்படுத்தும் துலங்கல்கள்
- குடும்பம் அல்லது குழுவில் உறுப்பினராக அல்லாமல் தனியாள் அடையாளத்தை ஏற்றுக் கொள்ளும் நிலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக மனவெழுச்சி விருத்தி

### பொதுவான எதிர்பார்ப்புக்கள்

- **3 – 4 வயதுப் பிள்ளைகள்**

  - அறிந்தவர்களை நம்புதல்.
  - குடும்பத்துடன் தொடர்புடைய நபர்களுடன் சிநேகபூர்வமாக இருத்தல்.
  - சில நேரங்களில் மற்றையவர்களுடன் விளையாடுவார் அல்லது ஒதுங்கியிருந்து அவதானிப்பார்.
  - மேலதிகத் தன்னம்பிக்கைக்காகப் பெற்றோர்களிலும் ஆசிரியர்களிலும் தங்கியிருப்பார்.
  - தேவைப்பட்டது கிடைக்காதபோது கோபமடைவதோடு கண்ணீரும் சிந்துவார். மற்றவர்களுடன் பகிர ஆரம்பிப்பார்.
  - வீட்டிலும் பாடசாலையிலும் உதவ வேண்டுமென்பதை உணர்வார்.
  - தனது சுய அடையாள உணர்வைப் பேணுவதற்கான ஆரம்ப நிலை இதுவாகும்.
  - தன்னம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள ஆரம்பிப்பார்.

- **4 - 5 வயதுப் பிள்ளைகள்**

  - நட்புறவைப் பேணுவார்.
  - சமூக மயமாக்கப்பட்டவர்களுடன் நட்புறவுடன் பழகுவார்.
  - குடும்பத்துடன் தொடர்புடைய வளர்ந்தோருடன் பயமின்றிப் பழகுவார்.
  - என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக் கூடாது என்பதை அறிந்திருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெற்றோர் செய்ய விரும்பும் அனைத்தையும் எப்பொழுதும் விரும்பமாட்டார்.

- 'ஏன்'? என்ற வினாவை அடிக்கடி எழுப்புவார்.

- விதிகளை விளங்கிக் கொள்ள ஆரம்பிப்பார்.

- தன்னிலும் வயது குறைந்த பிள்ளைகளை அரவணைக்க விரும்புவார்.

- புதிய நிலைமைகளில் குழந்தைத்தனமான நடத்தைக்கு மாறுவார்.

- பாதுகாப்பான சுற்றாடலில் தன்னம்பிக்கையை விருத்தி செய்து கொள்வார்.

- எல்லா நிலைமைகளிலும் தான் முதலாவதாக வர முடியாது என்பதை ஏற்றுக் கொள்வார்.

- தன்னைத் திருப்திப்படுத்த முடியாத போது மனமுடைவு அடைவார்.

- மூர்க்கத்தனமுடையவராகவும் இருப்பார்.

- கூட்டாகச் செய்யும் வேலைகள், குழு விளையாட்டுக்கள் மூலம் மகிழ்ச்சி அடைவார்.

- குழு நிலையில் தனது முறைவரும் வரை காத்திருப்பார், பொருட்களை மற்றவர்களுடன் பகிர்வதற்குத் தயாராக இருப்பார்.

- பொறுமையாகவும் இருப்பார்.

- மற்றவர்களுக்கு உதவுவதற்கும் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும் விருப்பம் காட்டுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி உணர்வு

தேர்ச்சி :- தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெறுவார்.

செயற்பாடு :- 7.1. மனவெழுச்சிகளை வெளிப்படுத்தல்

வளம் :- உணர்வுகளை வெளிப்படுத்தும் படங்கள் (கோபம், மகிழ்ச்சி, பயம், கவலை, வெறுப்பு,....), தளவாடி


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் வட்டமாக நிற்றல்.
2. ஆசிரியர் உணர்வு வெளிப்படும் படங்கள் சிலவற்றைக் காண்பித்தல்.
3. படங்களில் வெளிப்படும் உணர்வுகளைக் கேட்டறிதல்.
4. ஒவ்வொரு பிள்ளையாக ஏதாவதொரு உணர்வை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குதல்.
5. ஆசிரியர் வெவ்வேறு உணர்வுகளை வெளிப்படுத்திப் பிள்ளைகளையும் வெளிப்படுத்த ஊக்குவித்தல்.

மதிப்பீடு :- ஆசிரியரால் வெளிப்படுத்தப்படும் உணர்வை இனங்கண்டு கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகள் தளவாடியைப் பார்த்து உணர்வுகளை வெளிப்படுத்தச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி – உணர்வு வெளிப்பாடு

தேர்ச்சி :- பிறரது மனவெழுச்சிகளை இனங்கண்டு கூறுவார்.

செயற்பாடு :- 7.2. படங்களின் மூலம் பிறரது மனவெழுச்சிகளைக் கண்டறிந்து கூறுதல்.

வளம் :- கதைகளைச் சித்தரிக்கும் படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் மாம்பழங்களுடன் கூடிய மரத்தின் படத்தைக் காட்டுதல்.
2. மாமரத்திலுள்ள பழங்களைப் பிள்ளை ஒருவர் புன்சிரிப்புடன் பார்க்கும் படத்தைக் காட்டுதல்.



3. பழத்தைப் பறிப்பதற்காக அந்தப் பிள்ளை உயரமான பெட்டியின் மீது ஏறும் படத்தைக் காட்டுதல்.
4. ஏறும்போது உடைந்த பெட்டியை கீழே விழுந்த அப்பிள்ளை கோபமாகப் பார்க்கும் படத்தைக் காட்டுதல்.
5. பிள்ளைகள் மேற்படி படங்களைப் பார்த்து நடந்தவற்றைக் கூற ஆசிரியர் உற்சாகப்படுத்துதல்.
6. மேற்படி படங்களில் இருந்த பிள்ளையாக நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் எனக்கேட்டல்.
7. பின்பு அவற்றைச் செய்து காட்டச் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- பிறரது மனவெழுச்சிகளை இனங்கண்டு கூறுகின்றாரா என அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தமக்கு ஏற்பட்ட சம்பவங்களைக் கூறி மனவெழுச்சிகளை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி - பகிர்வு.

தேர்ச்சி :- தமது மனவெழுச்சிகளைப் பகிர்ந்து கொள்வார்.

செயற்பாடு :- 7.3. மனவெழுச்சிச் சம்பவங்களைக் கூறுதல்.

வளம் :- நாடாக்களால் அலங்கரிக்கப்பட்ட கோல்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
2. முதலில் ஆசிரியர் அக்கோலை ஒலிவாங்கி போல பயன்படுத்தி தனக்கேற்பட்ட சில மனவெழுச்சிச் சந்தர்ப்பங்களைக் கூறுதல்.

   உ-ம்

   - நேற்று நடைபெற்ற பிறந்த நாள் கொண்டாட்டம் எனக்கு மகிழ்ச்சியை தந்தது.
   - செல்லப் பிராணியைக் காணாதது எனக்குக் கவலையை ஏற்படுத்தியது.
   - பாம்பை கண்டு பயந்தேன்.

3. விரும்பிய பிள்ளைகளை அவ்வாறு கதைக்கச் சந்தர்ப்பம் வழங்குதல். ஏனையோர் கவனமாகக் கேட்டல்.
4. அனைவரும் இவ்வாறு கோலைப் பயன்படுத்தி முதல்நாள் நடைபெற்ற ஒரு சம்பவத்தையும், மனவெழுச்சியையும் கூறச் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- மனவெழுச்சிகளைப் பகிர்ந்து கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பல்வேறு மனவெழுச்சிகளைப் பிள்ளைகள் வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் அளித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி - பகிர்வு

தேர்ச்சி :- மனவெழுச்சிகளைப் பகிர்ந்து கொள்வார்.

செயற்பாடு :- 7.4. நண்பரை அறிமுகப்படுத்தல்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் வட்டமாக நிற்றல்.
2. ஆசிரியரும் வட்டத்தில் இணைந்து கொள்தல்.
3. ஆசிரியர் தனது வலது பக்கத்திலுள்ள பிள்ளையின் இடது கையைப் பிடித்து உயர்த்தி "இவர் என் நண்பர், இவரின் பெயர் ..........." எனக்கூறித் தொடர்ந்தும் கையைப் பிடித்தவாறு நிற்றல்.



4. பெயர் கூறப்பட்ட பிள்ளை இதே போல் தனது வலது பக்கத்தில் நிற்கும் பிள்ளையின் இடது கையைப்பிடித்து இவர் என் நண்பர். இவரின் பெயர் ........... எனக் கூறச் செய்து எல்லோரும் கைகளைப்பிடித்து வட்டமாக நிற்கும் வரை செயற்பாட்டைத் தொடரல்.
5. அனைவரும் கைகோர்த்தபடியே கைகளை மேலுயர்த்தி நாங்கள் அனைவரும் நண்பர்கள் என்று உரத்துச் சொல்லல்.
6. அனைவரும் கைகோர்த்து நிறைவடைந்ததும் மகிழ்வான ஆரவாரத்தை வெளிப்படுத்தல்.

மதிப்பீடு :- யாவரும் இச்செயற்பாட்டில் பங்கு கொண்டு செயற்பட்டனரா? என அவதானித்து உறுதிப்படுத்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளையிடமும் சென்று கைகொடுத்து 'மகிழ்வாக இருப்போம்' எனக்கூறிச்செல்ல பிள்ளைகளும் ஒவ்வொருவரிடமும் சென்று அதே போலச்செய்ய விடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி – உதவுதல்

தேர்ச்சி :- பிறருக்கு உதவுவார்.

செயற்பாடு :- 7.5. பிள்ளைக்கு உதவுதல்

வளம் :- கண்கள் கட்டும் துணி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகள் பரந்து நிற்றல்.
2. ஆசிரியர் செயற்பாட்டை விளக்கி ஒரு பிள்ளையை முன்வருமாறு கூறி அவரின் கண்களைக் கட்டுதல்.
3. கண்கள் கட்டப்பட்ட பிள்ளை உரிய இடத்திற்குச் செல்ல உதவுங்கள் என்று ஏனைய பிள்ளைகளைக் கேட்டல்.
4. உதவ விரும்பும் ஒருபிள்ளை, முன்வந்து அவரின் அருகிற் சென்று 'நான் உங்களுக்கு உதவுவேன்' எனக்கூறித் தனது கையால் பிடித்து உரிய இடத்திற்கு மிகக் கவனமாக அழைத்துச் செல்லுதல்.
5. உரிய இடத்தை அடைந்ததும் கண்களை அவிழ்த்து விடுதல்.
6. மீண்டும் உதவியவரின் கண்களை கட்டி விளையாட்டைத் தொடருவர். இவ்வாறு எல்லாப் பிள்ளைகளும் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- அனைத்துப் பிள்ளைகளும் உதவுவதற்கு முன்வந்தனரா? என அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. உதவி கோரும் பிள்ளையை உதவியாளர் வாய்மொழி மூலம் அழைத்துச் செல்ல விடல்.
2. வீட்டில் செய்த உதவிகளைக் கூற விடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி – உதவுதல்

தேர்ச்சி :- பிறரிடம் உதவி பெறுவார்.

செயற்பாடு :- 7.6. உதவி பெறுதல்.

வளம் :- விளையாட்டுப் பொருள்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் பிள்ளைகளை சோடி சேர்த்தல்.
2. ஒருவர் தனது கால் சுளுக்கிக் கொண்டதாக நடித்து ஓர் இடத்தில் அமர்தல். அவரால் நடக்க முடியாத நிலையில் மற்றவர் அவருடன் கலந்துரையாடி விளையாட்டுப் பொருட்கள் அல்லது புதிர்களைக் கொடுத்து விளையாட விடல்.
   - பின்னர் மற்றவர் சுளுக்கிக் கொண்டதாக நடித்தல்.
   - மாறிமாறி இச்செயற்பாடு தொடரும்.

மதிப்பீடு :- உதவி பெறுவதையும் உதவுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தமது வீடுகளில் தாம் உதவி கோரிய சந்தர்ப்பம் பற்றிக் கூறவிடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி – உணர்வு

தேர்ச்சி :- தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வார்.

செயற்பாடு :- 7.7. பாவை விளையாட்டு.

வளம் :- பாவைப்பிள்ளை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் விளையாட்டை ஆரம்பித்தல்.
2. ஆசிரியர் பாவைப்பிள்ளையை எடுத்து கையில் வைத்துக்கொண்டு தனது விருப்பத்தை அதனிடம் சொல்லுதல். (உன்னைப்போல நானும் சிரிப்பேன் என்னோடு விளையாடுவாயா? எனக்குக் கவலையாக இருக்கிறது.)
3. பின்பு பாவைப்பிள்ளையைப் பக்கத்திலுள்ள பிள்ளையிடம் கொடுத்தல்.
4. தொடர்ந்து யாவரும் விருப்பத்தைக் கூறுதல்.

மதிப்பீடு :- உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தமது கருத்துக்களைச் சுதந்திரமாகச் சக பிள்ளைகளிடம் வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி – உணர்வு

தேர்ச்சி :- தன்னை இரசிப்பார்.

செயற்பாடு :- 7.8. தளவாடியுடன் கதைத்தல்.

வளம் :- தளவாடி


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் தளவாடியில் தன்னைப் பார்த்து இரசித்து தனது உருவத்தைப்பற்றி உரத்துக்கூறுதல்.
2. பின்பு ஒவ்வொரு பிள்ளையும் தானும் தளவாடியில் தனது உருவத்தைப் பார்த்து இரசித்துக் கூறுதல்.

மதிப்பீடு :- தளவாடியில் தம்மைப்பார்த்து இரசித்துக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளை தன்னைப்பற்றித் தாழ்வாகக் கூறுமிடத்து ஆசிரியர் நல்ல விடயங்களைப் பார்க்க வழிப்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | மனவெழுச்சி விருத்தி - புலன்களால் இரசித்தல் |
| தேர்ச்சி | :- | இயற்கையை இரசிப்பார். |
| செயற்பாடு | :- | 7.9. களப்பயணம் செல்லல் |
| வளம் | :- | இயற்கை அழகு நிறைந்த இடங்கள், போக்குவரத்து வசதி |
| அணுகுமுறை | :- | விளையாட்டு |
| செயலொழுங்கு | :- | |

1. ஆசிரியர் உரிய இடத்தைத் தெரிவு செய்தல்.
2. பெற்றோரின் அனுமதி பெறுதல்.
3. களப்பயணத்திற்கு தேவையான பொருள்களை ஒழுங்குசெய்தல்
4. அழைத்துச் செல்லுதல்.
5. இயற்கையை இரசிப்பதற்கு வழிப்படுத்துதல்.
6. பார்த்த அழகிய காட்சிகள், அனுபவங்களை ஏனையோருக்குக் கூறுதல்.

| | | |
|---|---|---|
| மதிப்பீடு | :- | இரசித்த விடயம் ஒன்றைக் கூறுவதை அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கம் | :- | வெவ்வேறு இரசிக்கக் கூடிய இடங்களைத் தெரிவு செய்து (ஆலயம், கடற்கரை,பூங்கா) அழைத்துச் செல்லுதல். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி - புலன்களால் இரசித்தல்

தேர்ச்சி :- கண்காட்சியைப் பார்த்து இரசித்துக் கூறுவார்.

செயற்பாடு :- 7.10. கண்காட்சி

வளம் :- அழகான படங்கள், ஓவியங்கள், ஆக்கங்கள்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பல்வேறு படங்களைப் பெற்றுக் கண்காட்சிக்கான ஒழுங்கை மேற்கொள்ளல்.
2. பிள்ளைகள் வரைந்த படங்களையும் தயாரித்த பொருட்களையும் சேர்த்து ஒழுங்கமைத்தல்.
3. சகல பிள்ளைகளும் பார்வையிட வழிப்படுத்தல்.
4. பார்த்தவற்றைப்பற்றிக் கூறச் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- இரசித்த விடயங்களைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இதே போன்று நடனம், இசை, நாடகம், கட்டட அமைப்புக்கள் போன்ற கலைகளை இரசிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி - சாதகமான நடத்தை.

தேர்ச்சி :- பிறரைக் குற்றங் கூறாது தமது கருத்தை வெளிப்படுத்துவார்.

செயற்பாடு :- 7.11. கருத்துக் கூறல்

வளம் :- சம்பவங்கள், சிறிய கதைகள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. சிறிய கதைகள்/ சம்பவங்களைக் கூறி 'இதன் போது நீங்கள் என்ன செய்வீர்கள்'? எனக்கேட்டல்.

- 'நீங்கள் இணைந்து நீர்வர்ணம் தீட்டி ஆக்க வேலைசெய்யும் போது மற்றைய பிள்ளையின் வர்ணம்,உங்கள் ஆடையில் தெறித்து விட்டது'. நீங்கள் என்ன செய்வீர்கள்?
- 'முன்பள்ளி நிறைவடைந்ததும் அம்மா அழைத்துச் செல்ல வரவில்லை'. என்ன செய்வீர்கள்?
- 'உங்கள் செல்லப்பிராணி வருத்தம் காரணமாக முனகியது'. நீங்கள் என்ன செய்வீர்கள்?
- பிள்ளை சாதகமற்ற பதில் கூறியிருந்தால் செயற்பாட்டின் நிறைவில் அவற்றை சாதகமாகக் கூற வழிப்படுத்த வேண்டும். (சாதகமான பதில் எனும்போது மற்றவரை குற்றம் சாட்டாத, புண்படுத்தாத மன்னிக்கும் வகையிலான பதில்கள்)

மதிப்பீடு :- ஏனையோரைக் குற்றங் கூறாது தமது கருத்தை வெளிப்படுத்துவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சம்பவங்களை நடிப்புடன் முன்வைக்க விடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி - சாதகமான நடத்தை

தேர்ச்சி :- தனது செயற்பாடுகளைப் பாராட்டுவார்.

செயற்பாடு :- 7.12. தன்னைப் பாராட்டுதல்.

வளம் :- சிறுவர் பாடல்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் தம்மிலுள்ள சிறந்த பண்பு ஒன்றைக் கூறுதல்.
2. சிறுவர் பாடல் ஒன்றை ஆக்குதல்.
3. ஆசிரியர் பாடிக் காட்டுதல்.
4. ஆசிரியருடன் இணைந்து பிள்ளைகளும் பாடுதல்.
5. பாடலைப் பாடிக்கொண்டே அசைந்து ஆடுதல்

நான் நல்லவன்

நன்கு படிப்பவன்

நன்மை செய்பவன்

நன்றாய் வாழ்பவன்

பட்டம் விடுவேன்

பாட்டுப்பாடுவேன்

பார்த்தும் கீறுவேன்

பந்தும் அடிப்பேன்

மதிப்பீடு :- தமது சிறந்த பண்பு ஒன்றைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகள் கூறிய பண்புகளைக்கொண்டு மேலும் பாடல்கள் தயாரித்துப் பாடி ஆடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி - சாதகமான நடத்தை.

தேர்ச்சி :- ஏனையோரின் நற்பண்புகளைப் பாராட்டுவார்.

செயற்பாடு :- 7.13. கை கொடுத்தல்.

வளம் :- பூக்களின் படம் வரைந்த வாழ்த்து அட்டைகள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைச் சோடி ஆக்குதல்.
2. எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு பூ வழங்குதல்.
3. சோடிகளில் ஒருவர் தான் செய்த உதவியொன்றை கூறுதல்.
4. மற்றவர் அவருக்குத் தன் பூவை வழங்கிப் பாராட்டுதல்.
5. பின் சோடியின் மற்றவர் தான் செய்த உதவியைக் கூறுதல். மற்றவர் இவருக்கு பூ வழங்கிப் பாராட்டுதல்.
6. இவ்வாறு அனைத்துச் சோடிகளும் செய்தல்.
7. நிறைவில் பிள்ளைகள் எல்லோரும் தமது கைகளில் உள்ள பூக்களை முன்னே நீட்டி 'உதவி செய்தமைக்குக் கிடைத்த சிறந்த பரிசு' என மகிழ்வுடன் உரத்துக் கூறுதல்.

மதிப்பீடு :- பாராட்டியதனையும் பாராட்டுப் பெற்றதனையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகள் செய்த நற்செயல்களுக்கு படம் கீறிய வாழ்த்து அட்டையை வழங்கிப் பாராட்ட வழிகாட்டுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி - சுயமேம்பாடு.

தேர்ச்சி :- தன்னை அறிமுகஞ் செய்வார்.

செயற்பாடு :- 7.14. ஒலிவாங்கியில் பேசுதல்.

வளம் :- அட்டையில் செய்யப்பட்ட ஒலிவாங்கி


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஒவ்வொரு பிள்ளையாக எழுந்து நின்று அட்டை ஒலிவாங்கியைப் பிடித்துக்கொண்டு தம்மைப் பற்றிக் கூறுதல்.
2. ஏனையோர் வினாக்களைக் கேட்க விடையளிக்கலாம். (விருப்பமான உணவு, விருப்பமான நிறம், விருப்பமான விளையாட்டு......)
3. அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- தம்மைப்பற்றிக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகளின் படங்களை அல்லது உருவ மட்டைகளில் பிள்ளைகளின் பெயர்களை எழுதி அலங்கரித்துக் காட்சிப்படுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி- சுயமேம்பாடு

தேர்ச்சி :- சுய ஆற்றல்களை அறிந்து கூறுவார்.

செயற்பாடு :- 7.15. சுய ஆற்றல்களைக் கூறுதல்.

வளம் :- வர்ணக்கடதாசிக் கொடிகள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் வர்ணக்கடதாசிக் கொடிகள் செய்து வைத்திருத்தல்.
2. உங்களால் செய்ய முடிந்தவை பற்றிச் சிந்தியுங்கள் என வழிப்படுத்தல்.
3. ஆசிரியர் "என்னால் பாட முடியும்" எனக்கூறி ஒரு வர்ணக்கொடியை உயர்த்திப் பிடித்தல்.
4. பிள்ளைகளில் பாடக்கூடியவர்கள் தமது வர்ணக்கொடியை உயர்த்திப் பிடித்து "என்னால் பாட முடியும்" எனக் குரல் கொடுத்தல்.
5. ஏனைய பிள்ளைகளும் தன்னால் முடிந்த வேறு ஆற்றல்களுக்குக் கொடியை உயர்த்திப் பிடித்து குழுவாகிக் குரல் கொடுத்தல்.

என்னால் பாய முடியும்

என்னால் படம் கீற முடியும்

என்னால் ஆட முடியும்

என்னால் பந்தைப் பிடிக்க முடியும்

பாட்டுப் பாடுவோம்
பாட்டுப் பாடுவோம்
ஆட்டம் ஆடுவோம்
ஆட்டம் ஆடுவோம்
தந்த தகிட தந்த தகிட
ஆட்டம் ஆடுவோம்

நிறைவில் பிள்ளைகள் அனைவரும் கையில் கொடியேந்தி வட்டமாக நின்று கொடிகளை மேலே உயர்த்திப் பிடித்தவாறு பின்வரும் பாடலைப் பாடி ஆடுவர்.

மதிப்பீடு :- தமது ஆற்றலைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பல கொடிகளை ஏந்தியவர்கள் பற்றி உரையாடலாம், சில நாட்களுக்கு ஒரு முறை மீளச்செயற்படல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி - சுயமேம்பாடு

தேர்ச்சி :- தமது இயலுமைகளை மதிப்பிட்டுக் கொள்வார்.


செயற்பாடு :- 7.16. பூ ஒட்டுதல்

வளம் :- அட்டவணை

| பெயர் | காணும் நிறத்தைக் கூறுதல் | பாடல் பாடுதல் | கை தட்டுதல் | மரத்தின் பெயரைக் கூறுதல் | பறவையின் பெயரைக் கூறுதல் | துள்ளுதல் | பிறருக்கு உதவுதல் |
|---|---|---|---|---|---|---|---|
| ராஜா |  | | |  | |  | |
| கண்ணன் | | |  | | |  | |

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் சிறிய பூக்களை வர்ணக் கடதாசிகளில் வெட்டி வைத்திருத்தல்.
2. அட்டவணையில் உள்ள விடயங்களை ஆசிரியர் ஒவ்வொன்றாகக் கேட்கும்போது அதனைச் செய்ய முடியுமானவர்கள் அக்கட்டங்களில் பூவை ஒட்டுதல்.
3. எல்லோரும் பூக்களை ஒட்டக்கூடிய வகையில் வினாக்களைக் கேட்டு பூ ஒட்டுவதற்கு உதவுதல்.

மதிப்பீடு :- பிள்ளைகள் தம்மை மதிப்பீடு செய்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. நாளாந்த செயற்பாடுகளின் பொழுது பிள்ளைகளின் இயலுமையை கண்டறிந்து அட்டவணையில் பூக்களை ஒட்டுவதற்கு வழிப்படுத்தல்.

2. வீட்டிலும் இவ்வாறு செய்யப் பெற்றோரை வழிப்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் : மனவெழுச்சி விருத்தி - குடும்பம்

தேர்ச்சி :- உறவினரை அழைக்கும் உறவுமுறையைக் கூறுவார்.

செயற்பாடு :- 7.17. உறவு முறை பற்றிய கலந்துரையாடல்.

வளம் :- குடும்ப உறவினரின் படங்கள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் பிள்ளைகளுக்கு அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, தம்பி, தங்கை, அண்ணா, அக்கா போன்ற படங்களைக்காட்டி இவர்கள் யார் எனக்கேட்டு விடை கூறச்செய்தல்.
2. ஆசிரியரால் தயார்ப்படுத்தப்பட்ட பிள்ளைகள் முன்வந்து பொருத்தமான படங்களைக் காட்டி 'இவர்கள் யார்?' எனக் கேட்டல். ஏனையோர் விடை கூறுதல்.

உ-ம்

- இவர் உங்கள் அம்மாவின் அம்மா, இவரை எப்படி அழைப்பீர்கள்?
- விடை - அம்மம்மா,
- இவர் உங்கள் அப்பாவின் தம்பி, இவரை எப்படி அழைப்பீர்கள்?
- விடை - சித்தப்பா,......

மதிப்பீடு :- உறவு முறைக்கேற்ப அழைக்கும் மொழியைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- உறவு முறைபோல் நடித்து உறவை விபரிக்க வழிப்படுத்தல்.

(நான் தான் அக்கா, உங்களில் எனக்கு நல்ல விருப்பம். நான் உங்களுக்கு உதவுவேன், பாடம் சொல்லித்தருவேன் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி - குடும்பம்

தேர்ச்சி :- குடும்ப உறுப்பினர்களின் நாளாந்தக் கடமைகளைப் போலச் செய்து காட்டுவார்.

செயற்பாடு :- 7.18. போலச்செய்தல்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. குழுக்களாகப் பிள்ளைகளைப் பிரித்தல்.
2. நாளாந்த செயற்பாடுகளில் குடும்ப அங்கத்தவர் போல பிள்ளைகள் நடிக்க வழிப்படுத்தல்.

உ-ம்

- அப்பா – கடைக்குச் செல்லுதல், வேலைக்குச் செல்லுதல், விறகு கொத்துதல்.
- அம்மா – வீடு கழுவுதல், சமைத்தல், வீடு பெருக்குதல்.
- நான் - பூச்சாடிகளுக்கு நீர் ஊற்றுதல், எனது பொருட்களை உரிய இடத்தில் வைத்தல், படித்தல், விளையாடுதல்.

மதிப்பீடு :- உரிய முறையில் போலச் செய்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சில விழாக்களைக் கூறிப் பொறுப்புக்களை ஏற்று நடக்க வழிப்படுத்தல். (தைப்பொங்கல், பிறந்தநாள்.......)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி - குடும்பம்.

தேர்ச்சி :- விருந்தினர்களை உபசரிப்பார்.

செயற்பாடு :- 7.19. பிறந்தநாள் கொண்டாட்டம்

வளம் :- பிள்ளைகளினால் செய்யப்பட்ட களிமண் பலகாரப் பொருள்கள், தட்டுக்கள், தேநீர்க் கோப்பைகள், பொம்மை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை இரண்டு குழுக்களாக்குதல்.
2. ஆசிரியர் பிறந்தநாள் விழாவில் மற்றவர்களை உபசரித்தல் தொடர்பான செயற்பாடுகளை செய்துகாட்டி விளக்குதல்.
3. பிறந்த நாளுக்குரிய பிள்ளையாக பொம்மையைப் பாவனை செய்து பிறந்தநாளைக் கொண்டாடுதல்.
4. ஒரு குழுவினர் கதிரைகளில் அமர்ந்திருக்க மற்றைய குழுவினர் அமர்ந்திருப்பவர்களை உபசரித்தல்.
5. பின்னர் இச் செயற்பாடு மற்றைய குழுவினரால் மாறி நடாத்தப்படுதல்.
6. பொம்மையின் பிறந்தநாள் கொண்டாட்டத்தை மகிழ்வுடன் ஆரவாரித்துக் கொண்டாடுதல்.

மதிப்பீடு :- சரியான முறையில் உபசரித்தலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிற்கு வரும் விருந்தினர்களையும் பிள்ளைகள் உபசரிக்கும் சந்தர்ப்பங்களை வழங்குமாறு பெற்றோரை வழிகாட்டுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி – குடும்பம்

தேர்ச்சி :- குடும்பத்தில் தனது நிலையை அறிந்துகொள்வார்

செயற்பாடு :- 7.20. உறவு உருக்களுடன் செயற்படல்.

வளம் :- அட்டையில் ஒட்டப்பட்ட உறவுமுறை உருக்கள்


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. மேசையில் உறவுமுறை உருக்களை வைத்தல்.
2. முதலில் ஒரு பிள்ளை அவற்றிலுள்ள தனது உறவு நிலையினரின் உருக்களை எடுத்து மேசையில் வைக்க வழிப்படுத்துதல்.
3. தனது உருவையும் குடும்ப உருக்களுடன் எடுத்துவைக்க வழிப்படுத்தல்.
4. அக்குடும்பத்தில் தனது உறவு நிலையைக் கூற வழிப்படுத்தல்.
5. ஏனைய பிள்ளைகளும் இச் செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- எல்லாப்பிள்ளைகளும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தனது மிக விருப்புக்குரியவர்களின் உருவங்களை அருகில் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- மனவெழுச்சி விருத்தி – குடும்பம்


தேர்ச்சி :- தன்னைத் தானே மதிப்பிடுவார்.

செயற்பாடு :- 7.21. அட்டவணையைப் பூர்த்தி செய்தல்.

வளம் :- ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட சாதனை அட்டவணை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளைக்குமென ஒரு பெரிய தாளில் அட்டவணைகளை வரைதல்.
2. பிள்ளைகளின் கண்மட்டத்தில் பிள்ளைகளின் இத்தரவுகளைத் தொங்க விடல்.
3. பிள்ளையின் சாதகமான செயற்பாடுகளை ஆசிரியரின் உதவியுடன் தனக்குரிய அட்டவணையில் பிள்ளை குறித்துக்கொள்ளுதல். (பிறருக்கு உதவுதல், வரைதல்,ஆக்கத்திறன் போன்ற சாதகமான செயல்கள் அனைத்தையும் அவ்வப்போதே அட்டவணையில் இணைத்துக் கொள்ளல்)
4. ஒவ்வொரு வார முடிவிலும் கற்கும் நேரத்தில் ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளையினதும் அட்டவணையை வாசித்துக்காட்டுதல்.

மதிப்பீடு :- அட்டவணையில் தமது செயற்பாடுகளைக் குறித்துக் கொள்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வீட்டிலும் பிள்ளை இவ்வாறு குறித்துக் கொள்ள வழிகாட்டும்படி பெற்றோரை வழிப்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சமூக விருத்தி - சமூக உறுப்பினர்

தேர்ச்சி :- தனது அயலவர்களை அறிந்து கூறுவார்.

செயற்பாடு :- 7.22. படங்களை இனங்காணல்.

வளம் :- படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு


செயலொழுங்கு :-

1. பெரிதாக வரைந்த வயது, பால் வேறுபாடுடைய பலரை உள்ளடக்கிய படத்தை வகுப்பில் காட்சிப்படுத்தல்.
2. படத்தினைப் பார்த்து தனது அயலவர்களைப் பற்றிச் சிந்திக்கச் செய்தல்.
3. தனது அயலவர்கள் பற்றி ஏனையோருக்குக் கூறச் சந்தர்ப்பம் வழங்கல்.
4. அயலவர்கள் தமக்கு எவ்வகையில் உதவினர் எனக்கூறுதல்.
5. அயலவர்களுக்கு தாம் எவ்வகையில் உதவினோம் எனக்கூறுதல்.

மதிப்பீடு :- படங்களின் உதவியுடன் அயலவர்களை இனங்கண்டு கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- அயலவர்களுடனான வேறு தொடர்புகளை இனங் காண்பதற்கு வழிப்படுத்துதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சமூக விருத்தி - சமூக உறுப்பினர்

தேர்ச்சி :- ஆசிரியராகப் பாவனை செய்வார்

செயற்பாடு :- 7.23. போலச் செய்தல்

வளம் :- சிறிய சேலை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைச் சிறு குழுக்களாக்குதல்.
2. ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு சிறிய சேலையை வழங்கி வட்டமாக பரிமாறச் செய்தல். ஆசிரியர் கை தட்டும்போது யார் கையில் உள்ளதோ அவர் அதனை ஆசிரியர் போல் அணிந்து ஆசிரியராக செய்து காட்டுதல்.
3. எல்லாப் பிள்ளைகளும் ஆசிரியராகச் செயற்பட்டுக் காட்டுதல்.

மதிப்பீடு :- ஆசிரியராகச் செயற்படுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வேறு ஆசிரியர்களின் நல்ல மாதிரிகளைப் பற்றிக் கலந்துரையாட வழிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சமூக விருத்தி - சமூக உறுப்பினர்

தேர்ச்சி :- பெரியோர்கள் போல் பாவனை செய்வார்.

செயற்பாடு :- 7.24. போலச் செய்தல்

வளம் :- தொப்பி, கைத்தடி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. சமூகத்திலுள்ள பெரியவர்கள் பற்றி கலந்துரையாடல்.
2. பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
3. ஆசிரியர் தனது தலையில் தொப்பி ஒன்றை அணிந்து கொண்டு சமூகத்திலுள்ள பெரியார் ஒருவர் செய்த நல்ல விடயத்தைக் கூறுதல் உ-ம் - புத்திமதி கூறுவர், பரிசு கொடுப்பர், பிரச்சினையை தீர்ப்பார்கள், தலமை தாங்குவர்.
4. ஆசிரியர் தனது தலையிலுள்ள தொப்பியை அருகிலுள்ள பிள்ளையின் தலையில் வைத்தல்.
5. தொப்பி அணிந்த பிள்ளை தான் அறிந்த பெரியவரின் நல்ல செயல்களைக் கூறுதல்.
6. பின்பு தனது தலையிலுள்ள தொப்பியை அருகிலுள்ள பிள்ளையின் தலையில் வைத்துச் செயற்பாட்டைத் தொடருதல்.

மதிப்பீடு :- பாவனை செய்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- சமூகத்திலுள்ள பெரியவர்கள் தமக்கு உதவிய சந்தர்ப்பங்களைக் கதைப்பதற்கு வழிப்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சமூக விருத்தி – பொது இடங்கள்

தேர்ச்சி :- தமது முன்பள்ளிக்கு அருகிலுள்ள முக்கிய இடங்களை அறிந்து பெயர் கூறுவார்.

செயற்பாடு :- 7.25. போலியான களப்பயணம்.

வளம் :- அடையாளப்பலகை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. முன்பள்ளிச் சூழலில் அருகிலுள்ள கிராமங்களின் பெயர்கள், சந்தை, பாடசாலை, நூலகம், ஆலயம், தபாலகம், வைத்தியசாலை என்பவற்றை அடையாளப்பலகையில் குறிப்பிட்டு வெவ்வேறு இடங்களில் நாட்டுதல்.
2. பிள்ளைகளை மேலே அடையாளப்படுத்தப்பட்ட இடங்களுக்கு அழைத்துச்சென்று அவை தொடர்பாக கலந்துரையாடல்.
3. நடுவில் பிள்ளைகளை நிற்கவிட்டு ஆசிரியர் குறிப்பிடும் இடத்திற்குப் பிள்ளைகள் செல்வதற்கு வழிப்படுத்தல்.
4. இவ்வாறு அனைத்து இடங்களிற்கும் பிள்ளை செல்வதற்கு வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- முன்பள்ளி அயலில் காணப்படும் முக்கிய இடங்களின் பெயர்கள் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :-

1. பிள்ளைகள் அறிந்துள்ள வேறுபட்ட இடங்கள் பற்றிக் கலந்துரையாடச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தல்.
2. கிராமத்திலுள்ள மேற்படி இடங்களுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சமூக விருத்தி - சமூக உறுப்பினர்

தேர்ச்சி :- சமூக உறுப்பினராகத் தம்மை போலச்செய்து காட்டுவார்.

செயற்பாடு :- 7.26. போலச் செய்தல்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைச் சிறு குழுக்களாக்குதல்.
2. ஆசிரியர் பொதுவான இடங்களைக் குறிப்பிட்டுச் சிறு குழுவாக்கப்பட்ட பிள்ளைகளை அந்த இடங்களில் நிற்க வைத்தல்.

   உ-ம் - பாடசாலை, ஆலயம், நூல்நிலையம், முன்பள்ளி

3. அந்த இடங்களில் நிற்கும் பிள்ளைகள் அந்த இடத்தில் உள்ளவர்களின் கடமைகளில் ஏதாவது ஒன்றைச் செய்து காட்டுதல்.
4. இவ்வாறு குழுக்கள் வெவ்வேறு இடங்களிற்கு மாற்றப்பட்டுச் செயற்பாட்டைத் தொடருதல்.

மதிப்பீடு :- சமூக உறுப்பினராகப் போலச் செய்து காட்டுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வேறு இடங்களிலும் தாம் செய்யக்கூடிய கடமைகளைப் பற்றிக் கலந்துரையாட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சமூக விருத்தி - சமூக உறுப்பினர்.

தேர்ச்சி :- சமூக நிகழ்வில் பங்கேற்போரின் பாத்திரங்களைப் பாவனை செய்வார்.

செயற்பாடு :- 7.27. கலந்துரையாடல், பாவனை செய்தல்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. சமூக நிகழ்வுகள் பற்றிக் கலந்துரையாடல்.
2. விழாக்கள், ஆலய விழாக்கள் பற்றிக் கலந்துரையாடல்
3. ஆலய விழாக்களில் மக்களின் பங்கேற்புத் தொடர்பாக கலந்துரையாடல்.
4. ஆலய விழாக்களில் மக்களின் வேறுபட்ட செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடல்.
5. விருப்பமான பாத்திரங்களைத் தெரிவுசெய்ய வழிப்படுத்தல். (பூசை செய்பவர், காவடி ஆடுபவர், வணங்குபவர், வியாபாரி)
6. தாம் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தைச் செய்துகாட்ட வழிப்படுத்துதல்.

மதிப்பீடு :- பாத்திரங்களை உரிய முறையில் பாவனை செய்தமையை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இடங்களை மாற்றி, பாத்திரங்களை மாற்றி, நிகழ்வுகளை மாற்றிச் செயற்படுத்துவதற்கு வழிப்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சமூக விருத்தி - சமூக உறுப்பினர்.

தேர்ச்சி :- பிறரை விமர்சனம் செய்யும் ஆற்றலைப் பெறுவார்.

செயற்பாடு :- 7.28. கதை கேட்டல்.

வளம் :- பிறிஸ்ரல் அட்டை, பெயின்ரிங் ஸ்ரிக்ஸ்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. கதை ஒன்றைத் தயாரித்தல்
2. கதையைப் பிள்ளைகளுக்கு சொல்லுதல்.
3. கதை தொடர்பான பிள்ளைகளின் அபிப்பிராயங்கள் பற்றிக் கலந்துரையாடல்.

மதிப்பீடு :- விமர்சனம் செய்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிறரை மதித்தல் தொடர்பான வேறுபட்ட சம்பவங்களையும் கதைகளையும் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குதல்.

ஒரு அரசனுக்கு ஆதவன், சித்திரா, சாரங்கன் என மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். ஆதவன் சகல தேவைகளும் நிறைவுபெற்று சகல சௌபாக்கியங்களுடனும் வளர்ந்தமையால் எவரையும் மதிக்கவில்லை, சித்திரா மிக்க அறிவு உடையவளாகத் திகழ்ந்தாள். மிக்க அறிவு உடைய தலைக்கனம் கொண்ட சித்திராவும் எவரையும் மதிக்கவில்லை. சாரங்கன் சிறந்த அறிவு கொண்டு சகல கலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றவனாக விளங்கியதுடன் அனைவரையும் மதித்து நடப்பவனாகவும் திகழ்ந்தான். இதனால் மக்கள் ஆதவனையும் சித்திராவையும் வெறுத்தனர். சாரங்கனின் பிறரை மதிக்கும் பண்பினால் கவரப்பட்ட மக்கள் அவனை மிகவும் விரும்பினர்.

அந்தநிலையில் அரசன் அரச பொறுப்புக்களைத் தனது பிள்ளைகளில் ஒருவரிடம் ஒப்படைக்க விரும்பி மக்களுடன் கலந்துரையாடினான். மக்களோ ஆதவன்,சித்திரா ஆகியோர் எவரையும் மதித்து நடப்பதில்லை, ஆனால் சாரங்கன் யாவருடனும் அன்புடனும் மதிப்புக் கொடுத்தும் வாழுவதனால் அவனையே அரசனாக்கும்படி ஏகோபித்துக் கேட்டனர். அரசனும் மக்களின் கருத்தை மதித்து நடப்பவனாதலால் சாரங்கனையே அரசனாக்கினான். மக்கள் மிகவும் மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சமூக விருத்தி - சமூகக் கடமை

தேர்ச்சி :- சமூகத்துடன் இணைவதனூடாக சமூகத்தின் வெற்றிக்கு உதவுவார்.

செயற்பாடு :- 7.29. படங்களைப் பொருத்துதல்.

வளம் :- படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு.

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளைக் குழுக்களாக்குதல்.
2. படத்தின் ஒரு பிரதியை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குதல்.
3. வழங்கப்பட்ட படத்தின் இன்னொரு பிரதியை துண்டுகளாக வெட்டி குழுக்களுக்கு வழங்குதல்.
4. குழுக்களிடம் உள்ள படம் போன்ற உருவத்தை வெட்டிய துண்டுகளைக் கொண்டு உருவாக்க வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- குழுவிலுள்ள அங்கத்தவர் அனைவரும் இணைந்து படங்களைப் பொருத்துவதற்கு உதவுகின்றார்களா என அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பல்வேறு சந்தர்ப்பங்களில் சமூகத்தில் பிள்ளைகள் மற்றவர்களுக்கு எவ்வாறு உதவி செய்கிறார்கள் என்பதைக் கலந்துரையாட வழிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- சமூக விருத்தி – நற்பண்புகள்.

தேர்ச்சி :- உதவி கோருவார், உதவுவார்.

செயற்பாடு :- 7.30. உதவுதல்

வளம் :- முயற் பொம்மை /சிறிய பிராணிப் பொம்மை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகள் வட்டமாக இருத்தல்.
2. முயற் பொம்மை/ சிறு பிராணி பொம்மை ஒன்றை ஆசிரியர் கையில் வைத்து இம் முயல் களைத்துவிட்டது, இதற்கு வட்டமாக நடக்க ஆசையாக இருக்கின்றது, எனக்கூறிப் பிள்ளைகள் அதனைத் தூக்கி வட்டமாகச் செல்ல விடுமாறு, அருகில் உள்ள பிள்ளையிடம் கொடுத்தல்.
3. பின்பு முயல் / சிறு பிராணி வேகமாகச் செல்ல வேண்டும் எனக் கூறிக்கொடுத்தல்.
4. இதே போன்று ஒவ்வொரு பிள்ளையும் நான் களைத்து விட்டேன் என்னை அழைத்துச் செல்லுங்கள் எனக்கூற அருகில் இருப்பவர் அவரது கையைப்பிடித்து வட்டமாக அழைத்துவந்து இருக்கச்செய்தல்
5. இது போன்று எல்லாப்பிள்ளைகளும் செய்வர்.

மதிப்பீடு :- உதவி கோருவதையும், உதவுவதையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தாம் மற்றவர்களிடம் உதவிபெற்ற சந்தர்ப்பங்களைக் கலந்துரையாடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்க விருத்தி - சகபாடிகளுடனான இயைபாக்கம்.

தேர்ச்சி :- தமது சகபாடிகளின் நல்ல பண்புகளை அறிந்து கூறுவார்.

செயற்பாடு :- 7.31. பந்துப் பரிமாற்றம்.

வளம் :- பஞ்சுப் பந்து

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகள் வட்டமாக இருத்தல்.
2. ஆசிரியர் பஞ்சுப்பந்தை ஒரு பிள்ளையை நோக்கி மெதுவாக எறிதல்.
3. பந்தைப் பிடித்துக் கொண்ட பிள்ளையின் பெயரையும் அவரின் நல்ல பண்புகளையும் ஆசிரியர் கூறுதல்.
4. பந்தைப் பிடித்த பிள்ளை தாம் விரும்பிய ஒருவருக்கு பந்தை எறிதல்.
5. பந்தைப்பிடித்த பிள்ளையின் பெயரையும், தெரிந்த நல்ல பண்பையும் கூறுதல்.
6. இவ்வாறு சகல பிள்ளைகளும் பந்தைப் பிடிக்கவும், எறியவும் சந்தர்ப்பம் வழங்கல். (பந்து பிடிக்காத நிலையில் மீள பந்தை எறியலாம்.)

மதிப்பீடு :- சகபாடியின் நற்பண்புகளைக் கூறுவதை அவதானித்தல்

கற்றல் விரிவாக்கம் :- 5 பேர் கொண்ட குழு நிலையில் தங்களைப்பற்றிய கலந்துரையாடலை மேற்கொண்டு ஒவ்வொருவரும் ஏனைய சகபாடிகள் பற்றிக்கலந்துரையாட வழிப்படுத்துதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அற ஒழுக்கம் - சகபாடிகளுடனான இயைபாக்கம்

தேர்ச்சி :- சகபாடிகளிடம் உதவி கோருவார், சகபாடிகளுக்கு உதவுவார்.

செயற்பாடு :- 7.32. உதவுதல்

வளம் :- மெத்தை /போர்வை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. வகுப்பின் ஒரு எல்லையில் பிள்ளைகள் நிற்றல்.
2. போர்வையை அல்லது மெத்தையை எடுத்து தரையில் விரித்து விடுதல்.(விரிப்பு ஒரு தீவாகவும், அதைச்சுற்றிக் கடல் இருப்பதாகவும் கருத வேண்டும்.)
3. ஆசிரியர் பிள்ளைகள் கடலில் நீந்தி அந்தத் தீவை அடைய வேண்டும் என வழிப்படுத்தல்.
4. தீவை அடைந்த பிள்ளைகள் மற்றவர்களைக் கைநீட்டிப் பற்றி உதவி செய்து தீவினுள் ஏற்றுக்கொள்ளல்.

மதிப்பீடு :- உதவி கோருதலையும் உதவுதலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- போர்வையை மடித்துத் தீவைச்சிறிதாக்கித் தொடர்ந்து செயற்பாட்டிற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அற ஒழுக்கம் - சகபாடிகளுடனான இயைபாக்கம்

தேர்ச்சி :- சகபாடிகளுடன் ஒற்றுமையுடன் செயற்படுவார்

செயற்பாடு :- 7.33. ஒற்றுமையுடன் செயற்படுதல்

வளம் :- போர்வை, பந்து


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து போர்வையைத் தமது இரு கைகளாலும் பிடித்து வைத்தல்.
2. ஆசிரியர் பிள்ளைகள் பிடித்திருக்கும் போர்வையில் பந்தைப் போடுதல்.
3. பிள்ளைகள் எல்லோருமாக இணைந்து போர்வையை உயர்த்தித் தாழ்த்துவதன் மூலம் பந்தை உருட்டவோ, ஏந்திப்போர்வையால் பிடிக்கவோ அல்லது அசையச் செய்யவோ வழிப்படுத்தல்.
4. பந்து விழாதவாறு எல்லாப்பிள்ளைகளும் இணைந்து செயற்படுதலை ஆசிரியர் வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- குழு ஒற்றுமையுடன் செயற்படுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இவ்வாறு பல வர்ணப் பந்துகளைப் போட்டுப் பிடித்து விளையாட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - குழுவாகச் செயற்படுதல்.

தேர்ச்சி :- சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பிரச்சினைக்குத் தீர்வு காண்பார்.

செயற்பாடு :- 7.34. பாடல் பாடுதல்

வளம் :- பாடலட்டை

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளை வட்டமாக நிற்க விடல்.
2. ஆசிரியர் பாடலைத் தாள லயத்துடன் பாடிக் காட்டுதல்.

உ-ம் -

- மழை வந்தால் என்ன செய்வீர்?
  குடைபிடிப்பேன்
- தாகம் வந்தால் என்ன செய்வீர்?
  தண்ணீர் குடிப்பேன்
- பென்சில் தொலைந்தால் என்ன செய்வீர்?
  தேடி எடுப்பேன்

3. பிள்ளைகளை இரு குழுக்களாக்கிக் கேள்வியை ஒரு குழுவிடமும், விடையை மற்றக் குழுவிடமும் கொடுத்து தாள லயத்துடன் பாட வழிப்படுத்தல்.
4. பின்பு குழுக்களை மாற்றிச் செயற்பாட்டினைத் தொடரல்.

மதிப்பீடு :- செயற்பாட்டிற் பங்குபற்றுதலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இவ்வாறு வேறு பாடல்களைப் பாடி விடை கூறச்சந்தர்ப்பம் வழங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - குழுவாகச் செயற்படுதல்.

தேர்ச்சி :- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு விட்டுக் கொடுப்பார்.


செயற்பாடு :- 7.35. கதையைச் செவிமடுத்தல்


வளம் :- கதைப்படம்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-


1. ஆசிரியர் கதைப்படம் காட்டுதல், மாணவர் கதை கூறுதல்






2. கதை பற்றிக் கலந்துரையாடுதல்.

(இரண்டு ஆடுகள் குறுகிய பாலத்தில் செல்லும் போது விலத்த மறுத்தல், சண்டையிட்டு நீரோடையில் விழுதல், அடுத்த முறை ஒன்று ஒதுங்கி வழி விட இரண்டு ஆடுகளும் பாதுகாப்பாகச் செல்லுதல்)





மதிப்பீடு :- முரண்பாடு, தீர்வு என்பனவற்றை விளங்கிக் கொண்டதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- தமக்குள் ஏற்பட்ட முரண்பாட்டுச் சம்பவங்களையும் தீர்வு கண்ட வழிகளையும் கூறச் சந்தர்ப்பம் வழங்கல் (சாதகமற்ற தீர்வுகளைக் கூறும் போது சாதகமான தீர்வுக்கு ஆசிரியர் வழிப்படுத்தல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - குழுவாகச் செயற்படுதல்.

தேர்ச்சி :- சொல்சாரா தொடர்பாடலில் ஈடுபடுவார்.

செயற்பாடு :- 7.36. சைகை மொழி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளின் தேவைகளை வெளிப்படுத்தும் முறைகளைப் பற்றிக் கலந்துரையாடுதல் (சைகை ,மொழி)
2. ஆசிரியர் உங்களுக்குத் தாகமாக இருக்கிறது என்று கூற ஒருமாணவர் தண்ணீர் குடிப்பது போல கையால் சைகை செய்து காட்டுதல். இன்னொருவர் தண்ணீர் வேண்டும் எனக்கூறுதல்.
3. பிள்ளைகள் சைகையால் காட்டும் செயற்பாட்டை ஏனையோர் விளங்கிக் கொண்டு கூறுதல்.
4. அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.

மதிப்பீடு :- தேவைகளை சொல்சாரா மொழியால் வெளிப்படுத்துவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- வேறுபட்ட முறைகளில் தமது தேவைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - குழுவாகச் செயற்படுதல்.

தேர்ச்சி :- ஆபத்தில் இருந்து காப்பாற்றுவார். ஆபத்துக்களைத் தவிர்ப்பார்

செயற்பாடு :- 7.37. பாத்திரமேற்று நடித்தல்

வளம் :- கண்கட்டும் துணி

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் செயற்பாட்டை விளக்குதல்.
2. கற்றல் இடத்தில் பிள்ளைகள் பரந்து நிற்றல்.
3. விரும்பிய சில பிள்ளைகள் இடையிடையே பாறைகள் போல அமர்ந்திருத்தல்.



4. பாறைகளாக இருக்கும் பிள்ளைகளை கண்கட்டப்பட்டவர் மோதவரும்பொழுது மொழியால் அல்லது ஒலியெழுப்பி வழிகாட்டுவார்.
5. கப்பலாக வரும் கண்கட்டப்பட்ட பிள்ளை பாறைகளாக இருக்கும் பிள்ளைகளுடன் மோதாமல் சரியான திசையில் செல்லவேண்டும்

மதிப்பீடு :- ஆபத்து வரும்போது ஒலி எழுப்புதலும், கிடைக்கும் தகவல்களுக்கு ஏற்ப ஆபத்தைத் தவிர்த்தலையும் அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகள் தாம் பாதுகாப்பாக உள்ளதை உணர்ந்த சந்தர்ப்பங்களைக் கூற வழிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - குழுவாகச் செயற்படுதல்.

தேர்ச்சி :- வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்வார்.

செயற்பாடு :- 7.38. பாத்திரமேற்றல்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் வட்டமாகக் கதிரையில் அமர்ந்திருத்தல்.
2. மூன்று பழங்களின் பெயர்களை வட்டத்தில் ஒழுங்கு முறையில் சொல்ல வைத்தல். (மா, பலா, வாழை)
3. எந்தப்பழத்தின் பெயரை ஆசிரியர் கூறுகின்றாரோ அப்பழத்தின் பெயரை கூறியவர்கள் யாவரும் எழுந்து தமது இடங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்.
4. ஆசிரியரும் அதே நேரத்தில் ஒரு இருப்பிடத்தைத் தேடி அமர்ந்து கொள்ள வேண்டும்.
5. கதிரை கிடைக்காத பிள்ளை அடுத்த தலைவராகி ஆசிரியரைப்போல் நிகழ்வைத் தொடர்வர்.
6. தொடர்ந்து இதேபோல் கதிரை கிடைக்காதவர் தலைவராகி நிகழ்வைத் தொடர்வர்.

மதிப்பீடு :- விளையாட்டில் ஈடுபட்டு வெற்றி பெறும் சந்தர்ப்பத்திலும், தோல்வி பெறும் சந்தர்ப்பத்திலும் அவர்களது நிலையை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- இவை தொடர்பாகக் கலந்துரையாடி ஆசிரியர் வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்வது பற்றி வழிப்படுத்துவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - உயிர்களிடத்தில் அன்பு செய்தல்

தேர்ச்சி :- உயிர்களிடத்தில் அன்பு செய்வார்

செயற்பாடு :- 7.39. கலந்துரையாடல்

வளம் :- செல்லப்பிராணிகளின் படங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. செல்லப்பிராணிகளின் படங்களைக் காட்சிப்படுத்தல்.
2. அப்படங்ளைப் பிள்ளைகள் பார்ப்பதற்கு நேரம் வழங்குதல்.
3. பிள்ளைகள் வீட்டில் வளர்க்கும் விரும்பிய செல்லப்பிராணிகளை நினைவு படுத்துவதற்கு வழிப்படுத்தல்.
4. அவை பற்றி ஆசிரியர் கேட்டறிதல்.
5. தாம் விரும்பிய செல்லப்பிராணிகள் போல் ஒலியெழுப்பச் சந்தர்ப்பம் வழங்குதல்.
6. தாம் விரும்பிய செல்லப்பிராணிகளை நேசித்தல், உணவு வழங்கல், விளையாடுதல், உதவி செய்தல், போன்றவை தொடர்பாகக் கலந்துரையாடல்.

மதிப்பீடு :- குறித்த செல்லப்பிராணிகளை நேசித்தலை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- ஒத்த செல்லப்பிராணிகளைக் குறிப்பிடும் பிள்ளைகளை ஒருங்கிணைத்து குழுவாக ஒலியெழுப்பிக் கலந்துரையாடச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - உயிர்களிடத்தில் அன்பு செய்தல்

தேர்ச்சி :- பெற்றோரைப் பணிவார், பெரியோரை மதிப்பார்.

செயற்பாடு :- 7.40. கதையைச் செவிமடுத்தலும், கலந்துரையாடலும்.

வளம் :- கதை

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. பொருத்தமான கதையைத் தெரிவு செய்தல்.
2. ஆசிரியர் கதையைப் பிள்ளைகளுக்கு கூறுதல்.
3. கதையைப்பற்றிக் கலந்துரையாடுதல்.
4. பெற்றோர், பெரியவர்கள் போன்றோரைப் பணியும் பண்பைப் பேணும் அவசியத்தைக் கூறுதல்.

மதிப்பீடு :- பெரியோரைப் பணிதல் ஏற்றுக் கொள்ளக் கூடியதென்பதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பெரியோரை பணிதல், தொடர்பான கதையை நாடகம் போலச் செய்து காட்டிக் கலந்துரையாட வழிப்படுத்தலாம்.

ஒரு கோழி எட்டுக்குஞ்சுகளுடன் உலாவி வந்தது. சுற்றி விளையாடிய குஞ்சுகளை"ஓடிவாருங்கள் பிள்ளைகள்"என்று தனக்கு அருகே வருமாறு கோழி அழைத்தது.

ஏழு குஞ்சுகள் ஓடி வந்து தாயின் செட்டைக்குள் ஒழிந்து கொண்டன. ஒரு வெள்ளைக்குஞ்சு மட்டும் தாயின் சொல்லைக் கேளாது தூர நின்றது. அந்த வெள்ளைக்குஞ்சை வானத்தில் பறந்த பருந்து ஒன்று தூக்கிச் சென்றது. குஞ்சின் கத்தல் கேட்டு கோழி உரத்த சத்தமிட மரத்திலிருந்த பல காகங்களும், கிளிகளும் பறந்து சென்று பருந்தை விரட்டிக் கோழிக்குஞ்சைக் காப்பாற்றின. குஞ்சு தாயிடம் பணிந்து "உங்கள் சொற்படி நடப்பேன்" என்று கூறியது. தாய்க் கோழியும் ஏனைய குஞ்சுகளும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன.தன்னைக்காப்பாற்றிய பறவைகளைக் கோழியும், குஞ்சுகளும் நன்றியுடன் பார்த்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - உயிர்களிடத்தில் அன்பு செய்தல்.


தேர்ச்சி :- முதியோர் எமக்கு உதவுவார் என்பதை ஏற்றுக் கொள்வார்.

செயற்பாடு :- 7.41. கதையும் பாடலும்

வளம் :- வெண்பலகை , வெள்ளைத்தாள், எழுது கருவி

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. ஆசிரியர் பிள்ளைகளை வட்டமாக இருக்கச் செய்தல்.
2. பிள்ளைகள் சந்தித்த முதியோர்கள் பற்றிக் கதைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கல்.
3. முதியோர்களால் பிள்ளைகள் அடைந்த நன்மைகள் பற்றிப் பிள்ளைகளிடம் கேட்டுக் காட்சித் தாளில் எழுதிக் கொள்வர்.

உ-ம் - கதை கூறல், உணவு ஊட்டல், கல்விக்கு உதவி செய்தல்.

4. காட்சித்தாளில் எழுதியவற்றை வாசித்துக்காட்டல்.
5. முதியோரை மதிப்போம். முதியோரைப் பேணுவோம், முதியோரைப் போற்றுவோம், முதியோர் சொற் கேட்போம், என்ற பாடலை இசையுடன் பாடி முதியோரை பேணல் தொடர்பாகக் கலந்துரையாடல்.

மதிப்பீடு :- எல்லா மாணவர்களும் பங்குபற்றியமையை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கல் :- முதியோரைப் பேணிய ஒரு செயலைச் செய்து காட்ட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அனுட்டானங்கள்.

தேர்ச்சி :- வீட்டு வழிபாட்டில் ஈடுபடுவர்.

செயற்பாடு :- 7.42. வீட்டு வழிபாடு.

வளங்கள் :- பூக்கள், கடவுளின் படங்கள்


அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
2. தினமும் வீட்டில் செய்யும் வழிபாடுகளை கலந்துரையாடல்.
3. ஆசிரியர் தான் வீட்டில் காலையில் இறைவனை வழிபடுவது போல பூப் பறித்துச் சென்று வணங்குவதைச் செய்து காட்டுதல்.
4. பிள்ளைகள் தாம் வீட்டில் எவ்வாறு காலையில் கடவுளை வழிபாடு செய்கின்றார்கள் என்பதைச் செய்து காட்டுதல்.
5. வீட்டில் கொண்டாடப்படும் விசேட பண்டிகைகள், விழாக்கள் தொடர்பாக கலந்துரையாடுதல்.
6. அவை தொடர்பான வழிபாடுகள் பற்றி பிள்ளைகள் குழுவாகச் செய்து காட்ட வழிப்படுத்தல்

மதிப்பீடு :- வீட்டு வழிபாட்டு முறைகளில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கல் :- உரிய காலத்தில் விழாக்களை முன்பள்ளிகளில கொண்டாட வழிப்படுத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அனுட்டானங்கள்.

தேர்ச்சி :- ஆலய வழிபாடு செய்வார்.

செயற்பாடு :- 7.43. கலந்துரையாடலும், செய்து காட்டலும்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளை வட்டமாக இருக்கச் செய்தல்.
2. ஆலயத்திற்குச் செல்லும் போது எவ்வாறு செல்ல வேண்டும் எனக் கலந்துரையாடல். (கொண்டு செல்லும் பொருட்கள், ஆடை, தூய்மை)
3. ஆலயத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் எனக் கலந்துரையாடல். (வணங்குதல், தியானம் செய்தல், அமைதியாக இருத்தல், தூய்மையைப் பேணுதல்),
4. ஆலயத்தில் எவ்வாறான வழிபாடுகள் இடம் பெறும் என்று கலந்துரையாடல்.
5. ஆலய வழிபாடு ஒன்றைச் செய்து காட்ட வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- வழிபாட்டிலும் செய்து காட்டலிலும் ஈடுபடுவதை அவதானிததல்.

கற்றல் விரிவாக்கல் :- ஆலய வழிபாட்டிற்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | :- | அறவொழுக்கம் - அனுட்டானங்கள். |
| தேர்ச்சி | :- | நற்சிந்தனை, தோத்திரங்கள் பாடுதல் என்பவற்றில் பங்குபற்றுவார். |
| செயற்பாடு | :- | 7.44. நற்சிந்தனை, தோத்திரங்கள். |
| அணுகுமுறை | :- | செயற்பாடு |
| செயலொழுங்கு | :- | நாளாந்தம் காலைப் பிரார்த்தனையில் பிள்ளைகள் நற்சிந்தனை சொல்வதற்கும், தோத்திரங்கள் பாடுவதற்கும் வழிப்படுத்தல். |
| மதிப்பீடு | :- | சகல பிள்ளைகளும் இச் செயற்பாட்டில் கலந்து கொள்வதை ஆசிரியர் அவதானித்தல். |
| கற்றல் விரிவாக்கல் | :- | விசேட தினங்களில் வேறு ஆசிரியர்கள், சமயப் பெரியோர்கள் மூலம் நற்சிந்தனை, தோத்திரப் பாடல்கள் என்பவற்றைப் பிள்ளைகளுக்கு வழங்க வழிசெய்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - கலாசார விழுமியங்கள்

தேர்ச்சி :- தமது கலாசார ஆடை அணிகள் தொடர்பாக அறிந்து கூறுவார்

செயற்பாடு :- 7.45. ஆடை அணிகலன்கள்.

வளம் :- கலாசார ஆடை அணிகலன்கள்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பெற்றோருக்கு, கலாசார ஆடை, அணிகலன்களைப் பிள்ளைகளுக்கு அணிவிப்பது தொடர்பாக அறிவுறுத்தல்.
2. குறித்த தினத்தில் பெற்றோர், ஆசிரியர்கள் கலாசார உடையுடன் முன்பள்ளிக்கு வருகை தந்து பிள்ளைகளுக்கு கலாசார உடைகளை அணிதல்.
3. பிள்ளைகளை வட்டமாக இருக்கச் செய்து ஒவ்வொரு பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளின் கலாசார உடைகளைப் பார்த்து இரசிக்கச் செய்தல்.
4. தனித்தனியாக ஒவ்வொரு பிள்ளையும் ஏனைய பிள்ளைகளைப் பார்த்து "உங்களுக்கு இவ்வுடை மிகவும் அழகாக இருக்கிறது" எனக் கூறி வாழ்த்துத் தெரிவித்தல்.

மதிப்பீடு :- தமது கலாசார உடைகளைக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கல் :- விசேட தினங்களில் கலாசார உடையணிந்து வருதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம். - கலாசார விழுமியங்கள்.

தேர்ச்சி :- விழா நிகழ்வுகளில் பங்குபற்றுவார்.

செயற்பாடு :- 7.46. கலாசார விழாக்கள்

வளம் :- கலாசாரப் பொருட்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் முன்பள்ளியில் கலாசார விழா நடத்துவது தொடர்பாக பெற்றோர், பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.
2. அனுமதி பெறல்.
3. கலாசார விழாக்களை நடத்துதல்.

மதிப்பீடு :- கலாசார நிகழ்வுகளில் பங்கு பற்றுவதை அவதானிததல்.

கற்றல் விரிவாக்கல் :- சமூகத்தில் நடை பெறும் கலாசார விழாவிற்கு அழைத்துச் செல்லல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - கலாசார விழுமியங்கள்.

தேர்ச்சி :- நல்ல பழக்க வழக்கங்களை அறிந்து கூறுவார்.

செயற்பாடு :- 7.47. நற் பழக்கங்கள்

வளம் :- கதைகள், கதைக்கேற்ற படங்கள்.

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. நற்பழக்கவழக்கம் கொண்ட கதையை ஆசிரியர் பிள்ளைகளுக்குக் கூறுதல். கலந்துரையாடல்.
2. பிள்ளைகள் வீட்டில் தாம் செய்த நற் செயல்கள் பற்றி கலந்துரையாட வழியமைத்தல்.
3. ஆசிரியர் நல்ல பழக்கவழக்கங்களைக் கூறி நிறைவு செய்தல்.

மதிப்பீடு :- நற்பழக்கவழக்கங்கள் தொடர்பாகக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கல் :- வீடு, பாடசாலை, சமூகம் என்பவற்றில் பெரியவர்கள் செய்யும் நற்பழக்கவழக்கங்களைக் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்கல்.

ஒரு விறகுவெட்டி காட்டில் விறகு வெட்டும்பொழுது அவனது கோடரி கையிலிருந்து நழுவி அருகிலிருந்த குளத்தில் விழுந்தது. கோடரியை குளத்தினுள் எடுக்கச் சென்றபொழுது குளத்திலிருந்த தேவதை விறகுவெட்டி முன் தோன்றி ஓர் அழகான தங்கக் கோடரியை காட்டி "இதுவா உனது கோடரி" என்று கேட்டது. அதற்கு விறகுவெட்டி "இது என்னுடைய கோடரி அல்ல" என பதிலளித்தார். மீண்டும் தேவதை இன்னோர் வெள்ளிக் கோடரியைக் காட்டி "இதுவா உனது கோடரி" என்று கேட்டது. அதற்கு விறகுவெட்டி "இது என்னுடய கோடரி அல்ல" எனப் பதிலளித்தார். மூன்றாவது தடவையாக தேவதை விறகுவெட்டியின் இரும்புக் கோடரியைக் காட்டி "இதுவா உனது கோடரி" என்று கேட்டது. அதற்கு விறகுவெட்டி "ஆம், இதுவே என்னுடைய கோடரி' என பதிலளித்தார். விறகுவெட்டியின் நேர்மையான பண்பைப் பாராட்டி நல்ல பழக்கவழக்கம் உடையவர்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்று கூறி முன்பு காட்டிய தங்கக் கோடரி, வெள்ளிக் கோடரி ஆகியவற்றையும் விறகு வெட்டியின் கோடரியுடன் சேர்த்துப் பரிசாக வழங்கியது. விறகுவெட்டி மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - கலாசார விழுமியங்கள்.

தேர்ச்சி :- சமய அடையாளங்களை அறிந்து கூறுவார்.

செயற்பாடு :- 7.48. சமய அடையாளங்கள்

வளம் :- சமய அடையாளங்களைக் குறிக்கும் படங்கள் (திருநீறு அணிந்த நெற்றி, சிலுவை, குல்லா,)

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. சமய அடையாளங்கள் பற்றி கலந்துரையாடல்.
2. சமய அடையாளங்களை அணிந்தவர்களின் படங்களைக் காட்சிப்படுத்தி படத்தில் உள்ளவர்களின் சமயம் பற்றி கலந்துரையாடல்.
3. தத்தமது சமய அடையாளங்களை அணிய வழிப்படுத்தல்.
4. பிள்ளைகளை ஒருவரை ஒருவர் பார்க்க வழிப்படுத்தல்.
5. தமது சமயத்தை உரத்துக் கூற வழிப்படுத்தல்.
6. எல்லோரும் வட்டமாக நின்று கைகளைப் பிடித்தவாறு எமது ‘சமய அடையாளங்களை நாம் அணிவோம்’ எனக் கூறுதல்.

மதிப்பீடு :- எல்லாப் பிள்ளைகளும் இச்செயற்பாட்டில் இணைந்துள்ளனரா என அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கல் :- சமய சின்னங்களை அணிந்து கொண்டு நாளாந்தம் முன்பள்ளிக்கு வருவதற்கு வழிப்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள். :- அறவொழுக்கம் - கலாசார விழுமியங்கள்.

தேர்ச்சி :- பிற சமயங்களை மதிப்பார்.

செயற்பாடு :- 7.49. சமயக் கொண்டாட்டங்கள், விழாக்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஏதேனும் ஒரு சமய விழாவினை மாதிரியாக ஒழுங்கமைத்தல்.(தைப் பொங்கல், பாலன் பிறப்பு, நபிகள் பிறப்பு)
2. பிள்ளைகளுடன் விழா பற்றிக் கலந்துரையாடல்
3. விழாவினைக் கொண்டாடுதல்.
4. இதேபோல் எல்லா மதத்தவர்களின் விழாக்கள், பண்டிகைகளை முன்பள்ளியில் கொண்டாடுதல்.

மதிப்பீடு :- பிற மதவிழாக்களை மதித்து ஒற்றுமையாகச் செயற்படுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கல் :- சமூகத்தில் நடைபெறும் பிற மதங்களின் விழாக்களில் கலந்து கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - கலாசார விழுமியங்கள்.

தேர்ச்சி :- நாளாந்தக் கடமைகளை அறிந்து செய்து காட்டுவார்.

செயற்பாடு :- 7.50. போலச் செய்தல்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
2. ஆசிரியர் நேரத்தைக் கூறும்போது அந்த நேரத்தில் பிள்ளைகள் வீட்டில் என்ன செய்வார்களோ அதனைச் செய்து காட்ட வழிப்படுத்தல்.

உ-ம் - இரவு 2 - மணி நித்திரை கொள்ளல்
காலை 9 - மணி முன்பள்ளிச் செயற்பாடு

3. காலை 4 மணியில் ஆரம்பித்து இரவு 9 மணிவரை ஒரு மணித்தியால இடைவெளியில் நேரத்தைக்கூறி நிகழ்வுகளைச் செய்ய வைத்தல்.
4. முன்மாதிரியான நாளாந்தக் கடமைகள் பற்றிக் கலந்துரையாடுதல்.

மதிப்பீடு :- நாளாந்தக்கடமைகள் தொடர்பான செயற்பாடுகளை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கல் :- காலை, மாலை நேரங்களில் பிள்ளைகளின் நாளாந்தக் கடமைகளை விரிவாகச் செயற்படுத்த வழிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அறப்பண்புகள்.

தேர்ச்சி :- தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் உதவுவார்.

வளம் :- உதவும் படங்கள்

செயற்பாடு :- 7.51. போலச் செய்தல்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
2. ஒருவர் மற்றவருக்கு எப்படி உதவலாம் என்று கலந்துரையாடுதல்.
3. சைக்கிளால் விழுந்து காயப்பட்டவராக நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் எனக் கேட்டுக் கலந்துரையாடுதல். (தூக்கி விடுதல், மண்ணைத் துடைத்து விடுதல், மருந்து கட்டுதல்)
4. ஆசிரியர் சைக்கிள் ஓட்டுவது போல் அபிநயத்துடன் காட்டப் பிள்ளைகள் அதனைச் செய்தல்.
5. சைக்கிளால் விழுவது போல ஆசிரியர் செய்து காட்ட பிள்ளைகள் அதனைச் செய்தல்.
6. செயற்பாட்டைச் செய்து காட்ட வழிப்படுத்தல்.

மதிப்பீடு :- உதவும் செயற்பாட்டில் ஈடுபடுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கல் :- தாம் உதவிய நிகழ்வுகளைப் பற்றிக் கலந்துரையாட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அறப்பண்புகள்.

தேர்ச்சி :- உண்மை பேசுவதால் கிடைக்கும் உயர்வினை அறிந்து கூறுவார்.

செயற்பாடு :- 7.52. கதையினைச் செவிமடுத்தல்

வளம் :- கதை

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை வட்டமாக இருக்கச் செய்தல்.
2. ஆசிரியர் கதையினைக் கூறுதல்.
3. கதை பற்றிக் கலந்துரையாடல்.
4. 'உண்மை உயர்வு தரும்' என உரத்துச் சொல்லி நிறைவு செய்தல்.

மதிப்பீடு :- உண்மை உயர்வு தரும் என்பதை ஏற்றுக்கொள்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கல் :- உண்மை பேசுதல் தொடர்பாக பல சிறந்த கதைகளைக் கூற வழிப்படுத்தல்.

அபி அரசியானாள்

ஒரு நாட்டை ஒரு சிறந்த அரசன் ஆண்டு வந்தான். அந்த அரசனுக்கு பூங்கன்றுகள் என்றால் நல்ல விருப்பம். அரசனுக்கு வயது போய் முதியவனாகி விட்டான். அதனால் தனக்குப்பின் ஒருவரை அரசனாக்க விரும்பினான். தன்னைப் போலப் பூங்கன்றுகளைப் பராமரிப்பவரே அரசனாக வரமுடியும் எனக் கூறினார்.

மக்கள் எல்லோருக்கும் பூங்கன்று விதை ஒவ்வொன்றை வழங்கினான். அவற்றை நட்டு நீரூற்றி வளர்த்து அதிலிருந்து வரும் பூவைத் தான் அழைக்கும் போது காண்பிக்க வேண்டும் எனவும் அழகான பூவைக் கொண்டு வருபவரே அரசனாவார் எனவும் கூறினான்.

அபி விதையை நட்டாள். அது முளைக்கவில்லை, கவலைப்பட்டாள், அரசன் எல்லோரது பூங்கன்றுகளையும் பூக்களையும் பார்வையிட்டான். எல்லாம் அழகாக இருந்தன. அபியிடம் பூங்கன்றின் பூவைக்கேட்டான். அவள் கவலையுடன் "முளைக்கவில்லை" என்றாள்.

அரசன் கூறினான் "நான் தந்த வித்துக்கள் எல்லாம் வறுத்த வித்துக்கள் அவை ஒரு போதும் முளைக்காது" ஆனால் அபி மட்டுமே உண்மை கூறினாள். உண்மை கூறிய அபியை அரசியாக்குகிறேன் எனக் கூறி அரசமுடியை அபியின் தலையில் சூட்டினான். உண்மை கூறிய அபியே நாட்டுக்கு அரசியாகினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அறப்பண்புகள்.

தேர்ச்சி :- பிறர் பொருளை அபகரிக்கார்.

செயற்பாடு :- 7.53. குழுச் செயற்பாடு

வளம் :- கற்றல் உபகரணங்கள்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
2. ஒவ்வொரு பிள்ளைகளிடமும் ஒவ்வொரு கற்றல் உபகரணத்தை ஆசிரியர் பெற்றுப் பெயர் அடையாளமிட்டுச் சேகரித்தல்.
3. பிள்ளைகளின் நடுவே அவற்றை வைத்தல்.
4. ஒவ்வொரு பிள்ளையாக எழுந்து தனது பொருள் தவிர்ந்த ஏனைய ஒரு பொருளை எடுத்து இது யாருடைய பொருள் எனக் கேட்டல்.
5. உரியவர் தன்னுடையது எனக் கூறுவர்.
6. பொருளுக்குரியவரின் பெயரை வாசித்து உரியவரிடம் ஒப்படைத்தல்.
7. இவ்வாறு எல்லாப் பிள்ளைகளும் செயற்பட வழிப்படுத்தல் .

மதிப்பீடு :- தனது பொருளுக்கு உரிமை கோருவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கல் :- பிள்ளைகள் தாம் செய்த இவ்வாறான செயல்கள் பற்றிக் கலந்துரையாட வழிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அறப்பண்புகள்

தேர்ச்சி :- உயிர்களுக்கு துன்பம் செய்யக் கூடாது என்பதை ஏற்றுக் கொள்வார்.

செயற்பாடு :- 7.54. உயிர்களுக்கு துன்பம் செய்யக் கூடாது பற்றிய கலந்துரையாடல்.

வளம் :- பிள்ளைகள் விரும்பும் உயிரினங்களின் படங்கள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகள் விரும்பும் உயிரினங்களின் படங்களைக் காட்சிப்படுத்தல்.
2. பிள்ளைகள் அப்படங்களைப் பார்க்க வழி செய்தல் (உ-ம்- தும்பி, வண்ணத்துப்பூச்சி, கிளி)
3. பிள்ளைகளை வட்டமாக அமரச்செய்தல்.
4. பிள்ளைகள் தாம் இவ்வாறான பிராணிகளுடன் விளையாடிய அல்லது விளையாட விரும்பிய விடயங்களைக் கலந்துரையாடுதல்.
5. தமது விளையாட்டுக்கள் ஏனைய பிராணிகளுக்குத் துன்பம் தரக்கூடிய சந்தர்ப்பங்களைக் கலந்துரையாடுதல்.
6. ஏனைய பிராணிகளுக்கு துன்பம் தரக்கூடிய செயல்களைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துதல்.

மதிப்பீடு :- உயிர்களுக்குத் துன்பம் செய்யக் கூடாது என ஏற்றுக் கொள்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- எப்படிப் பிறரைத் துன்பம் செய்யாமல் நாம் வாழலாம் என்பது தொடர்பாக கலந்துரையாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அறப்பண்புகள்

தேர்ச்சி :- குழுநிலையில் தேவையறிந்து இரக்கம் காட்டி உதவுவார்.

செயற்பாடு :- 7.55. இரக்கம் கொள்ளல்

வளம் :- போர்வை, பொம்மை

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-



1. பிள்ளைகளை வட்டமாக அமரச்செய்தல்.
2. நடுவிலே போர்வை ஒன்றையும் பொம்மை ஒன்றையும் வைத்தல்
3. இரக்கத்தையும் ஒத்துழைப்பையும் பிள்ளைகள் வழங்குவது தொடர்பாக ஆசிரியர் கலந்துரையாடுதல்.
4. நடுவே வைக்கப்பட்டுள்ள பொம்மைக்குத் 'தூக்கம் வருகிறது தாலாட்டும்படி கேட்கிறார்' என ஆசிரியர் கூறி, என்ன செய்யலாம் என பிள்ளைகளைக் கேட்டல்.
5. போர்வை விரிப்பில் பொம்மையை வைத்து நான்கு மூலையிலும் நான்கு பேர் அல்லது எட்டுப்பேர் பிடித்து மெதுவாகத் தாலாட்டச்செய்தல்.
6. பிள்ளைகள் எவ்வாறு இரக்கத்துடன் செயற்பட்டார்கள் எனக் கலந்துரையாடல்.

மதிப்பீடு :- குழுவாக இரக்கம் காட்டி உதவி செய்வதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகளை ஒவ்வொருவராகப் போர்வையில் படுக்கவைத்து ஏனைய பிள்ளைகளும் பெற்றோரும் இணைந்து இவ்வாறான செயற்பாட்டைச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அறப்பண்புகள்

தேர்ச்சி :- நேர்மையுடன் நிபந்தனைகளுக்கு அமைவாகச் செயற்படுவார்.

செயற்பாடு :- 7.56. தொட்டு விளையாடல்

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்
2. விளையாட்டு விதிகளை ஆசிரியர் கூறுதல்.(ஆசிரியர் சுற்றாடலில் காணப்படும் பொருட்கள், தாவரங்கள் என்பவற்றில் சிலவற்றின் பெயரைக் குறிப்பிடுவர். கூறிய பின் கை தட்டும் போது பிள்ளைகள் ஓடிச்சென்று அப்பொருட்களைத் தொட்டுவிட்டு ஓடிவந்து ஒரு கையை உயர்த்தி நிற்பர்)
3. நான்கு / ஐந்து தடவைகள் இவ்வாறு விளையாட்டைத் தொடரலாம்.
4. பிள்ளைகளை வட்டமாக அமரச் செய்து அனுபவங்களைக் கலந்துரையாடுதல்.
5. நிபந்தனைகளை மீறாது செயற்பட்டவர்கள் எல்லோரும் நேர்மையானவர்கள் அவர்கள் அனைவரும் வெற்றி பெற்றவர்கள் என கூறிப் பாராட்டுதல்.
6. பிள்ளைகள் எல்லோருமாகச் சேர்ந்து கைகளை உயர்த்தி "நேர்மையாக முன்னேறு" என எட்டுத்தடவைகள் உரத்துக் கூறச்செய்தல்.

மச :- அறிவுறுத்தலை மீறாது செயற்படுகின்றார்களா என அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகள் வீட்டில் நேர்மையாகச் செயற்பட்ட சம்பவங்களைப்பற்றிக் கலந்துரையாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அறப்பண்புகள்

தேர்ச்சி :- பிறரது தவறுகளை ஏற்றுக்கொண்டு மன்னிப்பார்.

செயற்பாடு :- 7.57. கதை கேட்டல்.

வளம் :- கதை – சிங்கமும் மாடுகளும் - படங்கள்

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளுக்கு ‘சிங்கமும் மாடுகளும்’ கதை கூறல்
2. கதை பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.
3. சிங்கத்தை மன்னித்த மிருகங்களின் செயலைப் பாராட்டுதல்.

மதிப்பீடு :- ‘மன்னிப்பது சிறந்தது’ எனக் கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- நாடகம் போல நிகழ்த்திக்காட்ட வழிப்படுத்தல்.

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அச்சிங்கம் மாடுகளைக் கண்டபடி பிடித்து உண்டு வந்தது. இதனால் மாடுகள் எல்லாம் கவலையடைந்தன. எல்லா மாடுகளும் ஒன்று சேர்ந்து சிங்கத்திடமிருந்து தப்புவதற்காக ஒற்றுமையாகச் செயற்படுவதென முடிவு செய்தன. சிங்கம் மாட்டைப்பிடிக்க வரும்போது எல்லா மாடுகளும் சுற்றி நின்று சிங்கத்தை சிறைப்படுத்தின. சிங்கம் பசியால் வாடியது. இனிமேல் மாடுகளைப் பிடிக்க மாட்டேன் என சத்தியம் செய்தது. தன்னை மன்னிக்கும்படி கேட்டது. மாடுகள் சிங்கத்தை மன்னித்து விடுதலை செய்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அறப்பண்புகள்

தேர்ச்சி :- பிறருக்கு நன்றி கூறுவார்.

செயற்பாடு :- 7.58. நன்றி கூறுதல்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. பிள்ளைகளை வட்டமாக அமரச்செய்தல்.
2. முன்பள்ளியில் தனக்கு ஏனையோர் செய்த சின்னச்சின்ன உதவிகளையும் கதைக்க வழிப்படுத்தல்.
3. ஆசிரியர் பிள்ளைகளைப் பார்த்து "நீங்கள் அமைதியாகக் கேட்டதற்கு நன்றி" எனக் கூறுதல்.
4. பிள்ளைகளை தமக்கு ஏனையோர் செய்த சிறு சிறு உதவிகளுக்கும் நன்றி கூறத் தூண்டுதல்.

மதிப்பீடு :- எல்லாப்பிள்ளைகளும் நன்றி கூறினார்களா என அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- 'விளையாட்டில் ஒத்துழைத்தமைக்கு நன்றி' என எல்லோருக்கும் கூறச்செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அறப்பண்புகள்

தேர்ச்சி :- பிறருக்கு வணக்கம் கூறுவார்.

செயற்பாடு :- 7.59. வணக்கம் கூறுதல்.

அணுகுமுறை :- விளையாட்டு

செயலொழுங்கு :-

1. ஆசிரியர் பிள்ளைகளுக்கு வணக்கம் கூறுதல்
2. பிள்ளைகள் ஆசிரியருக்கு வணக்கம் கூறுதல்.
3. பிள்ளைகளிடம் ஒவ்வொரு பூவை வழங்குதல்.
4. பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து யாராவது ஒரு பிள்ளைக்குத் தனது கையிலுள்ள பூவை வழங்கி வணக்கம் கூறுதல்.
5. மற்றையவர் வணக்கம் சொல்லிப் பெற்றுக்கொள்தல்
6. செயற்பாடு தொடரும்.

மதிப்பீடு :- எல்லாப்பிள்ளைகளும் வணக்கம் கூறினரா என அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பெயரை அழைத்து வணக்கம் செலுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள் :- அறவொழுக்கம் - அறப்பண்புகள்


தேர்ச்சி :- இனியவை கூறுவார்.

செயற்பாடு :- 7.60. இனியவை கூறல்.

வளம் :-

அணுகுமுறை :- செயற்பாடு

செயலொழுங்கு :-



1. "நாங்கள் அன்பான, பண்பான, ஒழுக்கமுள்ள, சிறந்த பிள்ளைகள்" என ஆசிரியர் கூறி பிள்ளைகளையும் கூறச்செய்தல்.
2. தமக்கு விருப்பமானவருக்கு அருகாகச் சென்று சோடியாக நிற்கச்செய்தல்.
3. தமது சோடியின் (நண்பரின்) நல்ல பண்புகளைக் கூற வழிப்படுத்தல்.
4. தமது நண்பர் கூறிய நல்ல வார்த்தைகள் சந்தோசத்தை ஏற்படுத்தியதா என கேட்டு அறிதல்.
5. கீழ்வரும் பாடலைப்பாடி அசைந்து ஆடுதல்

> இனிய வார்த்தை கூறுவோம்
>
> இன்பமாக வாழுவோம்.
>
> நல்ல வார்த்தை பேசுவோம்
>
> நாமுயர்ந்து வாழுவோம்

மதிப்பீடு :- எல்லா பிள்ளைகளும் இனியவை கூறுவதை அவதானித்தல்.

கற்றல் விரிவாக்கம் :- பிள்ளைகளைப் பாடி ஆட வழிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org